உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய்நல்லூரில்
திருவவதாரங்கொண்டருளிய,
சுவேதவனப்பெருமாளென்னும்பிள்ளைத்திருநாமமுடைய
மெய்கண்டசுவாமிகளருளிச்செய்த

சிவஞானபோதமூலமும்

திருவாவடுதுறையாதீனம்
சிவஞானசுவாமிகளருளிச்செய்த

சிற்றுரையும்.

இவை,
கோயமுத்தூர்ஜில்லா-சேயூர்-டிஸ்டிரிக்ட்முன்சீபு-ம-ா-ா-ஸ்ரீ
திரு-வெ-பொன்னுசாமிப்பிள்ளையவர்கள்,
நீலகிரிகமிசேரிடிப்டிமானேஜர்-ம-ா-ா-ஸ்ரீ-
கு-மீனாக்ஷிசுந்தரப்பிள்ளையவர்கள்முதலிய
சிலசைவப்பிரபுக்களது வேண்டுகோளின்படி,
விபுதஜனகமலவனவிகர்த்தனராகிய
இராயவேலூர்
நாதமுனிசெட்டியாரவர்கள்
பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்துக்கொடுக்க,
ஸ்ரீபெரும்பூதூர்
பாபு-பாஷ்யமுதலியாரவர்களால்
சென்னபட்டணம்
வாணீநிகேதனவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.

அக்ஷய வரு சித்திரைமீ.

உ

சிவமயம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨	௩௪	கடிந்த	கடந்த
௭	௮	சஙகார	சங்காரகருத்தாவை
௯	௰௬	மே-ள்-	ஏது
௰	௨௨	வருதல்பெற்றும்	வருதலிற்பெற்றும்
௰	௨௫		இரண்டாமதிகரணம்
௰௧	௭	மே-ள்-	ஏது
௰௧	௰௪	ா-ளின	எ-னின்
௰௧	௰௭	சூககிரத்தை	சூ+திரக்கூற்றை
௰௧	௨௧	மே-ள்-	ஏது
௰௨	௮	மே-ள்-	ஏது
௰௨	௩௧	வுலகந்த	வுலகந்தா
௰௬	௮	அசை	அசை.
௰௮	௨௯	மூதலதனி	மூதலதனி
௰௯	௬	நினற	நின்ற
௨௩	௰	எ-து-எ-னின்	எ-று-ஏ-து-எ-னின்
௨௬	௬	தக்துலித	தத்துவித
௨௬	௰௮	ளொள்றென்று	ளொன்றென்று
௨௭	௨௩	ரூபதத்தை	ரூபத்தை
௨௭	௨௫	கொரண்ட	கொண்ட
௨௭	௩௩	செய்தனெச்ச	செய்தெனெச்ச
௨௮	௨௬	மே-ள்	ஏது
௩௰	௰௭	அவ்வினைஞர் தாஞ்சென்ற விவ்வினையைச் செய்வதனி	அவ்வினையைச்செய்வதனி னவ்வினைஞர்தாஞ்சென்ற
௩௰	௰௮	னவ்வினை	வவ்வினை
௩௧	௰௨	பொன்வர	பொன்வா
௩௩	௨௭	மே-ள்	ஏது
௩௯	௰	எதுவு	ஏதுவு
௪௰	௨௬	முதவ்வனெடு	முதல்வனெரு
௪௧	௰௬	திருவர்ணி	திரு-வாணி
௪௯	௰௯	எது	எ-து
௪௭	௨௫	மௌன்று	மென்று
௫௩	௰௭	அறியு	ஆறிவு

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௫	௨௫	வேரு மெல்ல மறவாரு	வேரு மெமறவாரு
௬௰	௰௬	கோசவியும்பசித்தாமாறு	கோசவியும்பசித்தாமாறு
௯௨	௩	வாசாரயீற்றம்மியினை	வாசாரயீற்றம்மியினை
௭௨	௨௩	கம்மைய	கம்மை
௭௮	௫	மெறுவாய்	மழுவாய்
௮	௬	போறுமென	போறுமென
௯௭	௰௭	வரிலலதா	ணரில்லதா
௯௯	௰௭	விரண்டின்	விரண்டன்
௱௩	௰௨	தொன்றின்றி	தொன்றன்றி
௱௩	௰௩	தொன்றின்றி	தொன்றன்றி
௱௰௬	௬	கருவிளாறைய	கருவிகளாறைய
௱௨௫	௬	யீண்டேது	யீண்டேது
௱௨௬	௬	மெனுங்	மேனுங்
௱௨௬	௨௩	தோன்றுனே	தோன்றுனே
௱௩௭	௨௬	தோர்	தோர்
௱௩௯	௩௰	மாந்தியே	மாத்திரையே
௱௪௨	௩௨	வினையபண்மை	வினையின்மை
௱௪௭	௨௰	என்ற	என்ற
௱௪௮	௰௭	ரோகிய	ரோகிய
௱௫௰	௧	ருாம	ாரும
௱௫௰	௭	சத்தனைமார்	சத்தனைவார் ன்
௱௫௬	௨	யீண்டு-காரத்தின்	யீண்டுக்காறுமுபகாரத்தி
௱௫௯	௰௬	பரயோக	பரபோக
௱௭௰	௬	அல்லதா	அல்லாதா
௱௭௩		நேசத்தர்	நேசத்தர்

பிழைதிருத்தம் - முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதச் சிற்றுரை.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணெய்ப்...*
பயில்வாய்மைமெய்கண்டான் சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபானுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ் குருநமச்சிவாயதேவன்...*
சயிலாதிமரபுடையோன்றிருமரபு நீடூழிதழைக்கமாதோ ....*

சைவாகமங்களி னுளவாகிய நாற்பாதங்களுண் ஞானபாதத்தோதிய பொருள்களையாராயுமாராய்ச்சி யிந்நூலின்க ணெடுத்துக்கொள்ளப்பட்டது. இதுகேட்ட லுறுவார்க்கிதனுற் போந்தபயன்யாதோவெனவுமிது கேட்டற்குரியார் யாவரோனவு மிதனு னுதலப்படும் பொருள்யாதெனவு மிதனைப் பயப்பிக்குங்கருவியா யிதற்குமுன்னொருதலையா னுணர்தற்பா லதியாதெனவு மிதனை வழங்குதற்கிட்ட பெயர்யாதென்வு மிஃதி யாண்டுவழங்குவதெனவு மிதன்முதனூல் யாதெனவு மிந்நூல்செய்தார் யாவரோனவும் பலவாற்றானு சங்கைநிகழுமன்றே யவ்வா சங்கைநீங்கி மனவெழுச்சி சேறற்பொருட் டிந்நூன்முகத்துரைக்கப்படுவதாகிய சிறப்புப்பாயிரம் "மலர்தலை - தலைமையோனே" எனவரும்.

சூத்திரம்.

மலர்தலையுலகின் மாயிருடிமியப் ... ... *
பலர்புகழ்ஞாயிறு படரினல்லதைக் ... ...*
காண்டல்செல்லாக் கண்போலீண்டிய ... *
பெரும்பெயர்க்கடவுளிற் கண்டுகண்ணிருடீர்ந்*
தருந்துயர்க்குரம்பையி னன்மாநாடி ... ...*
மயர்வறநந்தி முனிகணத்தளித்த ... ... *
வுயர்சிவஞான போதமுரைத்தோன் ... ...*
பெண்ணைப்புனல்சூழ் வெண்ணெய்ச்சுவேதவனன்

பொய்கண்டகன்ற மெய்கண்டதேவன் ... ௬
பவனனிவன் பகைகடந்த ௭
தவரடிபுனைந்த தலைமையோனே ௮

(இ-ள்.) மலர்தலைபுலகின் மாயிருடூமியப். பலர்புகழ்ஞாயிறுபட ரினல்லதைக் காண்டல்செல்லாக்கண் போல்- எ-து - விரிந்தவிடத்தை யுடைய ஞாலத்தின்கண்ணே துன்னியபெரிய புறவிருள்கெடும்படி பலசமயத்தாராலும் புகழப்படுகின்ற பரிதியங்கடவுளுதயகிரியினின் றும் போந்தாலன்றிக் காட்சியெய்தமாட்டாத கண்ணொளிபோல-அரு ந்துயர்க் குரம்பையினுன்மாநாடி-எ-து-பொறுத்தற்கரிய துயரங்களுக் கெல்லா மொருநிலைக்களமாய்ச் சத்ததாதுக்களாற் பொத்தியகுரம் பையாகிய காணப்பட்ட வுடம்பானே காணப்படாத வான்மாவையும் பரமான்மாவையு மனுமானவளவை யான்வைத்தாராய்ந் தவற்றது தடத்த விலக்கணமெனப்படும் பொதுவியல்புணர்ந்து-கண்ணிருடீர்ந் து-எ-து-அவ்வுணர்ச்சியானேசுருதியுணரப்படுங் கருவிகளாகியவாண வமலத்தினின்றும் நீங்கி - ஈண்டியபெரும்பெயர்க் கடவுளிற்கண்டு- எ-து-அதுநீங்கியவழி யெல்லாநூல்களுந் தன்பொருளேயாகத் திர ண்டுகூடிய பெரும்பெயரெனப்படு மொருவார்த்தையாகிய மகாவாக் கியத்தா னெடுத்தோதப்படு முதற்கடவுளது திருவருளானே யப்பொ ருள்களது சொருப விலக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பை யனுபூதி யிற்கண்டுணர்ந்து-மயர்வற- எ-து - இம்முறையானே மயக்கவாசனை யற்றுச் சிவானுபவம் பெறுதற்பொருட்டு - நந்திமுனி கணத்தளித்த- எ-து-ஸ்ரீகண்டதேவர்பாற் கேட்டருளிய நந்திப்பெருமான் சனற்குமா ரமுனிவன்முதலிய முனிவர்கணங்கட்கு முறையானே யளித்தருளப் பட்ட-உயர்சிவஞானபோதம்- எ-து - சரியை முதலிய மூன்றுபாதப் பொருள்களை யாராயுநூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமென் னும் வடநூலை-உரைத்தோன் - எ-து-மொழிபெயர்த்துக்கூறிய வார்த் திகமெனப்படும் பொழிப்புரைசெய்தோன்-பெண்ணைப்புனல்சூழ் வெ ண்ணெய்ச்சுவேதவனன்-எ-து- பெண்ணையாற்றுநீராலே சூழப்பட்ட திருவெண்ணெய்நல்லூரி னவதரித்தருளிய சுவேதவனப்பெருமாளெ ன்னும் பிள்ளைத்திருநாமமுடையான்- பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவன்-எ-து-பொய்ச்சமயங்களின் பொருளிதுவிதுவென்று கண்டு கழிப்பித்தகாரணத்தாற் பெற்றமெய்கண்ட தேவனென்னுஞ் சிறப்புத் திருநாமமுடையான்-பவனனிவன்பகைகடந்த, தவரடிபுனைந்த தலைமை

யோனே-எ-து-பிறவியாகிய மிக்க வலியபகையினைவென்றதவத்தோர் தனது திருவடியைப்புனைந்து கோடற் கேதுவாகிய தலைமைப்பாட்டினை யுடையோன்-எ-று.

படரிற்காண்டல் செல்லுங் கண்ணொளற் பாலதனை யெதிர்மறை முகத்தாற் கூறினாரின்றியமையாமை விளங்குதற்கு. பரிதிப்பொருள் பற்றிக் கண்மேல் வைத்துக் கூறினாரேனு முபமேயப் பொருட் கேற்பக்காண்டல் சேறற்குப் படர்ந்த ஞாயிறுபோ லென்பது கருத்தாகக் கொள்க. இருட்கேட்டிற்கு நிருவிகற்பஞ் சவிகற்ப மென்னு மிருவகைக்காட்சிக்கு ஞாயிறின்றியமையாச் சிறப்பிற்றாய வாறுபோல, மலத்தீர்விற்கு மாராய்ச்சி யனுபூதி யென்னு மிருவகை யுணர்விற்கு மின்றியமையாச் சிறப்பிற்றாய திந்நூலென்பார், துமியப்படரி னல்லதைக் காண்டல் செல்லாக் கண்போனுடித் தீர்ந்து கண்டு மயர் வறவளித்த சிவஞான போதமென்றார். தலைமைபற்றி யருந்துயர்க் குரம்பையினென்றாரேனு மினம்பற்றிக் கரணம் புவனமுதலி யனவுமுடன் கொள்ளப்படும். அருந்துயர்க் குரம்பையினுடப் படுவதாகிய பொதுவியல்பு முன்னூறு சூத்திரத்தானும், பெரும்பெயர்ப்பொருளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு பின்னூறு சூத்திரத்தானு மோதுப. நாடியெனவே யநுமான வளவையா னென்பதூஉம், கண்டெனவே யநுபூதியிலென்பதூஉம், தாமே போதரும். பொதுவியல்பு - அளவைமுகத்தானு மிலக்கண முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தலென்னு மிருதிறத்தா னுணரப்படும். சிறப்பியல்பு - சாதகமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல் தெளிதனிட்டையென்னு நான்கு திறத்தா னுணரப்படும். இஃதென் சொல்லிய வாறோவெனின், இவ்விருவகை யியல்பும் வேறு வேறு கூறு மாகமங்களின் பொருளொருமை யுணரமாட்டா தொரோ வொன்றே பற்றியைக்கவாதமுதற் பலதிறத்தான் வேறுபட்டுத் தம்முண் மாறுகொண்டு மயங்குவார்க் கவ்வன மயங்காதவற்றின் பொருளொருமை யுணர்த்தற்கெழுந்த திந்நூலென்ற வாறாயிற்று. சிவஞான போதமென்பது உமிக்காரணத்தாற் பெற்ற பெயரென்பது வடமொழிச்சிவஞானபோதத் திறுதிச் சூத்திரத்தோதிய வாறுபற்றி யுணர்க. சரியை முதலிய மூன்று பாதப்பொருளை யாராயு நூல்களாவன - சோமசம்பு பத்ததி முதலாயின. அந்நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமெனவே அந்நூல்களுணர்ந்த பின்ன ரிந்நூல் கேட்கற்பாற் றென்பது பெறப்பட்ட

து. யடவே, முன்னர்த் திக்கையுற்றுச் சிவாகமங்களையோதி யதன் பின்னர்ச் சரியாபாத முதலியவற்றை யாராயு நூல்களை முறையே கேட்டவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியா நித்திய வுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின வாமிகருடையராய் வந்த வதிகாரிகளுக் கிந்நூலுணர்த்துக வென்பது போந்ததெனக்கொள்க, உயர் சிவஞான போதமெனவே, யாப்புங்கேட்போரு நுதலியபொருளு நூற்பெயரும், நாடித்தீர்ந்து கண்டு மயர்வறவெனவே, நுதலிய பொருளின் வகையும் பயனும், நந்திமுனி கணத்தளித்த வெனவே, வழியும், வெண்ணெய்ச் சுவேதவ னன்மெய்கண்ட தேவனெனவே, ஆக்கியோன் பெயருந் தமிழ் வழங்கு நிலமே யிந்நூல் வழங்கு நிலமென வெல்லையும்போந்தவாறுணர்க. வடநூலார்-யாப்பை யானந்தரிய மென்றும் நுதலிய பொருளை விடயமென்றுங் கேட்போரை யதிகாரிகளென்றும் பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. யாப்பு-சம்பந்த மென்பாருமுளர்.

பாயிரமுடிந்தது.

கடவுள் வணக்கம்.

காமிகமுதலிய சைவாகமங்களுண் ஞானபாதத்தி னுளதாகிய வாசங்கைநீக்கி யவற்றின் பொருளுண்மை பொதுவியல்பு சிறப்பியல் பென் றிரு வேறுவகைப்படுத்துக் காட்டிப் போதித்தற் கிரௌரவாகமத்தி னெழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலக முய்தற் பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து யொழிப்புரைப்பா னெடுத்துக் கொண்ட வாசிரியர் சாக்கிரத்தே யதீதத்தைப் புரியுந் தமக்கிடையூறு சிறிது மணுகாமை யறிந்தாராயினு மான்றோ ராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க் கறிவுறுத்தற் பொருட்டும், முதற்கணிடையூறு நீக்குதற்குரிய விநாயகக்கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார்.

சூத்திரம்.

கல்லானிழன்மலை வில்லாரருளிய ... ... *
பொல்லாரிணைமலர் நல்லார்புனைவரோ... ...*

(இ-ள்.) கல்லானிழல்-எ-து - அருள்வடிவாகிய கல்லானிழலின் கண்ணே யெழுந்தருளி யிருந்து - மலைவில்லார்-எ-து-நந்தி பெருமானுக் கிந்நூலான் மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர் - அருளிய-எ-து-

மேன்மேற் கருணைகூர்ந் தருளுதற் பொருட்டு - பொல்லார் ரிணைமலர் எ-து-பொல்லாத பிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்தி யென்னு மிரண்டு திருவடித் தாமரைகளை - நல்லார்-எ-து-கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர் - புனைவரே-எ - து - தம்முடைய ஞானசத்தி கிரியா சத்திகட்கு வியாபகமாகக் கொண்டு தாடலைபோ லடங்கி நிற்பர் - எ - று.

நல்லார் புனைவரெனவே யேனையோர்க்கது கூடாதென்ற வாறு யிற்று. மூவகைவாழ்த்து ளிது பொருளியல் புரைத்ததெனக் கொள்க. அருளியவென்பது செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம் அது புனைவரென்னும் பிறவினைகொண்டது. இல்லார் இல்லாகச் செய் தாரெனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர். ,அருளிய பொல்லாரெ னப் பெயரெச்ச முடிபாகவைத் துரைப்பினு மமையும். மலேவில்லக ரருளிய பொல்லார்தாள் புனைவரெனவே யவ்விருவருந்தம்முள் வேற் றுமை யின்மை பெற்றாம். உலகத்துப் புதல்வர்கண் மாட்டுச்செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் கழிபேரு வகைபயப்பிக்கு மாகலி னங்ஙயம் பற்றி யங்ஙனங் கூறியதூஉமாம்.

அவையடக்கம்.

வெண்பா.

தம்மையுணர்ந்துதமையுடையான்றன்னுணர்வார்... ...*
எம்மையுடைமையெமையிகழார்-தம்மை ... ... *
யுணராருணரா ருடங்கியைந்துதம்மிற்... ... ...*
புணராமைகேளாம் புறன் ... ... *

இது, அவையடக்கங் கூறுமுகத்தானே யீண்டெடுத்துக்கொண் ட சித்தாந்த சைவத்தி னுயர்வு மேனைச் சமயத்தார்கள திழிபுங் கூறு கின்றது.

(இ-ள்) தம்மையுணர்ந்து தமையுடையான்றன்னுணர்வார்-எ-து- உடைப்பொருளாகிய தம்மியல்பினை யுணர்ந்து தம்மையுடையானாகிய தலைவனை யுணருஞ் சித்தாந்த சைவர் - எம்மையுடைமை யெமையிக ழார்-எ-து-தமக்குடைப் பொருளாகிய வெம்மையுடைய ராகலி னெ ம்மைக் குற்றங்கணிக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி யிகழ்த ல்செய்யாராகலி னெம்மாற் செய்யப்படுநூலையு மவ்வாறு கைக்கொ ள்வர்-தம்மையுணராருணரார்-எ-து-அங்ஙனந்தம்மையுணராதார் தம்

மையுடையானும்பிர தலைவனையுமுணராராகலான்- உடங்கியைந்து தம்மிற்புணராமை-எ-நு- அவரொருங்கே குழீஇக்கொண்டு தம்மிற்றமே சோராது முரணுதலால்-கேளாம்புறன்-எ-து-அவரெம்மையுமெம்மாற் செய்யப்படுநூலையு மிகழ்ந்துரைக்கும்புறமொழியை யாம் பொருளாகக்கொள்ளாம் - எ - று.

ஆகலா னெம்மாற்செய்யப்படு நூலையு மவ்வாறு கைக்கொள்வ ரென்பது குறிப்பெச்சம். தன்னையென்னு மிரண்டனுருபு விகாரத தாற் றொக்கது. உடைமை-புணராமை-என்புழி - இன்னுருபுவிரித்து ரைக்க. தம்மையுணராரெனப் பொதுப்படக்கூறுதலானே, தாமொரு பொருளுண்டென்பதே யுணராத வுலோகாயதரும், தம்மைக்குணிப் பொருளென் றுணராத புத்தர்-சாங்கியர்-மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக் குடைப்பொருளென்றுணராத வெச்சமயத்தாரு மடங்குவர். பாஞ்சராத்திரிகளுஞ் சிவாத்துவிதசைவருந் தம்மையுடைப் பொருளெனக் கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள் உடைப் பொருளாகிய தமக்கணுப்பரிமாணங் கோடலானும்,உடையானுக்குப் பரிணாமங்கூறுதலானும், உடையானல்லாதானையுடையானென மயங் கிக்கோடலானும் சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணாமங்கூறுதலானும், பிறவாற்றானுந் தம்மையுணராரேயென்பது. புறன்-புறச்சமயம்பற்றி யிகழ்ந்துரைக்குமொழியும், புறங்கூற்றுமொழியுமென்ப திரட்டுறமொழிதலென்னு முத்தியாற்கொள்க. புறங்கூற்றுமொழியாவது, முக்கூற்றுப் புறச்சமயங்களின் வேறான பாடாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தேயிகழ்ந்து கூறு மொழியென்க.

முதற்சூத்திரம்.

ஈண்டாசிரியர் முதனூலிற்கூறியவாறே சிவாகமங்களி னேதப் படு ஞானபாதப்பொரு ளெல்லாவற்றையும் பொதுவுண்மையென் றிரண்டாகத்தொகுத்துப் பிரமாணவிய லிலக்கணவியல் சாதகவியல் பயனியல் என நால்வகைப்படுத்துப் பிரமாணவியல் மூன்றுபாதத் தாற் கூறுவான்றொடங்கி, முதற்கணுலகிற்கு முதற்கடவுள் சிறப்பு

வகையானுஞ்செட்டென்றுமாக மப்பிரமாணத்தை வலியுறுத்துவதா யவ னுமானப்பிரமாணங் கூறுகின்றார்.

சூத்திரம்.

அவனவளதுவெனுமவைமூவினைமையிற் ... ௧
றோற்றியதிதியேயொடுங்கிமலத்துளதா... ...௨
மந்தமாதியென்மனார்புலவர் ௩

எ-னின்-சங்கார காரணனை - உணர்-ற்று. இது சூத்திரக்கருத்துரைக்கின்றது.

(இ-ள்.) நிவிர்த்திகலைமுதலிய பஞ்சகலைகளுட்பட்ட வைவகைச் சங்காரத்து ளிறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச்செய்யும் வினை முதலாயுள்ள முதல்வனையே தனக்கு முதற்கடவுளாகவுடைய தவ னவளது வென்றிவ்வாறு சுட்டியுணரப்படுவதாய வுலகமென வேதா கமங்களுட் கூறப்படுவதனை யனுமானவளவை யானுணர்த்துதலைக் கருதிற் றிச்சூத்திரமென்றவாறு. ஏகாரம்-இயைபின்மை நீக்குதற்கும் பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய்நின்ற பிரிநிலை. இதன்பொ ழிப் புரைத்துக்கொள்க.

முதலதிகரணம்.

இஃதிவ்வுரை முகத்துக்கேட்போரா லுரைவகைபற்றிச் செய்து கோட்பால தொன்றனை யறிவுறுத்துகின்றது.

(இ-ள்.) இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க்கண்ண ழித்துரைக்கும் பொழிப்புரைபற்றி யுரைத்துக்கொள்க வென்றவாறு. எனவே யிங்ஙன மிருவகைப்படும் பொழிப்புரையுட் கண்ணழித் துக் கடாவிடைகளானுரைக்கும் வார்த்திகமாய பொழிப்புரைமாத்தி ரையே யாமீண்டுரைக்கின்றாம் பிண்டமாகக்கொண்டுரைப்பதாய பொ ழிப்புரை யிதுபற்றி யுணர்ந்துகோட லெளிதாகலி னஃதியாமுரைக் கின்றிலமென வுரைமுகத்து மாணுக்கர்க் கறிவுறுத்தவாறாயிற்று. இஃ தேனைச்சூத்திரங்களினு முய்த்துக்கொண் டுணர்தற்பொருட்டு முதற் கண்வைக்கப்பட்டது. இவ்வாசிரியரானே தந்தமையிற் கண்ணழித் துரைபற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும்.

அவனவளதுவெனுமவை-புலவர்-எ - து - அவனென்றும் அவ ளென்றும் அதுவென்றும் இவ்வாறுபகுத்துப் பலவாய்ச்சுட்டி யுண ரப்படுஞ் சொல்லும்பொருளுமாய விருகூற்றுப் பிரபஞ்சத்தொகுதி

தோற்றமிலியிறுதியென்னு முத்தொழிலுடைமையால் ஒருவனாற்றோ ற்றப்பட்டதாய வுள்பொருளேயாம், அதுதோன்றுங்கால் தானொடு ங்குதற்கேதுவாய்நின்ற கடவுளினின்றுஞ் சகசமலநீங்காமையா லது நீங்குதற்பொருட்டு மீளத்தோன்றுவதாம், இவ்வாறாகலிற் சங்காரத் தொழிலைச்செய்யுங் கடவுளேயுலகிற்கு முதற்கடவு ளேனையோரல்ல ரெனக் கூறுவரளவை நூலுணர்ந்தோர்-எ-று.

அவை-தொகுதி. சுட்டுப்பெயரெனக்கொள்ளின், உளவெனப் பிரித்துப் பயனிலையாக்கித் தாமென்பதனை யசைநிலையாகவைத்துரை த்தாக்கச்சொல் வருவித்துக்கொள்க. வினைமை-வினையுடைமை-தோ ன்றியவென்றது தோற்றியவெனப் பிறவினைவாய் பாட்டானேறுதலி னதற்குரிய வினைமுதலவாய் நிலையான்வந்தது. தோற்றியவென்னும் பெயரெச்சந் திதியென்னுஞ் செயப்படுபொருட் பெயர்கொண்டது. திதியாயொருவனாற் றோற்றப்பட்டதென்பார் தோற்றியதிதியென்றார். திதியென்றநீண்டுள் பொருளென்னுந் துணையாய்நின்றது. மூவினையு டைமையா லுள்பொருளாதலு மவ்விரண்டுமுடைமையா னிமித்தகா ரணனை யுடைத்தாதலுந் துணியப்படுமென்பார் மூவினையுடைமை யிற் றோற்றியதிதியேயென்றார். ஏகாரந் தேற்றம். ஒடுங்கியென்பது பெயர். உருபுகடொக்குநின்றன. அந்தத்தைச்செய்யுங்கடவுளை யந்த மென்றதுபசாரம். காணப்பட்ட வுலகாற்காணப்படாத கடவுட்குண் மைகூறவேண்டுதலிற் றோற்றிய திதியேயெனவு மொடுங்கி யுளதா மெனவு முலகின்மேல்வைத்துக்கூறினார். கருத்துரையுட் கூறியதூஉ மதுநோக்கி.

இச்சூத்திரத்துள், "அவனவளதுவெனு மூவினைமையின்" என் பதோ ரதிகரணம், தோற்றியதிதியே யொடுங்கியுளதாமென்பது மூன் றதிகரணத்தை யுள்ளடக்கி நிற்பதோரதிகரணம், அந்தமாதியென்ம னார்புலவ ரென்பதோரதிகரணம். ஆகமுக்கூற்ற திச்சூத்திரமென்று ணர்க. இம்மூன்றுமுறையே யொன்றற்கொன்றேதுவும் பயனுமா யொருபொருண்மேல்வருதலி னொருசூத்திரத்தாற்கூறினார். தன்னாற் கூறப்படும்பொருளு மதன்க ணையப்பாடு மதற்குப் பிறர்கூறும்பக்க மு மதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிவு மியைபுமென்னு மிவற்றது நிலைக்களமீண் டதிகரண மெனப்படும்.

ஈண்டுளதாயொருவ னொருத்தியொன்றென்று சுட்டப்பட்டபிர பஞ்சமுற்பத்தி திதிநாச முடைத்தென்றது - எ - து - மேற்கோள்-

எ-னின்-மூவினை யுடைத்தோ வின்றேவென்னு மையப்பாட்டின்கணி த்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை மூவினையுடைத்தென்றல் பொருந்தாதென மீமாஞ்சகரு முலோகாயதருங் கூறுங் கடாவையா சங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெளிப்படை.

ஒருவனென்று மொருத்தியென்று மொன்றென்று மிவ்வாறவயவப் பகுப்புடைத்தாயும் பல்வேறு வகைத்தாய சடமாயுஞ் சுட்டியறியப் படுவதாயு மிருத்தலி னிம்மூன்றேதுவானும் பிரபஞ்சந்தோன்றி நின்றழியு மென்பது துணியப்படு மென்பாருளதா யொருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென வுடம்பொடு புணர்த்தோதினர். உளதாய்ச் சுட்டப்பட்டதெனவியையும். உளதாய்ச் சுட்டப்படுதல் முயற்கோடு முதலியன போலத் திரி வையங்களானன்றி மெய்யாகச் சுட்டப்படுதல்.

ஏது
தோற்றமு மீறுமுள் ளதன்பாலே கிட்டலின் - எ-து- மே-ள்-எ-னின் - காட்சியளவைக் கெய்தாதுரைப்பன வெல்லாம் பிரமாணமாகாவென வுலோகாயதர் கூறுங் கடாவை யாசங்கித்துக் காட்சியளவை பற்றியு மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) உற்பத்தியு நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக்கிடத்தலி னுளதா யொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப் பட்ட பிரபஞ்ச முற்பத்தி திதி நாச முடைத்தென மேற்கொண்டது-எ-று.

உ தா ர ண ம்.

வெண்பா.

பூதாதியிறு முதலுந் துணையாகப் ... ...
பேதாய்திதியாகும் பெற்றிமையி - னேதாரோ ... ...
வொன்றொன்றிற் றோன்றி யுளதாயிறக்கண்டு ...
மன்றென்று முண்டென்ன வாய்ந்து. ... ... (க)

பூதாதியிறும்-ஆய்ந்து-எ-து-உ-ம்-எ-னின். உள்ளதன்பா லவ்விரண்டுங் கிட்டல் யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்தேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) பேதாய்-எ-து-காட்சியளவைகளானு மறியப்படாதமட்வோனே-பூதாதி- எ-து-பூதமுதற் காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு-ஈறு முதலுந் துணையாகத் திதியாகும்-எ-து-திதி நிகழ்வுழி நாசமுமுற்பத்தியும் தனக்குத் துணைக்காரண மாகக்கொண்டே நிகழாநிற்கும்; அற்றாயினு மொன்று தோன்ற வொன்று நிற்ப வொன்றழிவதன்றி யொருங்கே தோன்றி யொருங்கே நின் றொருங்கேயழியக் கண்டிலமாலெனின் - ஒன்றொன்றிற் பெற்றிமையிற் றொன்றியுளதா யிறக்கண்டும்-எ-து-ஒவ்வொருகால விசேடத்திற் சாதிபற்றி யொருங்கே தோன்றி யொருங்கே நின் றொருங்கே யழிவதனைக்கண்டு வைத்தும்-என்று மன்றுண்டென்ன வாய்க்கோதாரோ-எ-து - என்றாயினு மதற்குரிய காலம் வருமென் றுலகத்திற்கு மங்களமாத லுண்டென் றக்காட்சிபற்றி யாராய்ந்து சொல்லார்களோ வுன்னைப்போலு மடமையில்லாதோர் - எ - று.

பூதாதி-அன்மொழித்தொகை. பூதத்துக்கு மேலுளவாய தத்துவங்கள் லோகாயதருக் குடம்பாடன்மையிற் பூதமுதலாய தத்துவங்களென வுரைத்தலீண்டைக் கேலாமையறிக. பூதாதிக்கென நான்கனுருபு விரித்துரைக்க. அது பின்னருஞ் சென்றியையும். ஆகுமென்பது முற்றுவினை. ஈண்டுப்பெற்றிமையென்றது சாதியை. ஏகாரம்-எதிர்மறை. ஒன்றொன்றினென்பது ஒன்றொன்றாய்ப் பார்த்துணர்வதுள்ளமே யென்றாற்போல வடுகுமொழி. காலவிசேடமாத லென்று மவ்வெனப்பின் வருதலிற்பெறும். ஒருங்கேயென்பது சொல்லெச்சம். ஒன்றொன்றிற்றொன்றி யுளதாயிறுதலாவது "பயில்வித்தெல்லாங் காரிடமதனிற் காட்டுமெங்குரங்கழியும்வேனில்" என்பதனானறிக. கண்டுமென்பத னும்மைசிறப்பு.

இனியில்லதற்குத் தோற்றமின்மையி னுள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையி றொடுங்கின சங்காரத்தினல்லதுற்பத்தியில்லையென்றதென விங்ஙனஞ்சொற் பல்காமைப்பொருட்டுத் துணிந்ததாக வைத்துரைத்தாராயினும் பொருளியைபிற்கேற்ப விதனைமுன்றதிகரணமாக வைத்துரைப்ப தாசிரியர் கருத்தெனக்கொள்க. அஃதாமாறுகாட்டுதும்.

இனி யுலகமுள்ளதென்றது - எ-து-மே-ள்-எ-னின் - உலகமில் பொருளாய்த் தத்தஞ்சார்பிலே தோன்றியழிந்து லியையென்றலே ய

மைவுடைமையினது மூவினையுடைத்தாயினுந் தோற்றுவானொருவனை யுடைத்தாதல் செல்லாதெனப் புத்தநூலார் சொல்லுங்கடாவை யாசங்கித்துத் திதியென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

இல்லதற்குத் தோற்றமின்மையின்-எ-து-மே-ள்-எ-னின்-உள்ளதாதல் யாதனையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்து மூற்பத்தியின்மையி னீண்டுற்பத்தி காணப்படுதலா னுலகமுள்ளதென மேற்கொண்டது-எ-று.

இனி யுலகஞ்செய்வோனை யுடைத்தென்றது - எ - து- மே-ள்-எ-னின-உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சந் தத்த முதற்காரணத்தினின்று தானேதோன்றி யழியுமிதற் கொரு நிமித்தகாரணமா யொரு கருத்தா வேண்டாமெனச் சாங்கியர் கூறுங்கடாவை யாசங்கித்துத் தோற்றியவென்னுஞ் சூத்திரத்தைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்- எ-து-மே-ள்-எ-னின்-அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவையாசங்கித்து மேற்கோளைச்சாதித்த னுதலிற்று.

(இ-ள்) மண்முதலிய வற்றினுள்ளதாகிய குடமுதலிய பொருட்குக் குயவன்முதலிய செய்வோரையின்றி வினைதன் முதலிய செய்தொழினிகழாமையி னுலகமிவ்வியல்பிற்றாகலான் இனி யிவ்வுலகஞ் செய்வோனை யுடைத்தென மேற்கொண்ட தென்றவாறு.

இனி யொடுங்கின சங்காரத்தினல்லதுற்பத்தியில்லையென்றது- எ-து-மே-ள்-எ-னின்-இத்துணையுங் கூறியவாற்றா லுலகத்தைத் தோற்றுவிப்பா னுண்டெனப்பட்ட கருத்தா திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரிலொருவனே யாதலமையுமெனப் பாஞ்சராத்திரர் முதலியோர் கூறுங்கடாவையாசங்கித் தொடுங்கியுளதாமென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்.) உலகந்தா னொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத் தாவினின்றல்லி யுளதாகாதென்பதாம். ஒடுங்கினவென்னும் பெயரெச்சம் சங்காரமென்னு மிடப்பெயரோடு முடிந்தது. சங்காரமாகுபெயர். அல்லதில்லை யென்றெதிர் மறைமுகத்தாற் கூறியதேனைக் கடவுளினுள தாகாமையாப் புறுத்தற்பொருட்டு.

இதனுளொடுங்கின வென்பதனாற் போந்த குறிப்பேதுவைப் புலப்படக்காணுமாறு, ஆண்டொடுங்குதலின்-எ-து - மே-ஏ-எ-னின். அதற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) யாது யாண்டொடுங்கும் அஃது ததிலுற்பத்தி யாமண்ணிற் குடம்போலு மென்னு மவினு பாவத்தாற் பிரபஞ்சஞ் சங்காரகாரணன் மாட்டொடுங்குதலின் மீளத்தோன்றுங்கா லாண்டுநின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையி னவ்வாறு மேற்கொண்ட தென்றவாறு.

இவ்வாறு மூன்றதி கரணப்பொருளு மிதன்கட் போந்தவாறு மிவ்வாறுரையாக்காற் பொருளியைபு படாமையு நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

உதாரணம்.

வெண்பா.

இலயித்த தன்னினி லயித்ததா மலத்தா ... .. *
விலயித்த வாறுளதா வேண்டு - மிலயித்த ... *
தத்திதியி லென்னி லுழியா தவையழிய ... ...*
தத்திதியு மாதியுமா மாங்கு. ... ... (௨)

இலயித்ததன்னினி லயித்ததாமலத்தா விலயித்த வாறுளதா வேண்டும்-எ-து-உ-ம்-எ-னின் - உலகமுள்ள தாயினுள்ளதற் குண்டாக வேண்டுவதில்லை யாகலாற் சற்காரியவாத மடாதெனப் புத்தர் கூறுங் கடாவை யாசங்கித் தில்லதற்குத் தோற்ற மின்மையினென்ற வேதுவை வலியுறுத் தனுதலிற்று.

(இ-ள்.) இலயித்த தன்னினி லயித்ததாம்-எ-து - உள்ளதாயினுஞ் சங்கார காலத்தி னொடுங்கியதாகலா னவ்வொடுங்கிய வுலகந்தா னொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றும் படைப்பு

புக்காலத்தின் மீளவுள்ளதாம். அற்றேலொடுங்கிய தொடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாக வேண்டாம். வேண்டுமாயின் முன்னொடு ங்காது நிலைபெறவே யமையும், அவ்வாறன்றி யொடுங்கி மீளவுளதா வ தெற்றுக்கெனின் - மலத்தால்-எ-து-உள்ளதாகிய வுலகங்களு மல பரிபாகமாதற் பொருட்டொடுங்கி யாணவமலபரிபாக மாதற்பொருட் டு மீளவுமுண்டாம், அற்றேல், முன்னின்ற பிரபஞ்ச நாசமாக, வே றுதோன்று மென்னுமலதுவே யொடுங்கி நின்று மீளவுளதா மென்ற ற்குப் பிரமாணமென்னை யெனின் - இலயித்த வாறுளதா வேண்டும்-எ-து-எஃதெவ்வாறு நின்றொடுங்கிற் றஃதவ்வொடுங்கியவாறே யுள தாதலெல்லாரானும் விரும்பப்படும்-எ-று. எனவே யந்நியம மில்லை யாயின், நெற்கமுசாய் நீளாது நெல்லாய் நீளுதற்கேது வென்னை யெ ன்னுந் தருக்கமே யதனை யறிவுறுத்து மென்ற வாறு:யிற்று. சற்கா ரிய வாதத்தினியல்பு - தந்து முதல் காரகமென்னும் ஞானாமிர்தத் தினுங் காண்க. இதனானே யில்லது முள்ளது மல்லாத பொருடோ ன்றுமென்னுஞ் சூனியவாதிகளும், இல்லது முள்ளதுமாய பொரு டோன்று மென்னு மனேகாந்த வாதிகளு மறுக்கப்பட்ட வாறறிக. இலயித்ததத் திதியிலென்னி னழியாதவை யழிவதத் திதியுமாதியுமா மாங்கு-எ-து-உ-ம்-எ-னின். இனிச்சற்காரிய வாதத்தி னவ்வக்காரிய ங்கடத்த முதற்காரணத் தொடுங்கு மெனவே கோடலின், உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவ னுருவாகலா னுலகமவன் மாட்டொடுங்கு மென்றலமை வுடைத்தன்றி முதற்காரணத்தின் வே றாய் நின்ற நிமித்தகாரண மெனக்கொண்ட சங்காரகருத்தாவின்மாட் டொடுங்கு மென்றல் பொருந்தாதெனப் பாஞ்சராத்திரிகள் கூறுங்க டாவையா சங்கித்து. ஒடுங்கின சங்காரத்தின்-எ-ம் - இலயித்ததனி ல்-எ-ம்-கூறிப்போந்த குறிப்பேதுவை வலியுறுத்தனுதலிற்று.

(இ-ள்) இலயித்ததத்திதியிலென்னில்-எ-து- உலகமொடுங்கியது அந்தமூலப்பகுதி வடிவாய திதிகருத்தாவின்கண் ணென்பையாயின்- அழியாதவை - நீயங்ஙனங்கொள்ளினு மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்களதனால் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள வேகதேசமாத் திரையே யான்டொடுங்குவதன்றி மாயாகாரியத்தொகுதி முழுவது மாண்டொடுங்காது, அற்றேல், மாயாகாரியத்தொகுதி முழுவதும் யாண்டொடுங்குவதென்னில்-அழிவதத்திதியுமாதியு மாமாங்கு-எ-து- அந்தத் திதிக்கடவுளும் படைப்புக்கடவுளுந் தோன்றுதற்குக் காரண

மாயிய வச் சங்காரக்கடவுளிடத்தே யவ்விருவரோடுங்கூட வழிவதா மத் தொகுதியென்றவாறு.

. இவ்வெண்பாவினை, "செய்யுட்க ளோசைசிதையுங்கா லீரிடத்து மையப்பாடின்றியளையுமா, மைதீரொற், றின்றியுஞ்செய்யுட் கெடி னெற்றேயுண்டாக்குக, குன்றுமேலொற்றவுங்கொள்" என்பதுபோல விரண்டதிகரணப்பொருள் படுமாறு இருதொடர்களைத் துணையாக் காற்பொரு ளியைபுபடாமை யறிக. இலயித்தவென்னும் பெயரெச் சந் தன்னென்னுமிடப்பெயரோடு முடிந்தது. இலயித்தென்ற தே துப்பொருண்மையுணர நின்றபெயர். இலயித்தெனச் சற்காரியவாத ங்கூறவே யிலயித்தவவத்தையி னவ்வக் காரியசத்தி சமூகமாய்ச் சூக் குமமாய் நிற்பதொன்றுண்டதுவே முதற்காரணமெனப் பிரபஞ்சத் திற்கு முதற்காரணமாகிய மாயையுண்மையும் பெறப்பட்டது. ஆவெ ன்பது முதனிலைத்தொழிற்பெயர். வேண்டுமெனச் செயப்படுபொரு ளைச் செய்ததுபோலக்கூறினர். அவை-தொகுதி. அஃறிணைப் பன் மைப் பெயரொன்பார் அழியா தழிவதென்று மொருமைகளோ டியை யாமையு முத்தரமாகாமையுமுணர்க. திதியுமாதியு மாகுபெயர். ஆமாங்கு-பெயரெச்சமுடிபு. இரணிய கருப்பமதத்தையு மறுத்தற் பொருட்டுப் படைப்புக்கடவுளையு முடன்கூறினர். நிமித்தகாரணனு கிய முதல்வனுலகிற்கு முதற்காரணனல்லனாயினு முதற்காரணமாகிய மாயைக் காதாரமாய்நிற்றலி னுலகமாண்டொடுங்கி யாண்டுநின்றுந் தோன்றுதலமையுமென்பது வருகின்றவெண்பாவிற் பெறப்படும்.

வெண்பா.

வித்துண்டாமூல முளைத்தவாதாரகமா ௬
மத்தன்றாணிற்றல வாவினையால் - வித்தகமாம் ...௭
வேட்டுவனுமப்புழுப்போல்வேண்டுருவைத்தான்கொடுத்துக்
கூட்டானேமண்போற் குளிர்ந்து ... ...(௩)

வித்துண்-குளிர்ந்து - எ-து-உ-ம்-எ-னின்-உலகந்தனக்கு முதற் காரணமாகிய மாயையினொடுங்குவதன்றி நிமித்தகாரண னொருவனு ண்டெனக்கொள்ளினு மவன் மாட்டொடுங்குமென்றல் பொருந்தா மையின் யாதுயாண்டொடுங்கு மஃததனி லுற்பத்தியாமென்னு மவி னுபாவத்தான் மாயையினொடுங்கிய வுலகத்தை மாயையேதோற்று விக்கு மிதற்கோ ரிறைவன்வேண்டாவெனச் சாங்கியநூலார் மதம்

பற்றி யிகழுங்கடாவை யாசங்கித்துள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையினென்று மேதுவை வலியுறுத்துத ..றுதலிற்று.

(இ - ள்) மண்போற் குளிர்ந்து வித்துண்டாமூல முளைத்தவாதாரகமா மத்தன்றாணிற்றல வாவினையால் வித்தகமாம் - எ - து-மாயையுமுலகமும் வித்துமங் குரமும்போலு மாகலின் வித்துக்காதாரமாகிய நிலங்குளிர்ந்த வழியதன்கண் வித்துள்ளதாக வதனினின்று மங்குரந்தோன்றிய வாறுபோல மேலைவெண்பாவினி லயித்ததென்றதனாற் பெறப்பட்ட மாயைதனக் காதாரமாய் நின்று தோற்றுவிக்கு மிறைவனது சத்தியின் கண்ணுளதாய் நிற்றலிற் சத்திசங்கற் பித்தவழி யவரவர் வினைக்கீடாக வவ்வக்காரியங்களை யவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுரப்பாடுடைத்தாமல் லுழியுடைத்தன்று நிலங்குளிர்ந்த வழியன்றி யதன்கட்கிடந்தன்றி வித்துமுளையத்தோன்றுதவாறுபோலு மாகலான் மாயையினொடுங்கித் தோன்றியவுலகமதற் காதாரமாய் நின்றவிறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயா மென்றவாறு. ஆகலானென்பது முதனிலைக் குறிப்பெச்சம். இதுகிழங்கினின்று தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானுமறிக. வழிநூலாசிரியர். "உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதென்றவன்பால்" எ-ம், "உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்" எ-ம், ஓதியதூஉம், உலகவ னுருவிற்றோன்றி யொடுங்குமாறு வாதுளாக மத்தில் வகுத்தோதியதூஉ மிவ்வியல்பு நோக்கியென்க. இஃதறியாதாரின்னோரன்ன வற்றைத் தத்தமக்குவேண்டியவாறே யுரைப்ப. உவமவினைபொருளினும் பொருளடை யுவமையினுஞ் சென்றியையும், உண்டாகவெனச் சற்காரியவாதத்தை வலியுறுத்துதல் வித்தில்வழி நிலத்தினின்று மங்குரந்தோன்றுத வாறுபோல மாயையில் வழிப்பிரமத்தினின்று முலகந்தோன்றுதெனப் பரிணும வாதிகளையும், மாயையநிர்வசனமென்னு மாயாவாதிகளையும், வித்து நிலனும்போ லென்றதனல் மாயைமுதல்வனின் வேறுபொரு ளன்றென்னுஞ் சிவாத்துவிதசைவர் பாஞ்சராத்திரிகளையு மறுத்தவாறுயிற்று. முதல்வன் பல்வேறுவகைப்படச் சங்கற்பித்த வாறென்னை யென்னுங் கடாவை யாசங்கித்தவாவினையா லென்றார். வித்தகம் - விசித்திரமென் றுரைப்பினுமமையும். அற்றேல், தன்வயத்தானன்றி வினைவயத்தாற் றோற்றுவிப்பா னிறைவனுகா னென்னில் ௧ வேட்டுவனுமப் புழுப்போல்வேண்

சிறுவைத்தாய் கொடுத்துக் கூட்டானே-எ-து-வேட்டுவனாகலை விரு ம்பும் புறாவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறு போல விறைவனு மவரவர் வேண்டு முருவினைக்கொடுத் தவ்வினைக் குத்தக்க பயன்களையுங் கூட்டுவானாக லானதுகொண்டு சுதந்திரத்து க்கிழுக்கென்னை யென்றவாறு.

ஆகலானது கொண்டு சுதந்திரத்துக் கிழுக்கென்னை யென்பது குறிப்பெச்சம். போல்-அசை. குளிர்ந்த வழியென்பது குளிர்ந்தெ னத்திரிந்துநின்றது. நிற்றலினென்று மைந்தாவது விகாரத்தாற்றொக் கது. ஏகாரம்- எதிர்மறை.

வெண்பா.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற் ...
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ-னாக்காதே ...
கண்டகன வுணர்விற் கண்டகனவுணரக் ... ...
கண்டவனி லிற்றின்றாங் கட்டு, ... (௪)

நோக்காது-கட்டு-எ-து-உ-ம்-எ-னின், மேலுதாரணத்திற் கூறிய வாற்றா னுலகிற்கு முதற்கடவு ளுண்டெனக் கொள்ளினு மவன்ப டைப்பு முதலிய தொழில்செய்வானாயின் விகாரமெய்தி யதனிற்பந் தமுறுவானென்று வாதமதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்தத னை வலியுறுத்த லுதலிற்று.

(இ-ள்.) இறைவன்-எ-து-முதல்வன் - காலத்திற்றாக்காது நின் று-எ-து-இறப்பு நிகழ்வெதிர்வு முதலியனவாய் வேறுபட் டெல்லா த்தொழிலுஞ் செய்துந் தனக்கு விகாரமின்றி நிற்குங் காலம்போல விகாரப் படாமனின்று - ஆக்காதேகண்டு-எ-து-பிரபஞ்சத்தைக் கார ணத்தாற் படையாது சங்கற்ப மாத்திரத் தானேபடைத்து - நோக் காது நோக்கி நொடித்து-எ-து-அவ்வாறே காவாமற் காத்தழியாமல ழித்தலால்-இன்றாங்கட்டு-எ-து- இவ்வாற்றா லவனுக்குப் பந்தமின்றா தல் - உளத்திற்கண்ட கனவுணர்விற்கண்ட கனவுணரக் கண்ட வனி லிற்று-எ-து-கற்றநூற்பொருளுஞ் சொல்லுமுளத்திற் றோன்றுங் கா லுள்ள மவற்றிற் றொடக்குண்ணாதவாறுங் கனவின்கட்கண்டவற்றை ப் புறத்துவிடயங்களை யறிந்துவந்த நனவுணர்வின் கண்ணே விளங்க வறிந்தவ னப்பொழு தவற்றிற் றொடக்குண்ணாதவாறும்போலு மித் தன்மைத் தென்றவாறு.

எனவே யிஃதிவ்வாறாக வென் றெண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉங் காரணத்தாற் செய்வதூஉ மென வினைமுத லிருவகைப்படுமென்பதூஉம், காரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்பமாத்திரையாற் செய்யு முதல்வனுக்கு வினைமுதலாற் பொதுமைபற்றி யொருபுடை யுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமையானுஞ் சங்கற்பமாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டன் முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானு மவை யாண்டுளவாதற் கோரியை யின்றென்பதூஉங்கூறி யேதுவை வலியுறுத்தவாறுகாண்க.

ஆக்குதல் - படைத்தல் - காண்டலுமது. நோக்குதல்-காத்தல்- நொடித்தல் - அழித்தல் - அது நொடித்தான் மலையென்பதனானுமறிக. ஆக்காது நோக்கா தென்றமையால் நொடியாதென்பது வருவித் துரைக்கப் பட்டது. நொடித்தலாலென்பது நொடித்தெனத்திரிந்தது. அன்றேயென்பது அசை, அநாதியெனினு மமையும். இன் மூன்று முவம வுருபுகள். உளத்தி னென்பதற்குச் சங்கற்பத்தா லென்றுரைப்பினு மமையும். இன்றுங்கட் டென்ப தருங்கேட்டென்பது போல் நின்றது.

மூன்றுமதிகரணம்.

இனிச்சங்காரமே முதலென்றது-எ-து-மே-ள்-எ-னின், ஒடுங்கின சங்காரத்தினல்ல துற்பத்தி யில்லையெனவே சங்காரகருத்தாவுலகிற்கு முதற்கடவுளென்பது போந்ததாயினுந் தேர் முதலாயின பலர் கூடிச்செய்யக் காண்டலி னவற்றினு மதிகவிசித்திரமான வுலகத்திற்கு மற்று மத்தன்மை யராய முதற்கடவுள ருண்டெனக்கோடு மென்னு மனேகேசுர வாதிகள் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து, "அந்தமாதி,, என்னுஞ் சூத்திரத்தைக் கண்ணழித் துரைத்து மேற்கோளைச் சாதித் தனுதபெற்று.

(இ-ள்.) சங்காரகருத்தா வொருவனே யுலகிற்கு முதற்கடவுளென்றது. சங்காரம் ஆகுபெயர். ஏனையோரை முதல்வராகாரெனப் பிரித்தமையி னேகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்-எ-று-ஏது-எ-லின்,' அதற்குப் பிரமாண மென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்த றுதலிற்று.

(இ-ள்.) ஒன்றொன்றாய்ச் சுட்டி யறிவதாகிய வுருவு மருவுமென் றிரு வேறுவகைப்பட்ட பிரபஞ்ச மவ்வாறு சுட்டி யறிதலின்றி யெவ்வுலகு மொன்றாயறிந்து நின்ற சங்காரகருத்தாவின் வழிப்பா தந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திர முடைத்தாய் நிற்பதன் றாகலாற் சங்காரகாரண னொருவனே யுலகிற்கு முதற்கடவுளன்றி யேனையோர் முதற்கடவுள ரல்லரென மேற்கொண்ட தென்றவாறு.

பிரபஞ்சத்திற்குச் சுதந்திரமின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திர முண்மையுமேது முகத்தாற்காட்டுவார் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவுஞ் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரமெனவு மீரிடத்துமுடம்பொடுபுணர்த்தோதினார். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றதுபசாரம். ஈண்டுப்பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை, பிரிநிலையேகாரத்தான் விலக்குதற்குரியததுவே யாகலின். தேர்முதலாயின பலராற் செய்யப்படினு மப்பலரு மொருவனே வல்வழிநின்றேசெய் பவராகலானும் வேதத்துட்காரண வாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயண னிரணிய கருப்ப னிந்திர னங்கி சூரியன் முதலியோரைக் காரணமென்றது குயவன்போலவாந்தர காரணமாதல்பற்றியேயாகலி னவையெல்லா மாகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையே யுணர்த்திநிற்கு மாகலானுஞ் செய்துஞ் செய்வித்துமெல்லாத்தொழிற்கும் வினைமுதலாய்நிற்கு முதற்கடவுள் சங்காரகருத்தா வொருவனேயென்பதுகருத்து.

வெண்பா.

ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா ... ...*
ரொன்றலா வொன்றிலவை யிரண்ட-லொன்றலா ...*
வீரேழுநலதனி னீறலா வொன்றுபல ... ... *
வாறேதொழும்பாகு மங்கு. ... ... (ர)

ஒன்றலா - அங்கு-எ-து-உ-ம்-எ-னின், அங்ஙனமாயினுஞ் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினாற் போலச் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரரும் பலவுள வெனக்கோடும், ஒன்றேயென்றற்குப் பிரமாண

மெய்ம்மை யென்னுங் கடாவை யாசங்கித் தேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) அவை-எ-து-சேதனப் பிரபஞ்சத் தொகுதி - ஒன்றலா வொன்றால்-எ-து-உருவு மருவு மென்னு மவ்விரு கூற்றுப் பிரபஞ்சத்து ளொன்றல்லாத வொப்பற்ற பரம்பொருளாலே - உளதாகி நின்றவாறு-எ-து-சிருட்டிப் பட்டுத் திதிப்பட்டவாறே - ஒன்றலாவொன் றிலீறுதல்- எ-து - அந்தப் பரம்பொருளின் கண்ணே சங்காரப்படுதலால் - ஒன்றலா வீறேமுதல் - எ-து - அச்சங்காரக் கடவுளொருவனே யுலகிற்கு முதற்கடவுள் - அற்றே லிவ்வாறு முத்தொழிற் செப் பஞ்சேதனப் பிரபஞ்சம் வீடுபெற்ற வழிச் சுட்டுணர்வின்றிச் சிறு சமமாமென வேதத்து மாகமத்து மோதுதலி னவ்வழி யவ்வைப்பு முதற்கடவுளாமென றற் கிழுக்கென்னையெனின், அதனி னீறலா வொன்று-எ - து - அப்பரம் பொருள்போ லழிவின்றி நித்தமாய சேதனப்பிரபஞ்சம்-அங்கு-எ-து - வீடுபேற்றின் கண்ணும் - பலவாறே தொழும்பாகும் - எ-து-பலவாற்றானும் பரம்பொருளுக் கடிமையா மென்றவாறு.

இது சொற்பொருட்பின் வருநிலை. காரியப் பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்ச மவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற் றாய் நிற்றலானும், இவற்றைத்தொழிற் படுத்துதற்கிவற்றின் வேறா யொரு முதற் கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலி னிவ்வாறு நடாத்து முதற் கடவுண் முற்றுணர்வு மளவிலாற்றலும் பொருளுஞ் சுதந்திரமுதலிய நிரதிசய குணங்களுமுடைய னென்பதூஉம் பெறப்பட்டது. படவே, இத்தன்மையனாய முதற்கடவுளொருவனே யமையுமாகலான் வேறு மத்தன்மை யருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம். அல்லதூஉம், இலக்கணத்து ளொருவாற்றானும் வேற்றுமையில் வழி யிலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தா லொன்றலாவொன் றெனவரை யறுத்தோதினார். ஈறேமுதலென்றது முடிந்தது முடித்தல். ஈறு ஆகுபெயர். இறந்ததுதழீ இயவெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. பலவாறாவன; இருணீங்கியவழியுங் கண்ணுக்குக்காட்சிஞா யிற்றையின்றி யமையாதவாறுபோல மலநீங்கிய முத்தி நிலையினுமான் மாவுக்கறிவு வியஞ்சக மாயுடனின் றறிவிக்கு முதல்வனை யின்றி

யமையாதவாறும், ஸ்படிக மாகாயம்போலச்சார்ந்த தன்வண்ணமாயன்றி முதல்வன்போலத் தனித்துநிற்கு மியல்பில்லாதவாறும், முதல்வன்போ லைந்தொழிற்கும் வினைமுதலா முரிமையின்றிச் சிவானுபவமொன்றற்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினு முதல்வனை நோக்கத் தூல வடிவாகலான் விளக்கொளி யுட்கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறு முதலாயின. அற்றேல், முத்திநிலையினுள் மாச்சிவசமமென்னுஞ் சுருதிக்குப்பொரு ளென்னையெனின், அஃதுண்மை யதிகாரத்திற் பெறப்படும். இதனானே சிவசமவாதி, சங்கிராந்தவாதி, உற்பத்திவாதி, ஆவேசவாதி மதங்களுமறுக்கப்பட்டன. பதியுண்மைக்குப் பிரமாணங் கூறுவார் மலத்துளதாமெனப் புளரும்பத்திக்கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிரமாணமு முடன் கூறினர். அதனையீண்டுவேறோ ரதிகரண மாகவைத்துரையாராயினர் அதிகரணத்துக் குரியவை யப்பாடு முதலியனவெல்லாஞ் சகசமலத்துளரா தென வதனிலக்கணங்கூறும் வழிப்பெறப்படுதலா லீண்டுமிகைபடவே றோதல்வேண்டாமையின். இச்சூத்திரத்தினதி காலங்களாற் போந்ததொகைப் பொருளாவது தோற்றக்கேடுகளதுண்மை காட்சிமுதலிய வளவைகளானறிய வாராமையிற் பிரபஞ்ச நித்தப்பொருளேயாம். அன்றித்தோன்றி யழியுமெனக்கொள்ளினு மிப்பொருடத்தஞ் சார்பிற்றோன்றி நின்றழிதலியற்கையெனவமையுஞ் செயற்கை யென்றற்கோரேது வின்மையின், மற்றுளபொருளாயினது வேயமையுமிறைவன்வேண்டா. இரண்டுள்பொருள்கோடன் மிகையாகலின், வேண்டுமாயினு மாயோன்முதலிய கடவுளரிலொருவனே யமையுமவனை யொழித்துச் சங்காரகருத்தா முதற்கடவுளென்றற்குப் பிரமாணமென்னை, பிரமாணமுண்டாயினு மதிவிசித்திரமாய பிரபஞ்ச மொருவனாற் செய்தல்கூடாமையின் மற்றுமவ்வியல்பினராய முதற்கடவுளருள ராதல்வேண்டுமென, உலகாயதர், மீமாஞ்சர், புத்தர், சமணர், சாங்கியர், பாஞ்சராத்திரிகள், அனேகேசுரவாதிகள் மதம்பற்றிப் பூருவபக்கம் நிகழ்ந்தவழியவனை மறுத்துச்சித்தாந்தஞ்செய்து முதற்கடவுள தன்மைபொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருதலளவையின் வைத்துணர்த்திய வாறெனவுணர்க. இவ்வாறு சூத்திரந்தோறு முணர்ந்துரைத் துக்கொள்க. முதற்சூத்திர முடிந்தது.

இரண்டாஞ்சூத்திரம்.

அவையேதானே யாயிருவினையிற் ... ...
போக்குவரவு புரியவாணையி... ... ...
னீக்கமின்றி நிற்குமன்றே. ... ...

எ-து- எ - னின், புனருற்பவம் வருமாறுணர்த்து தனுதலிற்று. எ-து-க-ா-எ-னின், சூத்திரக்கருத்துணர்த்து தனுதலிற்று.

(இ-ள்.) உலகமொடுங்கியு நின்று மீளவுளதாமாற் றைவகுத்து ணர்த்து முகத்தானே துணைக்காரணமுதலிய வில்வழி யிறைவனுலகி ற்கு நிமித்தகாரணனுதல் சாலுமாறியாங்ஙனமென்னுங் கடாவையாச ங்கித்தவற்றதுண்மைக்குப் பிரமாணமுணர்த்து தனுதலிற்றிச் சூத்தி ரமென்றவாறு.

சூத்திரவியையு மிதனுனேவிளங்கும். ஒடுங்கி யுளதாமென்ற வழி யொடுங்கிநின்று மீளவுளதாவ தெவ்வாறென்றவாய்நிற்றலி னவ் வவாய்நிலைபற்றிப் புனருற்பவமேயீண்டுக் கூறப்பட்டது. இச்சூத்திர த்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச் சூத்திரதெடுத்துக்கொண்ட சம் காரகாரணனுகிய முதல்வன் கலப்பினுலுடலி னுயிர்போ லவ்வுயிர்க ளேயாய பொருட்டன்மையாற் கண்ணினருக் கன்போலவற்றின் வே றுமா யுயிர்க்குயிராதற் றன்மையாற் கண்ணொளியி னுன்மபோதம் போலுட்னுமாய் நின்றுனே யென்னும் யரியாயப் பெயருடைய த னது சிற்சத்தியான்வரு மிருவினைகளான வையிறத்தல் பிறத்தல் க ளைப்புரியும் வண்ணமவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்ப னென்றவாறு.

“அவையேதானேயாய்„ என்பதனை யிரட்டுற மொழிந்துகொ ண்டுரைக்க. இக்கருத்தேபற்றி, “உலகெலாமாகிவேறுயுடனுமாய்„ என்முர் வழிநூலாசிரியரும். மேலைச்சூத்திரத்தி னந்தமாதியென் பு ழிவிகாரத்தாற்றொக்க பிரிநிலையே காரத்தான் விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சத்தை யீண்டவையெனச் சுட்டிக்கூறினர். புரிதல்- எப்பொழுதுமேற்கோடல். ஒடுங்கி யுளதாமென்றதற்கேற்ப வீண்டு

ற்போதலின் முதற்கூறினார். ஆணையினென்பது மிக்கநோக்காயிருவி னையென்பதனோடு நீக்கமின்றியென்பதனோடுமியைந்து பொருந்து நின்றது. ஆண்டின்னுருபு முன்னையதேதுப்பொருட்கண்ணும் பின்னர் நீக்கப்பொருட்கண்ணுமாய் நின்றது. இன்னென்பது சாரியையென க்கொண்டவிடத்து மேற்கூறுமுருபுகள் விரித்துரைத்தலுமொன்று. அ ன்றே-அசை-அநாதியே யிவ்வாறு நிற்குமெனினு மமையும். ஆய்ப் புரியநிற்குமெனவே யச்செயலெல்லா முதல்வன் காரணத்தான ன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது. இத னானே மேலந்தமென் றுத்தேசமாவெடுத்துக்கொண்ட முதல்வனுக் கிலக்கணங்கூறியவாறு மாயிற்று. இது தடத்தவிலக்கண மெனப்படும் பொதுவியல்பு. ஆணையினெனவே, தனதுசிற்சத்திதுணைக்காரணமாய், இருவினையினெனவே, இருவினையுந்தன்வழித்தாயதுணைக்காரணமாய், அதற்குப்பற்றுக்கோடின்றென்பதூஉம் பெறுமாகலின், அதுமுதற் காரணமென்பதூஉம்,இருவினையிற் போக்குவரவு புரியவெனவேயொ டுங்கி மீளவுளதாங்காலிருவினைகட்கேற்பப் பல்வேறுவகைப்பட்டு வி ரியுமென்பதூஉம் போந்தவாறுணர்க. இதனுள் அவையே தானேயா யென்றதோ ரதிகரணம்,ஆணையி னிருவினையினென்றதோ ரதிகரணம், போக்குவரவு புரியவென்ற தோரதிகரணம், ஆணையினீக்கமின்றிநிற் குமன்றே யென்றதோ ரதிகரணம், ஆகநாற்கூற்றதிச் சூத்திரமெனக் கொள்க.

முதலதிகரணம்

ஈண்டிவ் வான்மக்கள்பலவு முதல்வன் றானேயாய் நிற்குமென் றது-எ-து-மே-ல்-எ-னின், மேன்முதற்கடவு ளல்லவென விலக்கப் பட்டுநின்ற சேதனப்பிரபஞ்சமு முதல்வனும் பொன்னும் பணியும் போல பேதமோ, இருளும் வெளியும்போற் பேதமோ, சொல்லும் பொருளும்போற் பேதாபேதமோவென்னு மையப்பாட்டின்கண் அம் மூன்றினு ளொரோவொன்றேபற்றி யவ்வம்மதத்தார் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மே ற்கோட்டுநலிற்று.

(இ-ள்) வெ-டை.

ஈண்டுமிரட்டுற மொழிந்துகொள்க. இதனானே யொருவிடயத்தைக் காணுங்காலான்மபோதங் கண்ணொளியெனத் தானெனவே றின்றியுடனாய்நின்று காணுமாறுபோல முதல்வன் புனருற்பவஞ்செய்யுங்கா லுயிர்களோ டுடனாய்நின்று செய்வனென்பதூஉம் பெறப்பட்டது.

அத்துவிதமென்ற சொல்லானே யேகமென்னி லேகமென்று சுட்டுவதுண்மையி னத்துவிதமென்ற சொல்லேயந்நிய நாத்தியையுணர்த்துமாயிட்டு-எ-து-உ-எ-னின், புனருற்பவஞ் செய்யுங்கா லுயிர்களோடுடனாய்நின்று முதல்வனவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவையாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) அத்துவிதமென்ற சொல்லினகரம்-இன்மை, அன்மை, மறுதலையென்னு முப்பொரு ளுணர்த்துமன்றே யவற்று ளின்மைப் பொருள்பற்றியத்துவிதமென்ற மொழிமாத்திரையானேயொருபொருளென்றல் பொருத்த முடைத்தெனிற் றானே தன்னையொன்றெனக் கருதல் வேண்டாமையி னவ்வாறு கருதும்பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும், எண்ணுப்பெயர்மேல் வந்தநகரம் அன்மைப்பெயர் மாத்திரையே யுணர்த்திப்பொதுமையி னிற்பதன்றி யேனைச்சொற்களின்மேல் வந்தநகரம்போல வின்மைமறுதலைப் பொருள்களையுணர்த்துதல் வழக்கின்கணின்மையி னத்துவிதமென்கின்றமொழிதானே பிரதிகாரணம் வேண்டாது வேறின்மையை யுணர்த்தி நிற்குமாகலானும், ஈண்டிவ்வான்மாக்கள் பலவு முதல்வன் றானேயாய் நிற்குமென மேற்கொண்ட தென்றவாறு. ஆகலானென்பதற் காயிட்டென்பது அக்கால வழக்குப்போலும். அஃதாகலினன்றே "நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு" என்றார் வழிநூலாசிரியரும். இனிமழை பெய்து குளநிறைந்ததென்புழிப்போல, ஆயிடலானென்பது ஆயிட்

டொத்தின்று நின்றதென்றலுமொன்று. என்றும்மை விரித்துரைக்க. வேறின்றி யுடனாய்நிற்றல் பெறப்படவே, பொருண்மையாற் பேதமெய்தாதுடன் தாமேபோதருமென்பது கருத்து.

வெண்பா.

கட்டுமுறுப்புங் காணமுங் கொண்டுள்ள ... ...
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்-கொட்டி
யவனுளமா யில்லா னுளமவனு மாட்டா ... ...
தவனுளமா யல்லனுமா மாங்கு. ... . (க)

கட்டு-ாங்கு-எ-து-உ-ம்-எ-னின். ஒருபொருண் மூவகையியல்பா யுடைத்தாதல் யாங்ஙன மென்னுங் கடாவை யாசங்கித் தவற்றுளவையே யாதலை யுவமை முகத்தான் வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) உள்ளங்கட்டு முறுப்புங் காணமுங் கொண்டு - உயிர் நரம்பு முதலிய வற்றாற் பிணிக்கப்படு முடம்பினையு மைம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டு நின்று - இட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்-எ-து-சாத்தா கொற்றவென வுடம்பிற் கிட்ட பெயராற் பிறரழைத்தவழி, தானென்னையெனவந்து நிற்றல் கான்டு மன்றே, இருவர் கைகோத்து நின்றுழியு மவரு ளழைக்கப்பட்டோனேயன்றி யேனோ னென்னையென்ற லுலகத்தின் மையி னவ்வாறன்றி யுடம்பின்பெயரா னழைத்தவழி யுயிரொன் னென்றற்குக் காரணம் பிறிதொராற்றாற் பெறப்படாமையின் அருத்தாபத்தி யளவையானே யவ்வுயிருடம்பெனத் தானென வேற்றுமையின்றிய பேதமாய் நிற்றல் பெற்றாமதுபோல - ஒட்டி - எ - து - முதல்வ னுயிர்களினபேதமாயொட்டி நிற்போனும் - அவனுளமாகில்லா னுளமவனுமாட்டாதவனுளமாயல்லனுமா மாங்கு - எ - து - அவ்வாறொட்டிய வழி யுயிருயிர் யுடம்புடம்பே யுயிருடம்பா யொழியாதுடம் புயிராக மாட்டாது. அவ்வாறாயினு முயிருடம்பாயு மதனின் வேறாயு நிற்கும்,உடம்பன்ன தில்லாது. அதுபோல, முதல்வன்முதல்வனே யுயிருயிரோ முதல்வனுயிரா யொழியானுயிர் முதல்வனாகமாட்டாது, அவ்வாறாயினு முதல்வனுயிராயுமதனின் வேறாயுநிற்பன் உயிரன்ன தில்லாது - எ - று.

அவனுளனாமில்லா னுளனவனுமாட்டா தவனுளனாயல்லனுமா மாங்கு-எ-து-ஒன்றாயுமொன்றன்மைக் கனுபவங் காட்டியவாறு. உறுப்பு - ஆகுபெயர். எவனென்பதென்னென மரீஇயிற்று. ஒட்டியென்பது பெயர். வினையெச்சமாகக்கொள்ளிற் சிறப்பும்மை விரித்துரைக்க. ஒட்டுதல்-பொருந்துதல்-ஆங்கு-அதுபோல.

வெண்பா.

ஒன்றென்றதொன்றேகா ணொன்றேபதிபசுவா ...
மொன்றென்றநீபாசத் தோடுளைகா-ணொன்றின்று
லக்கரங்களின்று மகரவுயிரின்றே ... ...
விக்கிரமத்தென்னு மிருக்கு. ... ... (௨)

ஒன்றென்ற-இருக்கு- எ-து-உ-ம்-எ-னின் - வேதத்துளத்துவிதமென்பதுஉடமன்றி யேகமெனவு மோதுதலி னதற்கு மறுதலையாயுயிர்களோடொட்டி நிற்பனெனப் பேதப்படக்கூறுத லென்னை யென்னுங் கடாவையாசங்கித் தச்சொற்குத் தாற்பரியங்கூறுமுகத்தாற் றுனேயாதலை வலியுறுத்த னுதலிற்று.

(இ-ள்) இருக்கொன்றென்ற தொன்றேகாண்-எ-து-வேதம் ஒன்றென்பதற்குப் பொருளொன்றென்பதேயாம் வேறுபொருள்படாது-ஒன்றேபதி-எ-து-அதற்குத் தாற்பரியம் பதிப்பொருளொன்றே யிரண்டல்லவென்பதாம்-பசுவாமொன்றென்றநீ-எ-து-இஃதறியாதொன்றென்று சொல்லுகின்றநீ யப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவாயாக - பதியுஞ்சேதனமாக, யானுஞ்சேதனமாக, என்னைப்பசுவென்றதென்னையெனின், பாசத்தோடுளைகாண்-எ-து-நீ மலத்தோடு கட்டுற்று நின்றாயாகலிற் பசுவெனப்பட்டனை- அற்றே லிவ்வாறு வேற்றுமைகூறிற் பிரமமில்லையாயி னொருபொருளு மில்லையென்னும் வேதத்திற்குத் தாற்பரியமென்னையெனின், ஒன்றின்றாலக்கரங்க ளின்றுமகரவுயிரின்றே லிக்கிரமத்தென்னும்-எ-து-அகரவுயிரில்லையாயி னக்கரங்களில்லையாமென்னு மிம்முறைமைபற்றி வேதம் பிரமப்பொருளில்லையாயி னொருபொருளு மில்லையென் றோதுமத்தனை - எ-று. ஒன்றின்று லக்கரங்களின்று மகரவுயிரின்றே லிக்கிரமத்தென்னும் - எ - து-வேறாகியும் வேறன்மைக் கனுபவங் காட்டியவாறு. இக்கிரமத்தாலெ னவுருபுவிரித்துரைக்க. இன்றென்னு மொருமை பன்மையின் மேனின்றது. காணென்பதனை மேலே கூட்டுக.

வெண்பா.

பண்ணையு மோசையும் போலப்பழமதுவு ... ...
மெண்ணுஞ்சுவையும்போ லெங்குமா - மண்ணாகு
ளத்துவிதமாத லருமறைகளொன்றென்னு ...
தத்துவிதமென்றறையு மாங்கு. ... ... (௩)

பண்ணை-ஆங்கு-என்-து-உ-ம்-என-னின், வேதமேகமாய பிரமத்தை யேகமென்றொழியாது பிரம மத்துவிதமெனவு மோரோவிடங்களி னோதுதலி னத்துவிதமிருபொருட் கன்மைதென்பார்க்கேகமாய பிரமத்தை யத்துவிதமென்றல் பொருந்தாதாய் முடியுமென்னுங் கடாவையாசங்கித் ததனைநீக்கு முகத்தானே யவையேதானே யாதலை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) பண்ணையு மோசையும்போலப் பழமதுவு மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா மண்ணாருளத்துவிதமாதல்- என்-து-பண்ணு மதனின்வேறன்று யெண்ணப்படு மிசையும்போலவும், பழமுமதனி ன்வேறன்று யெண்ணப்படுஞ் சுவையும்போலவும், யாங்கணும் வியாபகமாய முதல்வன் றிருவருளுயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான் - அருமறைகளொன்றென்னு தத்துவிதமென்றறையு மாங்கு- என-து- வேதங்களேகமென்னுமற் பிரமமத்துவிதமென் றவ்வவ்விடங்களிற்கூறும்-எ-று.

ஆண்டுப் பிரமமத்துவிதமென்றது-பிரமமுயிர்களின் வேற்றுமையின்றி நிற்குமென்னும் பொருட்டாகலா னஃதேக மென்பதனோடு மாறுமாறில்லையென்பதாம். பண்ணையென்னு மைகாரம் பகுதிப் பொருள்விகுதி. பண்பாய்ப்பண் முதலாயின. எங்கு மண்ணாருளென விசேடித்தது. குணகுணிகள் போலுடனாயு மவ்வா றுடனாகாமைக் கனுபவங்காட்டியவாறு. வியாப்பிய வியாபகமாத லொப்புமைமாத்திரையே பற்றிக் குணகுணிகளை யுவமைகூறினு ரென்பது.

வெண்பா.

அரக்கொடுசேர்த்தி யணைத்தவக்கற்போ ... ...
லுருக்கியுடங்கியைந்து நின்று-பிரிப்பின்றித் ...
தானேயுலகாந் தமியேனுளம்புகுதல் ... ...
யானேயுலகென்ப வின்று. ... ... (௪)

அரக்கொடு-இன்று-எ-து-உ-ம்-எ-னின், இங்ஙனம் வெவ்வேறு வமையெடுத்துக்காட்டி னனேகாந்தவாதமா மென்னுங் கடாவை யா சங்கித்து, அஃதாகாமை யுவமைமுகத்தான் விளக்கி மூன்றனையுமொ ருங்கே வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) உருக்கியரக்கொடு சேர்த்தியைத்தவக் கற்போலுடங் கியைந்துநின்று பிரிப்பின்றித் தானே யுலகாம்-எ-து - அரக்கையுரு க்கி யதனோடு சேர்த்திணைத்த கற்பொடி யவ்வரக்கினோ டொன்றா யொருங் கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல முதல்வனுயிர்களினொ ருங்குகூடிநின்று நீக்கமின்றி யுடனாகலாற் றானேயாம்-உலகேயாந்தா னே யுலகேயாம், அற்றேல் வாமதேவமுனிவன் முதலியோர் யானே யுலகெல்லாமாயினேனெனக் கூறுதலானும், சர்வஞானோத்தரத்தில் யானே யெல்லாமா யல்லனுமா யுடனுமாய் நின்றேனென் றுயிர்கண் மேல்வைத் தோதுதலானும். உயிர்களு மிவ்விலக்கணத்தன வாவான் செல்லும்போலுமெனின்; தமியே னுளம்புகுதல் யானே யுலகென்ப னின்று-எ-து-அம்முதல்வன் பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய்நின்ற வென்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித்தோ ன்றலான் யானே யுலகெல்லாமென்பே னுயினே னிம்முத்திக்காலத் தாகலி னதுபற்றி யுயிர்களு மவ்வாறுவான் சேறலின்று-எ-று.

அதுபற்றி யுயிர்களு மவ்வாறுவான் சேறலின்றென்பது குறிப் பெச்சம். இவ்வேற்றுமைபற்றி யன்றே, அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன்யானே யுலகெல்லா மாயினேனென்றதூஉ ம், முதல்வனது விசுவரூபத்தைத் தான்காட்டியதூஉம், ஏனையவற் றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனையுறுதியா கக்கொண்ட அருச்சுனன் அவன் கூறியகருத்து நோக்கிச் சாங்கா ஞ்சிவபூசை செய்ததூஉம், கண்ணன் மேலிட்ட போதுக்கள் முதல் வன் திருமுடிமேற் கண்டதூஉமென்க. கண்ணனுமன்னியமுனிபா ற் சிவதீக்கைபெற்றுத் தன்னையுந் தலைவனையு முணர்ந்தோ னாகலிற் சோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதலறிக. கலப்பானிற்றலா னுல கேயாமென்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையால்வே றுநிற்றலாற்றானே யாமென்பார் நின்றெனவும், உயிர்க்குயிராய் நிற் றலாற்றானே யுலகாமென்பார் பிரிப்பின்றி யெனவுங் கூறினார். ஈண் டு மிரட்டுறமொழிந்து கொண்டுரைக்க. இன்றியென்னுஞ் செய்தெ

னெச்சக்குறிப்பு - மழைபெய்து குளநிறைந்த தென்புழிப் போலக் காரணப்பொருட்டாய் நின்றது. இவ்வதிகாரணத்தானே பேதமென் றும் அபேதமென்றும் பேதா பேதமென்றும் பிணக்குஞ் சமயிகளை யெல்லாமறுத் தம்முவகையியல்புந் தன்கட்டோன்றி நிற்கு மத்துவித த்தன்மை யேதுக்களானு முவமைகளானு முணர்த்தியவாறு. புடை நூலாசிரியரு மிவ்வதிகாரணப் பொருளே பற்றி "புறச்சமயத்தவர்க் கிருளாய்த் தெரிக்கலுற்றாம்" எனவெடுத் தோதினார். முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி யிவ்வான்மாக்களுக் கிருவினை முதல்வனதாணையின் வருமெ ன்றது-எ-து-மே-ள்-எ-னின். முதல்வ னவ்வா றுயிர்களோடியைந்து நின்று புனருற்பவஞ் செய்யுங்கா லுலகத்துக்குப்போல அவனுக்கு த் துணைக்காரண முதலியன வேண்டப்படுமோ படாவோ வென்னு மையப்பாட்டின்கண் முதல்வனது சுதந்திரத்திற்கு மளவிலாற்றற்கு மிழுக்காய் முடியுமாகலி னவனுக்கவை வேண்டப்படாவெனப்பரிணு மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி னிரண்டாங் கூ ற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்.) வெளிப்படை.

ஈண்டிருவினை யென்றது முற்பிறவிகளி னீட்டப்பட்டு மாயை யிற் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களையென்க. எனவேமா யையி னுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல் பற்றி முதல்வன் சுதந்திரத்திற் கிழுக்கில்லை யென்பார் முதல்வனாணையின் வருமென்றார்.

ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கவை யவன தாக் கினை யாகலான்-எ-து-மேற்கோ-ள்-எ-னின். ஆணையே யமையு மிருவினை யெற்றுக் கென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச்சாதித்த னுதலிற்று.

(இ-ள்.) ஒருபட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடிகாவற்றெ ழிலைக் களைகணுவா னொருவன்மாட்டு வைத்தாற்போல வெல்லாவறி வு முதன்மை யனுக்கிரகங்களுடைய வம்முதல்வன்புனருற்பவத்தைச்

செய்வதாகிய நனதாணையை யவ்விருவினை கண்மாட்டுவைத்து நடாத்துதலே முறைமையாகலா னினி யிவ்வான்மாக்களுக்கிருவினைமுதல் வனாணையின் வருமென மேற்கொண்ட தென்றவாறு.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லா முலகத்தோ டொப்ப நிகழ்வனவாகலி னீண்டைக்கர்சன் செய்தி யுவமை யாயிற்று. பாடிகாவலாவது:- களைகணுவா னொருவனைக் கொண்டு வேந்தன் செய்விப்பதொருதண்டத்தொழில் விசேடம். அது "கோடிகாவனைக் கூறுநாளெலாம் - பாடிகாவலிற் பட்டுக்கழிவரே ,, என்னுந் திருப்பாட்டானுமறிக. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டிய வாறெல்லா முரைப்ப

வெண்பா.

உள்ளதே தோற்ற வுயிரணைய மவ்வுடலி ... ...
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே-வள்ளலவன்
செய்பவர்செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று. ... ... (௫)

உள்ளதே - சென்று-என-து-உ-ம்-என-னின்· வினையுண்டென்பதற்கு மதுவே யுயிர்க்குப் பயனாய் வருமென்றற்கு மேல் வினையேறுமாற்றிற்குமது முதல்வனை யின்றி யமையாமைக்கும் பிரமாண மென்னை யென்னுங்கடாவை யாசங்கித் ததுவை வலியுறுத்ததனுதலிற்று.

(இ-ள்.) உள்ளதே தோற்ற-என-து- இல்லது தோன்று தென்பது மேற்கூறிப் போந்தமையான் முன்னுள்ளதாய புண்ணிய பாவமென்னு மிருகூற்றுச் சஞ்சிதவினையே தன்பயனாகிய வின்பதுன்பங்களையு மவை நுகர்தற் குரிய நிலைக்களமாகிய வுடம்பினையுந் தோற்றுவிப்ப - உயிரணைய மவ்வுடலின்-என-து-அவ்வின்ப துன்ப நுகர்ச்சி சட்த்துகருக் கூடாமையிற் சித்தாகிய வுயிரே யவ்வுடம்பிற் பொருந்தி யவற்றை யனுபவிக்கும்;-முன்வினையை யீண்டனுபவித் தொழிந்தான் மேலைக்கு வினையுண்டாமாறி யாங்ஙனமெனின், உள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே-என-து-முன்செய்தவினை யனுபவித்தற் கேதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம்; அற்றே லவ்வினையே பயனாகவருமென வமையு மம்முதல்வ னெற்றுக்கெனின்;செய்பவர் செய்திப்பயன்விளைக்குஞ் செய்யேபோல்-என-து-உழவர் செய்யுந்தொழிற்குத்தக்க பயனை விளை நிலம் விளைவிப்பதன்றி யத் தொழிருனே

விளைவிக்க மாட்டாததுபோல - வள்ளலவன் செய்வன்-எ-து- உணா வும் விகாரமாய்த் தொன்று தொட்டுவரு மவ்வினைகள் வள்ளலாகிய முதல்வனே யவ்வுயிர்கட்குக் கூட்டுவன் - செயலணையா சென்று- எ-து-அவ்வாறன்றி வினைதானே யுயிர்கட்குப் பயனாய்வந்து பொருந்தமாட்டாது-எ-று.

வள்ளலென்றார் தம்பயன் குறியாது வேண்டுவார் வேண்டியவாறே நல்கு மருளுடைமை நோக்கி. உள்ளடைவு - உள்ளுதற் கேதுவாகிய வடைவெனவிரியும். ஏகாரம் ஏழாவதன் பொருட்கண் வந்தது. உள்ளுதல் - ஈண்டனுபவித்தல். அதற்கேதுவாகிய முறைமையாவன - அனுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்புவெறுப்புக்கள் அவற்றின்கணுண்டாமாறு முன்னர்க்காட்டுதும். மேல்முதல்வனுக்கு வினை வேண்டப்படு மென்பதற் கரசனை யுவமை கூறினார். ஈண்டுவ்வினை முதல்வனை யின்றியமை யாதென்றுணர்த்துதற் குழவுத்தொழிலை யுவமை கூறினாரெனக்கொள்க.

வெண்பா.

அவ்வினையார் தாஞ்சென்ற வவ்வினையைச்செய்வதனி*
னெவ்வினையைக்காந்த பசாசம்போல- வவ்வினையைப்*
பேராமலூட்டும் பிரானி னுகராரோ... ... ... *
லார்தாமறிந்தவினைப்பா ரார்கு. ... ... (௬)

அவ்வினை - ஆங்கு-எ-து-உ-ம்-எ-னின். இருவினை சடமாதலிற் சென்றணைய மாட்டாவாயினு முயிர்கள் சேதனமாகலி னவையே யவற்றது பயனையறிந் தெடுத்துக்கொண்டு நுகரும் வள்ளலெற்றுக் கென்னுங்கடாவை யாசங்கித் ததனை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) காந்த பசாசம்போல-எ-து-ஒருவனெடுத்து நேரேபிடித்தவழி யிரும்பினை வலித்துக்கொள்ளுங் காந்தம்போல- அவ்வினையைப் பேராமலூட்டும் பிரானின்-எ-து-அவ்வினைப் பயன்களைப்பிறழாமனுகர்விக்குமுதல்வனால்-அவ்வினையார்தாம்-எ-து-அவ்வினைகளைச்செய்யுமான்மாக்கடாம்-அவ்வினையைச்செய்வ தனிற்சென்ற வவ்வினையை நுகராரோ லார்தாமறிந்தினைப்பார்-எ-து-அவற்றைச்செய்தற்கு நிலைக்களமாகிய வுடம்பின்கட் பொருந்தியவற்றது பயனையனுபவிப்ப ரவ்வாறனுபவியாராயின் வேறேயெவர்தா மவற்றையறிந்து கூட்டுவர். ஆ

ன்று-எ-து-அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப்புண்டு கிடக்குமப் பெத்தகாலத்து-எ-று.

ஒருவருமில்லை யென்பதாம். ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும், வினைசடமாகலானும், மாயை "தாரகமா மத்தன்றுணிற்றல்" எனப்போந்தமை யானும் முதல்வனே யறிந்தணைப்பனெனப் பாரிசேடவளவை கூறுவார் "பிரானிறைவராகோ லார்தா மறிந்தணைப்பார்" என்றார். இதுசொற்பொருட் பின்வருநிலை.

வெண்பா.

நெல்லிற்குமியு நிகழ்செம்பி னிற்களிம்புந் ...
சொல்லிற்புதிதன்று தொன்மையே-வல்லி. . ...
மலங்கன்மமன்றுளவாம் வள்ளலாற்பொன்வா...
ளலர்சோகஞ் செய்கமலத்தாம். ... ... (எ)

நெல்லிற்கு - ஆம்-எ-து-உ.-ம்-எ-னின்-அவ்வினை யாதியோ வநாதியோ, ஆதியெனின், முன்பில்ல திடையே தோன்று மென்பது சற்காரியவாதத்திற் கேலாது, அநாதியெனினொருவர்கூட்ட வேண்டுவ தில்லையென்னுங்கடாவை யாசங்கித் ததனை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) நெல்லிற்குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ் சொல்லிற் புதிதன்று தொன்மையே-எ-து-நெல்லின்க ணுமியுஞ் செம்பின்கட்களிம்பு மெக்காலத்துளவாயினவென் றாராய்ந்து சொல்லுங்கா லந்நெல்லுஞ் செம்புமுளவாயினவன்றே யுள்ளனவன்றி யிடையே வந்தன வல்ல வதுபோல - வல்லி மலங்கன்ம மன்றுளவாம்-எ-து-மாயை மலங்கன்மமென்னு மும்மலங்களு மநாதியே யுள்ளனவாம். பொன்வாளலர் சோகஞ்செய் கமலத்து வள்ளலாலாம் - எ-து - முன்னே யுள்ளதாயதாமரைப்பூ வலர்தலுங் கூம்புதலு ஞாயிற்றினாற் செய்யப்படு மாறுபோல வவைதத்தங் காரியங்களைச் செய்தன் முதல்வனாலேயாம்-எ-று.

இஃதெடுத்துக் காட்டுவமை. புதிதன்றென்பதனைத் தனித்தனி கூட்டுக. தொன்மையிலுள்ளவற்றைத் தொன்மையென் றுபசரித்தார். ஏகாரம்-பிரிநிலைக்கண் வந்தது. மாயை யிறைவனுக்குப் பரிக்கிரகசத்தியாகலின் வல்லியென்றார். வினைக்குந் தொன்மைகூறுவா ரினம்பற்றி மாயைமலங்களுக்குந் தொன்மைகூறினர். மூலமலத்தின் காரியம்-மோகமதமுதலாயின. இருவினையின்காரியம்-இன்பதுன்ப முதலாயி

ளை. மாயையின்காரியந் தனுகரணமுதலாயின. வள்ளலாலமெனவே, திரோதான சத்தியு மன்மையும்பெற்றும். அது பாகம் வருதற்பொருட்டு மலத்தின்வழிநின்று மோசமுதலியவற்றைத் தொழிற் படுத்துவதாகிய சிவசங்கற்பத்திற் கேதுவாதல்பற்றி மலமென் றுபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மலங் கன்ம மாயை திரோதான மாயாகாரியமென் றைவகைப்பாசமுங் கண்டுகொள்க. இவற்றுள் மாயை சுத்தமாயை அசுத்தமாயையென் றிருவகைப்படும். இவ்விரண்டனுட் சுத்தமாயையின் காரியமே யசுத்தமாயை யென்பாரும், சுத்தமாயைபோல வசுத்தமாயையு மநாதியேயாமென்பாரும், ஒன்றுதானே மூர்த்துவமாயை யதோமாயையென் றிருவகைப்படுமென்பாரும், எனப் பலதிறத்த ராசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயை யெனப்படு மென்பாருமுளர். அதுமுதல்வனுக்குத் தாதான்மியசத்தியாகலிற் பரிக்கிரகசத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதென்றொழிக. சுத்தமாயையினின்றும் பஞ்சகலைகளு நால்வகைவாக்குஞ் சிவதத்துவமைந்துஞ் சுத்தகாலமுதற் சுத்தநிலமீறாகிய முப்பத்தொன்றுந்தோன்றும். அசுத்தமாயையினின்றும் அசுத்தகாலமுதல் அசுத்தநிலமீறாகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும். இந்தத் தத்துவங்களெல்லாம் பொதுவுஞ்சிறப்பும் பொதுச்சிறப்பு மெனத் தனித்தனி மூவகைப்பட் டுயிர்கடோறும் வெவ்வே றுளவாம். கன்மமு நாசோற்பத்திபண்ணி வருமாதலா லநாதியென்பதுபற்றிப் பிரபஞ்சம் போலப் பிரவாகாநாதியென்பாரும் "ஏகனநேக னிருள்கருமமாயை யிரண்டாகவினையாறுதியில்" எ-ம், "ஆணவமுதலன்றதுபோற் கருமமும்"எனவும், ஒப்பவோதுதல்பற்றி மூவகைவினைக்கு முதற்காரணமாய மூலகன்மமொன் றநாதிசித்தமா யுண்டென்பாருமென் றிருதிறத்தராசிரியரென்க. இவ்வினையீட்டப்படுங்காலம்-மந்திரமுதலியவத்துவாக்களிடமாக, மனம்வாக்குக் காயமென்று மூன்று னீட்டப்பட்டு, மூலகன்ம மாயா காமியமெனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்குமகன்மமாய், புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற்கிடந்து, சாதியாயுப் போகமென்று மூன்றற்குமேதுவாய்,முறையே சவதக் தாரகம் யோக்கியமென்று மூவகைத்தாய், அநுருவஞ் சஞ்சிதம் புண்ணியம் பாவமென்றும் பரியாயப்பெயர்பெற்று. பின்னர்ப்பயன் படுங்கால், ஆதிதைவிகம் ஆதியான்மிகம் ஆதிபௌதிகம் என்று முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தமெனப் பெயர்பெ

றும். ஆதிபௌதிகமாவது-சடம்வாயிலாகவருவது; ஆதியான்மிகமாவது-சடத்தொடுகூடிய சேதனம் வாயிலாகவருவது; ஆதிதைவிகமாவது-ஒருவாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாகவருவது. இன்று மிவ்வினைகள்-உலகம் வைதிகா வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கமென் றைவகைப்பட் டொன்றற்கொன் றேற்றமுடைத்தாய் முறையே நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளி னடங்கி யசுத்தமிச்சிரமஞ் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்குமென்றறிக. இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

இனி யிவ்வான்மாக்கண் மாறிப்பிறந்து வருமென்றது - எ-து-மே-ள்-எ-னின். புனருற்பவஞ் சடத்துக்கன்றிச் சித்துக்கு முளதாயி னன்றே முற்செய்வினையே யீண்டைக்கு வருமென மேற்கூறியகமையும், அஃதுண்டோ வில்லையோவென்னு மையப்பாட்டின்கண், குடமுடைந்தவழிக்கு டாகாயமாகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவழி யுயிர் பிரமத்தோடுகூடுமென்னுஞ் சுருதிபற்றி யிறந்தவுயிர்மீளப் பிறப்பதில்லையெனக் கிரீடாப்பிரமவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து,சூத்திரத்தின் மூன்றுங்கூற்றைக் கண்ணழித்துக்கொண்டு மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

வருதல் - தொன்றுதொட் டவ்வாறுதல். மாறுதல்- ஈண்டிறத்தலென்பது, "போக்குவரவுபுரிய" என்னுமூலத்தானும், ஏதுவுதாரணங்களோ டுளதாகிய வியைபானுமுணர்க. இஃதுணராது, அச்சு வேறுபடுதலென் றுரைப்பாரு முளர். அஃதீண்டைக்கியாது மியையாமையுணர்க.

தோற்றமுமீறுமுள்ளதற் கல்லதுளதாகவின்மையான் - எ - து-ஊதஹே-ஷ்-எ-னின். அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) உற்பத்தியு நாசமுந் தொடர்ச்சியாயுள்ள பொருட்கன்றி யேனைப்பொருட் குற்பத்திகூடாமையா னிவ்வி யிவ் வான்மாக்கண் மாறிப்பிறந்து வருமென மேற்கொண்டதென்றவாறு.

தோற்றமிறுமென்னு மும்மைகளை யெதிரதுதழீஇ யினவாகக் கோடலிற் றொடர்ச்சியாயென்பது போந்தவாறறிக. உளதாகல் கண்டுத்தோன்றுதல். இனி யிவ்வாறன்றிக் குடாகாய வுவமையேபற்றி யிருவினை யான்வரும் புனருற்பவ மாயிரின்பொருட்டுச் சிவத்துக்கே யாமெனச் சிவாத்துவிதிகள் கூறுங்கடாவை யாசங்கித்தும், அம்மூலப்பகுதியிற் றோன்றும் புத்திதத்துவத்திற்கே யதுவெனச் சாங்கியர் கூறுங்கடாவை யாசங்கித்தும், மேற்கோடலுதலிற் றிவ் வதிகரணமெனக்கொண்டு, தோற்றமுமிறு மவ்விரிமை யுள்ளதற்கேயன்றி யேனையவற்றிற் குளதாதலின்மையா னிவ்வான்மாக்களே மாயிப்பிறந்துவருமென மேற்கொண்டதென் றுரைப்பினுமாம். இப்பொருட் குரிமையென்பது அவாய்நிலையான்வந்தது. உளதாதலென்றுமொருமைதோற்றவிறுகளோடு தனித்தனியே சென்றியையும். ஆன்மாக்களேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது. இனி மாயாவாதிமுதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு மேற்கொண்டதென்பாருமுளர். அத்துவிதமென்ற சொல்லானே யவனாமறுத்தான் மாக்களைப் பெறுவித்தமையி னிண்டவர் மதம்பற்றிக் கடாநிகழ்தற்கோ ரியைபின்மையுணர்க.

வெண்பா.

கண்டனவைக் கனவுணர்விற்றான்மறந்து ... ...
பின்படர்ந்தத்தாடு விளைவிற்றுற் - கண்செவிகெட் ...
டுள்ளதேதோற்ற வுளமன்றுவாய்ச்சென்றுமனந் ...
தள்ளவிழுங்கருவிற் றான். ... ...(அ)

கண்ட-தான் - எ-து-உ-ம்-எ-னின். புனருற்பவமாங்காற்படு மிறையபுகறுணர்த்தி யதனை வலியுறுத்துதறுதலிற்று. கண்செவிகெட்டுள்ளதேதோற்றவுள மத்துடுபின்படர்ந்து கண்டனவைக் கனவுணர்விற்றான்மறந்து மனந்தள்ள வினையிற லனுவாய்ச்சென்று கருவில் விழுந்தான்-எனக்கொண்டு கூட்டுக.

(இ-ள்.) கண்செவிகெட்டுள்ளதே தோற்ற-எ-து-கண்செவி முதலிய வுறுப்புக்களையுடைய விவ்வுடம்புகெட்டவழித் தனக்குக்கேடின்றிப் படைப்புக்காலந்தொடங்கிச் சங்காரகாலமளவு நிலைபெற்றுள்ளதாகிய சூக்குமதேகம் பூதசாரவுடம்பு முதலியன வாய்க்காரியப்பட-உளமத்துடுபின்படர்ந்து-எ-து-உயிரான தப்பூதசாரமுதலிய வுடம்

பின்கட்பொருந்தித் துறக்கநிரயங்களிற்சென் றனுபவித்துப் பின்னர்-
கண்டனவைக் கனவுணர்விற்றான் மறந்து-எ-து-நனவின்கட்கண்டவற்
றைக் கனாக்காணுங்காலத்து மறந்தறிவு வேறுபட்டாற்போல முன்னை
க் கண்செவிகெட்டவாறு முள்ளதே தோற்றவத்துடு விண்படர்ந்த
வாறு மாண்டனுபவித்தவாறுமாகிய விவ்வொன்றன்னவற்றை மறந்தறி
வு வேறுபட்டு-மனந்தள்ள வினையினா லனுவாய்ச்சென்று கருவிலி
ருந்தான்-எ-து-முன்னுடம்பிறக்குங்கா லடுத்தவினைகாட்டு மக் கதி
நிமித்தம்பற்றி யுயிரவாவுமாறுமனஞ்செலுத்துதலா னக்கதிக்கட் சே
றற்கேதுவா யெஞ்சிநின்ற புண்ணியபாவசேடத்தாற் சூக்குமதேகமா
த்திரையாய்ச்சென்ற மனந்தள்ளிய கதிக்கடைந்த கருவின்கட்படு
மென்றவாறு.

இன் - உவமவுருபு. தான் - அசை. மறத்தற்குச் செயப்படு
பொருளவாய் நிலையான்வந்தது.. விண் படர்ந்தென்னு முபலக்கண
த்தா னிரயம்படர்ந் தென்பதூஉம் பெறுதும். படர்ந்தெனக்காரியத்
தைக்காரணமாக வுபசரித்தார். அத்தாடென்புழி - அன்சாரியை
விகாரத்தாற்றொக்கது. பொருந்தியென்பது சொல்லெச்சம் - வி
னையாகுபெயர். உடம்பு நீங்கிப் போங்கால் முதற்கட்கெடுவன கண்
ணுஞ்செவியுமாகலி னச்சிறப்பு நோக்கிக் கண்செவி கெட்டென்
றுபசரித்தார். கெட்டவழியென்பது கெட்டெனத் திரிந்து நின்றது.
ஐம்பெரும்பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்கும வுடம்
பின் காரியமா மாறென்னை யென்று மையநீக்குதற்கு உள்ளதே தோ
ற்றவென்றார். ஏகாரந் தேற்றம், ஆகாயமுதலிய தூலபூதங்கள் சத்த
முதலிய சூக்குமபூதங்களின் காரியமாகலினது பற்றியேதன்மாத்திரை
மயமாகிய சூக்குமவுடம்பிற் றோன்றுவதாய தூலவுடம்பு ஐம்பெரும்
பூதமய மெனப் பட்டதன்றிப் பிறிதில்லை யென்பது. "பூதனாசரீரம்
போனாற் புரியட்ட ரூபந்தானே - யாதனாசரீரமாகி" எ-ம்- "சூக்கு
மவடிவதென்னிற் றூலகாரணமதாகும்" எ-ம்- "தூலமா முருவினு
க்குச் சூக்குமமுதல்" -எ-ம்- "மாறியிவ்வுருவமெல்லாம் வருவதெ
ங்கே நின்றென்னிற் - கூறிய சூக்குமத்தாம்" -எ-ம்- "விதிப்படிசூக்
குமத்தே யுருவம்", எ - ம் - "மனுநிதருமுடல்", எ - ம் - வழி
நூலாசிரியரு மிவ்வாறே கூறியவாறு காண்க. இஃதறியாதார் தத்
தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அதுதோன்றுங் காற்காலமூற்
று நீக்கிடமாம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்துமாறுபோலச் சூக்

குமவுடம்பு கெடாது நிற்பத் தூலவுடம்பு வேறொரு குழியாமாரம் பிராசங்கிரிய மாதல்போல, வினைக்கீடாக வச்சு வேறுபட்டு, "மணிக்கெழு கலைகள்போல வருவதுபோலவதாம்," எனவும் வழிநூலாசிரியர்கூறியவாற்றானறிக. அறு - சூக்குமவுடம்பு - தள்ள- தள்ளுதலானென்க. அக்கருவிலெனச் சுட்டுவருவிக்க. உள்ளதேதோற்றவென்றதனால் உடற்பிரிவும், விண்படர்ந் தென்றதனால் இடத்திரிவும், கண்டனவைக் கனவுணர்விற்றான் மறந்தென்றதனால் அறிவுத்திரிவும் பெறப்பட்டன. உள்ளதே தோற்றவென்றதனால்; புதிதுபுதிதாய்த் தோன்றுதல் பற்றிச் சற்காரிய வாதத்திற் கிழுக்கின்மையும்; அத்தூடு விண்படர்ந் தெனவும்; அணுவாய்ச்சென்று கருவில்விழுமெனவுங் கூறியதனாற் போக்குவரவுபற்றி வியாபகத்துக் கிழுக்கின்மையும், வினைச்சேடத்தா லென்றதனால், துறக்க நிரயங்களி னநுபவித்தொழிந்தமை பற்றிப் புனருற்பவ காரணத்திற் கிழுக்கின்மையும் மனத்தள்ள வென்றதனால், அஃதெஞ்சுதற் கேதுவுங் காட்டியவாறு. வேதத்துட் கூறப்படும் பஞ்சாக்கினி வித்தையி னியல்புணர்த்துவார் கண்செவி கெட்டவழி விண்படர்ந்து மறந்தணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினி வித்தையி னியல்பு - நீலகண்டபாடியத்திற் காண்க. மறந்து விண்படர்ந்தெனக் கூட்டி யுரைப்பாருமுளர். துறக்க நிரயங்களிற் படர்ந் தநுபவிப் புழியறிவு திரியாமை புராணங்களுட்காண்க.

வெண்பா.

அரவுதன்றோலுரிவு மக்கனவும்வேறு ... ... *
பரகாயம்போய்வருமப் பண்பும்-பரவிற் ... ... *
குடாகாயவாகாயக் கூத்தாட்டாமென்ப ... ... *
கடாவுள்ளம்போ மாறது. ... ... (௯)

அரவு-அது--எ-து-உ-ம்-எ-னின். உயிர்க்குப் புனருற்பவமாகாமைக்கு வாதிகளாவெடுத்துக் காட்டப்படுங் குடாகாய வாகாய வுவமைக்குப் பொருள்கூறி மேலதனை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறுபரகாயம் போய் வரு மப்பண்பும் பரவில்-எ-து-கண்செவி கெட்டவழி யுள்ளதே தோற்றவத்தூடு விண்படர்தற்குப் பாம்புத்தோலுரித்துப் புதிதொருதோல்போர்த்துச் சேறலும். புருடனவுடம்பி னீங்கிக் கனவுடம்பிற் சே

றலும், யோகிகடம்முடம்பு நீங்கிப் பரகாயத்திற்சென்று மீட்டுமாகி ய விவ்வுவமைகண் மிக்கு வழங்குதற் கணிவற்றிற்குமாறாக - குடாகா யவாகாயக் கூத்தாட்டா மென்பதடாது-எ-து - குடவாகாயங் குடமு டைந்தவழி யாகாயத்தோடு கூடுமாறு போல்வதோர் கூத்தாட்டாமெ ன்று நீ கூறுதல் பொருந்தாது - உள்ளம்போமாறது-எ-து-சூக்குமவு டம்பு விட்டுப்போ மாற்றிற்கே யவ்வுவமை யாகலா னென்றவாறு.

எனவே உடல்விட்டுப் போமாற்றி னிவ்விருவகை யுவமைகளு மாகமங்களிற் கூறுதலினவை தம்முண் முரணுகவாறு. அரவுதன்றோ லுரிவு முதலியன தூலவுடல்விட்டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவ மை சூக்குமவுடம்பு விட்டுப்போமாற்றிற்கு மெனக்கோடல் பொருத் தமுடைமையின், அவ்வேறுபாடுணராது குடாகாய வுவமையுந் தூல வுடம்புவிட்டுப் போமாற்றிற்கே போலுமென மலையற்கவென மேலத னை வலியுறுத்த வாறுகாண்க. மேலைவெண்பாவில் "கண்டனனவைக் கனவுணர்விற் றன்மறந்து" என்றது - அறிவு வேறுபடு முறைமைக் கெடுத்துக் காட்டியதெனவும், ஈண்டைக் கனவுமென்றது-அதனையே யுடல்வேறு படுமுறைமைக் கெடுத்துக்காட்டிய தெனவுந்தெரிந்துகொ ள்க. பரவு - முதனிலைத் தொழிற்பெயர். இல்லுருபு - தொழினிகழ் ச்சிக் கண்வந்த ஏழாவது. பரவுதல் எல்லார்க்கும் புலனுமாறுமிக்கு நிகழ்தல். ஈண்டுள்ளமென்றது சூக்குமவுடம்பை. போமாற்றிற் சென் று நான்கரவது விகாரத்தாற் றொக்கது, "ஐந்தவித்தானாற்றல்" என் புழிப்போல. குளவாம்பல் குளாம்பலென மரீ இயினாற்போலக் குட வாகாயங் குடாகாயமென மரீ இயிற்று. ஆகாயக் கூத்தாட்டென்ப து வமத்தொகை. இதனை யும்மைத்தொகை யாகக்கொண்டு, குடாகாய வாகாயமுங் கூத்தாட்டும்போ லென்றுரைப்பாரு முளர். மூன்றும திகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

இனி நீக்கமின்றி நிற்குமன்றே-எ-து-மே-ள்-எ-னின். அம்மனம் புனருற்பவமாதற் கேதுவா யிருவினைகளைச் செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணையெனப்படுஞ் சத்தியாவது, முதல்வனின் வேறேவன் றேவென்னு மையப்பாட்டின் கட்பொருட்குச் சத்திவேறென்று மீ

மாஞ்சகர் முதலியோர் மதமும், அஃதொன்று நையாயிகர் முதலியோ
ர் மதமும்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து, சூத்திரத்தி னிறுதிக்கூ
ற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட லுதலிற்று.

(இ-ள்) முதல்வன் றனதாணையாகிய சிற்சத்தியோடு சமவேத
மாய் நிற்பனென்றவாறு. அன்னியயோக விவச்சேதம், அயோக விவ
ச்சேதமென்றற் றொடக்கத்து வடசொற்கள் - பிறிதினியையு நீக்குதல்
இயைபின்மை நீக்குதலென்றற் றொடக்கத் தனவாக மொழிபெய
ர்த்து வழங்கப்படு மாறுபோல, சமவாயமென்னும் வடமொழி-
தமிழின்க ணீக்கமின்றி நிற்றலென மொழிபெயர்த்து வழங்கப்படு
மென்றுணர்க. வடமொழியிரண்டாஞ் சூத்திரத் திறுதியின் ஆணையின்
முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென வாணைமேல் வைத்தோதி
யதனை யீண்டு முதல்வன்மேல் வைத்தோதினார். கண்ணழிப்புழி
யிருவினை முதல்வனாணையின் வருமெனக் கூறிப்போந்த வாணையீண்
டுக் கூறாமையே யினிதுவிளங்கு மென்னுங் கருத்தாற் சொற்பல் கா
மைப் பொருட்டதனையொழித்தெடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பொ
ருள் காணமாட்டாதார் சர்வவியாபியாய் நிற்றலானென்று மேதுவின்
பொருளே மேற்கோளுக்கும் பொருளாகக் கொண்டுரைப்ப. அதுகூ
றியது கூறலாதலுமன்றி மொழிபெயர்த்தல் யாப்பிற்கேலாமையுமறிக.
ஈண்டுச் சமவாயமென்றது - தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது
பொருளா னொன்றே யாயுமொரு வாற்றாற் பேதமாதற் குரிமையு
டைமை.

அவனே யேகானேக மிரண்டு மின்றிச் சருவவியாபியாய்நிற்றலான்
எ-து எது-எ-னின். அதற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை
யாசங்கித்து மேற்கோளை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) அம்முதல்வன் ஒன்றே வேறே யென்று மிருதன்மையு
மின்றி யவ்விரண்டற்கும் பொதுவா யெங்கனும் வியாபியாய் நிற்றலா
னினி யாணையி னீக்கமின்றி நிற்குமன்றேயென மேற்கொண்ட தென்
றவாறு.

அவிநாபாவ முணர்த்துவார் ஏகானேக மிரண்டுமின்றியென மே
ற்கோளிற் போந்தபொருளை யநுவதித்துச் சருவவியாபியாய் நிற்றலா
னென வேதுக்கூறினார் சருவவியாபியாய் நிற்றல் " அவையே தானே

யாய்,, என்னு மநுமானத்தாற் சாதிக்கப்பட்டமையின், அத்வையின் ஹேதுவாகவைத்து, அத்வைதமின்றி நிற்குமென்னு மேற்கோளை ச்சாதித்தவாறு.

வெண்பா.

எங்குமுளனென்றளவை யொன்றன்றிரண்டென்னி
னெங்குமுளனன்றெவற்றெவனு - மங்க ... ...
னவையவனன்றில்லைப் பொன்னொளிபோலீச ...
னவையுடைமையாளாநா மங்கு. ... ...(௰)

எங்குமுளன்-அங்கு-எ-து-உ-ம்-எ-னின். ஏதுவுமேற் கோளுந் தம்முளவிநாபாவமாமாறி யாங்ஙனமென்னுங்கடாவை யாசங்கித் ததனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) எங்குமுளனென்றளவை யொன்றன்று-எ-து-யாங்கனு மவையேயதானே யென மேற்கூறிய வளவையானே முதல்வனொரு பொருளாதல் கூடாதென்றவாறு. ஒன்றுமிற் கங்கைக்கரையினின்ற வொருமானுடனே காவிரிக்கரையினு மொருங்கு நிற்கமாட்டா னது போல வொருபொரு ளோரிடத்துளதாதலன்றி யாங்கனும் வியாபித்து நிற்கமாட்டாதென்பதாம். இரண்டென்னி னெங்குமுளனன்று-எ-து-அற்றேல் முதல்வனிருபொருளாய் நிற்குமெனக்கோடுமெனின், யாங்கனு மவையேதானே யாயுளனாதல் கூடாதென்றவாறு. தன் மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருள்களின் கண்வேற் றுமையின்றி வியாபித்துநிற்றல் சாலாதென்பதாம். அற்றே லவ்விர ண்டொடு முரணுதலின் எங்குமுளனல்லனெனக்கோடுமெனின், எவ ற்றெவனு மங்கணவை யவனன்றில்லை - எ-து -.எவ்விடங்களினுள்ள வெத்திறப்பொருளுமாகி யவ்விடத்தவைகளெல்லா மகரவுயிரின்றே லக்காங்களில்லையா மாறுபோல வம்முதல்வனை யின்றியமையாவாக லா னெங்குமுளனல்லனென்றல் பொருந்தாதென்றவாறு. ஆதலா னெங்குமுளனல்லனென்றல் பொருந்தாதென்பது குறிப்பெச்சம். அற்றேல், வேறுபடுக்குமாறென்னையெனின், பொன்னொளிபோலீச ன்-எ-து-எங்குமுளனாகிய முதல்வன் ஞாயிறுமொளியும்போல வொ ன்றுதற்கு மிரண்டாதற்கும் பொதுவாய்த்தா தான்மியத்தாற்சிவமு ஞ் சத்தியுமென் றியைந்துநிற்கு மென்றவாறு. அற்றேற் பசுபாசங் களும் வியாபகமெனக் கோடலினவையு மிம்முறைமையாற்றி யேகா

வேகமிரண்டுமின்றி முதல்வன்போலத் தத்தஞ்சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனோடு சமமாவா னசெல்லுமெனின், அவையுடைமையாளராமன்று-எ-து- அவ்வாறு யிறு முதல்வனது வியாபகத்தைநோக்கி வியாப்பியமாகலி னப்பாசங் களுடைமையாம், பசுக்களாயிய நாமடிமையாவேம் அம்முதல்வன் மாட்டென்றவாறு.

அன்றெனப்பாட மோதுவாருமுளர். பாசங்களுடைமையாமாறும், பசுக்களடிமையாமாறும், "தாரகமாமத்தன்றுணிற்றல்"எ-ம், "அகலிமீறலாவொன்று பலவாறேதொழும்பாகும்" எ-ம், மேற்பெறப்பட்டமையின், அவற்றையீண்டெடுத்துக்காட்டி யாசங்கை நீக்கியவாறு. என்றவென்னும் பெயரொச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது, புகழ்புரிந்தென்புழிப்போல. அளவையானென ஆனுருபு விரித்துரைக்க. ஒன்றன்று-உளனன்று-என்புழி-ஒன்று-உளனெனுந் தருமிவாசகங்கள் ஆகுபெயராலத்தருமங்களின் மேனின்றனவாகலான்உளனென்பதும் அஃறிணையொருமையோடுமுடிந்தது. அன்மை-கூடாமைப்பொருட்டு. எவற்றெவனுமென்பது-ஏழாம்வேற்றுமைத்தொகை. அஃறிணைக்கண் வருமெவனென்னும் வினவினைக்குறிப்புச்சொல் லீண்டுப்பெயர்த்தன்மைப்பட்டெவனுமென வெஞ்சாப்பொருண்மை யுணர்த்திநின்றது. அன்றியென்னும் வினையெச்சம் - செய்யுளாகலின், அன்றெனத்திரிந்தது. இன்மை-ஈண்டமையாமைப்பொருட்டு - பொன்-ஆகுபெயர். ஆமென்பது-உடைமையோடியையும் - பொன்னொளிபோலீசனென்பது-தொகையுவமமாகலிற் பொதுவியல்பு விரித்துரைக்கப்பட்டது. 'இவ்வதிகரணத்தாற் போந்ததொகைப்பொருள்- முதல்வன் வியாபகனாகலின், வியாபகப்பொருட்கொன்றாய் நிற்றல்கூடாது, ஆகலான், முதல்வனொருவனே ஞாயிறுமொளியும் போலச் சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தா லிருதிறப்பட்டு, சருவவியாபியாய்ப் பொதுமையினிற்பனென, சமவேதமாய் நிற்குமாறு தெளிவிக்கு முகத்தானே தாதான்மியசத்தி யுண்மைக்குப் பிரமாணங்கூறிய வாறுமென்றுணர்க. அஃதாமாறு தன்னை விளக்குவதூஉம், விடயங்களை விளக்குவதூஉம் தானேயாகிய ஞாயிறொன்றுதானே, விடயங்களை விளக்குழிக் கதிரெனவும், தன்னை விளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தா லிருதிறப்பட்டிசைப்ப நிற்றல்போல, புறப்பொருளை நோக்கா தவ்வி

மாத்திரையாய்த் தன்னியல்பி னிற்பதூஉம், புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉமாகிய விருதன்மையுடைய பேரறிவாயவசைதன்னி யமொன்றே யங்ஙனம் புறப்பொருளைநோக்கி நிற்குநிலையிற் சத்தி யெனவும், புறப்பொருளைநோக்கா தறிவுமாத்திரையாய் நிற்குநிலையி ற் சிவமெனவுந் தாதான்மியத்தாலிருநிறப்பட் டியைந்துநிற்குமென வுணர்க. இனித் தீயின்சத்திபோன்று, சுடுதலடுதன் முதலிய தொ ழில்வேறுபாட்டாற் சுடுஞ்சத்தி யடுஞ்சத்தி யென்றற் றொடக்கத்துப் பல்வேறுவகைப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரியவேறுபா ட்டாற் பரையாகி யிச்சை ஞானங் கிரியையென் றைவகைச்சத்திக ளாயும், முறையே யைந்துநான்கு மெட்டும் பதின்மூன்று மெட்டுமா கிய கூறுபாடுடைய விசாலி முதலியவை வகைச்சத்திகளாயும், ஆர ணி-சென்னி-முதலிய மூவகைச்சத்திகளாயும், நிவிர்த்தி-பிரதிட்டை முதலிய வைவகைச்சத்திகளாயும், வாமை-சேட்டை முதலிய அட்ட சத்திகளாயும், பரவாகீசுவரி-அபரவாகீசுவரி-மனோன்மனி-மகேசை- உமை-திருவாணியென வெழுவகைச்சிவபேதங்கட்கு முறையே யெ ழுவகைச்சத்திகளாயும், அத்தியான்மிகமெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும் பல்வேறுவகைப்பட்டு நிற்கும். அவ் வவசத்திகளோடு புணர்ந்த சிவமு மவ்வாறு பல்வகைப்பெயர்பெற்று நிற்கும். அவ்வவசத்திகட்கிடமாய் விந்துவு மங்ஙனம் பல்வேறுவகை யான் விருத்திப்பட் டவ்வப்பெயர்பெறும். இவற்றி னியல்பெல்லா மாகமங்களுட் காண்க. இரண்டாஞ்சூத்திரமுடிந்தது.

மூன்றாஞ்சூத்திரம்.

உளதிலதென்றலி னெனதுடலென்றலின் ௯
ஐம்புலனொடுக்க மறிதலிற் கண்படி ௯
லுண்டி வினையின்மையி னுணர்த்தவுணர்தலின்... ௯
மாயாவியந்திர தநுவினுளான்மா ௯

என்பது - எ - னின், ஆன்மப்பிரகாசமுணர்த்துத னுதலிற்று. எ-று-க-னா-எ-னின். மேலவையே தானேயென் றெடுத்துக்கொள்ள ப்பட்ட வுயிர்களாகிய முதலியவற்று ளொன்றாகப்பாற்றென வவ்வவ மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித் தப்பிரசத்திற்கு வேறாயுள்

டென்பது கருத்தளவை யான்விளக்கி மேலைச்சூத்திரத்தா னுயிர்கண் மேல்வைத்தோதிய முதல்வன திலக்கணத்தை வலியுறுத்துதன் மூன்றாஞ்சூத்திரத்தின் கருத்தென்றவாறு. முதன்மையுடைமைபற்றி யுலகிற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருளுண்டென்பது முதற்சூத்திரத்துட்கூறி, காரணமாதற் பொதுமையா னியையுடைமைநோக்கித் துணைக்காரண முதற்காரணங்க ளதுண்மையு மவற்றானுலகங் காரியப்படுமாறு மிரண்டாஞ்சூத்திரத்துட் கூறி, அவற்றானாய பயன்கோடற்குரிய பசுக்கள துண்மைக்குப் பிரமாணமீண்டுக் கூறுகின்றாரென்றுணர்க. இதனானே சூத்திரவியைபு மினிதுவிளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு-இலதென்றன்முதலிய வறுவகை யேதுக்களானு மாயாவியந்திர தநுவென்னும் பெயரடையாற் பெறப்படுங் குறிப்பேதுவானு மிவற்றின்வேறா யிவ்வுடம்பினு ளுயிரெனப்படுவ தொன்றுண்டென்றவாறு.

இது புட்டியிற்பொருள்கோள் - உளதென்றது சாதியொருமை. அறிதலினென்றது - ஐம்புலனோடுஞ் சென்றியையும். தநுவினுளான்மா வுளதென்றாரோவெனின் காணப்பட்ட வுடம்பாற் காணப்படாத வுயிருண்மைகூறவேண்டுதலி னிவ்வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறாய வான்மாவை யுடைத்தென வுடம்பின்மேல்வைத் தோதுத லாசிரியர்கருத்து. அற்றாகலினன்றே பதியுண்மை யுலகின்மேல்வைத்தோதியதூஉமென்பது. ஈண்டு-மேற்கோளொன்றாயினு மேழுவகை மதங்களை வேறுவேறுமறுக்கு மேதுக்க ளேழாகலா னான்மாவுளதென்று மேற்கோளவற்றொடு தனித்தனிசென் றியைதலி னேழதிகரணத்ததாயிற் றிச்சூத்திரமென்றுணர்க. இதனுட்கூறியவேதுவே யேதுவு மேற்கோளுமாகலா னேனைச்சூத்திரங்களுட்போல வேறேதுக்கூறவேண்டாமையி னிவை யேதுவுமாறும், இவற்றான் மேற்கோளைச் சாதிக்குமாறு மினிதுவிளக்கி வலியுறுத்துதன் மாத்திரையே யீண்டுரைக்கப்படுவதெனக்கொள்க.

முதலதிகரணம்.

ஈண்டிலதென்றலி னான்மாவுளதென்றது - எ-று-மே-ள்-எ-னின். சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரண

ன்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமூகான்மவாதியென்று மெண்மருள், அந்தக்கரணான்மவாதிகளான்மாவின திலக்கணங்கூறும்வழி யறுவாதமுகத்தான் மறுக்கப்படுதலி னவரையொழித்தொழிந்த வேறுவர்மதங்களையு முறையேமறுத்துயிருண்மை சாதிப்பான்றொடங்கி யவற்று ளிது சூனியமே யான்மாவென்னு மாத்துமிகர் கூறுங்கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துக்கொண்டு மேற்கோட்டுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

ஆன்மாவிலதென்றலினென வருவித்துரைக்க.

எவற்றினையுமன்றன்றெனப்பட்ட வான்மாவிலதென்று நிற்றலுளதாதலி னதுவே யவ்வான்மாவாமென்றது-எ-து-பொ-ரை-எ-னின். ஆன்மாவிலதென்றலேபற்றி யஃதுண்டெனக்கோடன் முயற்கோடில்லையென்று மேதுவா லஃதுண்டெனச் சாதித்தலோ டொக்குமென்றுங்கடாவை யாசங்கித் ததன் முற்பரியமுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) ஆன்மாவிலதென்றுஞ் சூனியவாதிகளு மில்லையென வாளாகூறுத லமையாமையி னுடல்பொறிவிடய மனத்தினையு முறையானே யிஃதான்மா வன்றென வோரோவொன்றாகக்கழித் திவ்வாறு கழி னான்மாவென்றது சூனியமென் றங்ஙனங்கூறுபவாகலா னவற்றை யோரோவொன்றாகவிட் டங்ஙனங்கூறிக்கொண்டு நிற்பதோ ரறிவுண்மையி னவ்வறிவே;மேல், "அவையேதானேயாய்" என்பதனு ளாகமவளவையாற் சாதித்துப்போந்த வான்மாவென்றவாறு.

ஈண்டிலதென்றலி னான்மாவுளதென மேற்கொண்டதென்றவாறு. அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃதென்னையின் றுண்மலடியென்பதனோ டொக்குமென் றொழிகவென்பது கருத்து. இன்மை யீண்டுச் சூனியப்பொருட்டு. சூனியமாவது-உள்ளதுமன்று, இல்லதுமன்று, இரண்டுமாவதுமன்று, வேறுமன்றெனப்படும்பாழ். ஏகாரம்-பிரிநிலைக்கண்வந்தது.

வெண்பா.

அன்றன்றெனநின்றனைத்தும்விட்டஞ்சொறுத்தாய் ❋
நின்றொன்றுளத்துவேநீயனைத்து - மின்றின்று ... ❋
தர்ப்பணம்போற்காட்டலாற்சார்மாயைநீயல்லை ... ❋
தற்பரமுமல்லைதனி. ... ... (௧)

அஃறன்-தனி-எ-று-உ-ம்-எ-னின். அவ்வழிநிலை யுடல்பொறி விடயமுதலியவற்றின் வேறாகப்பிரித்துக் காணுமாறு மதுவே யுயிராமாறுந் தெரிந்துணர்த்தி யதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) அணைந்து நின்று-எ-து-உடல்பொறி விடயமுதலியவனைத்தினு மதுவதுவாகாது நின்று - அன்றன்றெனவிட்டு-எ-து-முறையானே யிது நானன் றிது நானன்றென வொரோ வொன்றாகக்கண்டு நீக்கியவழி - அஞ்செழுத்தா யொன்று நின்றுளது-எ-து-அவ்விடத் ததராகிய சூக்கும பஞ்சாக்கர ரூபமாய்நின்று வந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே - அதுவேநீ-எ-து-அதுவு நானன்றெனக்கழிப்பி னக்கழிக்கு முணர்வு வேறுண்டெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடுமாகலிற் சூக்கும பஞ்சாக்கரரூபமாய் நின்றறிந்து வந்த வவ்வறிவு தானே நீயென்ப தறிவாயாக - அற்றேல், மாயையுஞ் சிவமுமுளவென்பது மேலைச்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்டமையி னவையே யவ்வறிவினொடு மறிந்து நீக்குமெனவமையுமாகலான் வரம்பின்றியோடுமா றில்லையாலெனின், சார்மாயை-எ-து-நின்னாற் சாரப்பட்ட மாயை - அணைந்து நின்றின்று தர்ப்பணம்போற் காட்டலா னியல்லை எ-து-மலமாகிய காரியமனைத்துமாய் நின்றேடு விரவி நின்றிப்பெத்தகாலத்துக் கண்ணுக்குக் கண்ணாடிபோல வுனக்கறிவைவிளக்கி நிற்றல் மாத்திரையே யன்றி யறிவதன்றாகலா னீயம்மாயையல்லை-தற்பரமல்லை-எ-து-மாயையான் விளங்கி யறியு நீயதற்கதீதமாகிய சிவமுமல்லை-தனி-எ-து-அவற்றின்வேறு-எ-று.

விட்டவழி யென்பது விட்டெனத் திரிந்து நின்றது. அவ்வழிவாவ திதுவென் றுணர்ந்துவா ரன்றன்றெனநின்றனைத்தும் விட்டவழியென வேதுப்பொருளை யநுவதித் தஞ்செழுத்தா யொன்று நின்றுளதென வடையாளங் கூறினார். அஞ்செழுத்தாய் நின்றறியுமாறு வருகின்ற சூத்திரத்துட் பெறப்படும். இதற்குப் பிறசொல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்பட மேலு மோரினையின்றி யுரைத்தார். அணைந்து நின்றென் புழி முன்னர்க் கண்ணுருபும் பின்னராக்கச் சொல்லுந் தந்துரைக்க. ஏகாரந்தேற்றம். தற்பரமென்றது குறிப்பேதுவாய் நின்றதேயாம். அணைந்து நின்றின்று தர்ப்பணம்போற் காட்டலாற்சார்மாயை நீயல்லை தற்பரமுமல்லை தனியென்றத னானே வருகின்றவதிகரணங்களுக் கெல்லாந் தோற்றுவாய் செய்தவாறு மாயிற்று.

இரண்டாமதிகரணம்.

இனியெனதுடலென்றலி ளுன்மாவுளதென்றது-எ-து-மே-ள்-எ-னின். அவ்வழி வுடம்பின்கணன்றி நிகழக் காணாமையானும், நானுணுகினேன் பருத்தேன் என வுடம்பினையே நானென வழங்கக்காண்டலானு முடம்பே யான்மாவெனத் தேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி லிரண்டாங் கூற்றைக் கண்ணழித்துக்கொண்டு மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

நான் பருத்தேன், சிறுத்தேன், கரியேன், மனிதன், பார்ப்பானென வுடம்பின் குணவிசேடங்களை யுபசாரத்தா லுயிருக்கேற்றிவழங்கினும், யானுடம்பு, யான்கை, யான் காலென வுடம்பை யவ்வாறு வழங்குவாரின்மையினெனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக்காண்டலி னதுவேயுயிர்வேறுண்டென்பதனை யறிவுறுக்குமெனவவன் வழங்குமுறையே பற்றி யவனை மறுத்தவாறு.

என்பதி யென் மனையென்றாற்போல, என்கை யென்காலென நிற்பதுளதாதலி னதுவே யவ்வான்மாவா மென்றது - எ - து- பொ-ள - எ - னின் - எனதுடலென்பது பிறிதின் கிழமைப் பொருள்பட்டாது தலைமாத்திரையாய் நிற்கு மிராகுவை யிராகுவினது தலையென்று வழங்குமாறுபோல வபேதம் பற்றியே வழங்கப்படுமென வமையுமென்னுங் கடாவை யாசங்கித் ததன் முற்பரிய முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இராகுவினது தலையென்றாற்போல, என்கை, என்கால், என்கண், என்செவி, என்பொறி, என்பிராணன், என்னறிவெனப் பலவாற்றானும் பெரும்பாலு முலகத்து வழங்கக் காண்டலி னவ்வழக்கமிகுதிப்பாடு பிறிதின் கிழமைப் பொருட்கணன்றி வாராமையா னங்ஙனங் கூறிக்கொண்டு நிற்கும்பொருள் வேறொன்றுண்டென்பது பெறப்படுதலின், அதுவே மேலுமா யளவை பற்றிச் சாதித்த வான்மாவென்றவாறும். எனதுடலென்றலி னான்மா வுளதென மேற்கொண்டதென்றவாறு.

வெண்பா.

எனதென்ப மாட்டி னெனதலா தென்று ... ... *
னதலா துன்கைகால் யாக்கை - யெனதென்று ...*
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா... ... *
லுன்னிலவை வேறு முணர். ... ... (உ)

எனதென்ற - உணர்-எ-து-உ-ம்-எ-னின். பதிமனைவி முதலிய பொருள் கடம்மின் வேறுதல்கண்டு பிறிதின் கிழமைப்பொருள் படவென தென்றாற்போ லவ்விக்கைகான் முதலியவற்றைத் தற்கிழமைப்பொருள் படவென தென்று கூறி நிற்றலி னவ்விருவேறுமொழியுந் தம்முளொக்குமா றென்னையென்றுங் கடாவை யாசங்கித் ததனைவலி யுறுத்ததற்றாகலிற்று.

(இ-ள்) எனதலா தென்றெனதென்ற மாட்டின்-எ-து - நீயு லோகாயத நூல்கேட்கு முன்னெல்லாம் பதிமனைவி முதலிய புறப் பொருளையே யுயிரெனக்கொண்டு மயங்கி நின்றுயன்றே யக்காலத்தவ ற்றை யெனதன்றென வேறுகாணாது தனித்தனி யெனதென்றே தற்கி ழமைப் பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல - உனதலா துன் கை கால் யாக்கையெனதென்று மென்னறிவதென்று முரைத்துநீநிற்றி கான்-எ-து-உன தன்றாகிய வுன்கைகால் யாக்கைகளைத் தனித்தனியெ னதென்றுமங்ஙனமமைந்த பாசவறிவை யென்னறிவதென்றுந் தற்கிழ மைப்பொருளாகக் கூறிக்கொண்டு நீயொருபொருள் வேறுநிற்கின்று ய்கான்-உன்னில்-எ-து-உலோகாயத நூலாராய்ந்த பின்னர்ப்பதிமனை வி முதலியபொருள்க ளுனக்கு வேறுதல்கண்டாற்போலக் கைகான்மு தலிய வற்றினியல்புகளையு மேதுக்கண் முதலியவற்று னாராய்ந்து பார் த்தியாயின்-அவைவேறுமுணர்-எ-து-அக்கை கான்முதலியன வுனக்க ன்னிய மதனை யறிவாயாக வென்றவாறு.

இன் - உவமவுருபு. உனதலா தென்பதனைக் கைகால் யாக்கைக ளோடு தனித்தனி கூட்டுக. இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

இனியைம்புல னறிதலிறன் மாவுளதென்றது-எ-து-மே-ள்-எ-னின். ஐம்பொறிகளு மைம்புலன்களை யறியுமென்ற தெல்லார்க்கு மொப்ப முடிந்தமையி னவையுடல்போற்சடமன்மை பெறப்படுதலா

னும், அவற்றை யெனதென்னும் வழக்கம் பெரும்பான்மை யன்றாக
லானும், அவையே யுயிராத லமையுமென வி்ந்திரி யான்மவாதிகள் கூ
றுங்கடாவை யாசங்கித்து முன்றுங்கூற்றைக் கண்ணழித்துக் கொண்டு
மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

ஐம்புலனாகிய சத்தபரிச ரூபரசகந்தங்களை யிந்திரியங்க ளொன்
றறிந்தொன் றறியாமையி னிவ்வைந்தினு மைம்புலன்களை யறிதலு
ளதாதலதுவே யவ்வான்மாவென்றது-எ-து-பொ-ள் எ-ளின். ஐம்பு
ல னறிதலாலான் மாவைம்பொறியின் வேறெனச் சாதித்தற் கேதுவா
மாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித் ததன் றுற்பரிய முணர்
த்துத னுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

வெண்பா.

ஒன்றறிந்தொன் றறியா தாகியுடன்மன்னி ... ✽
யன்றும்புலனுயவ் வஞ்செழுத்தை-யொன்றறிந்த ...✽
வுள்ளதேயாயினது நீதனித்தனிகண் ... ... ✽
ணுள்ளலவையொன்றல்லே யோர். ... ... (௬)

ஒன்றறி-ஓர்-எ-து-உ-ம்-எ-ளின். இந்திரியங்க ளொன்றறிந்தொ
ன்றறியாதென்ற தொக்கும். ஐந்துமைந் தாயினெனக் கோடலினதனு
னெமக்காவ தோரிழுக்கில்லை, இனி யிவ்வைந்தையுங்கொண் டைம்பு
லனையு மொருபொருளே யறியுமெனின் தற்சுப் பிரமாணங்கண்டி
லம், குடத்தைக்கண்டயானே யதனைத் தீண்டினேன், மறிந்துணர்வு
நிகழ்தல் ஐந்து மோருடம்பின் கண்ணே நிலைபெறு மொற்றுமைபற்
றி யமையுமெனக் கோடுமென்னுங்கடாவை யாசங்கித் ததனை வலியு
றுத்துத னுதலிற்று.

உடன்மன்னியொன்றறிந்த தொன்றறியாதாகி-எ-து- உடம்பின்
கண்ணேநிலைபெற் றொருவிடயத்தையறிந்த விந்திரிய மற்றொரு விட
யத்தை யறியாதாய் - அன்றும்புலனு யவ்வஞ்செழுத்தை-எ-து-அங்
ஙனந் தம்முண்மாறுபடுஞ் சத்தமுதலிய புலன்களைச் சூக்குமபஞ்சா
க்கரத்தாற் செலுத்தப்பட்டா ராய்ந்தறிகின்ற வவ்வைம்பொறிகளின்
றொழிற்பாட்டை - அறிதலொன்றுள்ளதேயாயின் - எ-து- கண்ணுரு
வத்தையறிவது செவியோசையையறிவதென் றிவ்வாறுணர்தலையுடை

ய தோர்பொருளில்லதோ வுள்ளதோவென வினாவினார்க்கில்லதென் னவ்வறிவு நிகழாதாதல் வேண்டுமாகலா னுள்ளதேயாமெனின்- அது நீ-எ-று-அவ்வாறுணர்வதியாதனாலே நீயாகிய வான்மா, அவ்வாறுணர்வனவு மவ்விந்திரியங்களே யென்றாற் படுமிழுக்கென்னையெனின், தனித்தனி கண்டுள்ளலவை எ-று - அவ்விந்திரியங்க டத்தம்விடயங்களை வேறுவேறு கண்டறிதன் மாத்திரையேயன்றி யித்தொழிற்பாட்டை யுடையேம் யாமெனவு மறியமாட்டாவாகலான்-ஒன்றல்லையோர் எ-று-அவ்வைந்தின் றொழிற்பாட்டையு மறிந்தவற்றின் வரும்பயன் கொள்வதாய நீ யவற்றின்வேறாவை யதனை யாராய்ந்தறிவாயாக வென்றவாறு.

ஆகியென்னுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினையோடு முடிந்தது, இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந்தும் விளையாடுபவென்றாற்போல. ஆய்-என்பது-வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க. அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரா லஞ்செழுத்தென்றார். அஃதிருமடியாகுபெயராய் ஐம்பொறியின் றொழிற்பாட்டை யுணர்த்தி நின்றது. உள்ளல்-உள்ளலானென்க. இம்மூன்றதிகரணத்தானுஞ் சாக்கிரத்தினிகழு மியல்புபற்றி யான்மாவிருண்மை சாதிக்கப்பட்டது.

நான்காமதிகரணம்.

இனியொடுக்க மறிதலி னான்மாவுளதென்றது-எ-று - மே-ள்-எ-னின். ஞேயவிந்திரியங்கட்கு நிகழறி வின்றாற் காண்டுமென நீ யிருங் கோடலி னவ்விந்திரியங்களின் வேறா யங்கனமறிவது புரியட்டகவுடம் பேயாமென வமையும், அது புறத்து நிகழாதாயினு மகத்தே நின்றிந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி யறியுமெனக் கோடுமெனச் சூக்குமதேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து நாலாங்கூற்றைக் கண்ணழித்துரைத்த மேற்கோ ணுதலிற்று.

(இ-ள்.) ஐம்பொறிகளுமொடுங்கின சொப்பனத்தானத்தி னிகழ்ந்தவற்றை யறிதலி னான்மாவேறுண் டென்றவாறு.

ஒடுக்கம்-ஆகுபெயர். கனவின்கட்கனவுகண்டாமென்று நிப்பதுவதாதலி னதுவே யவ்வான்மாவாமென்றது - எ - று - பொ-ளா-எ-னின். சொப்பனத்தி னிகழ்ந்தவற்றை யறிவதுஞ் சூக்குமதேக

மேயாகலின், இது சித்தசாதனமாமாலென்றுங் கடாவை யாசங்கித்
ததன் ருற்பரிய முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வெ டை.

இஃதென் சொல்லிய வாறேவெனின், ஒடுக்கமறிதலின்-எ-து-ஒடுக்கத்தி னிகழ்ந்தவற்றை னவின்கண்மயங்கி யறிதலென்னும்பொருட்டாகலாற் சித்தசாதனமாதல் யாண்டையதென விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே னவின்கணதனை யறியுமாயிற் கண்டபடியறியாது மயங்கியறிதல் கூடாமையின், உயிர்க்காயினது போல வொருதன்மைத்தாக வின்றியகத்துச்சேறலும் புறத்துச்சேறலும் வேறுபாடுடைமையானதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலி னங்ஙனமறியு முயிர்வேறுண்டென்பது கண்டுகொள்க.

வெண்பா.

அவ்வுடலினின் றுயிர்ப்ப வைம்பொறிகடாங்கிடப்பச்
செவ்வினினவ்வுடலிற் சென்றடங்கி - யவ்வுடலின்
வேறொன் றுகொண்டு விளையாடிமீண்டதனை ...
மாறலுடனியல்லமற்று. ... ... (ச)

அவ்வுடல்-மற்று-எ-து-உ-ம்-எ-னின். கனவின்கட்செல்லுமாறு மாண்டுநிகழுமாறு முணர்த்தி யதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.)அவ்வுடலினின் றுயிர்ப்ப வைம்பொறிகள்கிடப்ப-எ-து-மேலுயிரன்றெனக் கூறிப்போந்த தூலவுடம்பினின் றுயிர்ப்பனவாய வைம்பொறிகளாண்டே யுயிர்ப்பொழிந்து கிடப்ப-அடங்கிச் செவ்வி னவ்வுடலிற்சென்று-எ-து - அவையங்ஙனங் கிடந்தவழிப்புறத்து நிகழுந் தொழிற்பாடெல்லாமடங்கி யவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச் சென்று- அவ்வுடலின் வேறொன்றுகொண்டு விளையாடி-எ-து-அத்தூலவுடம்புபோ லதனின் வேறுயதோ ருடம்பை யெடுத்துக்கொண்டு வேறோராற்றுற்கண்டு கேட்டுண் டுயிர்த்துற்று விளையாடி-மீண்டதனைமாறல்-எ-து-மீளவதனைமாறி மேற்சேறலான்- உடனியல்லை-எ-து-நீ யச்சூக்குமதேகமல்லை யதனின் வேறுவை யென்றவாறு.

உயிர்ப்பவென்றது - அன்பெறுத அகரவீற்றுப் பலவறிசொல். உயிர்த்தல்-தொழிற்படுதல். தாமும் - மற்றும்-அசை. மீண்டு-மீள. மாறல் - மாறலானென்க. இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தி னிக

மூ மியல்புபற்றி யுயிருண்மை சாதிக்கப்பட்டது. நான்கா மதிகரண முடிந்தது.

ஐந்தாமதிகரணம்.

இனிக் கண்படி லுண்டி வினையின்மையி னான்மாவுளதென்றது-எ-து-மே-ல்-எ-னின். சொப்பனத்தானமா கிய்தினையினன்றித் தொழிற்படாத சூக்குமதேகம்போலன்றிச் சுழுத்தி துரியங்களினுந் தொழிற்படுவதாய பிராணவாயுவே யடங்குதல் விடுதல் செய்தலிவதாகிய வான்மாவாதலமையுமெனப் பிராணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி னஞ்சாங்கூற்றைக் கண்ணழித்துரைத்துக் கொண்டு மேற்கோடலுதலிற்று.

(இ-ள்.) வெ-ளிடை.

உண்டிவினை- உம்மைத்தொகை. அஃது-"உண்டியும் வினையுமின் றிக் கிடந்து" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக.

ஒடுங்கினவிடத் தின்பதுன்பஞ்சீவனம் பிரகிருதிக் கின்மையின் ஒடுங்காதவிடத் தின்பதுன்பஞ் சீவியாநிற்ப துளதாதலி னதுவே யவ்வான்மாவாமென்றது - எ-து-பொ-ா-எ-னின். கண்படைகொண்ட வழி யுண்டிவினையில்லையென்ற துட்கோ பிராணவாயுக்கோவென வினுயினுர்க்குடம் புயிரன்மையானதற் கவையில்லாமைபற்றி யின்னைடக் காவதோ ரிழுக்கில்லை, இனிப் பிராணவாயுக்கென்னில், அது துயின்றெழுந்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேனென் றறிதல் பிறிதோராற்றாற் பெறப்படாதென்று மருத்தாயத்தி யானுண்டு மின்ப துன்ப நுகர்ச்சியுண்டென்பது பெற்றாம். விழித்துழிப்போல வுறங்குழியும் பிராணவாயு வியங்குதலான் வினையுண்மையுங் கண்டாமாகலின், அதற்கவை யாண்டில்லையென்றன் மாறுகோள்போலு மென்னுங்கடாவை யாசங்கித் ததன் முற்பரிய முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) கண்டுண்டியென்றது விடயங்களினிடமாகவரு மின்ப துன்ப நுகர்ச்சியை. வினையென்றதுடம்பு சேட்டித்தலையாதலி னிவ்விரண்டும் பிராணவாயுவையொழிந்த கருவிகளெல்லா மொடுங்கிய துயிலிடத் தஃதியங்காநிற்பவு முடம்பின்கண்ணோ நிகழ்த லின்மையி

னவையொடுக்காத னவினிடத் தவையிரண்டு மதன்கணிகழ்தலுண்
மையி னவ்வின்மை யுண்மைகட் கேதுவாகக் கருவிகளை யொடுக்கியு
மொடுக்காதுநிற்பதியா ததுவே யவ்வான்மா வென்றவாறும். கண்படி
லுண்டிவினை யின்மையிறுன்மாவுளதென மேற்கொண்டதென்றவாறு.
பிராணவாயுவை யொழித்தொழிந்த கருவிகளென்ப தாற்றலான் வந்
தது. இன்பதுன்ப நுகர்ச்சியை யின்பதுன்பமென் றுபசரித்தார். சீவ
னம்-சீவித்தல், சேட்டித்தலென்றதாம். செவ்வெண்டொகை விகாரத்
தாற் றொக்கது. சிவியாநிற்பதென்பது- சிவியாநிற்றலென்னுந் தொழி
ற்பெயர் மாத்திரையாய்நின்றது, "உறங்குவதுபோலும்" என்புழிப்
போல. உளதென்றது தனித்தனிச் சென்றியையும். ஐந்தாமதிகாரண
முடிந்தது.

ஆறுமதிகாரணம்.

இனி யுணர்த்தவுணர்தலி னான்மாவுளதென்றது-எ - து-மே-ள்-
எ - னின்-பிரமப்பொருள்-மேற்கூறிப் போந்த சடப்பொருள்கள்போ
லன்றிச் சித்தாகலானதுவே யுயிராதலமையுமென விஞ்ஞா னான்மவா
திகள் கூறுங்கடாவை யாசங்கித் தாறுங்கூற்றைக் கண்ணழித்துக்
கொண்டு மேற்கோடலுதலிற்று.

(இ-ள்.) தொழிற்படுங் கருவிகளொன்று மின்றிக் கேவலமா யநீ
தவவத்தையி னின்றுழியறியுமா றின்றிப் பின்னர்க் கலைமுதலிய கரு
விகளான் றறிவிக்க வறிந்து வருதலுண்மையின், எக்காலத்துந்திரிபி
ன்றியறிந்தாங் கறிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கிது தகாமையா
னக்கலைமுணரு மான்மா வேறுண்டென்றவாறு.

உணர்த்த வுணர்தலெனவே முன்னுணர்ந்து கிடத்தல்பெற்றும்.

அவனறிந்தாங் கறிவனென் றறிவிக்க வறிந்துயதேசியாய் நிற்ப
துளதாதலின், அதுவே யவ்வான்மாவா மென்றது-எ-து-பொ-ஊ-எ-
னின், அறிந்தாங் கறிவதாகிய பிரமப்பொரு ளவிச்சைக் காலத்துக் க
ருவிகளோடுங் கூடி யறியாதெனக் கோடுமாகலினதுபற்றி யுயிர்வே
றுண்டென்றல் பொருந்தா தென்னுங் கடாவை யாசங்கித் தவ்வளவி

லவன் மகிழுகவென்று நியாயத்தால் வேறு மதன் முற்பரிய முணர்த் துதலுதலிற்று.

(இ-ள்) கருவிகளோடு கூடிய வழியுந் தன்னியல் புணருமாறின் றி யான்முதல்வன் இதுபோலமறந்து மறந்தறிதலின்றி யறிந்தவாறே யறிந்துநிற்கும் பேரறிவுடைய னென வேதாகமங்களா னறிவிக்க வறி ந்து குரவனறிவுறுக்கு முபதேசமொழியைப் பெற்றுடையதாய் நிற்ப தொன் றுளதாகலினது வேமேலுணா யளவையாற் சாதித்தப்போந்த வாங்மாவென்றவாறும். உணர்த்த வுணர்தலி னுன்மாவுளதென மேற் கொண்டதென்றவாறு.

அறிந்தாங்கென்பது - அப்பொருட்டாதல் " என்ணிய வெண் ணியாங் கெய்துப ,, என்பதனானுமறிக. இதற்குப் பிறவாறு முரை ப்ப. அவையெல்லாம் பொருந்தாமை யுணர்க.

வெண்பா.

அறிந்து மறிவதே யாயுமறியா ௯
தறிந்தவையும் விட்டங் கடங்கி-யறிந்த ௯
தெதுவறிவு மன்றுகு மெய்கண்டா னென்றி... ...௯
னதுவதுதா னென்று மகம். ... ...(௫)

அறிந்தும்-அகம்--எ-து-உ-ம்-எ-னின். கருவிகளோடு கூடிய வ ழியு மவிச்சை நீங்காமையின் விடயங்கள் மாத்திரையே யறியுமன்றி த்தன்னியல் பறியுமாறில்லை, அஃதுபதேசத்தா லறியற்பாலதே யாமா கலானது பற்றியிழுக் கென்னை யென்னுங் கடாவை யாசங்கித் ததனை யு மேற்கூறிய நியாயத்தா லுடம்பட்டின்னு மொருதாற்பரிய முரைக் கு முகத்தானே விடயங்களை யறிவுழியும்படும் வேறுபாடு கூறி யத னை வலியுறுத்துதலுதலிற்று.

அவனறிந்தாங் கறியுமாறும், உயிர்மறந்து மறந்தறியு மாறும், தெரித்துணர்த்தி வலியுறுத்துத லுதலிற்றெனினு மமையும்.

(இ-ள்.) அறிந்து மறிவதே யாயுமறியாது-எ-து-கருவிகளெல்லா வற்றோடுங் கூடிச் சாக்கிரத் தானத்தினின்று விடயங்களை யறியுமிட த்து மொருங்கே யறியமாட்டா தொன்றனை யறிந்து மொன்றனை யறி

யப் புருவதாயு முன்னறிந்த தொன்றனையறியா தொழிந்தும் - அறி
ந்ததையும் விட்டடங்கி-எ-து-இங்ஙன மொரோ வொன்றாக வறிய
ப்பட்ட விடயத்தையு மிடையீடின்றி யறியமாட்டாது விட்டு விட்டா
ங்கே யைந்தவத்தைப் பட்டடங்கி - அறிந்ததே து-எ-து-மீளவறிந்து
வருதல் கண் கூடாகக் காணப்படுதலான் அங்ஙன மறிந்து வந்த பொ
ருள்யாதது சடமன் றென்பது மேற் காட்டப்பட்டது முன்னருங்கா
ட்டப்படும்-அறிவுமன்று-எ-து-ஒன்றாக வியல்பாக வுணர்தலே பேர
றிவாகலின் அதுவுமன்றாம் - மெய்கண்டானென்றின் - எ-து - இனி
மெய்யாகிய சித்தாந்த நெறியினை யுணர்ந்தோன் வேறென்னையோவெ
ன மனமொருங்கி யாராயுமாயின் - அது வதுதானென்று மகமாகு
ம்-எ-து-காட்டு மொளிக்கு வேறுப கண்ணொளிபோல வவ்வறிவிற்கு
வேறுபாது வதுவேதானெனச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியு மிய
ல்பையுடைய வுயிரா மென்றவாறு.

அறிந்து மறிவதே யாய்மெனனும் உம்மைகள் எண்ணின் கண்
வந்தன. அறியாது மென்னும் என்னும் மைவிகாரத்தாற் றொக்கது.
அறிந்ததையு மென்னும் உம்மை - இழிவு சிறப்பு. அறிவுமென்னும்
உம்மை இறந்தததழீ இயது. ஏகாரம் அசை நிலை. அங்கு-உணர்ந்
து முறைமைத் தானமாகிய விலாடத்தி னென்றவாறு.

அறிந்ததையும் விட்டங் கடங்கி யறியுமாறு வருகின்ற சூத்திர
த்திறுதியினும், அது வதுதா னெனச் சார்ந்த தன்வண்ணமா மாறு
ண்மை யதிகாரத்தும் பெறப்படும். அறிந்து மறிவதேயாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி யறிந்த தெதுவென்பதற்கு, ஓதியத
னை யோதியபொழுதே யுணர்ந்து பலகாலோதி யுணர்வதாயும், பல
காலோதியு முணர்தலின்றியும், உணர்ந்ததனை மறந்தபின்னர் மறந்
தொழிந்தும், இவ்வாறேதி யுணர்ந்த தியாதென்றுரைத்தலுமொன்று
இப்பொருட்கடங்கி யென்புழியும் எண்ணும்மை விரித்துரைக்க. இங்
ஙன மூவகைப் படுத்துரைக்கவே யுணர்த்த வுணர்தலென்னு மேது
வான் முறையே யதீதத்தின் கணிகழு முறைமை பற்றியும், உணர்ந்
து முறைமைக் கணிகழு மியல்பு பற்றியும், சுத்தத்தி னிகழு மியல்பு
பற்றியு மூயிருண்மை சாதிக்கப் பட்டது. இது சற்பாமுமல்லை தனி
யென்றதனை வலியுறுத்தியவாறு. கணிகவிற்ஞானமே யான்மா வெ

ன்றும் புத்தரின் யோகாசாரன் மதத்தை மறுத்தற் கெழுந்த இவ்வதிகரண மெனக் கொண்டதற் கிசைய வுரைப்பாருமுளர். ஆறுமதிகரண முடிந்தது.

ஏழாமதிகரணம்.

இனிமாயா வியந்திர தநுவினு ளான்மா வுளதென்றது - எ-து-மே-ள்-எ-னின், உடம்பு முதலியவற்று ளொரோவொன்றே யான்மாவாதலின் றென்றதொக்கும், அவற்று ளொன்று குறைந்தவழியு மறிவு நிகழாமையானும், எல்லாங் கூடிய வழியதுநிகழ்தலானும், அனைத்துங்கூடிய சமுதாயமே யுயிராத லமையுமெனச் சமுதாயான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர், வைபாடிகர், கூறுங்கடாவை யாசங்கித்து, சூத்திரத்தி னிறுதிக் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடலுதலிற்று.

(இ-ள்.) மாயாகாரியங்களான் யாக்கப்பட் டியன்ற சூத்திரப்பாவைபோலு முடம்பின் கண்ணே யவற்றிற்கு வேறா யான்மாவுண் டென்றவாறு. எனவே யவையெல்லா மாயையின் காரியங்களாய் நிலைபெறுவன வாதலி னிலைபேறுடைய வுயிராகா தென்றவா றாயிற்று.

மாயை - ஆகுபெயர். இகரம் விரித்தல் விகாரம்.

அவைதாம் வெவ்வேறுபெயர் பெற்று நிற்றலான்-எ-து-மே-ள்-எ-னின், சித்தமுஞ் சித்தப் பகுதியுமாகிய வகச்சமுதாய மைந்தும் மாயாகாரியமென்ப தெம்மனோர்க்குடம் பாடன்மையினதுபற்றி யான்மா வேறுண்டெனச் சாதித்த லமையுமாறென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து, அவ்வளவினவன் மகிழுக வென்னு நியாயம் பற்றிவேறு மோராற்றாற் சாதித்த லுதலிற்று.

(இ-ள்) நீயைந்து கந்தமெனக் கொண்ட மாயா காரியங்களான் மாவெனப்பெயர் பெறுமாறின்றி வேறு வேறு பெயர் பெற்று நிற்பனவாதலான் மாயாவியந்திர தநுவினுளான் மாவுளதென மேற்கொண்ட தென்றவாறு.

வேறுவே றென்பது வெவ்வேறென மரீஇயிற்று.

வெண்பா.

கலையாதிமண்ணந்தங் காணினவைமாயை ... ...
நிலையாவாந் தீபமேபோல-வலையாமன் ... ...
ஞானத்தை முன்னுணர்ந்து நாடிலது தருவாந் ...
தானத்தின் வேறாகுந் தான். ... ... (௬)

கலையாதி-தான் எ-து--உ:ம்-எ-னின், அவை தனித்தனி வெவ்வேறுபெயர் பெறினுந் தொக்க சமுதாயத்தின்கணான்மாவெனப் பெயர் பெறுமெனக்கோடு மாகலினதுபற்றி யிழுக்கெய்தா வென்னுங் கடாவை யாசங்கித்து, அவைவெவ்வேறுபெயர் பெறும்வழியும் அவர் கூறியவாறு பெயர்பெறாது வேறுபெயர் பெறுமாறும், அவை மாயாகாரியங்களேயாமாறும், அவைதொக்க சமுதாயத்தினு மான்மாவெனப்பெயர் பெறாது வேறுபெயர் பெறுமாறு முணர்த்தி யதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) காணிற்கலையாதி மண்ணந்தம்-எ-து-அங்ஙனஞ் சமுதாயமாதற் குரியவை யாவையென் றளவைகளா னறியப் புகிற்கலை முதனில மீறாகிய தத்துவங்களேயாம் - அவைமாயை நிலையாவாம்-எ-து-அவை யனைத்து மாயையின் காரியங்களாக வினிலையுதலின்றிச் சில காலநின்றழிவனவாம்-ஞானத்தை யலையாமன் முன்னுணர்ந்துநாடில் எ-து-அவைதொக்க சமுதாயத்தின் விளங்கித் தோன்றுவதாய ஞானத்தினியல்பை யசையாமற் கருத்தை யொருக்கி முன்னுணர்ந்து பின்னரச்சமுதாயத்தை யாதென்றுராயின்-அது தீபமேபோலத் தருவாம்-எ-து-அச்சமுதாயங் கண்ணுக்கு விளக்குப்போல வுயிர்க்குத் தூல சூக்குமபரங்களாகிய வுடம்பாம் - தானத்தின் வேறாகும்-எ-து-ஆகலாற் கண்விளக்கின் வேறாயினாற்போல வுயி ரவ்வுடம்பின் வேறாகு மென்றவாறு.

ஆமென்பது மேலுஞ் சென்றியையும், மாயை-ஆகுபெயர். தானென்பது - முன்னைய தெழுவாய், பின்னையது அசை. அதனினென்பது-அத்தினெனமரீஇயிற்று, "இத்தைமெய்யெனக்கருதி" என்புழிப்போல. இதனானே தனியென்றதனை வலியுறுத்தியவாறு. இவ்வாறு மூன்றுசூத்திரத்தானுஞ் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை யநுமானவளவை யான் வலியுறுத்தப்பட்டது.

ஆகமவளவையே யமையுமாகலி னநுமானவளவை மிகையாம் பேறாலெனின், ஆகாது; மந்தவுணர்வுடைய மாணாக்கர்க்கு வேற்றுச் சமயநூல்களா னோக்கிய வழிச்சைவாகமப்பொருளின் கண்ணிகழாமைப்பொருட்டும் கேட்டல்-சிந்தித்தல்-தெளிதல் - நிட்டையென்னு நான்குவகையானன்றி யாகமங்களைக்கேட்ட துணையானே யநுபவங் கூடாமையிற் சிந்தனைசெய்து வன்மை மென்மையுணர்ந்து தெளிந்து கோடற்பொருட்டுங் கருத்தளவையும் வேண்டப்படுமாகலானென்க.

மூன்றாஞ்சூத்திரமுடிந்தது.

நான்காஞ்சூத்திரம்.

அந்தக்கரண மவற்றி னொன்றன்றவை ... ௧
சந்தித்ததான்மாச் சகசமலத் துணரா... ...௨
தமைச்சரசேய்ப்பநின் றைந்தவத்தைத்தே ௩

(எ-னின்) இதுவுமது-எ-து-க-ளா - எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பிரமாணவிலக்கண மிரண்டானும் பொருணுண்மைபெறற் பாற்றென்னு முறைமைபற்றி மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட பதிபசுபாசங்களுக் கிலக்கண மெதிர்நிரனிறையாக வைத்துக் கூறுவான்றொடங்கி யவற்றுளிது மேலடுக்கின்ற வான்மவிலக்கணங் கூறுதனுதலிற்று. சொற்பல்காமைப்பொருட்டும், ஒத்தவேறுய வழியுமியைபுடைமை யுணர்ந்துகோடற்பொருட்டு மேயீண்டிதுவுமதுவென மாட்டெறிந்துரைத்த வாசிரியர் இங்ஙன முரைத்துக்கோடற்கேற்பவன்றே, ஆன்மாவினதுண்மையுணர்த்துத லுதலிற்றெனச் சிறந்தெடுத்தோதாது பொதுப்பட வான்மப்பிரகாச முணர்த்துத லுதலிற்றென்றதூஉமென்க. இவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தில் ஆன்மாவினதுண்மை கூறுமுகத்தாற் றொகுத்தோதிய வைந்தவத்தையே யீண்டிலக்கணங் கூறுமுகத்தான் விரித்தோதப்படுதலின், இதுவுமதுவென்றது மேலைச்சூத்திரப் பொருளொடு மாட்டெறிந்ததென்றுரைப்பினுமாம் இஃதொன்றுஞ் சூத்திரவியைபினிது விளங்கும் இச்

சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஆன்மா வந்தக் கரணங்களாகிய மனம் புத்தி யகங்காரஞ் சித்தமென்னு நான்கனு ளொன்றன்றாயினு நுண்ணுணர் வின்மையிற் சூழ்ச்சித் துணைவராகிய வமைச்சரோடு கூடிநின்று தன்றொழினடாத்து மரசன்போலச் சகசமலத்தினானுணர் வின்றிக் கஞ்சுகம்போலுங் கலாதிகளாற் பொதுவகையா னுணர்வு நிகழினுஞ் சிறப்புவகையா னிகழுமா றவற்றாற் பெறப்படாமையிற் சிறப்புவகையா னுணருமாறுதனக்குச் சூழ்ச்சித்துணையாகிய வவ்வந் தங்கரணங்களோடு கூடிநின்று சாக்கிரமுதலிய வைந்தவத்தை யுடைத்தாமென்றவாறு.

எனவே யங்ஙனமின் றைந்தவத்தைப் படுதலான்மாவுக் கிலக்கணமென்றவா றாயிற்று. இஃதுயிர்க்குத் தடத்த விலக்கண மெனப்படும் பொதுவியல்பு. ஒன்றன்றாயினுஞ் சகசமலத் துணராத வமைச்சரசேய்ப் பவவற்றொடுசந்தித்து நின்றைந்தவத்தைத் தாமெனவினையும். உணராது சந்தித்ததென்பது காரணகாரியப் பொருட்டாய் நின்றது. சந்தித்தது வினையெச்சமுற்று. இவ்வாறன்றியான் மாவவற்றி னொன்றன்றாயினுஞ் சகசமலந்துணராமையா லவற்றொடு சந்தித்தது, சந்தித்தவழி யவையுந்தானு மமைச்சர சேய்ப்பநிற்றலா னைந்தவத்தைத் தாயிற்றென வதிகரணம் பகுத்துக்கோடற் கேற்ப, வேறுவேறு வினைமுடிபு செய்துரைத்தலுமொன்று. வடமொழிச்சூத்திரத்தோதுதலின், ஈண்டுமாயினுமென வருவித்தொரு தொடராக வைத்துரைக்க. அந்தகரண மவற்றினொன்றன்றாயினு மெனவே, அவற்றினொன்றன்றாதலு மருவாதமுகத்தாலீண்டேபெற்றாம். இஃதுணராதார் அந்தக்கரண மவற்றினொன்றன் றென்றதனை வேறுதொடராக வைத்துரைப்ப. அங்ஙனமுரைப்பின் 'முன்வருவனவற்றையவாய் நின்றொருபொருண்மேல் வாராமையினொருசூத்திரமாதற் கேலாமையறிக. அவைசந்தித்ததென்புழி, ஓடுவுருபுவிகாரத்தாற் றொக்கது. இரண்டாவது விரிப்பினுமமையும். ஆன்மாவென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கற்பாலதாகவும், ஈண்டு வேறோதியதோத்து வேறாதல்பற்றியென்றுணர்க. ஆன்மாவென்னுஞ் சொற்குப்பொருள் வியாபகமென்பதூஉமாம். மலத்து-மலத்தாலெனவிரிக்க. அமைச்சரசு- அமைச்சரோடுகூடிய வரசெனமூன்றனுருபும் பொருளுமுடன்றொக்கன. காரணப்பொருட்டாய் நின்றென்னும் வினையெச்சம் - ஐந்தவத்தைத்தென்னும் வினைக்குறிப்பு முற்றோடுமுடிந்தது. அந்தக்கரண

மலப்பிறென்றன்றவை யென்றதோரதிகரணம், ஒன்றன்றாயினுஞ் சக சமலத்துணராதவை சந்நித்ததென்றதோரதிகரணம், அமைச்சரசேய்ப்ப மின்றைந்தவத்தைத்தே யென்றதோரதிகரணம், ஆக மூன்றதிகரணத்ததிச்சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண் டிவ்வான்மா வந்தக் கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களி லொன்றன்றென்றது - எ-து - மே - ள் - எ-னின், ஏனையவெல்லாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்பவாகலா னுயிராகாவாயினு மன முதலிய வந்தக்கரணங்கள் சிந்தையைச் சீவனென்றுஞ் சிவனைச் சிந்தையென்று மிங்ஙன முயிரொன்னும் பெயரானும் வழங்கப்படுத லுண்மையானும், இந்திரிய முதலியவற்றை யவ்வாறுகூறுமையின் அஃதாகுபெயரொன்றற் கேலாமையானும், அவையே தனித்தனியான் மாவாமென்றலமை வுடைத்தென வந்தக்கரணான்மவாதிகள் கூறுங்கட்டாவை யாசங்கித்து, சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட்னுதலிற்று. இது மேலைச் சூத்திரத்து ளோதற்பாலதேயாயினுமீண் டிலக்கணங்கூறும் வழியு மலற்றொடு சந்நித்தமைச் சரசேய்ப்ப நிற்பதெனவவத்தைக் கேதுவாகவெடுத்தோதவேண்டுதலி னீரிடத்து மெடுத்தோதுதல் "சில்வகையெழுத்தின் செய்யுட்டாகிச், சொல்லுங்காலை யுளையகத்தடக்கி, நுண்மையொடு புணர்ந்த வொண்மைத்தாகி" என்னுஞ்சூத்திரத்துக்கேலாமையினதுபற்றி விதிமுகத்தானன்றி யநுவாதமுகத்தானீண்டுணர்த்தப்பட்டது.

(இ-ள்.) வெ-டை.

ஈண்டந்தக்கரணமென்றது - உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப் பொருட்டு மனோபுத்தி யகங்கார சித்தங்களிலெணக்கிளந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக்கொண்டோரினுயிர் வேறுண்டெனக் கொள்ளாதாரின்மையின், ஆண்டாசங்கை நிகழாமையானும், அமைச்சரோடு வமிக்கப்பட்டவத்தைக் கேதுவாவனவு மனமாதியேயன்றிக் கஞ்சுகத்தோடு வமிக்கப்பட்டுக் கேவலத்தினு நீங்காதுடனிற்பனவாய கலாதிகளன்மையானு மலற்றை யீண்டெடுத்தோத

வேண்டாமையின், மனமுதலிய புறவந்தக்கரணங்களே மீண்டுக்கூற நின்றனவென்பது கருத்து.

அவை தாம்பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான்-எ-து-மே-ள்-எ-னின். மனம் புத்தி யகங்காரஞ் சித்த நான்குமருவி யான்மாவே யென்னவருமென நீயிருங்கோட்லி றூயிரவற்று ளொன்றுதலமையுமென்ருற் படுமிழுக்கென்னையென்று மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) அவ்வந்தக்கரணங்கடாந் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய்நின்றே தம்மைநோக்கிய் சித்தாய் நிற்றலாற் றன்னைநோக்கியுஞ் சித்தாய்நிற்கு மிவ்வான்மாவாவ தந்தக் கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்காரசித்தங்களி லொன்றன்றென மேற்கொண்டதென்றவாறு.

எனவே யுயிரான திட்டிக்கப்பட் டைம்பொறிக ளறிந்தவிடயங்களு ளொன்றனை யிஃதியாதா கற்பாற்றெனச் சித்தஞ் சிந்தித்தறியும் யான் சிந்தித்தேனென் றறியமாட்டாது, மனமதனை யிஃதின்னதா கற்பாற்றெனவு மஃதாமோ வன்றோவெனவு மிவ்வாறு சங்கற்ப விகற்பஞ்செய்தறியும் யான் சங்கற்ப விகற்பஞ்செய்தேனென் றறியமாட்டாது, அகங்காரமதனை யின்னதெனத்துணிவேன் யானென் றெருப்பட்டெழுந்தறியும் யானெருப்பட்டெழுந்தேனென் றறியமாட்டாது, புத்தியதனை யின்ன திதுவென நிச்சயித்தறியும் யானிச்சயித்தேனென் றறியமாட்டாது, ஆகலா னவ்வாறின்றி யவற்றொடுகூடி யான் சிந்தித்தேன், பற்றினேன், எழுந்திருந்தேன், நிச்சயித்தேனென்றும், அதன்பின் னதுவாய்ப் பரிணமித்துச் சுகதுக்க மோகரூபமாய்த் தன்மாட்டுவருந்திப் புத்திதத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளோடுகூடி நின்றிது சுகமிது துக்கமிது மோகமென்றறிந்தும், யான் சுகித்தேன், யான் றுக்கித்தேன், என்றறிந்தும், இங்ஙனம் பிறவற்றைநோக்கியுந் தன்னைநோக்கியுஞ் சித்தாகிய வான்மாத் தம்மைநோக்கிச் சித்தாகாத வந்தக்கரணங்களி னொன்றுமாறி யாண்டையதென மறுத்தவாறாயிற்று, “இவன்றானும் புத்தியுஞ்சித்திவ னோமோபுத்தி, என வழிநூலாசிரியர் கூறியதூஉ மிவ்வியல்புநோக்கி. ஈண்டுப்பிரகாச மப்பிரகாசமென்பன சித்தசித்தென்னும் பொருளவாம். ஏனையோரைநோக்கி யரசனுக்கனுக்கா தற்சிறப்புப்பற்றி யமைச்சரை யரசரென்றுபசரித்துக் கூறப்படுமாறுபோலப் புறக்கருவிகளை நோக்கி

யான்மாவுங் கறுக்கமாய்நிற் றற்சிறப்புப்பற்றி மனம்புத்தி யகங்கார ஞ் சித்த நான்குமருவி யான்மாவேயென்ன வுபசரித்துக் கூறப்படு மத்துணையென்றொழிக. முற்சித்தினையாதல்பற்றி யந்தக் கரணங்க ளமைச்சரையொக்குமெனவே யேனைக்கருவிக ளேனைப்பரிசனங்களை யொக்குமென்பது பெற்றாம். அது ஞானுமிர்தத்திற் காண்க. மேலைச் சூத்திரத்தி னேரியவேதுக்களே யீண்டைக்கு மமையுமாயினுஞ் சிற ந்தமைபற்றி வேறேதுக் கூறினர்.

வெண்பா.

மனமாதியா லுணர்தன் மன்னுபுலன்கள் ... ... *
மனமாதிமன்புலனி னல்லன் - மனமே ... ...*
லுதித்தொன்றையுள் ளுணர்தலதனி ... ... *
லுதிக்குங்கடற்றிரையை யொத்து. ... ... (க)

மனமாதி-ஒத்து-எ-து-உ-ம்-எ-னின். அவ்வந்தக் கரணங்க டம் மிற் றொடுள்ளவற்றைநோக்கிச் சித்தாமாறுந் தம்மின்மே லுள்ளவற் றை நோக்கியுந் தம்மைநோக்கியும் சித்தாமாறுந் தெரித்துணர்த்தி யேதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) மனமாதியா லுணர்தன் மன்னுபுலன்கள்-எ-து-மனமுத லிய வந்தக்கரணங்களா லுணரப்படுவன வைம்பொறிகளாற் றரப்பட் டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம்- உள்ளமுணர்தன் மனமேலு தித்தொன்றை-எ-து-ஆன்மாவுணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தியிற்றோன்றிய தொன்றனையாம்-கடற்றிரையை யொத்துதிக்கும்- எ-து - அவ்விருவேறுணர்வுங் கடலிடையெழுந்து கரைசாருந்திரை போலப் பரம்பரையிற் பரமான்மாவின் மாட்டுவந்து தோன்றும்- அதனின் மனமாதி மன்புலனினல்லன்-எ-து- அதனானே மனமுதலி யன வவ்விடயங்களின் வேறாயினாற்போல வான்மாவு மம்மனமுதலி யவற்றின் வேறாமென்றவாறு.

உதிக்குமென்னும் பயனிலைக் குணர்த விரண்டு மெழுவாய். செ வ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது. புலனினென்புழி - இன் உவமவுருபு. அல்லனென ஆடூஉ வறிசொல்லாற் கூறியது வடமொழி மதம்பற்றி. உதித்த வென்னும் பெயரெச்சவிறு விகாரத்தாற் றொக்க து. புத்தியிற் றோன்றிய தொன்றுவது - சுகதுக்க மோகரூப விடயம்.

பரம்பரையிற் றோன்றுதலானும் - முன்னர் வாயிற் காட்சி யுணர்வு தோன்றிய தன்பின் மானதக்காட்சி யுணர்வுதோன்றிய தன் பின்னர்த் தன் வேதனைக்காட்சி யுணர் வுயிரின்கண்வந்து தோன்றுதல். இதனானே யந்தக்கரணங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறு மேலுள்ளவற்றை நோக்கிய சித்தாமாறு முயிரவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க.

வெண்பா.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம் ...
புந்தியாயாய்ந்து மனமாகிப்-பந்தித்து ... ...
வெவ்வேறுதானே துணிந்துள்ள மிவ்வேறு... ..
மவ்வேறும் போதுபோ லாங்கு. ... ... (௨)

சிந்தி - ஆங்கு - எ-து - உ-ம்-எ-னின், மேற்பொது வகையாற் கூறிப்போந்த வந்தக் கரணங்களி னியல்புஞ் சிறப்புவகையாற் கூறுமுகத்தான் மானதக்காட்சி யுள்ளுங்கடற் றிரைபோலப் பரம்பரையின் வெவ்வேறு யுணர்வு நிகழுமாறுணர்த்தி யுயிர்வேறுதல் வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்.) உள்ளம் எ-து-புருடதத்துவமென நின்றவுயிர்-ஆங்கு-எ-து-வாயிற் காட்சியாற் கண்ட விடயங்களி னொன்றனை மனமாதியா லுணரு மானதக்காட்சியின் கண்ணு மொருபெற்றித் தாதல்பற்றி-சித்தமாய்ச் சிந்தித்து-எ-து-சித்தமாக நின்றிஃதியா தாகற்பாற்றெனச் சிந்தித்தும்-மனமாகிப் பந்தித்து-எ-து-அதன்பின் மனமயமாய் நின்றிஃதின்ன தாகற்பாற்றெனப் பற்றியும் - ஆங்காரமாய்த் தெளியாது-எ-து-அதன்பின் னாங்காரமாய் நின்றஃதாமோ வன்றோ விதனை யின்னதெனத் தெளிவேன் யானெனத் தெளிவு பிறவாதெழுந்தும் - புந்தியாயாய்ந்து-எ-து-அதன் பின்னர்ப்புத்தியாய் நின்றிஃ தின்னதெனத் தெளிந்து - வெவ்வேறே துணிந் தவ்வாறு மிவ்வேறும்-எ-து-இங்ஙனம் வெவ்வேறாகவே யுணர்தலா னவ்வாறுணரும் புருடனிவ்வந்தக்கரணங்களின் வேறும் - போதுபோல்-எ-து-ஞாயிறு முதலிய வற்றோடுகூடி நின்று நாழிகை நாள் பக்கந்திங்கள் யாண்டுமுதலியன வாய்ப்படும் பாகுபாடு செய்யுங்காலதத்துவ மஞ்ஞாயிறு முதலியவற்றின்வேறாயினாற்போ லென்றவாறு.

அய்தலின்றி நிச்சயித்தல் பொருட்டு. துணிதல்-எ-து - அறிதலெல்லாம் பொருள் மாத்திரையாய் நின்றது. தான்-அசை. ஏகாரந் தேற்றம். இவ் அவ் என்பது - வகரவீற் றஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர். வேறும் போதுபோலெனவே யாண்டு நீக்கப்பொருள் ஞாயிறுமுதலியன வென்பதுதானே விளங்குமென்பது நோக்கி யவ்வெனச் சுட்டியொழிந்தார். சாரியையு முருபுமுடன் றொக்கன. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஆங்கும் வெவ்வேறுதானே துணிந்தெனவே மானதக்காட்சியு மின்னன நால்வேறுவகைத்தா யொன்றற்கொன்று முறைமே யேதுவும் பயனுமாய்க் கடற்றிரைபோலப் பரம்பரையிற் றோன்றுமென்றவா றாயிற்று. செய்யுளாகலின் முறைபிறழவைத்தார்.

வெண்பா.

அகாரவுகார மகங்காரம் புத்தி ... ...
மகாரமனஞ் சித்தம் விந்துப்-பகாதிவற்றை ...
நாதமுளம் வடிவா நாடிற்பிரணவமாம்... ... ...
போதக்கடற்றிரையே போன்று. ... ... (௬)

அகார - போன்று-எ-து-உ-ம்-எ-னின், அம் மானதக் காட்சியிலிரண்டு சவிகற்ப வுணர்விற் கேதுவாய வற்றையுடனின்று செலுத்துமக்கரங்களிவை யென்பதூஉ மவ்வாற்ற ளுணர்வுமாறி மாறித்தோன்றுமாறு முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) வெ டை.

"மன்னுமகார மனஞ்செலுத்தும் புத்தியினை-யுன்னுமுகாரமுபகரிக்கு-முன்னாகு - மாங்காரந்தன்னை யகாரஞ்செலுத்தியிடு-நீங்காத சித்தம் விந்துநேர்" என்பவாகலால், ஈண்டோதியமுறையே முறையெனவும், "அவ்வுட னுவ்வுமவ்வு மனம்புத்தி யாங்காரங்கள்" என்றதே முறையெனவுங் கொண்டதற்கிபையக்கொண்டு கூட்டியுரைப்பாருமுளர். பகாதிவற்றை நாடிற் பிரணவமாமெனவும் போன்றுமெனவுங்கூட்டுக. அந்தக்கரணங்களைச் செலுத்து மக்கரங்களைக் கூறுவாரொப்புமைபற்றிப் புருடனைச்செலுத்து மக்கரமுமுடன்கூறினார். உடனின்றுசெலுத்துதல்பற்றிப் பேதமாகவைத் தோதப்பட்டன. நிகழ்ந்திடும்வார்க்கு நான்குயிர்த்தாதிகலைப்பற்றி யகாரமுதலிய பஞ்சக

லைவடிவாய் நின்றிவற்றை வேறுவேறுசெலுத்துதல்பற்றிக் கணந்தோறு நினைப்புமறப்புமாகிய சகலகேவலங்க ளிதிருட்டமாய்க் கறங்கோலைபோலமாறிமாறிநிகழுமெனவு மச்சகலகேவலத்தின்கட் கணந்தோறு மங்ஙனமுணர்வுதித்து மொடுங்கியும்வருதல் சமுத்திரத்தின்கட்புதிது புதிதாய்த் திரைதோன்றியு மொடுங்கியும் வருமாறுபோலுமெனவு முணர்க. கடற்றிரையுவமை மேற்பரம்பரையாயுணர்வுவருதற்கெடுத்துக் காட்டினார். ஈண்டைப்புதிதுபுதிதாய் வருதற்கெடுத்து க்காட்டினார். ஆகலாற் புனருத்தியின்மை யுணர்க.

வெண்பா.

எண்ணிலவோங்காரத்தீசர்சதாசிவமா ... ...
நண்ணியவிந்துவொடுநாதத்துக்-கண்ணிற் ...
பகரயன்மாலோடுபரமனறிதெய்வ ... ...
மகரவுகரம்மகாரத்தாம். ... ... (௬)

எண்ணில-ஆம்-எ-து-உ-ம்-எ-னின், அவ்வக்கரங்களுஞ் சடமாதலி னவற்றையதிட்டிக்கு மதிதெய்வங்க ளிவையென்ப துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) எண்ணிலவோங்காரத்து நண்ணியவிந்துவொடு நாதமதிதெய்வங்கண்ணில் ஈசரொடுகூடிய சதாசிவமாம், அகர வுகர மகரத்ததி தெய்வங்கண்ணிற் பகரயன்மாலோடு பரமனுமென்றவாறு.

எண்ணிலவோங்காரம் - எண்ணத்தின் கணிலவிய வோங்காரமென வினைத்தொகை. எண்ணம்-ஈண்டுமானதக்காட்சி. ஒடு-எண்ணின்கண்வந்தது. ஈண்டயன்மால் பரமனென்றது - சுத்தவித்தையின்வைகுவாரை. பரமன்-உருத்திரன். அகரவுகரம்மகரத்தா மென்புழிமகரமிசைப்பொருட்டா யொற்றில்வழி யொற்றாய்வந்தது.

இரண்டாமதிகரணம்.

இனிச் சகசமலத்தினு ணர்வின்றென்றது - எ - து - மே-வ்-எ-னின். ஆன்மா வந்தக்கரணங்களி னொன்றன்றாயி னவற்றொடு சந்

நித்த நிற்றற்பொருளென்னையெனவவர் கூறுங்கடாவை யாசங்கித் தாம் முதலிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோ டுரைக்கின்றது

(இ-ள்) வெ-டை.

ஆணவமலங்களி னிக்குதற்குச் சகசமலமென விசேடிக்கப் பட்டது. படவே யுயிர்முதல்வனைப்போல வந்தக்கரண முதலியவற் றின் வேறாய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற் களிம்புபோல வே யநாதியேயின்றி மூலமலந் தன்மேற்றொடுடனாய் நிற்றலிற் றன்னியல்பா னுணர்வுமாயின்றிக் கருவிகளோடுகூடியின் றுணர்வதாயிற்றென விடுத்த வாறாயிற்று. இதனானே மலத்துளதாமென மேற் பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்திற் கிண்டிலக்கணங் கூறினாரென்பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய சேவலத்தி னிகழுமியல் பே மலத்திற்குத் தன்னியல்பு; கருவிகளோடுகூடியவத்தை யுறுவதா கிய விபரீதவுணர்வைச் செய்யுஞ்சகலத்தி னிகழு மியல்பே பொது வியல்பாகலான் மலத்திற் கிருவகை யிலக்கணமு மீண்டே பெறப் பட்டன.

அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்- எ-து-எது-எ-னின், சகசமலத்தினு லுணர்வின்றி யொழியிற் பின்கரு விகளோடு கூடிய வழியறிவுண்டாமாறி யாங்ஙன மெனச் சற்காரிய வாதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித் தனு தலிற்று.

(இ-ள்) அச்சகச மலமாவது ஞானத்திற்குத் திரோதகமா யதனை யில்லையென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலானினி யிவ்வா ன்மாச் சகசமலத்தா லுணர்வின்றெனமேற்கொண்ட தென்றவாறு.

மலத்தின திலக்கணம் வடமொழி வழக்குப் பற்றிக் கூறுவார் ஞானதிரோதகமாயெனவும், அதனைத் தமிழ்மொழியின் விளக்குவார் மறைத்துக்கொடு நிற்றலானெனவுங் கூறினார்; ஆகலானது கூறியது கூறலன்மையுணர்க. திரோதகமென்னும் வடமொழி மறைத்தலைச்செ ய்வ தென்னும் பொருட்டாய் வினை முதன்மேனின்ற வினைப்பெயர்.

இதனானே ஞானபாவமே யஞ்ஞான மென்பார் மதமு மறுக்கப்பட்டது ; அபாவ மொருகாரியத்தைச் செய்ய மாட்டாமையின்.

வெண்பா.

மாயாதநுவிளக்காய் மற்றுள்ளங்காணாதே ... ...
லாயாதாமொன்றை யதுவதுவாய்-வியாத... ...
வன்னிதனைத்தன்னுண் மறைத்தொன்றுங்காட்டம்போற்
றன்னைமல மன்றணைத முன். ... ... (க)

மாயா - தான்-எ-து-உ-ம்-எ-னின், ஆகந்து கமலமே ஞானநிரோதகமா தலமையும் வேறோர் மலமுண்டென்றன் மிகைபோலுமென வைக்க வாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து, ஆகந்து கமலத்தானுஞ் சகசமலத்தானுஞ் செயப்படுங் காரியங்கட்குத் தம்முள் வேற்றுமைபெரிதா மாறுணர்த்து முகத்தானேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) உள்ளமாயாதநுவிளக்காய்க் காணாதேலொன்றை யாயாதாம்-எ-து-உயிர் ஆகந்துகமலமெனப்படு மாயாகாரியமாகிய வுடம்புதனக்குக் காட்டாகக்கொண்டு காணாதாயின் ஒருவிடயத்தையு மறிவதில்லையாம் - மலந்தன்னையன்றணைதமுன்-எ-து-சகசமலமுயிரை யநாதியேபற்றிநிற்றல்-அதுவதுவாய்வியாதவன்னிதனைத்தன்னுண்மறைத்தொன்றுங்காட்டம்போல்-எ-து-காட்டமுதலிய வற்றுளது வதுவேயாய்நின்றுந் தனக்குக் கேடில்லாதவன்னி தனக்குண் மறைத்துவைத்ததொன்றேயாய் நிற்குங் காட்டம்போலுமென்றவாறு.

எனவே காட்டாகநின்று விடயங்களையறியும்வண்ண முயிர்க்கறிவை விளக்குதன் மாயையின்செய்தி, அவ்வறிவைத் தடைசெய்து கொண்டு நிற்றன்மலத்தின்செய்தி, இவ்விரண்டு மிங்ஙன மொளியுமிருளும்போ லிகலிநிற்பனவாகலான் அத்தன்மைத்தாய மாயை யத்தன்மைத்தாய மலமாதல் யாண்டையதென மறுத்தவாறாயிற்று. மற்றென்பது-மலமன்றணைத லென்பதனோடியைந்து வினைமாற்றின்கண் வந்தது. முற்றும்மை-சிறப்பும்மைக டொக்கன. ஆறுந்தானுங் கட்டுரைக்கண்வந்தவசை. வன்னியது வதுவாதல்- காட்டத்தின் மறைந்துழிக் காட்டமேயாயுஞ் சூரியகாந்தத்துண் மறைந்துழி யதுவேயாயுமிவ்வாறே யவ்வவற்றின் மறைந்துழித்தானென்ப தொன்றில்லை யெ

ன்றும்படிநிற்றல்; அங்ஙனமாயினும் வியாமை - கடைதன்முதலிய தொழிற்பாடு நிகழ்ந்த வழித்தோன்றுதலாற் பெற்றாம். தன்னுண் மறைத்தல் வன்மியெய்ப தொன்றில்லையென்னும்படி பொதிந்து கொண்டு தானேயாதல். ஒன்றாங்காட்டம்-ஒன்றேபோ லத்துவிதமாங் காட்டமென்றவாறு. இவ்வா றுவமைக்கோதியவடையுந் தொழிலு மியையும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க. மாயை - கன்மங்கள் போலாதியன்றெனக் காலத்தானும் வேற்றுமைகூறுவா ரன்றனைத லென்றார். இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது- ஞானாபாவமென் பாரும், பிராக்கிஞானமென்பாரும், தமோகுணமென்பாரும், பஞ்சக் கிலேசத்து ளொன்றாகிய வவிச்சையென்பாரும், மாயை - கன்மங்க ளென்பாரும், சிவசத்தியென்பாரும், உயிர்க்குணமென்பாருமாய், அவ்வவசமயத்தாற்பற்றி மயங்குவாருமுளர். அம்மலத்திற்குப் பற்றுக் கோடாகிய சூனிய முதலியவற்றின் வேறெனப்பட்ட வான்மாவு மியற்கையாற் சடமென்பாரும், அறிவு மாத்திரையேயென்ற குணிப்பொருளன்றென்பாரும், சுதந்திரவறிவுடைத்தென்பாரும், அவ்வுடம்பளவிற்றென்பாரும், அணுவளவிற்றென்பாரும், உருவென்பாரும், அருவென்பாரும், உருவருவென்பாருமா யின்னும் பலதிறப்படக்கூறி மயங்குவாருமுளர். அவையெல்லாம் பொருந்தாமை யாகமங்களுட்காண்க. ஈண்டுரைப்பிற்பெருகும். இந்தச் சகசமலம்- ஞானகிரோதகமாய், திரவியமாய் அறியாமைக்குணத்ததாய், செம்பிற் களிம்புபோல வுயிரின்குற்றமாய், அநாதிபந்தமாய், சடமுமாய், பலவுமாயி னழிவெய்துமாகலின், அநாதிபந்தமாதல் பெறப்படாமையாய், ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென் றுயிர்ப்பாகு பாட்டிற் கேதுவாய், உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைந்து நின்று தத்தங்கால வெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபல வுடைத்தாய், உயிர்கள் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகவுயிரணுத் தன்மைப்படுமாறு செய்தலி னாணவமென்னும் பெயர்த்தாய், பசுத்துவம்- பசுநீகாரம்- விருத்தி-மூர்ச்சை- மலம்-அஞ்சனம்-அவித்தை-ஆவிருதியென்றற் றொடக்கத்துக் காரணக்குறிகளு முடைத்தாய் நிற்பதெனவும், படலம் படர்ந்தகண்-ஞாயிற்றின் சந்நிதியி னிற்பினும் படலத்தா னவ்வொளியை யிழந்திருளி னழுந்துமாறுபோல முதல்வன்சந்நிதியி னிற்பினுஞ் சோபானமுறையி னறிவிக்க வறியுந்தன்மைத்தா யுயிரநாதியே யறிவி

த்தா லறியமாட்டாமையி னவ்வறிவை யிழந்தறியாமையா யழுந்துத லினஃதவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவுமுணர்க. அநாதியேமலத்தி னீங்குதல் முதல்வன் வினையா யநாதிமுத்தத் தன்மையென வெண்குணங்களுள்வைத் தெண்ணப்படுவது சிவாகமங்களுக்கெல்லா மொப்பமுடிந்தாற்போல, அநாதியேமலத்தைப்பற்றுத லுயிரின்வினையா யுயிர்க்குற்றங்களுள்வைத் தெண்ணப்படுவதென்பதூஉ மவற்றிற்கெல்லா மொப்பமுடிந்தது. ஈண்டுப்படுங் கடாவிடைகளெல்லா மீரிடத்துமொக்கும்.

மூன்றுமதிகரணம்.

இனியிவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந்துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தைகளும் நிற்குமென்றது. எ-து-மே-ள்-எனின், இருளகப்பட்ட கண்விளக்கோடுகூடியவழிவிடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வேறவத்தைப் படுமாறில்லை; அதுபோலமலத்தகப்பட்ட வுயிர்கருவிகளோடு சந்தித்தவழி யொருதன்மைத்தா யறிதலேயமைவுடைத்து; அவ்வாறன்றி மேலைச் சூத்திரத்தோதிய முறையானைம்புலனறிந்தும், ஒடுக்கமறிந்தும், உண்டியும் வினையுமின்றிக் கிடந்தும், உணர்ந்தவுணர்ந்தும், இங்ஙனம் வெவ்வேறவத்தைப் படுமாறியாங்ஙனமென வவர்கூறுங்கடாவை யாசங்கித்து, சூத்திரத்தினிறுதிக் கூற்றைக்கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

அவத்தையெனப்படுவன பலவுளவாகலினவற்று ளீண்டைக்கவத்தையெனப்பட்டவை யாவையென்னுமைய நீக்குதற்குக் கிளந்தெடுத்துரைத்தார். அவத்திதனென்னும் வடமொழியை ஆடேவறி சொல்லாற் கூறியதம்மதம்பற்றி. அமைச்சரசேய்ப் பதிற்றலா னென்பதூஉமீண்டும் வருவித்துரைத்துக்கொள்க; கொள்ளவே, படைநொடுபவனிபோதும் வேந்தன்கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டந்தப்புரத்திற்செல்லுமாறுபோல, ஆன்மாவங்ஙனமைந்தவத்தைப் படுதலமைவுடைத்தென விடுத்தவாறாயிற்று.

அதுதான் மலசொரூபத்தின் மறைந்தரூப சொரூபியாய் நிற்றலான்-எ-து-ஏது-எ-னின், அரசன்போலுயிரங்ஙன மைந்தவத்தைப்

யடுமாயின், வியாபகத்திற் றிருக்காய் முடியும்போது மென்னுங்கடா வையுபாசங்கித்து, மேற்கோளோச்சாதித்த லுதலிற்று.

(இ-ள்) அவ்வுயிர்தான் மலவாடியின் மறைப்புண்டவழியருவுடம் பாகிய தத்துவசொரூபியாய்நிற்றலான், அத்தத்துவங்கடொழிற்படுமவத்தை வேறுபாடுபற்றிமேனி யிவ்வான்மாச்சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்திதுரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தைகளுய் நிற்குமென மேற்கொண்டதென்றவாறு.

" சிவஞ்ஞேயமாயவத்தைபி லிழிந்து திரும்புதல் குற்றமான் கருவி சேருதல் பிரிதலில்லையா முறையிற் செயப்படுங்கருவியே தெரியுந் தாவிலாவழி யுதங்கினவிடமே தருமுயிர்க்கிருப்பிடம் " என்றதுவுமிப்பொருள் பற்றியென்க. தத்துவமன்னரூபனுதல் வீடுபெறும்பொழுதுமுண்டுபோலு மென்னுஞ்சங்கை நிகழாமைப்பொருட்டு மலசொரூபத்தின்மறைந்தென மேற்கூறிப்போந்ததனை வழிமொழிந்துகொண்டரூபசொரூபியாய் நிற்றலானென்றேதுக் கூறினார். மறைந்தவழியென்பது மறைந்தெனத்திரிந்துநின்றது.

வெண்பா.

ஒன்றணையாமூலத்துயிரணையுநாபியினிற் ௧
சென்றணையுஞ்சித்தமிதயத்து-மன்றவே ௨
யையைந்தானன்னுதலேற்கண்டத்துவாக்காதி ௩
மெய்யாதிவிட்டகன்றுவேறு. ... ...(௬)

ஒன்றணை-வேறு - எ-து-உ-ம்- எ-னின், தத்துவங்கடொழிற்படுதற்கண்ணிகழுமவத்தை வேறுபாடுதெரித்துணர்த்தி யஃதேதுவாதலை வலியுறுத்துதலுதலிற்று.

நன்னுதலேல் வாக்காதிமெய்யாதிமன்றவேயையைந்தாங்கண்டத்தின்வாக்காதி மெய்யாதிவிட்டகன்று வேறையையைந்தாம்இதயத்திற் சித்தஞ் சென்றணையும் நாபியிலுயிரணையும் அணையாமூலத் தொன்றெனவினையயும்.

(இ-ள்) சாக்கிரத்தானமெனப்படு மிலாடத்திற்புறவிந்திரியம் பத்தினையுந் தேற்றமாகப்பொருந்திய விருபத்தைந்து கருவிதொழிற்படும், சொப்பனத்தானமெனப்படுங் கண்டத்தி லப்பத்தினையும் விட்டுநீங்கி வேறுயவிருபத்தைந்து கருவிதொழிற்படும், சுழுத்தித்தான

மெனப்படு மிதயத்தினவற்று ளிருபத்திரண்டு கருவிகளை விட்டுநீங்கி
முன்னர்க்கூறப்படுமிரண்டு கருவிகளோடுகூடிய சித்தந்தொழிற்படும்,
துரியத்தானமெனப்படு முந்தியிற்சித்தத்தையும் விட்டுநீங்கி முன்னர்
க்கூறப்படும் புருடதத்துவத்தோடு பிராணவாயுக்கூடித்தொழிற்படும்.
இக்கருவிகளொன்று மின்றாயதவழித் தானமெனப்படு மூலாதாரத்
திற் புருடனொன்றே நிலைபெறுமென்றவாறு.

எனவே யிலாடத்தான முதலியவைந்திடத்துநிற்குங் கருவிகள் மு
றையே முப்பத்தைந்து மிருபத்தைந்து மூன்றுமிரண்டு மொன்று
மென்பது போந்தவாறுணர்க. மன்றவென்பது தேற்றப்பொருட்டா
கிய விடைச்சொல். ஏய்தல்-பொருந்தல். வாக்காதி மெய்யாதியை
யென விரண்டாவது விரித்துரைக்க. அஃதிடத்துஞ் சென்றியை
யும். வருகின்றசூத்திரத்தில், மெய். வாய்-கண்-மூக்கு- எனச்செய்யுட்
கேற்ப, மெய்யை முற்கூறுதலின், அம்முறைபற்றி யீண்டுச் செவி
யாதியென்னாது மெய்யாதியென்றார். அவற்றொடுகூடிய விருபத்தைந்
தாவன - அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி
பத்து மவற்றினுக்குட் கருவியாகிய வந்தக் கரணங்க ணான்கு மவற்றொ
டுகூடிய் வத்தை யுறுவதாகிய புருடனொன்று மஃதவத்தை யுறுதற்கு
ரிய மதுகைக் கேதுவாய கங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவா
யுக்கள் பத்துமெனவிவை. ஈண்டுச்சத்தாதி யென்றது வசனாதிபோ
லும் விடயங்களை யெனக்கொள்க.

எனவே பூதங்களின் கூறாயவற்றுடனின்று, தேராழிக்குத் தே
ருறுப்புப்போல விந்திரியங்களின் றொழிற்பாட்டுக்கு மதுகையைவி
ளைத்து நிற்பனவாய புறக்கருவி யறுபதில்,ஈண்டுக்கூறிப் போந்தவிட
யங்கள் பத்தும் வாயுக்கள் பத்து மொழித்தொழிந்த புறக்கருவிகணா
ற்பதும், அவற்றையுடைய பூதங்களைந்தும் அவற்றிற்கு வழியாயுட
னிற்பனவாய சூக்குமபூத மெனப்படுந் தன்மாத்திரைக ளைந்துமென்
னு மைம்பதுகருவிகளுங் கீழ்நோக்கிய சாக்கிரந்தானத்திற் றமது சத்
திமடங்கி வினைக்கீடாகத் தொழிற்படா தொழியுமெனவும், அவை
யொழிந்தவழி யவத்தைக்கேதுவாய் நின்ற வேனைப்பொறி முதலிய
முப்பத்துநான்கு மவற்றொடுகூடிய புருடதத்துவமு மிருவகைப்பூ
தங்களானும் புறகருவிகளானுந் தரப்படு மதுகையின் மையினுண்டு
ப்பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங்கொள்க. கலா
திகளுஞ் சுத்தத்துவமு மவத்தைக் கேதுவாகாமை யானுட னொன்

யுரைப்பினோர். இவ்வியல்பும் விரிந்த நூல்களுட் கூறியவாறு பற்றியுண ர்ந்து கொள்க.

வெண்பா.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்தியவுள்ள ...
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து-மிலாடத்தே...
யவ்வவ்விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே ..
யவ்வவற்றி னீங்கலது வாங்கு. ... ... (எ)

இலாட - ஙக்கு-எ-து-உ-ம்-எ-னின், அங்ஙன மதீதத்தை யெ ய்திய புருடன்மீளப் பிரேரக வவத்தையாகிய வுணர்த்து முறைமைச் சாக்கிரத்தைத் தலைப்படு மாறுணு வாதமுகத்தான் விளக்கி யவ்விடத்தி னு முறையிற் செலுத்தும் பிரேரக கருவிகளோடின் றெழிற்பாடு பற் றி யைந்தவத்தை நிகழுமென்பதூஉம், அவையிவை யென்பதூஉம், சுத்தாவத்தையு மிவைபோ லுண்டென்பதூஉங் கூறியதனை வலியுறு த்துதலுதலிற்று.

(இ-ள்.) இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளம் - எ-து- இலாடத்தானத்தி னின்றி யாண்டாண்டவத்தைப் பட்டுக்கீழ்ப்போந்து மூலாதாரத்தி னெய்தியபின் மறித்து மவ்வாறே யாண்டாண் டவத்தை ப்பட்டு மேற்சென்றி லாடத்தானத்தி னுணர்த்து முறைமைச் சாக்கிர த்தைத் தலைப்பட்டபுருடன் - இலாடத்தே யைந்தவத்தை யெய்தும் எ-து-ஆண்டுஞ் சாக்கிர சாக்கிர முதலியவைந்தவத்தை யுறும்- இலா டத்தே யவ்வவ்விந்திரியத் தத்துறைகள்கண்டு-எ-து-அவையாவன-அ வ்விலாடத்தின் கண்ணேயுந்த வவ்வப்பொறிகளா னவ்வவ் விடயங்க ளை யுணர்ந்து-அதுவே-எ - து - அப்போ தப்போதே-அவ்வவற்றினீ ங்கல்-எ-து-அவ்வவ் விடயங்களி னீங்குதலாம் - அதுவாங்கு-எ-து- இனி முன்னர்க் கூறப்படுஞ் சுத்தாவத்தையுமிவைபோல வைவகைப் படு மென்றவாறு.

மேற்செல்வுழி யாண்டாண்டுப்படு மவத்தைகளுங் கீழ்ச்செல் வழிபோலன்றி விசேடமின்மையான் வகுத்தோதாது, இலாடத்தே சாக்கிரத்தையெய்திய வுள்ளமென வநுவாதமுகத்தாற் கூறியொழிந் தார். இழியுங்காலு மேறுங்காலுங் கண்டத்தானத்திற் கனுக்காண் டலுண்டென்பது,முறையே; ஞானமிர்தத்திலும் போற்றிப் பஃறொ

டையினுங்காண்க. அவ்வவ்விந்திரியம்-ஆண்டாண்டு விடயித்தற்குரிய
விந்திரியம். அவ்வவ்விடயம்- ஆண்டாண்டுப் புலனுதற்குரியவிடயம்.
கண்டுநீங்கலென வினையையும். அது-அவ்வக்காலம்; மீண்டுமெடுகெக் கூறி
க்கொள்க. கண்ணுருபுதொகுத் தேகாரம் விரித்தார் கண்டதென
வொருமொழியாகவைத்துரைப்பாருமுளர். குற்றியலுகரத்தின் முன்
னுடம்படு மெய்பெறுதற் கோத்திலாமையானும், பொருட்சிறப்பின்
மையானும், அஃதுரை யன்மையறிக. அப்போதப்போதே நீங்கலாவ
து விடயங்களைக் கண்டகண்டபொழுதே யவற்றை யயர்த்துவிடுதல்.
"ஒன்றன்பாலும் வருபயன் மாறிமாறிவந்திடும்" என வழிநூலாசிரிய
ர்கூறியதூஉ மிவ்வியல்பு நோக்கியென்க. "காணுந்தன்னிற் செயறே
றுங்கண்டுகொண்ணி" "உந்தியிங்காணுந்தன்னிற் செயறேறமுணர்ந்
துகொள்ளே" என்பனவுமது, இந்நுட்பமுணர்ந்துகோடற்குத் தூலா
ருந்ததிநியாயம்பற்றிக் கைப்பொருளேய்முக்கித் தெளிதன்முதலிய
தூலத்துள்வைத்துக்காட்டுப. இனியருபசொரூபியாய் நிற்புழிப்படு
மைந்தவத்தையி னியல்புகூறுதற் கெடுத்துக்கொண்ட விவ்வதிகரண
த்தி னதனோடியைபில்லாத சுத்தத்தின்கட்படு மைந்தவத்தைகூறுதற்
கோ ரியையில்லையாயினும், அவத்தையெனப்படுவன வீண்டோதியன
மாத்திரையே போலுமென மயங்காமைப்பொருட்டு. வேறுமைந்தவ
த்தையுள வவைமுன்னர்க் கூறப்படுமென்னுந் துணைபேகூறுவார் அ
துவாங்கென்றொழிந்தார். இக்கருத்தேபற்றி, "பிறிவிலாஞானத்தோ
ரும் பிறப்பறவருளானுக்கே - குறியொடுமஞ்சவத்தை கூடுவர்வீடு
கூட" என்றொழிந்தார் வழிநூலாசிரியரும். இவ்விரண்டு வெண்பா
க்களானுங் கூறிப்போந்த மூந்நிறத் தைந்தவத்தைகட்கு முறையே
மூலமலமாய கேவலஞ்சகலஞ் சுத்தமென்ற மூன்றனுள் வைத்துத்
தன்னுண்மை யெனப்படுங் கேவலத்தினியல்பு-சகசமலத்துணராதெ
ன்பதனானேபெற்றும். ஏனைச்சகசத்தினியல்பு வருகின்ற சூத்திரத்தி
னுஞ் சுத்தத்தினியல்பு அப் பாலைச்சூத்திரத்தினும் பெறுதும். நான்
காஞ்சூத்திரமுடிந்தது.

ஐந்தாஞ்சூத்திரம்.

விளம்பியவுள்ளத்து மெய்வாய்கண்மூக் ... ...
களந்தறிந்தறியா வாங்கவைபோலத் ... ...

காட்டுணர்வின் றாமருள் ௧
காந்தங்கண்ட பசாசத்தலைவியே ௨

எ-னின், இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதனுதலிற்று.

எ-மு-க-ளோ-எ-னின், ஒருங்கவத்தைப்படும் வழிக்கருவியுமுயிரு மனமேக மாகமெய்ப்பதிற்பி னவையேயமையுமாகலான் முதல்வனு லாலன்டைக் காட்சிபால லொருபயனில்லைபோலு மென்னுங்கடாவை யாசங்கித்து, அங்ஙனம் இன்றியமையாது வேண்டப்படுவதாய முதல்வ னுடைய வுதவியை யறிவிக்குமுகத்தானே யீண்டாஞ்சூத்திரத்தி னேறிய தலைக்காரண முதற்காரணக்க ளதிலக்கணமுணர்த்துதலின் வருநாஞ்சூத்திரத்தின் கருத்தென்றவாறு.

இதனுனே சூத்திரவியைபு மினிதுவிளங்கும். மாயை-கன்மங் கள் திரோதான சத்திக்குக் கருவியா யதனுளடங்குதலிற் றமது முத லுபகாரமெனப்படுந் திரோதானசத்திய திலக்கணமுங்கூறவே யவற்ற திலக்கணமுங் கூறியவாறாதலறிக.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு - மேலைச்சூத்திரங்களினங் ஙனங் கூறிப்போந்த வுயிரானே, மெய் வாய் கண் மூக்குச் செவி யெ ன்பன தத்தம் விடயங்களை யறிந்தின்னவென் றளவிட்டறிந்து மக்க ளாமறிகின்ற தம்மையுந் தம்மை யதிட்டித்து நின்று செலுத்து மிவ் வுயிரையு மறியமாட்டா; அவ்விந்திரியங்கள்போ லுயிர்களுந் தமதறி விற்கு விளக்கமாகிய முதல்வனது சிற்சத்தியான்மேற் கூறிப்போந் த விருவகை யவத்தையி னின்று வினைப்பயன்களையறிந்தனுபவி க்குந் தம்மையுந் தம்மைச்செலுத்துந் திருவருளையு மறியமாட்டா; உயிர்க ளவ்வாறுணர்தல் காந்தத்தைக்கண்டவிரும்பு அதன்சந்நிதி மா த்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் காரணத்தானன்றிச் சங்கற்பத்தான திட்டிக்கு முதல்வன் சந்நிதி மாத்திரையினாமாகலான துபற்றி முதல்வன் விகாரியாதலின் றென்றவாறு.

ஆகலானது பற்றி முதல்வன் விகாரியாதலின் றென்பது குறிப் பெச்சம். ஐம்பொறிகளைக் கூறியது புலக்கண மாதலிலேயே கருவி களு மவ்வாறாதல் கொள்ளப்படும்; அற்றாகலினன்றே, " பொறிபுல ன் கரணமெல்லாம் புருடனுலகித்து ,, என்றார் வழிநூலாசிரியரும்.

விடயங்களையறியுமி முதல்வனுடனின்று செலுத்துவனுயின் விடயங்களையொப்ப முதல்வனையு மறிதல்வேண்டுமென்பாரை நோக்கி, அனைத்தறிந்தெனின்றுயிரா தறியாவென்ருர். ஆங்கவை- ஒருசொன்னீர்மைத்து-தம்முணர்வின்றமியவென்றது- தமது முதலென்னும் பொருள்படவந்த வாறும்வேற்றுமைத்தொகை - ஈண்டருளென்ற தேற்புடைக்கோடலாற் றிரோதானசத்தியின் மேனின்றது. அருளாலெனவிரித்து, அனைத்தறிந்தறியாவென வுவமைக்கோதிய வினையைப்பொருளினுங் கூட்டியுரைக்க. இதனுள் "விளம்பியவுள்ளத்து மெய்வாய் கண்மூக்களந் தறிந்தறியா" என்றதோ ரதிகரணம்; "ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின் றமியருள்காந்தங்கண்ட பசாசத்தவையே" என்றதோ ரதிகரணம்; ஆகவிரண்டதிகரணத்த திச்சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டையுணர்வுக ளான்மாவா லுணருமென்றது-எ-து-மே-ன்-எ-னின், தாமரையினீர்போற்புருடன் பற்றற்றுநிற்பப் புருடன் சந்நிதியிற்புத்திதத்துவமேயைம்பொறிவழியான்விடயங்களை யறியுமெனவமையும், அவ்வாறன்றிக் கருவிகளோடுகூடிய புருடனே யவத்தைப்படுமென மேற்கூறியதமையு மாறென்னையெனச்சாங்கியநூலார்மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து, சூத்திரத்தின் முற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெளிடை.

உணர்விற்கேதுவாகிய பொறிகளை யுணர்வென் றுபசரித்தார்.

அவற்றினுலான்மாவொற்றித்துக்காணினல்லதவையொன்றையு மறி யாவாகலான்-எ-து-எது - எ - னின், அதற்குப் பிரமாண மென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச்சாதித் தனுதலிற்று.

(இ - ள்.) அவ்வைம்பொறிகளோடு கூடி யொற்றுமைப்பட்டுநின் றறிந்தாலன்றி யவையொரு விடயத்தையும் விடயிக்கமாட்டா தாகலா னீண்டை யுணர்வுக ளான்மாவா லுணருமென மேற்கொண்ட தென்றவாறு.

ஆங் உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது. உம்மையிழிவுசிறப்பு; முற்றுமாம். எதிர்மறை முகத்தாற் கூறினுரின்றி யமையாமை விளக்குதற்கு.

வெண்பா.

ஐம்பொறியை யாண்டங் கரசாயுளனிற்ப ... ...
வைம்பொறிகளுள்ள மறியாவா-மைம்பொறியிற்
காணுதேற்காணுது காணுமுளங் காணுதேற்... ...
காணுகண்கேளா செவி. ... ...(க)

ஐம்பொறி-செவி-எ-து-உ-ம்-எ-னின், உயிரங்ஙன மொற்றுமைப்பட்டு நின்று செலுத்துதலு மவையுயிரையின்றி யமையாமையு மெற்றாற் பெறுது மென்பாரை நோக்கி யேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) அரசாய்-எ-து-அரசனத்தாணி மண்டபத்தின் வைகித்தன்கீழ்க்கருமஞ் செய்வாரை யவ்வவர்க்குரிய காரியங்களிற் செலுத்தியாளுமாறுபோல - உளமைம்பொறியை யாண்டங்கு நிற்ப-எ-து-உயிரைம்பொறிகளை யவ்வவற்றிற்குரிய விடயங்களிற் செலுத்தி யாண்டிலாடத் தானத்தினிற்றலான்- ஐம்பொறிகளுள்ள மறியாவாம்-எ-து-அரசனுலேவப்பட்டோரேவிய கருமமாத்திரையினன்றி யதிகத்திற்செல்லமாட்டாமைபோல வவ்வைம்பொறிகளுயிரையறியமாட்டாவாயின - அற்றேலைம்பொறிகளுயிரானன்றியறிதலமையாவாயினுமுயிரைம்பொறிகளா னன்றியு மறிதலமையும்போலுமெனின்; ஐம்பொறியிற் காணுதேற் காணுதுகாணுமுளங் காணுதேற்காணுகண் கேளாசெவி-எ - து - ஒருகருமஞ்செய்தற் கண்ணரசரு மமைச்சர் முதலாயினருந் தம்மு ளின்றியமையாதவாறுபோல வொன்றனவிடயித் தற்கணுயிருமைம்பொறிகளுந் தம்மு ளின்றியமையா வென்றவாறு.

அன்னவருதல்-உயி ரைம்பொறியினீங்கிச் சொப்பனத்தானத்தினெய்தியவழிக் கண்டுகொள்க. நிற்பவென்னுஞ் செயவெனெச்சம்-மழைபெய்யக் குளநிறைந்த தென்புழிப்போல, நிற்றலாலெனக் காரணப்பொருட்டாய் நின்றது. இவ்வாறுரையாக்கால் இஃதேதுவின் பொருள் வலியுறுப்பதாய வுதாரணமாதற் கேலாமையறிக.

இரண்டாமதிகரணம்.

இனி யிதுவுந் தமதுமுதலாலே யுணருமென்றது-எ-து-மே-ள்-எ-னின், கருவி சடமாகலிற் சித்தாகிய வுயிரானன்றி யமையாவாயி னுஞ்சித்தாகியவுயிர் முதல்வனதுபகாரத்தை யவாய்நிற்பதன்று; அவாவுமாயின், முதல்வனு மவ்வாறே பிறிதொன்றனுபகாரத்தை யவாவுமெனப்பட்டு, மேலும் வரம்பின்றியோடுமென விசுரவவிகா ரவாதிகண்முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்து, சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

தமது முதலென்பது- யானெம்மூர்புகுவன் நீ நும்மூர்புகுவை யென்புழிப்போல வேறு முடிபுகோடலிற் பால்வழுவன்மை யுணர்க. உம்மையிறந்ததுதழீஇய வெச்சம். இம்முறைமை தமக்கொரு முதலு டை யவற்றிற்கேயன்றி யேனைப்பொருட்கு வரம்பின்றியோடுமா றில் லையென்பார் தமது முதலென் றுடம்பொடு புணர்த்தோதினர். தம் முணர்வின் றமியென்றதுமது. தத்துவங்களு முயிருந் தமக்கொரு முதலுடையனவாதலு முதல்வனுக் கஃதின்மையு மேற்கூறிப்போந்த சூத்திரங்களாற் பெறப்பட்டன வென்பதுகருத்து.

இவ்வான்மாத்தன்னாலேயுணருமிந்திரியங்களைப்போலத்தானுந் தன்னையுணராது நிற்றலான் - எ-து-ஏது - எ-னின், உயிராம்பொ றியிற்சடமன்மையானவற்றையெடுத்துக்காட்டிமேற்கோடலீண்டைக் கமையாதென்பாரைநோக்கி யதனைச்சாதித்த னுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

சடமுஞ்சேதனமுமாய வேறுபாடுபெற்றுத் தம்முளொவ்வாவாயி னும், தம்மையுந்தமதுமுதலையுமறியமாட்டாமைக்கண், ஐம்பொறி யுமுயிருந்தம்முளொக்குமாகலின், அதுபற்றி யங்ஙன மேற்கோட லமையுமென்பது கருத்து.

வெண்பா.

மன்னுசிவன்சந்நிதியின் மற்றுலகஞ்சேட்டித்த
தென்னுமறையினியன்மறந்தாய் - சொன்னசிவன்
கண்ணாவுளம்விளையாற் கண்டறிந்துநிற்குங்கா
ணெண்ணான்சிவனசத்தையின்று. ... ... (உ)

மன்று-இன்று - எ-ரு-உ-ம்-எ-னின், தன்றானுணரும்இந்திரியங்களாயின்மைக்குவமைகூறி, அவ்விந்திரியங்கட்கு வரும்பயன் அவற்றின் றொற்றித்துக்காறு முயிர்க்காய வாறுபோல, உயிர்க்குவரு மின்பதுன்பப் பயனு முயிரானொற்றித்துக்காணு முதல்வனுக் காதல் வேண்டு மென்பானாநோக்கி, அங்ஙன மாகாமைகூறி, அதனை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்) மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ்சேட்டித்ததென்று மறைவிளியன்மறந்தாய்-எ-து- ஈண்டுக்கூறிய சருக்தளமையேயன்றி நிலைபெற்ற முதல்வனது சந்நிதியிற் பிரபஞ்சஞ் சொற்படுகின்றதென்றேதும் வேதப்பொருளாயு மயியாது பிணங்குகின்ற பேதாய்- உளஞ்சொன்ன சிவன் கன்றாவினையாற் கண்டவிந்து நிற்குங்காண்- எ-து-உயிராவது தமக்கென வோர்காரணமின்றித் தன்பொருட்டேயறிவனவாய வவ்விந்திரியங்கள்போலன்றி யவ்வேதத்துளெடுத்தோதப்படு முதல்வன் றனக்குக் காட்டாயிருப்பத் தான் செய்தவினைக்கீடாக ஒன்றனையறிந்துநிற்கு மவ்வேறுபா டறிவாயாக-இன்று சிவனசத்தையென்னுன்-எ-து-அங்ஙனங் காட்டாக நிற்பினுந் தனது சந்நிதியி னசத்தெல்லாஞ் சூனியமாகலான் மங்கலவடிவினனாய முதல்வனவ்வுயிர்போ லவற்றை யநுபவியா னென்றவாறு.

இதனுட் சிவனென்றது- மன்னுசிவனென்புழிப்பேரின்பத்துக்குக்காரணமென்னும் பொருட்டாய்த் தனதுசந்நிதிக்கணுலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய வியைபுணர்கின்றது; சொன்னசிவ னென்புழி முற்றுணர்வின னென்னும்பொருட்டாய்க் காட்டாதற்குரிய வியைபுணர்கின்றது; என்னுன்சிவ னென்புழித்தூய தன்மைய னென்னும் பொருட்டா யசத்தையென்னுமைக்குரிய வியைபுணர் கின்றதாகலாற் கூறியதுகூறலன்மையுணர்க. அஃதம்மூப்பொரு ளுடைத்தென்பது சோமசம்புபத்ததிவியாக்கியான முதலியவற்றுட்காண்க. சிவதத்துவ விவேகத்துள் மூவகைப்படுத்தோதிய பொருளுமிவையேயாமாறு கண்டுகொள்க. ஈண்டுலகமென்றதுயிர்கள் - மறைவிளியனும் பொருண்மறைவிளியலென் றுபசரித்தார். இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. மறந்தாயென்பது விளிபுருபேற்ற பெயர். ஈண்டுச்சந்நிதியென்றது- அதிகாரவாதிகள்கூறு மபிமுகமாத்திரையன்றென்பார் சொன்னசிவன் கன்றாவென்றார். சிவசத்தி யவ்

வக்காரியங்களி னுன்முசமாதலாகிய சங்கற்பமேயீண்டுச் சங்கிற்போ னப்படுமென்பதாம். காந்தக்கண்ட பசாசத்தவையே யென்றது-ஒரு புடையுவமையாதல்பற்றியே பிறிதன்றென்பது கருத்து. விளையின லென்றது-ஐம்பொறிபோலன்றி யுணர்தற்பயனுயிர்க்கே யாதற்கேதுக் காட்டியவாறு. கண்டறிதல்-ஒருபொருட்பன்மொழி. எவ்வாறின் டறுபவித்தன்மேற்று. இன்றென்பது- சாதியொருமை. அவனெறி னென்பது - அவாய்நிலையான்வந்தது. ஆகலாலென்பது- சொல்லெச் சம். இன்றுதல் "பாவையுஞ் சூனியஞ் சத்தெதிர்" என்புழிப் பெற ப்படும். இக்கருத்துப்பற்றி "மாயைமருவிடாக் சிவனவன்சதுறை தராவசேதனத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். "உன்றுதாத்தே கிடந்த விடமுறுவதெல்லா - முன்றுடையதென்னுய்ப் புற்றனையோ- மன்றுயிர்க-ளவ்வகைசயேகாணிக் கழிவறவுமாவதுவுஞ் - செவ்வகை யேநின்ற சிவன்பால்" என்றதூஉ மிவ்வியல்பு நோக்கி.

வெண்பா.

வெய்யோனொளியி னொடுங்கிவிளங்காது ...
வெய்யோனையாகாத மீன்போல-மெய்யவனிற் ...
கண்டுகேட்டுண் டுயிர்த்துற்றறியுமைம்புலனைக் ...
கண்டுடனாய் மன்னுதலைக் காண். ... ...(௩)

வெய்யோன் - காண்-எ-து-உ-ம்-எ-னின், உயிரங்ஙன மூணர்த் த வுணருங்கால் முதல்வனின் வேறு நின்றுணருமோ வொன்றாய் நின் றே யுணருமோ வென்பாரை நோக்கி, அவ்விரண்டியல்பு மின்றி நின் றுணருமாறுணர்த்தி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) வெய்யோ னொளியி னொடுங்கி-எ-து-ஞாயிற்றி னொளி யினடங்கி - விளங்காது-எ-து-அதனின் வேறாய் விளங்கித் தோன்று தலின்றி - வெய்யோனை யாகாத மீன்போல-எ-து-அதுவா யொழித லுமில்லாத நாண்மீன்கள் அஞ்ஞாயிற்றுனே யொளியுடையவா மாறு போல - மெய்யவனிற்கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புல னைக்கண்டு-எ-து-கண்டுங் கேட்டு முண்டு முயிர்த்துந் தீண்டியு மறிய ப்படு மைவகை விடயங்களையு முயிர் மெய்ப்பொருளாகிய முதல்வனு ணர்ந்து - உடனாய் மன்னுதலைக்காண்-எ-து-வேறாதலு மொன்று தலுமின்றி யிவ்விரண்டிற்கும் பொதுவாயடங்கி யுடனாய் நிலைபெறுத லை யறிவாயாக வென்றவாறு.

உலகமுடைய பொருளினும், பொருள்வினை யுலகமையினுஞ்செ ல்வினையையும்.. ஞ - ஏகானிலை. நான்கினுமதனியவற்றிலெனிலியல்லா ருமாயிற்றுறைய வொளியே யென்பது வேதநூற்றுணிபாகலா னஃதின் னைக் குறைமையாயிற்று. உயிரொன்று ளெறிவாய்மேலவெண்பாவினி னும் வருவித் துரைக்கப் பட்டது.

வெண்பா.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே ... ...*
யருளு மவனன்றி யில்லை-யருளின் ... ... *
றவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக் ... ...*
கிரவிபோ னிற்குமர னெய்ந்து. ... ... (ச)

அருளுண்டாம்-எய்ந்து-எ-து-உ-ம்-எ-னின், அம்மலமாயிறுமு யிர்சட்குப் பல்வேறு வகைப்பட வுணர்வு நிகழ்தலின் அஃதுணர்த்து தல் வேறுபாட்டானாய தெனல்வேண்டும், வேண்டவே, நிருவிகாரியெ ன்னுஞ் சுருதியோடு முரணி, முதல்வன் விகாரியாவான் செல்லு மென்பானை நோக்கி, விகாரியாகாமை யுணர்த்தி, அதனைவலியுறுத்து த லுதலிற்று.

(இ-ள்.) அருளுண்டா மீசற்கு-எ-து-உயிர்சட்குப் பசுத்துவத் தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற் கருளதாகிய விரக்க முதல்வ னுக் கநாதியே யுள்ளது - அது சத்தி-எ-து-அவ்விரக்கம் வேறுபொ ருளன்று முதல்வனுக் குளதாகிய சத்தியேயாம் - அருளு மவனன்றி யில்லையரு ளின்றவனன்றே யில்லை-எ-து-இரக்கமு மவனுங் குணமு ங் குணியுமாகலி னவ்வருளு முதல்வனையின்றி யமையாது முதல்வ னு மதனையின் றியமையானாய் - அருட்கண்ணார் கண்ணுக் கிரவிபோ லெய்ந்து நிற்கு மரன்-எ-து-ஞானக்கண்ணுடையாருணர்விற்கு ஞா யிறு தன்னொளியோடு தாதான்மிய மாயினைந்து நிற்கு மாறுபோல, அவ்வருளோடு தாதான்மிய மாயினைந்து நிற்பன் முதல்வனாகலால் த ன்வயத்தனாகிய வம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சங்கற்ப சத்தி மாத்திரையா னனைத்துஞ் செய்தல் கூடுமென்றவாறு.

ஆகலாற் றன்வயத்தனாகிய வம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சங்கற்ப சத்திமாத்திரையா னனைத்துஞ் செய்தல் கூடுமென்ப து குறிப்பெச்சம். உம்மை யெதிரது தழீஇயது. இன்றியென்னும்வி

வினையெச்சக் குறிப்பி னிகரந் செய்யுளாகலி னாகாரமாய்த் திரிந்தது. அ ன்றே அசை. இவ்வியல்பு சித்தாந்த நெறி யுணர்ந்தார்க்கன்றி விளங் காதென்பார் அருட்கண்ணருர் கண்ணுர்கென்றார். சத்தியசந்தன்மையும தனியல்பு நீக்கமின்றி நிற்குமன்றே யென்பதனுள் வகுத்துரைத்த த மையினுண்டுக் காண்க. ஐந்தாஞ் சூத்திர முடிந்தது.

ஆறுஞ்சூத்திரம்.

உணருருவ சத்தெனி னுணராதின்மையி ... க
னிருதிறனல்லது சிவசத்தாமென ... ... உ
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே. ...௩

எ - னின், சத்து மசத்தும் வரைசெய் துணர்த்துத னுத லிற்று.

எ-து-க-னை-எ-னின், சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று.

(இ - ள்) மேலைந்து சூத்திரத்தானுங் கூறிப்போந்த பொருள்க ளுள்; யாதுசத்தியாதசத்தென்னுமைய நீக்குதற்குச் சத்தி னியல்பு மசத்தினியல்பு மிவையென வவ்விரண்டு மிலக்கணத்தாற்றம் முன்ம யக்காதவாறு வரைந்து வைத்துணர்த்தி, உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்து முகத்தானே யிலக்கண வோத்துட் கூறுதற் கெ ஞ்சி நின்ற பதிப்பொருள னிலக்கணங் கூறுதலிவ்வாறுஞ் சூத்திரத்தி ன் கருத்தென்றவாறு.

இதனுனே சூத்திர வியைபுமினிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு - தம்முணர்வின் றமியாகி ய முதற்பொரு ளளவைகளா னறியப்படு மியல்பிற்றெனின், அங்ங னமறியப்படும் பிரபஞ்சம்போ லழிபொருளாகிய வசத்தாம்; எல்லா வற்றானு மறியப்படாத வியல்பிற் றெனின், அங்ஙன மறியப்படாத முயற்கோடுபோலச் சூனியப்பொருளாம்; ஆகலா னிவ்விருபகுதியும ன்றி ஒருவாற்று னறியப்படாமையு மொருவாற்று னறியப்படுதலுமா

பிய விரண்டு வகையானுஞ் சிவசத்தாமெனக் கூறுவார் மெய்யுணர் வினிலைபெற் றுயர்ந்தோ ரென்றவாறு.

உணருருவெனினசத்தெனமாறுக. எனினென்பது முன்வருஞ்செய்தியைத்தரு. முற்றும்மைதொக்கன. அல்லதென்பது வினையெச்சக் குறிப்பு முற்று. அன்றியா மெனவினையும். ஒருவாற்றானறியப்படாமை - பாசஞானம் பசுஞானங்களா லறியப்படாமை. ஒருவாற்றா னறியப்படுதல் - சிவஞானமொன்றானே யறியப்படுதல். பாசஞானம்பசுஞானங்களாலறியப்படாமையிற்சிவமாதலும், பதிஞானத்தாலறியப்படுதலிற்சத்தாதலும்பெறப்படு மென்பார், இரண்டுவகையிற்சிவசத்தாமெனவிசைக்குமென்றார். சிவசத்தென்னுமிருபெயரொட்டுப்பண்புத்தொகை வடநூன்முடிபு. சடமாகிய சத்தி னீங்குதற்குச் சிவசத்தென்றார். சிவசத்தென்பது:- சித்துச் சத்தென்னும் பொருட்டு. எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித் துரைக்கப் பட்டது. இருதிறனுமன்றி யிரண்டுவகையானுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையனாய் நிற்றன் முதல்வனுக்கிலக்கணமென விலக்கணமு மிதனுட்போந்த வாறுணர்க. முதல்வனுக்குப் பொதுவியல்புமேற் புணருற்பவ முணர்த்து முகத்தாற்கூறிப் போந்தமையின் இது சொரூபவிலக்கண மெனப்படுஞ்சிறப்பிலக்கண மெனக்கொள்க. அற்றாகவின்றே, இதனை யிலக்கணவோத்தான் முதற்கட்கூறு துண்மையைச்சாரவைத் திறுதிக்கட்கூறியதூஉமென்க. இனி முதல்வனுக் குளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லா மிவ் விரண்டனு ளடங்கும். அஃதறிந் தடக்கிக்கொள்க. "தன்னாலே தனை யறிந்தாற் றன்னையுந்தானே காணும்" -எ-ம்- "உன்னரிய திருவருளா லொழியமல முணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முன்னவர்க்கே" எ-ம், "மாயை மாமாயை மாயாவரு மிருவினையின் வாய்மை, யாவாருயிரின் மேவுமருளினி லொளியாய் நிற்கும்" எ-ம், ஓதியவற்றானெனைப் பசுபாசங்களுஞ் சிறப்பியல்பு பற்றி யுணர்தல் சிவஞானத்தானன்றிய மையாதாயினும், "தீபமெனத் தெரிந்தாங்கொருவியான் மாயினுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர்க்கு மிது பசுஞானம்" எ-ம், "இவை கீழ்காடலே காதலின்றன் பிரமமென்று ஞானக்கருது பசுஞானம்" எ-ம், பொதுவியல்புபற்றி யோதுதலானும், ஈண்டதனை யறிந்தே யறிகின்றிலே னென்றறியும் பாசவுணர்விற் கவற்றது பொதுவியல்பு விடயமாதல் [illegible]கூடாகப் பெறப்படுதே

லானும், அவையொருவாற்றா னுணருருவாதலு முடைமையிற் சிவச த்தாவான் செல்லாமையறிக. சற்காரியவாதங் கூறுஞ் சைவசித்தாந்த த்தில் அசத்தென்பது சத்துக்குமறுதலை யன்மையான் அப்பசுபாசங்க ளங்ஙன மறியப்படும் பொதுவியல்புபற்றியசத்தெனப்படுமாயினு ஞ்சிறப்பியல்புபற்றி யசத்தாதல் செல்லாமையிற் சிறப்பியல்பு நோ க்கும் வழி யவை சத்தாதற் கிழுக்கின்மையுமறிக. இங்ஙனஞ் செவ் வனே யிறுக்க வறியாதார் அபாவத் தியல்பாவது பாவத்திற்கு மறுத லைப்பொருள்போலுமென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி மய ங்கி, எல்லாப்பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணு மைப்பொருட்டு, ஈண்டுச்சத்த சத்தெனப்பட்டன சித்தசித்தென் னும்பொருளவா மெனவும், சுத்தமசுத்தமென்னும் பொருளவாமெ னவுமுரைத்திடர்ப்படுப. காரியப்பிரபஞ்சம் ஏனைப்பசு பாசங்கள் போலன்றி யிருவகை யியல்பானுங் காட்சிப்புலனா யித்துணைப்பொ ழுது நிற்குமென நம்மனோரா லறியவாராது நிலைபெறுவதுபோலத் தோன்றி விரையக்கெட்டு மறைந்து போதற் சிறப்புடைமை பற்றிய துவே யீண்டுணருரு வசத்தென்றெடுத்துக்கொள்ளப்பட்டது. அ சத்தெனவே அசித்தென்பதுந்தானே போதரும். இதனுள், "உண ருருவ சத்தெனினுணராதின்மையின்" என்றதோரதிகரணம், "இரு திறனல்லது சிவசத்தாமென விரண்டுவகையி னிசைக்கு மன்னுல கே" என்றதோரதிகரணம், ஆக விரண்டதிகரணத்த திச்சூத்திரமெ ன்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டறிவி னறியப்பட்ட சுட்டசத்தென்றது-எ-து - மே-ள்- எ-னின், மேலைச்சூத்திரத்தின் " அளந்தறிந்தறியா " என்றதனை யுடம்படாது, பிரபஞ்சம்போல . முதல்வனுமளவைகளானளந்தறி பொருளேயாமென, நையாயிகர்முதலியோர் கூறுங்கடாவையும்,எல் லாப்பொருளுஞ்சத்தாகலி னளந்தறிபொருளுஞ் சத்தேயாமெனச் சாங்கியர்கூறுங்கடாவையு மாசங்கித்து, சூத்திரத்தின் முற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட்னுதலிற்று.

(இ-ள்.) சுட்டறிவினு லறியப்பட்ட சுட்டுப்பொருளெல்லா மசத்தென்றவாறு.

சுட்டு ஆகுபெயர். சிவஞானத்தா லறியப்படுதலை நீக்குதற்கு அறிவினுலெனை விசேடித்தார். சுண்டறிவென்றது - ஒன்றை முந்தியதுவதுவாகச் சுட்டிக்காணுமளவையறிவினையென்பது "அறிவினு லறிந்தயாவு மசத்தாதலறிதி" என்ற புடைநூலாசிரியர் மீள வழங்கனங்தெரித்தோதியவாறுபற்றி யுணர்ந்துகொள்க.

அவைதாம் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான்-எ-து-எது-எ-னின், உள்ளதென்று முணர்விற்கு விடயமாயுபலத்தியைப்பயப்பிக்கும் பிரபஞ்சத்தை யில்லையென்று முணர்விற்கு விடயமா யநுபலத்தியைப் பயப்பிக்கு மில்பொருளோடொப்ப வசத்தென்ற லமையுமாறியாங்ஙனமெனவும், சத்தாகிய பிரபஞ்சத்தைச்சுட்டப்படுதன்மாத்திரையானசத்தென்றல் சற்காரியவாதத்திற்கிழுக்காம்போலுமெனவும், முறையே யவ்விருவர் மதம்பற்றிக கூறுவாரைநோக்கி, மேற்கோளைச் சாதித்த துதலிற்று.

(இ - ள்) அச்சுட்டுப்பொருள்கடாமிராசதகுணமிகுதிப்பாட்டானுள்ளதென்று முணர்விற்கு விடயமாயுபலத்தியைப் பயப்பித்துநின்று தானே தாமதகுண மிகுதிப்பாட்டா னில்லையென்றுமுணர்விற்கு விடயமா யநுபலத்தியைப் பயப்பித்து நிற்றலான், சுண்டறிவினு லறியப்பட்ட சுட்டசத்தென மேற்கொண்டதென்றவாறு.

ஈண்டுப்பிரகாச மப்பிரகாச மென்பன உபலத்தி அநுபலத்தியென்னும் பொருளவாய்,அவைநிகழ்தற்கிடனுகிய பொருண்மேனின்றன. இதுவையாபிகரை நோக்கிமேற் கோளைச்சாதித்தவாறு. இனியிதனையே யிரட்டுறமொழிந்துகொண்டு, அவைதாங்காரியவவத்தை யிற்றூலமாய் விளங்கிநின்றே காட்சிப்புலனுய், சடிதியின்மறைந்து, சூக்குமமாயகாரண வவத்தையின் விளங்காது நிற்கு மிவ்வேற்றுமை யுடைமையான், அங்ஙனம் புலனுகாதகாரணப் பொருள்களை நோக்கிக் காரியப்பிரபஞ்சமசத்தாதல் சாலுமாகலின் ஈண்டறிவினு லறியப்பட்ட சுட்டசத்தென மேற்கொண்ட தென்றவாறெனவு முரைத்துக் கொள்க.

வெண்பா.

அசத்தறியாய்கேணீ யறிவறிந்தவெல்லா ... ... *
மசத்தாகுமெய்கண் டானுயி-னசத்தலாய் ... ...*
நீரிலெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு .. ... *
மோரினவையின்றாமா றெப்பு. ... ... (௪)

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா மசத்தாகு மெய்கண் டானுயின்-எ-து-உ-ம்-எ-னின், ஒருசாரா ரங்ஙனமாயினு முபலத்திப் பட்டன வெல்லாமவ்வா றசத்தாமென்றற்குப் பிரமாணமென்னை யென்று நையாயிகரைநோக்கி யேதுவை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) அசத்தினியல்பை யறியாதமடவோனே யாமிறுக்கு மிறையை மனம்பற்றிக் கேட்பாயாக, சத்தினியல்பை யறிந்தோரா ராய்ந்தானுயி னறிவினலறியப்பட்டன வெல்லா மசத்தேயா மென்றவாறு.

அறியாயென்பது விளியுருபேற்றபெயர். அசத்தினியல்பை யறிந்தாயாயி னிவ்வாறு பிணங்குவாயல்லையென்பார் அசத்தறியாயென்றும், எந்தைதாட்பால் வணங்கித் தலைநின்றுகேட்க வென்பார் கேணீயென்றும், உபலத்திக்குவிடயமானவை யெல்லாமதுபலத்திக்கு விடயமாத லொருதலையென்பார் அறிவறிந்தவெல்லா மசத்தாகுமென்றும், சத்தினியல்புணர்ந்தார்க்கன்றி யசத்தினியல்புணரவாரா தென்பார்மெய்கண்டானென்றும், ஆய்தற்கருமை நோக்கியாயினென்றுங்கூறினர்.

அசத்தலாய் நீரிலெழுத்து நிகழ்கனவும்பேய்த்தேருமோரினவையின்றாமாறெப்பு-எ-து-உ-ம்-எ-னின், இரட்டுறமொழிந்துகொண்டு சாங்கியரைநோக்கி யுரைத்தபொருளை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்) அசத்தலாய்-எ-து-அசற்காரியவாதியல்லாத வறிவுடையோனே - அவையின்றாமாறெப்போரின்-எ-து - அங்ஙனந்தோன்றி மறைவனவாய பிரபஞ்சமசத்தாமாற்றிற்குவமையாராயின் - நீரிலெழுத்து நிகழ்கனவும்பேய்த்தேரும்-எ-து-நிகழாநின்ற நீர்மேலெழுத்தும், கனவிற்காட்சியும், பேய்த்தேருமா மென்றவாறு.

எனவே யப்போதுள்ளனவாய நீர்மேலெழுத்து முதலியனவற்றை யங்ஙனே சமழியின் மறைந்து போதற்சிறப்புப்பற்றி யசத்தென்றலெல்லார்க்கு மொப்பமுடிந்தமையின், அவ்வியல்புடைய பிரபஞ்சத்தையுமவைபோல சத்தென்றலமையுமென்றவாறாயிற்று. அசற்காரியவாதியையசத்தென்றுபசரித்தார். நீரிலெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழ்ந்தென்றடைகொடுத்தார்; அஃதியாண்டுஞ் சென்றியையும். குவ்வுருபு விகாரத்தாற்றொக்கது. இன்றென்றுமொருமை யப்பன்மின்மேனின்றது. நீரினெழுத்துத்தோன்றியபொழுதே மறைந்துபோதற்கும், கனாப்பொருண்முடிவு பெறுதலின்றி யிடையேமறைந்து போதற்கும், அருஞ்சுரத்தின் முதுவேனிலினன்பதற் கதிரைபற்றித்தோன்றி ஞாயிற்றின்கிரண முகிற்படலத்தின் மறைந்தவழித் தானுமறைந்துபோவதாகிய பேய்த்தேரொருகாரணங்காட்டி மறைந்துபோதற்கும், உவமையாயின. இவ்வெண்பாவை, " இலயித்ததன்னின் " என்பதுபோல பின்னையிருதொடராக வைத்துரைத்து மேற்சொல்லேதுக்களையு மிரட்டுறமொழிந்துகொண்டு, இரண்டதிகரணப்பொருள் சோடலாசிரியர் கருத்தென்பது - வழிநூலாசிரியர். " அசத்தாஞ்சுட்டியுணர்பொருளானவெல்லாம் " எ-ம், " உலகினையசத்தாமென்பர் " எ-ம், வெவ்வேறுகூறிய வாற்றானுமுணர்க. இஃதறியா திவ்வெண்பாவை யொருதொடராக வைத்துரைப்பார்க்கு அசத்தறியாதானை யசத்தலாயென்றதனாலொரு பயன்படாமையும், ஆயின், ஒரின், என்றிருகாற் கூறுதலும், அசத்தாகும், இன்றும், என்றிருகாற்கூறுதலும், கூறியதுகூறலென்னும் வழுவாதலுமறிக. இனி யொருவாற்றானு முணரப்படாத பொருள்சூனியமென்ப தெல்லாச் சமயத்தார்க்கு மொப்பமுடிந்தமையின்,ஆண்டதிகரணத்திற்குரியவை யப்பாடு முதலியன நிகழாமையான் அதனை வேறெடுத்துரைத்துமேற்கொள்ள வேண்டாமையானும், அந்தவுணர்வுடையார்க்கதன்கணைய நிகழாமைப்பொருட்டு, வழிநூலாசிரியர், " உணராதபொருள்சத்தென்னினொரு பயனில்லைபோலும் " எனவிடுத்தொழிந்தாரென்றுணர்க.

இரண்டாமதிகரணம்.

இனி யிவ்விரண்டுதன்மையுமின்றி வாக்குமனாதீதகோசரமாய் நிற்பதுவே சதசத்தாயுள்ள சிவமென்றுணரற்பாற்று - எ - து-மே-ள்

எ-னின், மேலுணர்பொருளியல்புமுணராத பொருளியல்புங் கூறுமுகத்தான் அசத்தினியல்பை வரைசெய்துணர்த்தியவழி யிரண்டு மிவ்வாறாகலா னிவற்றின்வேறாய முதல்வனதியல்பாவது மாயாவாதிகூறும் நிருவசனம்போலுமென்னுங் கடாவை யாசங்கித்து, சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

வாக்கெனப்படு நாதமுடிவான பாசஞானத்தை வாக்கென்றும் அவற்றின்வேறாய பசுஞானத்தை மனமென்று முபசாரவழக்காற் கூறினர்.

வாக்குமனாதீதகோசரமாய்நின்ற- எ-து-அவ்விரண்டின் விருத்திகளைக் கடந்ததீதமாயும், ஒற்றுமைப்பட்டுநின்றுணரு மநுபவஞான மாத்திரையிற்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்றவென்றவாறு.

அவ்வாறுநின்ற பொருளிதுவென வள்ளவைகளானறியவாராமை பற்றி, அதுவேயென மகாவாக்கியத்திற்கூறியதனை யநுவதித்து, சத்தாகிய சிவமாதலைச் செவியறிவுறுத்தார். வாக்குமனாதீதமென்றது தமிழ்நான்முடிபு. மரவடி-மராடியென மரீஇயினாற்போல, மனவதீதம்-மனாதீதமெனமரீஇயிற்று. அதீதகோசரமென்பது வடநூன்முடிபு. வாககுமனாதீதப்பொருளாகலின் உணருருவாந்தன்மையும், கோசரப்பொருளாகலின் உணராதாந் தன்மையுமில்லையென்பது பெறப்படுதலின், இவ்விரண்டுவகையு மின்றியென்றார்.

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும்- எ-து-எது-எனின், இவ்விரண்டுவகையுமில்லாத பொருணிருவசனமாய் நிற்பதென்றது வாக்குமனாதீதகோசரமாய் நிற்பதென்றற்குப் பிரமாண மென்னையென் பாரைநோக்கி, மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) வாக்குமனங்களா லோதியுணரப்படுவதாய நிருவசனப் பொருட்கு முன்னர்க்கூறப்படுஞ் சாதகங்களினின்றறியற்பாலதாக வேண்டாமையானும், ஒருவாற்றானுமறியப்படாத வநிருவசனப்பொருட்குச் சாதகத்தினின்று மறியப்படுமாறின்மையானும், இனி யிவ்விரண்டுதன்மையுமின்றி வாககுமனாதீதகோசரமாய் நின்ற வதுவே, சத்தாயுள்ளசிவமென்'றுணரற்பாற்றென மேற்கொண்டதென்றவாறு.

உணர்கற்பாற்றென்றார் உணர்தலருமைநோக்கி. பிரகாசமப்பிர காசமெய்பன-உபசாரவழக்கு.

வெண்பா.

என்னியசத்தன்றசத்தன்றாமென்றாலென் ... க
கண்ணியுளதென்றன்மெய்கண்டா - னெண்ணி ...உ
யரியவிரண்டாமசத்தாதல்சத்தா ௩
முரிவழிபாமெய்ச்சிவன்றாளாம். ... ... (௪)

என்னி-யும்-எ-து-உ-ம்-எ-னின், பரப்பிரமப்பொருளவிச்சை வயத்தான் ஞாதாவெனவு ஞேயமெனவும் பகுக்கப்பட்டு மூன்னர்க் கூறப்படும் சாக்கிரங்களினின் றமியவும்படும்; அவிச்சைநீங்கியவழி யப் பகுப்பின்மையாற் சத்தென்றுதல், அசத்தென்றுதல், ஒருவாற் றானு ஞேயமாமாயின்றிக் கேவலஞானமாத்திரையே நிற்பதொன்றாக லான், அதுகோசரமாமென்றல் பொருந்தா தென்பாரைநோக்கி, அத னை வலியுறுத்துதலிற்று.

(இ-ள்.) என்னியசத்தன்றசத்தன்று மென்றாலென்கண்ணியுள தென்றல்-எ-து-பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட் டசத்துமன்றசத்துமன்றென்னில், அங்ஙனமொருபொரு ளுண்டென்றல் யாது பிரமாணக்கருதியோ வதனைக் கூறுவாயாக; பிரமாணமுண்டென்னி னதற்கது பிரமேயமெனப்பட்டு ஞேயமாவா ன் செல்லுமென்றஞ்சிப் பிரமாணமில்லையென்பையாயின்,— மெய்க ண்டானெண்ணியறிய விரண்டாமசத்து-எ-து-சத்தினியல்பையுணர்ந் தோ ஞராய்ந்தறியிற் காட்சிமுதலிய பிரமாணங்கட்கு விடயமாவதூ உம், ஒருவாற்றானும் பிரமாணமல்லாத சூனியமுமாகிய விரண்டுமே ற்கூறியவாற்றா னசத்தேயாம்-ஆகல் சத்தாமறிவழியாமெய்ச்சிவன்று ளாம்-எ-து-ஆதலாற் சாங்தோக்கியமுதலியவற்றுட் சத்தென்றேதப் படுஞ் சுட்டறிவினாலறியப்படாத மெய்ப்பொருள் சைவவுபநிடதங்க ளினுஞ் சைவாகமங்களினும் அன்னியமின்றிநின் றுணருமநுபவமா த்திரையிற் கோசரிப்பதென் றோதப்படுஞ் சிவனருளாவதன்றி நீகூறு ஞ் சூனியமன்றென்றவாறு.

அறியவென்றுஞ்செயவெனெச்சம் - மழைபெய்யக்குளநிறையு மென்புழிப்போலச் செயவெனென்னு மெச்சப்பொருட்டாய்நின்றது-

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. அசத்தாமெனமாறுக. சத்தாகிய மெய்யெனவிளையும்-அடியளந்தான்றாஅய தென்றாற்போல, அறிவ றியாமெய்யென்றது-வாளாபெயராய்நின்றது. சிவன்றாளெனச் சிவ சத்தியின்மேல்வைத் துயர்த்துக்கூறிய துபசாரவழக்கு. இறைவனூர் கமலபாத மென்பதுஉமது.

இதனாற் போந்தபொருள்-சத்துமன்றி, அசத்துமன்றி ஒருபொ ருளுண்டெனின், அதற்குப் பிரமாணமென்னை, பிரமாணாதீதமாகிய சூனியமெனின், சூனியமுமழிபொருளுமாகிய விரண்டுமசத்தேயெ ன்பது மேற்காட்டினமையாற் பிரமப்பொரு ளசத்தெனப்பட்டுச்சத் தென்னுஞ் சுருதிகளோடு முரணுமாகலின், அவற்றுட் சத்தென்றோ தப்படும் பரப்பிரமப்பொருளாவது உண்மைமாத்திரையிற் கோசரிப்ப தென யாங்கூறுஞ் சிவமேயன்றி நீகூறுஞ் சூனியமன்றென, மாயாவா தியைமறுத்து, கோசரமென்றதனை வலியுறுத்தியவாறுமென்க. எண் ணியறிய விரண்டாமசத்தென்பதற்குப் பிறசொல்லாம் வருகின்ற வெ ண்பாவிற்கூறும்பொருள்பட, கூறியதுகூறலாதன்மேலுமோரியைபின் றியுரைப்ப.

வெண்பா.

உணர்பவசத்தாதலொன்றுணராதொன்றை ... ௧
யுணருநீதானுணராயாயி - னுணருமுனிற் ௨
றுனிரண்டாமெய்கண்டான்றன்னாலுணர்தலாற்... ௩
றுனிரண்டாய்க்காணுன்றமி ... ... (௩)

உணர்-தமி- எ-து-உ-ம்-எ-னின், பிரகாசித்தபொருளையும் வே றோராற்றானறிதுமென வேட்கைசென்றுழி, அவ்வாற்றாற்புதுவதாய்ப் பிரகாசிக்கவேண்டுதலின், பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதி ல்லையென்றல் யாண்டுஞ்செல்லாமையின், வாக்குமனாதீதமென்றல் பொருந்தா தென்பானைநோக்கி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உணர்பவசத்து-எ-து-நின்னாலறிவனவாய கருவிகளெல் லா மேற்கூறியவாற்றானசத்தாம்; அசத்தெனவே யசித்தாதலும் பெ றப்படும்-ஆதலொன்றுணராதொன்றை-எ-து- ஆகலானவற்றுளொரு கருவியும் ஒன்றாகியமுதற்பொருளையறியமாட்டாது - உணருநீதானு ணராய்- எ-து - அவற்றானறிந்துவருகின்ற நீதானுமதனை யறியமாட்

டாய்-ஆயின்-எ-து-நீயேயாய்ந்தறிவாயாயில் - உணருமவற்றுனிரண்டாம்-எ - து - அவ்வாறுணரப்படும் பொருள்கள்போல வுணர்கின்ற நின்னின்வேறும் மெய்கண்டான் றன்னாலுணர்தலாற் றுனிரண்டாய்க்காணுன்றமி-எ-து-உயிர்க்கறிவு விளக்குமுண்மையறிந்தோம்றன்னறிவச்சிவன்றனிடங்கியதுவாய்நின்றதனேயதனையறியு மாசலானேலைப்பொருள்களை யறியுமாறு வேறாய்நின்றறிவானல்ல னத்தனிமுதம்பொருளை யென்றவாறு.

இதனாற்போந்தது சத்தாகியசிவம் பாசஞானத்தானுதல் பசுஞானத்தாலுதலறியப்படாது அறியப்படிற் குடமுதலாயினபோல வுயிரின்வேறாயசிச்சையான்வருஞ்சுகதுக்கங்களைப்பயப்பதன்றி யசிச்சையினீங்கிய நிரதிசயவின்பத்தினைப்பயவாதாகலான் அவ்வுண்மையுணர்ந்தோன் ஏனையபோலவசத்தாத லின்றித்தனியாய் நின்றவம்முதற்பொருளையதனோ டொற்றித்து நின்றேகாண்பனென நையாயிகர் முதலியோரை மறுத்துவாக்குமனாதீதமாய் நின்றகோசரமா மெனவலியுறுத்திய வாறுமெனக. உணர்பவென்பது- அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர்ச்சொல. ஒன்றுமென்னு முற்றும்மைவிகாரத்தாற்றொக்கது. உன்னினென்னும் இன்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது. ஒற்றிரட்டியாமைபுறனடையாற்கொள்க. தான்-அசை.

வெண்பா.

பாவகமேற்றானசத்தாம் பாவனாதீதமெனிற் ... *
பாவகமாமன்றென்னிற்பாழதுவாம் - பாவகத்தைப்
பாவித்தறுமென்னிற் பாவகமாந்தன்னருளாற் ... *
பாவிப்பதுபரமில் பாழ். ... ... (௪)

பாவக-பாழ்-எ-து-உ-ம்-எ-னின், தான்கோசரமானலன்றித்தன்னாலறிதல் கூடாமையிற்றன்னாலே தனையுணருமென்பது தன்னைப்பற்றுதலென்னும் வழுவாமாகலினவ்வாறின்றி வாக்குமனாதீதப்பொருள் யோகநூலிற்கூறுந்தியான பாவனைகளிற் கோசரமாமென்றலேயமைவுடைத்தென யோகமதம் பற்றிக்கூறுவாரைநோக்கி, தன்னாலன்றிக்கோசரமாகாமையை வலியுறுத்தத னுதலிற்று.

(இ-ள்) பாவகமேற்றானசத்தாம்-எ-து-நீ கூறும்பாவனையேனைப் பாவகங்கள்போல மனமுதலியவற்றொடு கூடிநின்று பாவிக்கும் பாவக

மெனின், அறிவினாலறியப்பட்ட சுட்டாகலானப்பொருளசத்தாம்-பாவனாதீதமெனிற் பாவகமாம்-எ-து-கருவிகளை நீங்கிநின்று பாவிப்பதாகவி னப்பாவனையைக்கடந்ததெனிற் கருவிகளிகந்தவழி யொன்றுமறியுமாறின்மைக் கேவலமா மாகலான், அதுபாவகமாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை - அன்றென்னிற் பாழதுவாம்-எ-து-இவ்விருதிறனுமன்றியநிருவசனமாகப் பாவிக்கப்படுவதெனின், அது சூனியப்பொருளாம் - பாவகத்தைப் பாவித்தருளென்னிற் பாவகமாம்-எ-து-அவ்வாறன்றிப் பாவனைக்கெய்தாதபொருளை யெய்தியதாகவைத்துப் பாவகஞ்செய்தலெனின், அதுபோலிப்பாவனையாதலாற் பாவனாதீதம்போலப்பாவனை மாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை; அற்றேல், ஒருவாற்றானும் பாவனைக்கெய்தாதபொருள் பாழாமெனின், தன்னருளாற் பாவிப்பதுபரம்-எ-து-அப்பாவகங்களையொழித்துத் தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம்பரம்பொருள் - இல்பாழ்-எ-து-ஆகலானீ கூறும்பாவனைக் கெய்தாமைபற்றிப் பாழாதலில்லை யென்றவாறு.

தான் - அசை. பாவகத்தைப் பாவித்தலென்பது - கறைமிடறணியலு மணிந்தென்றதுபோலக்கொள்க. மேலைவெண்பாவிற் றன்னென்றது தனது சத்தியேயாகலாற் றன்னைப்பற்றுதலென்னுங் குற்றமாதல் யாண்டையதெனவிடுப்பார் தன்னருளாற் பாவிப்பதென்றார். தன்னருளை யறியுமாறு மதனாற்பாவிக்குமாறு மொன்பதாஞ் சூத்திரத்துட்கூறப்படும். போசநூலார்கூறும்பாவனை யிந்நான்கனு ளொன்றாகற்பாலதன்றி வேறின்மையின்,அந்நான்கினையுங்கூறி மறுத்தார்.

வெண்பா.

அறியவிரண்டல்ல னுஞ்சறிவுதன்னு ...   .சு
லறியப்படானறிவினுள்ளா-னறிவுக்குக் ...   ...   சு
காட்டாநின்றானைக் கண்ணறியாமெய்யென்னக் ...சு
காட்டாதறிவறிந்து கண்டு.   ...   .   (ரு)

அறிய - கண்டு-எ-து-உ-ம்-எ-னின், மேற்கூறிப்போந்த பாவனைகட்கெய்தாத பொருளைத் தன்னருளாற் பாவித்தல்வேண்டாம், உயிர் பசுத்துவநீங்கியகாலத்துச் சிவனைப்போல முற்றுமுணர்தன் முதலிய வெண்குணங்களு முடையதென்றாகமங்களுட் கூறுதலின், ஆண்டான்மஞானஞ் சிவஞானத்தோ டொப்பதன்றிப் பசுஞானமெனப்ப

டாமையான், அவ்வறிவானறியப்படுங் கோசரப்பொருளென்றலே யமைவுடைத்தென்னுஞ் சிவசமவாதிகளைநோக்கி, தன்னருளாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) அறியவிரண்டல்லன்-எ-து-சிவாகமங்களினத்து விதங் கூறுதலின், உயிர் தன்னறிவானறிதற்குத் தன்னின் வேறல்லனுகலானும் - அறிவினுள்ளானுக் கறிவுதன்னுலறியப்படான்-எ-து-சமமாதலின்றித் தூலசூக்குமமுறையாற் றன்னறிவுக்குள்ளுமாய் நிற்றலின், அவ்விடத்துத் தன்னறிவினு லறியவாரானுகலானும் - அறிவுக்குக்காட்டாகிநின்முனை-எ-து-தன்னறிவுக்கு வியஞ்சகமாய் நின்றறிவிக்கு முயிர்க்குயிராய முதல்வனை - அறிவுகண்டறிந்து காட்டாது-எ-து-ஆன்மஞானமானதுதான் கண்டறிந்து தன்குணியாகிய வுயிர்க்குக் கோசரமாமாறுகாட்டமாட்டாது - கண்ணறியா மெய்யென்ன-எ-து - தன்னின் வேறின்றித் தனக்குண்ணிற்றலிற் றன்னாற்காணப்படாது தனக்குக்காட்டாகி நின்றவுயிரை யறியமாட்டாத கண்ணொளிபோ லென்றவாறு.

காட்டு - முதனிலைத் தொழிற்பெயர். அறிவுக்குக் காட்டாகிநின்முனென்னும் பெயரடையானும் ஓோதுக்கூறியவாறு. கண்டறிதல் "குழிந்தாழ்ந்தகண்ண" என்முற்போலவொருபொருட்பன் மொழியாய்ச் சிறப்பின் கண்வந்தது. மெய்யறியாக்கண்போலென வியைத்துரைக்க. கண்முதலிய வற்றைநோக்கியுயிர் சத்துச்சித்தா மென்றவதனை மெய் யென்முர். கண்-ஆகுபெயர். கண்ணறியாமெய்யென்பதற்கு·கண்ணை யறியாதவுடம்பு போலென்றுரைப் பாருமுளர். உடம்பிற்கறியுந் தன்மையின்மையானும், உடம்பிற்குக் கண்காட்டாதலு மின்மையானும், அஃதீண்டுவமையாதலுக்கேலாமையி னதுபோலியுரையென்றொழிக.

வெண்பா.

அதுவென்னுமொன்றன் றதுவன்றிவேறே ... ௯
யதுவென்றறியறிவுமுண்டே - யதுவென் ௯
றறியவிரண்டல்லனுக் கறிவுணிற்ற ௯
லறியுமறிவேசிவமு மாம். ... ... (௬)

அது-ஆம்-எ-து-உ-ம்-எ-னின், அத்தன்மை யனுகியமுதல்வனைத்தலைப்பட்டவுயிர் அம்முதல்வனோ டொன்முய்ப்போவதே யாகலின் ஆண்டத்தன்மையின தாஉமியப்படுவதூஉ மாதல்யாங்ஙனமென்னுஞ்

சிவாத்துவிதசைவர் சுத்தசைவரைநோக்கி, ஒன்ருயவழியும் அறிவதூ மறியப்படுவது மூண்டென்பதுணர்த்தி, அதனை வலியுறுத்து தனு தலிற்று.

(இ-ள்) அதுவென்று மொன்றன்று- எ-து-சத்தாகியசிவம்ஞே யப்பொருளாய் விசிட்டமாய் நிற்பதென்பது மக்குமொக்குமாகலான், அச்சிவமின்னதென் றறியவாராத நிருவசனமாய் நிற்பதொரு நிருவி சேடப்பொருளெனக்கொண்ட மாயாவாதத்தைப்போல, அதுவென் று அநிருவசனமாய்க் கூறப்படுவதொரு சூனியமன் ருகலான்-அதுவ ன்றிவேறே யதுவென்றறியறிவுமாங்குண்டே- எ-து-அந்தஞேயமாத் திரையேயன்றியதனின்வேருக வாக்குமனுதீதமாய் நிற்பதொரு பொ ருளென்றறிகின்ற ஞாதாவுமாண்டுள்ளதேயாம்- அற்றே லொன்ருதல் பெறப்படாதாலெனின், அதுவென்றறிய விரண்டல்லனறிவுணிற்றல றியுமறிவே சிவமுமாம்-எ-து- உலகத்துப்பொருள்போலது வென்று சுட்டியறியுமாறுமுதல்வன் றன்னின்வேறல்லனுய், அப்பணைந்தவுப் புப்போலத் தன்னறிவின்கண்விரவி வேற்றுமை தோற்ருது நிற்றலா ன்அறிவிறந்தறிகின்ற வவ்வுயிர்சிவமே யாமென்றவாறு.

உம்மை-சிவமாயுஞ் சிவமாகாமைவிளக்கிநின்றது. அதுவென்று மொன்றன் ருகலானென, ஏதுப்பொருள் படக்கொண்டுரைக்க. அறி வுமென்றவும்மை யிறந்ததுதழீஇயது. அல்லனென்பது முற்றெச்சம்; வேறுமுடிபுகோட்லிற் பால்வழுவாகாமையுணர்க. உண்டேயென்று மேகாரந் தேற்றம். ஏனையிரண்டு மசைநிலை. நிற்றல் – நிற்றலானெ ன்றவாறு.

இவ்வெண்பாக்களைந்தும், முறையே, வாக்குமனு தீதமென்றல் பொருந்துங் கோசரமென்றல் பொருந்தாதென்னு மாயாவாதிகளையு ம், கோசரமென்றல் பொருந்தும் வாக்குமனுதீதமென்றல் பொருந்தா தென்னு மையாயிகர்முதலியோரையும், பாவனைக்குக்கோசரமாமென் னும் பாதஞ்சலரையும், ஆன்மஞானத்திற்கே கோசரமா மென்னுஞ் சமவாதசைவரையும், முத்தியிற்சிவமேயன்றி யுயிரொனவேறின்மையி னுயிர்க்குக் கோசரமாமாறியாண்டையதென்னுஞ் சிவாத்துவிதசை வர்முதலியோரையுமறுத்து வாக்குமனுதீதகோசரமாய் நிற்குமியல்பு வலியுறுத்தி ஒருபொருண்மேல் வந்தவாறுகாண்க. இவ்வாறுநாலாஞ் சூத்திரமுதலிய மூன்றினு மேற்பிரமாணத்தாற் கூறிப்போந்த பசுபா

சமபிரிப்பட்டிலக்கணங் கூறுமுகத்தான், முறையே, கேவலம், சகலம், சுத்தமென்று மூன்றவத்தையுங் காட்டப்பட்டன. இம்மூன்றனுட்கேவலம்- மருட்கேவலமும், சகலகேவலமும், பிரளயகேவலமும், விஞ்ஞானகேவலமும், அருட்கேவலமு மென்றைவகைப்படும், அவற்றுள்மருட்கேவலமாவது - அநாதிகேவலம்; சகலகேவலமாவது-சங்கரித்தபின்னர்ப் புனருற்பவத்திற் கேதுவாய்ப்படுங்கேவலம்; ஆண்டுச்சூக்குமவைந்தொழிலுண்டென மிருகேந்திரத்துட் கூறுதலினநாதிகேவலத் தோடிதனிடைவேற்றுமையாமாறு கண்டுகொள்க; பிரளயகேவலமாவது-மாயையோடியை பின்றியாண்டுப் படுங்கேவலம்; விஞ்ஞானகேவலமாவது - மாயை கன்மங்களென்னு மிரண்டனோடுமியைபின்றியாண்டுப் படுங்கேவலம்; அருட்கேவலமாவது - தத்துவசுத்திப்பின்னர்ப் படுங்கேவலம்; அதுதானுருபோதத்திற் காண்க. இனிச்சகலமும் - சகலத்திற்கேவலம்; சகலத்திற்சகலம்; சகலத்திற்சுத்தமென மூவகைப்பட்டு ஒரோவொன்றைந்துவகைப்படும். அவற்றுட்சகலத்திற்கேவலமைந்தும், "ஒன்றியனாயமூலத்தே,,என்றதனுட்காண்க; சகலத்திற்சகலமைந்தும் "இலாடத்தே சாக்கிரத்தை" என்றதனுட்காண்க; சகலத்திற்சுத்தமைந்தும், "யோகிற்றருவதோர் சமாதி' எனவழிநூலாசிரியர் தொகுத்தோதியது சித்தாந்த சாராவளியோகபாதத்தின்வகுத்துக் கூறுதலானுண்டுக்காண்க. இனிச்சுத்தமும், சிவன்முத்தி, அதிகாரமுத்தி, போகமுத்தி, இலயமுத்தி, பரமுத்தி யென்றைவகைப்பட்டுச் சாக்கிரமுதலிய பெயர்பெறும். அவற்றைமுன்னர்த்தொகுத்தோதுப. ஆறுஞ்சூத்திரமுடிந்தது.

ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ்சூனியஞ் சத்தெதிராதலிற் ௧
சத்தேயறியாதசத்திலதறியா ௨
திருதிறனறிவுள திரண்டலாவான்மா ௩

எ - னின், மேலதற்கோர்புறனடை யுணர்த்துதனுதலிற்று.

எ-ஞ-க-ளா-எ-னின், சூத்திரக்கருத் துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) நூலாருந்தநியாயம்பற்றி மேலே யாறுசூத்திரங்களினுஞ் சிவாகமங்களிற் கூறப்படுமுப்பொருள்களது பொதுவியல்பு பிரமாணமுகத்தானு மிலக்கணமுகத்தானு மாராய்ச்சிசெய்துணர்த்திய வாசிரியர், அம்முப்பொருள்களது சிறப்பியல்பெனப்படுமுண்மைசாதன முகத்தானும் பயன்முகத்தானு மாராய்ச்சிசெய்துணர்த்துவான் புகுந்து, முதற்கண், மூன்றுசூத்திரங்களா னவற்றை யறிந்ததனாலாய பயன்பெறுதற்கேதுவாகிய சாதனங்கூறிய தொடங்கினார்; அவற்றுளிச்சூத்திரம்-உணருருவசத்தெனவும், இருதிறனல்லது சிவசத்தெனவும், மேலைச்சூத்திரத்தா னுரைசெய்துணர்த்தியவழி, அங்ஙனமறியும்பொருள்; அவ்விரண்டனுள், ஒன்றோவேறோவென்று மையப்பாட்டின்கண், அவ்விரண்டனுள் ஒன்றாற்பாலதென்பார் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து, சூத்திரத்துக்குப் புறனாகவெடுத்து, ஒழிபாகிய சதசத்தினியல்பு வரைசெய்துணர்த்துமுகத்தானே, சாதித்துப் பயன்பெறுதற்குரிய வதிகாரியினியல்பாவ திதுவென்ப துணர்த்துதனுதலிற் றென்றவாறு.

அதிகாரமும் ஒத்தும்வேறாயவழியு மிவைபுணர்ந்து கோடற் பொருட்டுக் கருத்துரையவ்வாறு செய்தானென்பது. இப்புறனடையை வடநூலார் வாக்கியசேடமென்ப. இதனுட்கூறப்படு மூன்றதிகரணமு மூன்றுபுறனடைபோலுமென மலையாமைப்பொருட்டோர் புறனடையென்றார். முன்னைய விரண்டுமிறுதி யதிகரணத்தைச் சாதித்தற்கேதுவா யொருபொருண்மேல்வந்தனவே யாமென்பது கருத்து. ஒன்றனையறிந்தவழி, அதனானாயபயன் பெறுதற்குரிய முயற்சிசெய்யப்புகுவார்க்கு, அதனைச் சாதிக்குமாற்ற றமக்குண்டென்பதூஉம், சாதித்ததனால்வரும் பயனிதுவென்பதூஉம், அதனைப் பயப்பித்தற்குரிய சாதனமாவதிதுவென்பதூஉம், அதுவருவாயுமுணர்ந்தாலன்றி, அதன்கண் மனவெழுச்சிசெல்லாமையின் ஈண்டோதப்படுஞ் சாதனஞ்செய்து பயன்பெறுதற்குரிமையுடைய வதிகாரியினியல்புணர்த்துவதாய விச்சூத்திர முதற்கண்வைக்கப்பட்டது.

இதன் பிண்டப்பொழிப்பு - மேலைச்சூத்திரத்துட் கூறிப்போந்த விரண்டனுள், வாக்குமனாதீதமாகிய சிவசத்தியின் சந்நிதியில், உணருருவாகிய வசத்தெல்லாம்பாழாகலிற் சத்தாகியசிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை யறிதல்செய்யாது, அசத்தாகிய பிரபஞ்சமறிவில்லாத

சடமாகலிற் சத்தாகிய சிவத்தையறிதல்செய்யாது, ஆகலாற் பரிசே டமாயவை யாவினுமிறனறிவுளதொன் றுண்டென்பது பெறப்படுதலின், அதுவேசத்தாதற்றன்மையுமசத்தாதற்றன்மையுமாகியவிரண்டுமல்லிச்சதசத்தாயுள்ள வுயிராமென்றவாறு.

இரண்டனுள்ளொன்றைப்பிரிக்கின்றமையி னசத்தேயென்னு மேகாரம் பிரிநிலைக்கண்வந்தது. அசத்திலதாகலினென்றுணர்க. அசத்துச்சத்தையறியாமைக்குஞ் சத்தெதிர்சூனியமாதலே யேதுவாதலமையுமாயினும்அசத்தெனப்பட்டகருவிகள் முத்திநிலையிற்சிவகரணமாயான்மாவையொட்டிமுதல்வன் சந்நிதியினிற்கப்பெறுமென்பாரைநோக்கி, வேறுமோரேதுக்கூறினார், இக்கருத்தேபற்றிச் சத்தின்முன்னில்லாமையாலு மசனோக்கொண்டொன் றுணர்தலானுமென விரண்டேதுவுமுடன்கூறினார் வழிநூலாசிரியரும். ஏற்புழிக்கோடலான், அறிதலென்றது கண்டநுபவவறிவின்மேற்று; இனைத்தெனவறிந்தபொருளுக்கு விளைப்பமிதொகுதிக்கண் வேண்டப்படு முற்றும்மைவிகாரத்தாற்றொக்கது, இதனுள், யாவையுஞ் சூனியஞ்சத்தெதிராதலிற்சத்தேயறியாதென்றதோரதிகரணம், அசத்திலதறியாதென்றதோரதிகரணம், இருதிறனறிவுளதிரண்டலா வான்மாவென்றதோரதிகரணம், ஆக மூன்றதிகரணத்தகிச்சூத்திர மென்றுணர்க.

முதலதிகரணம்.

கண்டுச்சத்திவிடத்த சத்துப்பிரகாசியாதென்றது-எ-து-மே-ள் எ-வின், "தந்திடுஞ்சிவனவன்றன் சந்நிதி தன்னிலன்றே,, எ-ம், "கூடுமொளிவளர்குடிலை மாயைமேவி,, எ-ம், "தாரகமாமத் தன்றுணிற்றல் எ-ம், "விமலனுக்கோர் சத்தியாயென,, எ-ம், 'உலகமே யுருவமாகி" எ-ம், "அத்துவாமூர்த்தியாகி,, எ-ம், "இருநிலனாய்த் தீயாகிநீருமாகின்றவாறே'' எ-ம், கூறப்படுமியல்புடைய பிரபஞ்சத்தைச் சத்தெதிர்சூனியமென்றலவசித்தாந்தமாய் முடியும்போலுமெனவும், மண்டியவுணர்வுயிர்க்காய் மன்னிநின்றறியுமெனவுங்கூறுஞ்சிவாத்துவிதசைவர் மதம்பற்றிஎழுங்கடாவை யாசங்கித்து, சூத்திரத்தின் முதற்கூற்றிற்போந்த வேதுவைக்கண்ணழித்துணர்த்து மேற்கோடனுதலிற்று.

(இ - ள்.) சுட்டுணர்வின்றியின்றறியுஞ்சிவசத்தின் முன்னர்ச்சுட்டி யறியப்படு மசத்தாய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாதென்றவாறு.

ஈண்டுச்சூனியமென்றது விளங்காமைப் பொருட்டென்பார்பிரகாசியாதென்றுரைத்தார். இக்கருத்தேபற்றி" முனைத்திடாத சத்தாச் சத்தின்முன்,, என்முர் வழிநூலாசிரியரும். முனைத்திடாமையாவது - இதருடம், இஃதாடையென நம்மனோரால் சுட்டியறியப்படுமாறுபோல, முதல்வனாற்சுட்டியறியப்படுவதாய் வேறுநில்லாமையாம். ஆகவேயீண்டுச் சத்தெதிர்யாவையுஞ்சூனியமென்றதுகொண்ட வசித்தாந்தமாதல் யாண்டையதெனமறுத்துச் சத்தறியாதென்றதனை வலியுறுத்திய வாறுகாண்க.

மெய்யினிடத்துப் பொய்யப்பிரகாசமாய் நிற்றலான்-எ-து-ஏது-எ-னின்,முற்றுணர்வுடைய சிவத்துக்கு அசத்தைவிட யிப்பதாயசுட்டுணர்வுமுண்டென்முற் படுமிழுக்கென்னையெனுபானைநோக்கி, மேற்கோளைச்சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) தன்னியல்பாகிய வியற்கையுணர்வின் முன்னர்ப்பொதுவியல்பாகிய செயற்கைச்சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையானீண்டுச் சத்தினிடத்த சத்துப் பிரகாசியாதென மேற்கொண்ட தென்றவாறு.

பிரகாசித்து நிற்றலின்மையா லஃதியற்கையுணர்வோ டொப்பவொருங்கு நில்லாமையெக்காலத்து நிலைபெறுவ தாயதன்னியல்பே மெய்யெனவும், இடையேதோன்றி மறைவதாய பொதுவியல்பேபொய்யெனவுங் கூறப்படுவனவாகலான் அவையீண்டைக்கேற் புடையவறிவின்மைமேனின்றன. இஃதறியாதாருரைப்பனவெல்லா மேற்கோளைச்சாதித்தற்குரியவேது வாதல்செல்லாது கூறியதுகூறலாய் முடியுமென்றொழிக.

வெண்பா.

அன்னியமிலாமையரற்கொன்றுணர்வின்று ... ௳
மன்னியமிலானசத்தைக்கான்குவனே -1லன்னியமாய்க்
காணுனவன்முன்கதிர்முன்னிருள்போல ... ௳
மாணுவசத்தின்மைமற்று. ... ... (௪)

அன்னியம் - மற்று-எ-து-ம்-எ-னின், கட்டுணர்வின்மையா ன்முதல்வனைச் சத்தைமாத்திரையா னறிவனெனின் முற்றுணர்வுடைமைக் கிழுக்கா மென்பானை நோக்கி இழுக்கின்மைகூறி, ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) அன்னியமின்மையாற் சொன்னுணர்வின்றும் - எ-து- தன்னுள்வியாப்பியமான பசுபாசங்களோடு வேற்றுமையின்றியுடனா ய்நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியப்படுவ தொன்றில்லை யாகலான் - அன்னியமில்லாத சத்தைக்காண் குவனே லன்னியமாய்ச் சாறும்-எ-து - அத்தன்மையனாகிய முதல்வனைச் சத்தையறியலுறுவ னாயின், அதிற்காக்கறிவனன்றி நம்மனோர் போலவேறாகச் சுட்டியறி வானல்லன் - கதிர்முன்னிருள்போல அவன்முன் மாறாவசத்தின் மைமற்று-எ-து-ஞாயிற்றின் முன்னிருட்டுப்போல வம்முதல்வனெ திர்வன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கியில்லாதாகலா னென்றவாறு.

எனவே, அசத்தைவிடயிப்பதாகிய வேகதேசவுணர்வு முற்றுணர்வைத்தடுப்பதாகலான் அஃதில்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவதல்லது, இழுக்காகாதெனவையமகற்றி, ஏதுவைவலியுறுத் தவாறு காண்க. மாறுமை - வியாபகவுணர்விற்குவிடயமாகாமை - இன்மை- கண்டு விளங்காமை குறித்துநின்றது. மற்று - அசை. மற்றுக்காண் குவனே லெனமேலேகூட்டி. வினைமாற்றின்கண்வந்த தெனினுமமை யும். உணர்வுக்கதிரும் ஆகுபெயர். கதிர்முன்னிருள் - கண்டுமுனை யாமை மாத்திரைக்கொருபுடையுவமையாயிற் றென்பது - வழிநூலா சிரியர். "முனைந்திடாத சத்துச்சத்தின் முன்னிருளிரவிமுன்போல்;" என்றவாற்றானறிக.

இரண்டாமதிகரணம்.

இனி யசத்தினுக் குணர்வின்றென்றது-எ-று-மே-ள்-எ-னின், சத் தசத்தை யறியாதாயினு மசத்தெனப்பட்ட தநுகரண புவனபோகங் களுமொன்றுமயக்காமல் விளக்குப்போல வியாபரமின்றிநிற்குமான்மசந் நிதியில், பெத்தவிலக்கணசத்தாய விடயங்களையறிந்தாம்போல, முத்

நிலையில், சிவகரணமாய்நின்று சிவத்தையறியுமென்றலும், கண்ணாடியினிழல்போலவான்மசந்நிதியி னதன்கணறிவுண்டாமென்றலு மமைவுடைத்துப் போலுமென்னும், சிவசங்கிராந்தவாதம்பற்றி நிகழுங் கடாவையாசங்கித்து, சூக்கிரத்தினிரண்டாங் கூற்றிற்போந்த வேதுவைக்கண்ணழித்துரைத்து, மேற்கோடலுதலிற்று.

(இ-ள்) வெ-ளை.

சூக்கிரத்தினிலதென்றது - அறிவிலதென்னும் பொருட்டென் பார் உணர்வின்றெனவுரைத்தார். ஈண்டசத்தென்றது - தத்துவப்பிர பஞ்சத்திற் கறிவின்மை சாதிக்கவேண்டாமையின்.

அதுதானிருபிக்கின்முகலான்-எ-து-ஏது-எ-னின், பதிஞானம் பசுஞானங்களோடொப்பப் பாசஞானமொன்றென வைத்தெண்ணப்படுமுரிமையுடையதனை, அறிவுடைத்தன்றென்றல் பொருந்தாதென்பாரைநோக்கி, மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அவ்வறிவாவது தூலமாய்நோக்கும் வழியவ்வசத்துக் குள்ளதுபோலத்தோன்றினும், ஐயந்திரிபின்றிமாசறு காட்சியானாயும் வழியதன்கணில்லாதாகலான், இனியசத்தினுக் குணர்வின்றென மேற்கொண்ட தென்றவாறு.

எனவேபாசம் வாயிலாகவுயிரின்கணிகழுஞானமே பாசஞா மென்றுபசரித்துக்கூறப்படு மதனைப்பாசத்திற்குளதாகிய ஞானமெனக்காண்டல், நிருபியாதவழிப்படு மடமையேபிறிதில்லை யென்றவாறாயிற்று.

வெண்பா.

பேய்த்தேர்நீரொன்றுவரும்பேதைக்குமற்றனைந்த ...
பேய்த்தேரசத்தாகும்பெற்றிமையின்- வாய்த்ததனைக்
கண்டுணர்வாரில்வழியிற்காணுமசத்தின்மை ...
கண்டுணர்வாரில்லதெனக்காண் ... ... (உ)

பேய்த்தேர்-காண்-எ-து-உ-ம்-எ-னின், அதனையுவமை முகத்தான் வலியுறுத்த றுதலிற்று.

(இ-ள்) பேய்த்தேர்போன்றுவரும் பேதைக்குமற்றனைத்தபேய்த்தேராசத்தாரும் பெற்றிமையின்-எ-து- பாலைநிலத்தின்கட் காணப்படுவதாயபேய்த்தேரை நீரென்றுகருதி, அதனையுண்ணவருமின்ற நீர் வேட்கையுடைய மடவோனுக்கு, அதனையடுத்தவழித் தன்புலனையப்பட்டவப்பேய்த்தேர்நீராதலின்றிப் பொய்யாந்தன்மைபோல-வாய்த்து-எ-து- குரவனறிவுறுக்கு முபதேசமொழியிடைத்து - அதனைக்கண்டுணர்வாரில்வழியிற் காணுமசத்தின்மை-எ-து - அவ்வசத்தினியல்பை யாராய்ந்தறிவாரின்றி யறியமாட்டாதாருள்வழி, அவர்க்கதன்கணறியுள்ளதாய்மதிக்கப்படுஞ் சத்தாந்தன்மையே காணப்படும்-கண்டுணர்வாரில்லதெனக்காண்-எ-து - அவ்வுபதேசமொழியிடைத்து, அவ்வியல்பேயாராய்ந் தறியவல்லார்க்கு, அவ்வசத்தறி வில்லதேயாமென்றறிவாயாக வென்றவாறு.

மற்று, வினைமாற்று. மை, பகுதிப்பொருள் விகுதி. இன்-உவமவுருபு. வாய்த்தென்பது-வாய்ப்பதென்பதன்றிரிபு. வாய்த்தல்- நேர்படுதல். ஆண்டைக்கேற்புடைய வினைமுதல் - அவாய்நிலையான்வந்தது. அசத்தின்மையாவது - சத்தாந்தன்மை. நான்கனுருபு - விகாரத்தாற்றொக்கது. அறிவென்பது - அதிகாரத்தான்வந்தது.

மூன்றுமதிகரணம்

இனியிருதிறனல்வுள திரண்டலாவான்மா-எ-து-மே-ள்-எனின், சிவசத்தின்றன்மையே யுயிர்க்குத் தன்மையாவதன்றிவேறில்லை யாகலிற்சத்தேயசத்தை யறியுமென்னுஞ் சிவாத்துவிதசைவரையும், உயிர்க்குத் தன்மையென்ப தொன்றின்மையி னசத்தேசத்தையறியுமென்னுஞ் சிவசங்கிராந்தவாதசைவரையு மறுத்து, சத்துமசத்துந் தம்முளறியுமாறில்லையென மேற்சாதித்தவழி, இரண்டுமிவ்வாறாயினிவற்றையறியும் பொருள்வே றென்னையென்பானைநோக்கி, பாரிசேடவளவையான், அவ்விரண்டின் வேறாயிருக்குந் தன்மையுண்டென்பது விளக்கி, சதசத்தினியல்பை வரைசெய்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வெ-ளிட.

ஈண்டிரண்டலாவான்மாவிருதிறனறிவுளதென்றது - சத்தெதிர் வில்லாதவசத்துஞ்சத்துந் தம்முளொன்றாய் நின்றறியப்படாமையா லிருதிறனறிவுள திரண்டலாவான்மாவேயாந்தம்மு ளொன்றானென் றநுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தைய மநுபவிக்குமகண் போலுமெனவநுமானங்கூறிக்கொள்க. அவையுயிரானு மறியப்படாத வழிப்பயப்பாடின்றிச் சூனியமாய்முடியுமாகலா னுயிரறிதற்றன்மை த்தென்பது தெற்றெனவுணர்க.

இவ்விரண்டினையுமறிவதா யுபதேசியாய்நின்றவழி யிரண்டன் பாலுமுளதாயுள்ளவதுவே யிவ்வான்மாவாமென்றது-எ-து-பொ-ளை எ - னின் - இருதிறனறிவென்னுந் தொகைச்சொல்லிரியுங் காற் படும்பொருள் வேறுபாடுவிளக்கு முகத்தானுயிர்களுக்குத் தன்னியல்பு வேறுவேறு கூறுஞ்சமயங்களெல்லா மறுக்கப்படுமா றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) இவ்விரண்டினையு மறிவதாய்-எ-து- மேற்கூறிப்போந் தசத்தையுமசத்தையு மறியுந்தன்மைத்தாய் - உபதேசியாய்-எ-து- அறிவிக்கவறியுந்தன்மைத்தாய விரண்டின்பாலு நின்றவறிவுளதாய்- அவ்விரண்டின் கண்ணுநிலைபெற்ற வநுபவவறிவுள்ளதா யுள்ளவது வேயவ்வான்மாவாமென்றது - எ - து - இவ்வாறுள்ளபொருள் யாது, அதுவேசத்துமசத்துமல்லாத சதசத்தாகிய வுயிரொன்றவா றும். இருதிறனறிவுள திரண்டலாவான்மாவெனமேற்கொண்ட தெ ன்றவாறு.

ஆயென்னும் வினையெச்சமூன்றும்உள்ளவென்னும் பெயர்வி னைக்குறிப்போடு முடிந்தன. இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் ஈண்டுமூன்றுபொருளின் மயங்கிற்றென்னுங் கருத்தானிவ்வாறுமொ ழிந்தார். அவற்றுள், இருதிறனையுமறியு மறிவென்று மிரண்டாவது மயங்கிய வாறும்வேற்றுமைத்தொகைப்பொருள்பற்றி, அவ்விரண்டி னையுமறிவதாயெனவும், இருதிறனால் விளங்கியவறிவென்று மூன்று ம் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி, உபதேசியாயெனவும், இரு திறனினுள்ளவறிவென் றுமேழாம் வேற்றுமைத்தொகைப் பொருள் பற்றி, நின்றவழியிரண்டன்பாலு முள்ளதாயெனவும், உரைக்கப்பட் டன. இவ்விரண்டினையு மறிவதாயுள்ளவது வென்பதனால், இரண்டு

யிவ்வாறுபிரிவின்றியவற்றையறியும்பொருள் வேறென்னையென்னுங் கடாவுக்குவிடைகூறி, அவ்விருவர்மதங்களையு மவற்றோடொருதன்மையவானசமயங்களையு மறுத்தவாறு. உபதேசியாயுள்ளவது வென்றதனால், உபிரறிவிக்கவேண்டாது தானேயறியுமியல்பிற் றென்னுஞ்சமவாதசைவர்மதம், ஈசுரவவிகாரிமதம், ஐக்கவாதசைவர் மதங்களையு மவற்றோடொரு தன்மையவானசமயங்களையுமறுத்தவாறு; இரண்டன்பாலு முளதாயுள்ளவதுவென்றதனால், ஆன்மாவினறிவு சத்தோடு கூடுமாறில்லையென்னும் பாடாணவாதசைவர், பேதவாதசைவர்முதலியோர் மதங்களையும், சத்தோடுகூடியவழி யொன்றாய்ப்போதலேயன்றியதன்பாலுளதாமாறில்லையென்னுஞ் சுத்தசைவர்மதத்தையும், அவற்றோடொருதன்மையவான சமயங்களையுமறுத்தவாறு; இவ்விரண்டினையுமறிவதாயெனவே, அவ்வறியுந் தன்மையிவ்விரண்டின்றன்மைபோலன்றி யிருளொளியலாக்கண்டன்மைபோல வேறாயதோர் தன்மையென்பதூஉம், உபதேசியாயெனவே, அஃதாகாயத்தின்குணமாயவோசையினியல்புபோலத் தன்னைவிளக்குவதாகிய வியஞ்சகமுள்வழிவிளங்குவதோர் தன்மையென்பதூஉம், இரண்டன்பாலுமுளதாயெனவே, அத்தன்மைபடிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாயமூந்துந்தன்மையென்பதூஉம் பெறப்பட்டன.

வெண்பா.

அருவுருவுந்தானறிதலாயிழையாயான்மா ... ✻
வருவுருவுமன்றாகுமுண்மை - யருவுருவாய்த் ... ✻
தோன்றியுடனில்லாதுதோன்றாதுமில்லாது ... ✻
தோன்றன்மலர்மணம்போற்றேர்க்கு. ... ... (௩)

அருவுரு - தோக்கு-எ-து - உ - ம் - எ - னின், அம்மூன்றனுள் முன்னையதனை வலியுறுத்தி யிரண்டலாமையை விளக்குதனுதலிற்று.

(இ-ள்.) ஆயிழையாயான்மாவருவுருவுந்தா னறிதலருவுருவுமன்றாகும்-எ-து-நறுகிய நூல்களையாராய்வதாகிய வுயிரோசத்தசத்தென்று மிரண்டினையு மறிவதாகலானஃதவ்விரண்டு மின்றியவற்றின்வேறும் - அற்றேல்அவ்விரண்டினையு மறியுமுயிர்க்குத் தன்னுண்

மையறியப்படுமோ படாதோவெனக் கடாயினர்க்கு, படுமெனின்,க ண்டேயளப்பட மூன்றனையுமறிவ தென்னாதிரண்டினையு மறிவ தாயென்றல் பொருந்தாது. படாதெனின், அறியப்படாத பொருள் சூனியமெனப்பட்டு வழுவாமாலெனின், உண்மையருவுருவாய்த்தோ ன்றியுடனில்லாது தோன்றுது மில்லாதுதோன்றன் மலர்மணம்போற் றொக்கு-எ-து-அவ்வான் மாவினுண்மைத்தன்மை யவ்விரண்டும்போல விளங்கித்தோன்றியவற்றோடொப்பநிற்பதுமன்று, விளங்காதுசூனி யமாய்நிற்பதுமன்றாய், மலரின்கண் வாசமவ்விரு வகையுமன்றியதன் கணடங்கித்தோன்றுமாறுபோலச் சத்திலுமசத்திலுஞ் சார்ந்ததன் வண்ணமாயடங்கித்தோன்றுவதோரியல்பா மாகலான், அஃதவை போலத் தனித்தறியப்படுவ தொன்றின்றியவ்விரண்டினையுமறியுமுக த்தானறியப்படுவதா மென்றவாறு.

ஆகலானஃதவைபோலத் தனித்தறியப்படுவ தொன்றின்றியவ் விரண்டினையுமறியுமுகத்தா னறியப்படுவதாமென்பது குறிப்பெச்சம். சுட்டுணர்விற்கு விடயமாகாமைபற்றிச் சத்தையருவென்றும், அதற் குவிடயமாதல்பற்றி யசத்தையுருவென்றுங்கூறினர். "உணருருவசத் து" என்புழி, உருவென்றதுமதுநோக்கி. செவ்வெண்டொகை விகாரத் தாற்றொக்கது. தான் - அசை. அறிதலானன்றாகுமெனவிசையும். இ ழை-நூலாகலானீண்டுச்சாத்திரத்தையுணர்த்திற்று. ஆய்தல்-நுணுகு தல். "ஓய்தலாய்தனிழற்றல் சாஅ, யாவயினுன்குமுள்ளதனுணுக் கம்" என்றார் தொல்காப்பியனாரும். ஆயிழையாயெனப்பொருளினு ணுக்கம் நூன்மேலேற்றப்பட்டது. இரண்டாவது விரித்துரைக்க. உ யிர்க்கறியுந் தன்மையுண்டாகலானன்றேவேதாகமமுதலிய நூல்களுள வாயினவென வதனை வலியுறுத்துவார் ஆயிழையாயான்மாவென வத னையுடம்பொடுபுணர்த்தோதினர். இக்கருத்தேபற்றி "பலகலையுலகினி லவுதலானும்" என்றார் புடைநூலாசிரியரும். இவ்வாறன்றி யாயிழை யாயென மகடூஉமுன்னிலையாக்குவார்க்கிவ்வுதாரணமேலதனைவலியுறு த்துதற்கெழுந்ததன்மேலுங் கூறியதுகூறலென்னும் வழுவாய்முடியு மென்றொழிக. தேற்றேகாரம் - விகாரத்தாற்றொக்கது. அருவுருவா யென்புழி ஆக்கச்சொல்-உவமப்பொருள் குறித்துநின்றது; "ஆள்வா ரிலிமாடாவேனோ" என்றாற்போல. தொக்குத்தோன்றல் மலர்மணம் போலெனக்கூட்டுக.

வெண்பா.

மயக்கமறாமருந்திற்றெளிந்தும் ௧
பெயர்த்துணர்சித்தாகாய்பேசி-லசத்துமலை ... ௨
நீயறிந்துசெய்வினைகளியன்றிவேறசத்துத் ௩
தானறிந்துதுய்யாமைதான் ... .(௪)

மயக்கம்-தாய்-எ-ன-உ-ம்-எ-னின், அங்ஙனமறியுமுயிர் சிவசத்தோடொப்பச் சித்தாகுமென்பானை நோக்கி யுபதேசியாயென்றதனைவலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) மயக்கமறாமருந்திற்றெளிந்தும்-எ-து-நின்னறிவை விளக்குதற்குரிய வியஞ்சக மில்வழி பொருளிடயத்தை யின்னதென்றறியமாட்டாது மயக்கத்தையுற்றும், பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்கநோய்க்கு மருந்தாய வியஞ்சகமுள்வழி யம்மயக்கநீங்கியதனையின்னதென்று நிச்சயித்தும் - பெயர்த்துணர் நீ சத்தாகாய் பேசில்-எ-து-இங்ஙனமாறிமாறி யுணர்ந்துவருகின்ற நீ சொல்லுமிடத்துச் சிவத்தோடொப்ப வறியுஞ் சத்தியுடையாயல்லை - அற்றேல் அசத்தாமென்போலுமெனின்; நீயறிந்து செய்வினைகளியன்றி யசத்துத் தானறிந்து துய்யாமை தானசத்துமலை-எ-து - வியஞ்சகமுள்வழியுநீ முன்னறிந்து செய்தவினைகளை யிப்பொழுது நீயேயறிந் தநுபவிக்கலல்லையன்றி நின்னின்வேறாய பாசமறிந்தநுபவிக்க மாட்டாமையானதனோடொப்ப வசத்துமாயுமல்லை - வேறு-எ-து-சத்தகுணமுடைய வாகாயம்போல வியஞ்சகமுள்வழியறியு மாற்றலுடைமையு மஃதில்வழி யவ்வாற்றலின்மையுமாகிய விரண்டுமுடைய நீ யவ்விரண்டற்கும் வேறாய்ச் சித்தசித்தாந் தன்மையுடையை யென்றவாறு.

மருந்திற்றெளிந்தெனவே, மயங்குதலஃதில் வழியென்பதுபெற்றாம். வியஞ்சகமில்வழித் தலைப்படுவதூஉம், அஃதுள் வழிநீங்கி நிற்பதூஉமாகிய மயக்கம், உண்டியில் வழித்தலைப்படுவதூஉ மஃதுள்வழிநீங்கி நிற்பதூஉமாகிய வியல்புடைய பசியோடொத்தலின் அதனைப்பசிநோயாகவும், நீக்கலொப்புமைபற்றி வியஞ்சகத்தைப் பசிநீக்குமருந்தாகவு முருவகஞ்செய்தார். இஃதேகதேசவுருவகம். மருந்தெனப் பொதுப்பட வுருவகஞ்செய்தாராயினு மறிந்து மறிந்துவேண்

டப்படு மாறின்மைக் கேற்புடையது பபிநோய்நீர்க்கு மருந்தேயாக வி னவ்வாறுரைக்கப்பட்டது. அது - பகுதிப்பொருள் விகுதி. உம்மையெண்ணின் கண்வந்தது. அசத்துமென்று மும்மையிறந்ததறி இயிற்று. தானென்பதுமுன்னையதேழுவா யுருபுபடுகின்றது பின்னையதசையில்லை. துவ்வாமை துய்யாமையென பகிறிர்று. சத்துடைய பொருள் சத்தம். அஃறில் பொருளசத்தமாகவி வவ்வடமொழிகளிண்டம் முக்கெட்டுக் குற்றியலுகரவீறுய் நின்றன; "காவலையான்" "பெற்றேன்றுயர்த்த பெருமான்" "பேறுசெய்து வாறுசெய்யத் திருவுளமே" என்புழிப்போல. அசித்துமலையென்பது பாடமாயின், மேற்சத்தாயென்றதனை யிசையெச்சமாகக்கொண்டு, சத்தாந்தன்மையுடையாயல்லை யதன்மேலொருசத்தாமாறியாவனமென் றுரைத்திவைத்துக்கொள்க. இவ்வாறன்றி யீண்டுச் சத்தாகா யசத்துமலையன் பவற்றை மேலருவுருவுமன்றுரு மென்றதன் பொருள்படக்கொண்டுரைப்பாருமுளர். அவரான்டே யமைந்து கிடந்தபொருளை மறித்துக் கூறவேண்டாமையும், பொயர்த்துணர் நீயெனவும், அறிந்துதய்யாமையெனவும், அறிவுடைமை யின்மைபற்றிக் கூறும்பொருள் அவையாதல் செல்லாமையுநோக்கிலர்.

வெண்பா.

மெய்ஞ்ஞானந்தன்னில்விளையாதசத்தாத ௧
லஞ்ஞானமுள்ளமனைதல்காண் - மெய்ஞ்ஞானந் ௨
தானேயுளதன்றேதன்கடனிருப்புப்போற் ... ௩
முனேயுளமுளவாத்தான். ... ... (௫)

மெய்ஞ்ஞானம்-தான்-என-து-உ-ம்-என-னின், அம்மபக்கமவ்வியிரோடியைபுடைய முதல்வனுக்கு முண்டுபோலுமெனவும் அறுதானுயிர்க்கெக்காலத்து வந்ததெனவுங் கடாவைவிடுக்கு முகத்தானிரண்டன் பாலுமுளதாமாறுவலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) அஞ்ஞானம்-என-து-மேற்கூறிப்போந்த மயக்காவது-மெய்ஞ்ஞானந் தன்னிலசத்தாதல் விளையாது-என-து-ஒருபெற்றித்தாயவறிவவனப் படுஞ்சிவத்தினெதிர் கதிர்முன்னிருள்போலன்லையுறுதலில்லதாகவின்றுண்டுள்ளதாதலின்றி - மெய்ஞ்ஞானந்தானே யுளதன்றே-என-து- அச்சிவமென்றுள்ளதன்றே - தானேயுள முளவாத்தான்

௦

எ-து-தாம்பொருந்துதற் குரிமையுடைய வுயிர்களுள்ளனவாக-உள்ள மெனாதல்-எ-து- அவ்வுயிர்களைப்பற்றி நிற்றல் -தன்கடனிருப்புப்போற்கால்-எ-து - தன்னரியகடலின் கண்ணுளதாதலின்றியக்கடலிடத்துளகாகியபொருளைப்பற்றி நிற்குமுப்புப்போல வென்றறிவாயாக வென்றவாறு.

விளையாதென்னும் வினையெச்சமறைஅணைதலென்னுந் தொழிற்பெயரோடுமுடிந்தது. தானென்பது கட்டுரைச்சுவைக்கண்வந்தது. தானேயுளமுளவாக்தானெவ்வுழி, தானென்பது முன்னையதெழுவாயும்பின்னையதசைநிலையுமாம். எயுளமென்னும்வினைத்தொகை "அறிவறிந்தமக்கட்பேறு" போலநின்றது. எய்தற்குரிமையாவது மேற்காட்டினும். தன்கடனிருப்புப் போலவென்றதனான் முப்பொருள்களும் வியாபாவியாப்பியங்களாய் நிற்குமாறும் பெறப்பட்டது. இரண்டன்கண்ணுமுயிர்க்கியைபுடைமைகூறவே யிரண்டன்பாலுமுளதாதல்வலியுறுத்தவாறுகாண்க. ஈண்டிருதிறனையு மறிவுளதெனவே, இருதிறனும் யசத்துமசத்துமெனப்பட்டன வெல்லாம்பிரமேயம், அவற்றையறியுஞ் சதசத்தாகியவுயிர் பிரமாதா, அவ்வுயிரினறிவாகிய சிற்சத்தி பிரமாணம்,அவ்வறிவுநிகழ்ச்சியே பிரமிதியென்பதூஉம், இருதிறனால் விளங்குமறிவுளதெனவே, அவ்விரண்டனுள், அசத்தாலறிவுவிளங்கும்வழி, தனக்குவேறாய்நின்றுவிளக்குவனவாய, காட்சி, அநுமானம், உரையெனப்படுமசத்தாகிய பாசஞானமூன்றும், சத்தானறிவுவிளங்கும்வழி, அன்னியமின்றித் தனக்காதாரமாயுடனின்று விளங்குஞ்சிவஞானமுந் தனக்குவியஞ்சகங்களாதலான், அதுபற்றியவையும் பிரமாணமென்றுபசரித்துக் கூறப்படுமென்பதூஉம், இருதிறனினுமறிவுளதெனவே, ஈரிடத்துங்கேடின்றி யசத்தான்விளங்கியசத்தையறிவுழி யசத்தின்பாலுஞ் சத்தால்விளங்கிச் சத்தையறிவுழிச் சத்தின்பாலுமதுவதுவாயழுந்து மென்பதூஉம் பெறுதும். இவ்வாறன்றி வியஞ்சகங்களையே பிரமாணமென்னுந் தார்க்கிகர்முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், அவ்வியஞ்சகங்களா னிகழும் பிரமிதிவேறுபாடும், அவற்றதியல்புமீண்டு விரிப்பிற்பெருகும்; பௌட்கரமுதலிய சிவாகமங்களுட்கண்டுகொள்க. ஏழாஞ்சூத்திரமுடிந்தது.

எட்டாஞ்சூத்திரம்.

ஐம்புலவேடரினயர்ந்தனைவளர்ந்தெனத் ... ௧
தம்முதல்குருவுமாய்த்தவத்தினிலுணர்த்தவிட்
டன்னியமின்மையினரன்கழல்செலுமே ... ௨

எ-து-எ-னின், சிவஞானத்தினையுணரு முறைமையினையுணர்த்துதனுதலிற்று.

எ-து-க-ளா-எ-னின், சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அவ்வான்மாவினறிவாவது மேலிருதிறனென்றதனுள், அசத்தான் விளங்கியசத்தின்பாலுளதா யசத்தினையறிந்து நின்றவாறும், சத்தான்விளங்கிச் சத்தின்பாலுளதாய்ச் சத்தினையறிந்துநிற்குமாறுந்தெரிசிக்கு முறைமையினையுணர்த்து முகத்தாற்சாதித்தற்குரியவதிகாரந்தனக்குண்டென, மேலைச்சூத்திரத்தானறிந்த வான்மாவுக்குச்சாதித்ததனாற் பெறப்படும்பயனும், அதற்குச்சிறந்த சாதனமாவதும் அதுவருவாயுமிவையென்ப துணர்த்துதலிவ்வெட்டாஞ் சூத்திரத்தின்கருத்தென்றவாறு.

இதனானேசூத்திரவியைபு மினிதுவிளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு - உயிர்தான்முன்னே செய்துகொள்ளப்பட்ட புண்ணியவிசேடத்தாற் றனக்கந்தரியாமியாயிதுகாறுமுன்னின்றுணர்த்திவந்த பரம்பொருளிப்பொழுது குருவடிவமுங் கொண்டெழுந்தருளிவந்து, சிவதீக்கைசெய்து, மன்னவகுமாரனாகிய நீ,ஐம்பொறிகளாகிய வேடருட்பட்டு, வளர்ந்து,நின் பெருந்தகைமையையறியாது, மயங்கி, இடர்ப்பட்டாய், நின்பெருந்தகைமையாவதுஇவ்வியல்பிற்றென்றறிவுறுப்ப, அறிந்தமாத்திரையே, அவ்வேடரைவிட்டுநீங்கி, அன்னியமின்றியன்னியமாந் தன்மையினிலைபெற்று, அம்முதல்வன்றிருவடிகளை யணையுமென்றவாறு.

உயிரென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது, தவத்தினிற்குருவுமாய் வளர்ந்தயர்ந்தனையென வுணர்த்தவிட்டுச்செல்லுமெனவியையும். புலன்.ஆகுபெயர். வளர்ந்தயர்ந்தனையென்பது - சாந்துபுசழ்பெற்றானென்புழிப்போலக்காரணகாரியப் பொருட்டாய்நின்றது. தம்முதலென்றதுவேறுமுடிபாகலிற் பால்வழுவன்மையுணர்க. குருவுமென்றவும்மை யுயிர்க்குயிராய் நின்றுணர்த்தியது உமன்றியெனவிறந்தது தழீஇயிற்று; சிறப்புமாம். அன்னியமின்மை - அத்துவிதம்; அஃதாவது - சேறலைப்பயப்பித்ததா யாண்டுளதாகிய வியைபு. அரனென்பது - சுட்டுப்பெயர்படநின்றது. வெண்கொற்றக்குடையுகவமணிமுடியுஞ்சிங்காசனமுமன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம், அதுபோலப்பிரபஞ்ச மெல்லாவற்றிற்கு மூலகாரணமாமியல்பாகிய வொருபெருவெண்கொற்றக்குடையும், எவற்றையுமொருங்கேயோரியல்பானறியும் பேரறிவாகிய வொருபெருஞ்சுடர்முடியும், அங்கங்கேயுயிர்க்குயிராய் நின்றெவற்றினையுஞ்செலுத்து மியல்பாகிய வொருபெருஞ் சிங்காதனமும், பிறரொருவர்க்கின்றித் தனக்கேயுரிமையாகச்சிறந்தமைபற்றி, பசுக்களுக்குப் பாசங்களையரித்தலான் அரனென்னுந்திருப்பெயருடைய .முதல்வனைமன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப்பெருஞ்செல்வ முழுதுந்தனதேயாகக் கொண்டநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ் சித்தெனப்படுஞ் சாதியொருமையும்பற்றியான்மாவை மன்னவகுமாரனாகவும், அவ்வான்மாவையறிவுப்பெருஞ் செல்வமுழுவதையு மாறலைத்துக்கொண்டு சிறுமையுறுத்தலும் விதிவிலக்கையிழப்பித்திழி தொழிலினிற்பித்தலுமாகியவியல்புபற்றி, ஐம்பொறிகளை வேடராகவுமுருவகஞ்செய்தார். இஃதேகதேசவுருவகம்." ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தென,, எனவே, ஐம்புலவேடரின் வளர்ந்தயர்தலு மறுவாதமுகத்தாற் பெற்றும். இதனுள், "தவத்தினினுணர்த்த" என்றதோரதிகரணம்? "தம்முதல் குருவுமாய்" என்றதோரதிகரணம்? "ஐம்புலவேடரினயர்ந்தனைவளர்ந்தென" என்றதோரதிகரணம்;"விட்டன்னிய மின்மையினரன்கழல் செலுமே" என்றதோரதிகரணம்; ஆகநான்கதிகரணத்ததிச் சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டிவ்வான்மாக்களுக்கு முற்செய்ததவத்தால் ஞானநிகழுமென்றது-எ-து-மே-ள்-எ-னின், மேற்கூறிப்போந்த சாதகராற்செய்யப்படுஞ்சாதனமும், அதுவருவாயும், வேறுவேறுகக்கூறுஞ் சமயத்தாரைநோக்கி, சூத்திரத்தின்முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோட்ளுதலிற்று.

(இ-ள்.) வெ-ரைட.

மேற்கூறிப்போந்த வியல்புடையவான்மாக்களுக் கென்பார்இவ்வான்மாக்களுக்கென்றார். படிமுறையானன்றியிவ்வொரு பிறவியிற்செய்ததவந்தானேயமையாதென்ப துணர்த்துதற்கு முற்செய்தவமென விசேடித்தார். ஈண்டுஞானமென்றது- குரவனுணர்த்தியவாறு சிவஞானக்கண்ணாகக்கொண்டு அறிவதாகிய சாதனவறிவின்மேற்று. நிகழ்தல் - ஐயந்திரிபின்றி விளங்குதல்.

மேற்சரியைகிரியா யோகங்களைச்செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டி யல்லதுமோட்சத்தைக் கொடாவாகலான்-எ-து-ஏது-எ-னின், தவங்களேசாதனமாதலமையும் ஞானமெற்றுக்கென்பாரைநோக்கி, மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) வெ-ரை.

ஈண்டுத்தவமெனப்பட்டன பிறவல்லவென்பார் சரியைகிரியா யோகங்களையெனக் கிளந்துரைத்தார். கிரியாயோகங்க ளென்றும்உம்மைத்தொகை வடநூன்முடிபு. கிரியாயோக மிரண்டற்கும் தீக்கையொன்றென்பதுதோன்ற அவ்விரண்டனையுந்தொகுத்தோதி, சரியையைத்தமிழுக்குரியவீற்றான் வேறுவைத்தார். ஆளுடையபிள்ளையார் முதலாயினோர்க்குத் தவமின்றியுஞானநிகழ்ந்தவா றென்னையென்னுங் கடாவைவிடுத்தற்கு மேற்செய்துழியென வீண்டும்வலியுறுத்தார். மேலாகியவுண்மைச் சரியைகிரியாயோகங்களை யெனினுமமையும்.

காட்டிக்கொடுக்கு மெனற்பாலதனை யெதிர்மறைமுகத்தாற் கூறினார் ஞானத்தையின்றி யமையாமையுணர்த்துதற்கு. சரியைகிரியாயோக ங்களைச்செய்துழியென்றது உபலக்கணமாகலிற் றீக்கைபெற்றுழிய துவு ஞானத்தைக்காட்டி யல்லதுமோட்சத்தைக் கொடாதெனக்கொ ள்க. அவையெல்லாம்ஞானத்தைக் காட்டியல்லதுமோட்சத்தைக்கொ டாமையை வலியுறுத்துவார் நன்னெறியாகிய ஞானத்தையென வி சேடித்தார். நன்மையெனப்படுவனவெல்லாவற்றினுஞ்சிறந்தநன்மை யாவதுவீடுபேறென்பது. அதனைத்தலைப்படுவன வனைத்துந்தன்கண் ணேவந்துகூடுநின்ற பெருநெறியாகலானுமதுநன்னெறி யெனப்பட் டது. நன்னெறி, சன்மார்க்கம் என்பனவொருபொருட்கிளவி.

வெண்பா.

தவஞ்செய்தாரென்றுந்தவலோகஞ்சார்ந்து ...
பவஞ்செய்துபற்றறுப்பாராகத் - தவஞ்செய்த ...
நற்சார்பில்வந்துதித்துஞானத்தைநண்ணுதலைக் ...
கற்றார்சூழ்சொல்லுமாங்கண்டு. ... ... (௧)

தவம்-கண்டு-எ-து-உ-ம்-எ-னின், மேற்சரியைகிரியா யோகங்களைச் செய்தாரவற்றான் ஞானத்தைக்காணுமுறைமை யெவ்வாறென் பாரைநோக்கி யஃதாமாறுணர்த்தி யேதுவைவலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) தவஞ்செய்தார்-எ-து- சரியைமுதலியவற்றைச் செய்தார்கள்-என்றுந்தவலோகஞ்சார்ந்து-எ-து- அவ்வத்தவப்பயன்களைப் பயப்பிக்குஞ் சாலோகாதிபதங்களை யொருதலையாக நண்ணியாண்டு ளவாகியவின்பங்களையநுபவித்து - பற்றுப்பவஞ்செய் தறுப்பாராக- எ-து-முன்னுடம்பிற்கு காளடுத்த வினைகாட்டுநிமித்தம் பற்றி யெழுந்தவவ்வினைமீள நிலத்தின்கட்பிறந் தநுபவித்துநீங்கிக்கோடற் பொருட்டு - தவஞ்செய்தநற்சார்பில்வந்துதித்து ஞானத்தைநண்ணு தலை-எ-து-மீளத்தவஞ் செய்தற்குரிய வுயர்ந்தகுலத்தின்கண் வந்து தோன்றித்தவத்துறையா னவ்விடயப்பற்று முறுகாவண்ணமறுத்துத் தத்துவஞானத்தைத் தலைப்படுவாராதலை - கற்றார்சூழ்ந்துசொல்

லுமாம்-எ-து-விட்டுநூல்களைக் கற்றாதுஞ்சியநூற் கருத்துணர்ந்துசொல்லுமென்றவாறு.

தவஞ்சானாகப்பிறிதொன்று தானாக இவ்வுலகத்துடம்பொடுநின் றிட்டியவினையெல்லாம் அவ்வுலகத்திற்செலுத்தித் தம்போகங்களைப் பயந்தேவிடுமாகலா னவற்றைபொருநாளும் பிறழமாட்டாரென்பார் என்றுந் தவலோகஞ் சார்ந்தென்றார். ஆகவென்னுஞ் செயவெனெச் சம் உண்ணவந்தானென்புழிப்போலத்தற்பொருட்டாய்நின்றது. பற்ற றுத்தற்பொருட்டுவந்துதித்தெனவே யாண்டுப்பற்றுச் செல்லாதவழி யவ்வுலகத்துநின்றாங்கே ஞானத்தை நண்ணுவரென்பதூஉம் பெறு தும். கற்றாது சொல்லுதற்றொழில் சூழ்ச்சிமேலேற்றப்பட்டது. ஆம் - அசை. நற்சார்பில்வந்துதித்து ஞானத்தைநண்ணுதலென்ற அருத்தாபத்தியா னிழிகுலத்தோர்தத்துவஞானத்துக் குரியரல்லரெ ன்பது பெறப்பட்டது.

வெண்பா.

பசித்துண்டுபின்னும்பசிப்பானையொக்கு ... ...*
மிசைத்துவருவினையிலின்ப - மிசைத்த ... ... *
இருவினையொப்பிற்பிறவத்தான் ... ...*
மருவுவன்ஞானத்தைவந்து .. ..(௨)

பசித்து-வந்து-எ-து-உ-ம்-எ-னின், சரியைமுதலிய தவங்களே தத்துவஞானத்தைக்காட்டுமென யாப்புறுத்தோதியதென்னை வேதத் துட்கூறிய வேள்விமுதலாயினவுந் தத்துவஞானத்தைக் காட்டுமென் றலமையுமென, பட்டாசாரியன்மதம்பற்றிக் கூறுவாரைநோக்கியே துவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) இசைத்துவருவினையிலின்பம்-எ-து - ஒரு நல்வினைசெய் வான்றொடங்கி யறநூலை யாய்வாராதுணர்வின்கண் விடயமாய்வரும் பொழுதே தம்மாற்பெறப்படுங் காமியபயன்களை யுடன்கொண்டே வருகின்றனவாய வேள்விமுதலிய வறங்களின்பயனாகிய வின்பம்- பசித்துண்டுபின்னும் பசிப்பானைபொக்கும்-எ-து- முன்னர்ப்பசித்து ண்டு பின்னும்பசிப்பானுங் கவ்வுண்டி யான்வருமின்பத்தை யொக்கு

மாலவாய் - இசைத்தவிருவினை யிறப்பிறவத்தாரொப்பில் - எ-து - ஒருவனுக்கு ஞானத்தைத்தடுத்துப் பந்தமுறுத்துதற்கட் பொன்விலங்கு மிருப்புவிலங்கும்போலத் தம்முட்சமப்படுத்துணர்வனவாகிய வறம் பாவமிரண்டுந் தம்மைப்போலநுபவமாத்திரையாற் கெடுதலின்றி மேன்மேன்முறுகி வளர்வனவாய சரியைமுதலிய தவங்களானே நேராக வொத்தகால் - வந்துஞானத்தைமருவுவனும் - எ-து - அத்தவமுதிர்ச்சியுடைமையான் முன்னர்க்கூறப்படு ஞானகுருவைத்தேடிவந்துஞானத்தைத் தலைப்படுவனென்றவாறு.

வேள்விமுதலாயினவெல்லா மழிதன்மாலையவாயகாமியங்களைப் பயப்பனவன்றித் தத்துவஞானத்தைப் பயவாதென்றற் கவற்றைவிதித்தநூல்களை சாங்கென்பார் இசைத்துவருவினையென்றும், அவை ஞானத்தைப் பயவாமைமாத்திரையேயன்றித் தீவினைபோல வதுநிகழவொட்டாது தடைசெய்துநிற்றலு முடைமையினவற்றதுசூழ்வேயின்மைக்குக்காரணமாவதென்பார் இசைத்தவிருவினை யொப்பிலவென்றுங்கூறினார். ஒப்பில் என்னும் வினையெச்சம் மருவுவனென்னும் பிறவினைமுதல்வினைகொண்டது. தேற்றேகாரம் - விகாரத்தாற்றொக்கது. ஆம் - அசை. வருதல் - இடவழுவமைதி. பசிப்பானென்றது - ஆகுபெயர். இசைத்துவருவினையென நூலின்றொழில் வினைமேலேற்றப்பட்டது. மிசைத்தவிருவினையெனப் பாடமோதி யிருவினைகளுள் மிக்கவிருவினையாகிய பிரமக்கொலை பரிமேதவேள்விபோல்வன தம்முளொருங்கே பயன்றருவனவாயொத்த காலத்தென்றுரைப்பாருமுளர். அஃதிண்டைக்குப் பயன்படாமையுஞ் சித்தாந்தத்துக்கேலாமையுமறிக. இசைத்தவிருவினையாயி லின்பம்பசிதந்துண்டு பின்னும் பசிப்பானையாக்குமெனவே யிறப்பிறவத்தான் மருவப்படுஞானம் பசித்துண்டு பின்னும் பசித்தலில்லாதகடவுளர்க் கவ்வமிழ்தவுண்டியானாய பயனையாக்குமென்பதூஉம்பெறப்பட்டது. படவே, அவ்வமிழ்தவுண்டிகளா கிளைமூப்பின்றிநிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதன்மாத்திரையேயன்றிப் பசிதீர்தலாகிய வவாந்தரப்பயனையுந் தருமாறுபோல விறப்பிறவமுந் தத்துவஞானத்தைப் பயத்தன்மாத்திரையேயன்றித் தத்தம்பதமுத்தியாகிய வவாந்தரப்பயனைப் பயத்தலு மமைவுடைத் தாமாறுகண்டுகொள்க.

இரண்டாமதிகரணம்.

இனி யிவ்வான்மாக்களுக்குத் தமதுமுதல்வனே குருவுமாயுணர்த்துமென்றது-எ-து-மே-ள்-எ-னின், மேற்கூறியவாற்றா னிசமுஞானத்தையுணர்த்துவார் கலைஞானங்களை யுணர்த்துவார்போல நம்மனோரிலொருவராதலமையுமெனச் சாங்கியர் நையாயிகர்முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவையாசங்கித்துச் சூத்திரத்தினிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) மேற்கூறியவாற்றாற் சரியைமுதலிய மூன்றுமுற்றியபின் னரிம்முற்றுதலானே மலபரிபாகஞ் சத்திநிபாதம்நிகழ்ந்து தத்துவஞானத்தின் அவாவுதலையுடைய வுயிர்கட்கிதுகாறுந் தமக்குமுதலாயுண்ணின்றுணர்த்திவந்த பரம்பொருளே யப்பருவமறிந்து குருமூர்த்தமாயெழுந்தருளிவந்து அதனை யறிவுறுக்குமென்றவாறு.

எனவே யேனையோர்க்கது கூடாதென்றவாறாயிற்று. இக்கருத்தேபற்றி "அகத்துறுநோய்க்குள்ளினானன்றி யதனைச்-சகத்தவருங் காண்பரோதான்" என்றார் புடைநூலாசிரியரும். ஏகாரந்தேற்றம்.

அவனன்னியமின்றிச் சைதன்னியசொரூபியாய் நிற்றலான் எ-து-ஏது-எ-னின், மாயாவொருவன் மாயாவுருவினையேயான், ஏயுமெனி லெம்மனோரிலொருவனாய் முடியுமாகலிற்றமது முதல்குருமூர்த்தியாதாரமாகத் தெரித்துநின்றுணர்த்துமென்றலே யமைவுடைத்தெனப் பொதுவகையான் அதிட்டானபக்கங்கூறுவானாநோக்கிச் சிறப்புவகையா னுவேசபக்கமாமாறுணர்த்தி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) அம்முதல்வன் பாலினெய்போலமறைந்து வேறாய்நிற்றலன்றிச் சுத்தான்மசைதன்னியமே தனக்குச்சொரூபமாகக்கொண்டு தயிரினெய்போல வாண்டுவிளங்கிநிற்றலா னிவ்வான்மாக்களுக்குத் தமதுமுதல்வனே குருவுமாயுணர்த்துமெனமேற்கொண்டதென்றவாறு.

பாலினெய்போலவேறாய்மறைந்துநின்று செலுத்தப்படுவனவற்றினும் பொதுவாய்ச்செல்வதாகிய வதிட்டான பக்கங்கொள்வாருக்

சேனைச்சமயமருவிவாராவான் சேறலின் அஃதின்னுடைக்கைமையுடைத்த ன்றென்பதாம். மைதுன்னியமென்றூர் யாகாநீர்க்கவென்ப துணாத் துதற்கு.

வெண்பா.

மெய்ஞ்ஞானந்தானேவிளையும்விஞ்ஞானகலர்க் ....
கஞ்ஞானவச்சகலர்க்கக்குருவாய்-மெய்ஞ்ஞானம்...
பின்னுணர்த்துமன்றிப்பிரளயாகலருக்கு ... ...
முன்னுணர்த்துந்தான்குருவாய்முன் ... ... (௩)

மெய்ஞ்ஞானம்-முன் - என்பது - உம்-என-வின், ஓரோவிடங்களிற் குருவாய்வந்துணர்த்துதலன்றியும் ஞானநிகழுமாறென்னை யென்பா ரைநோக்கி யதனைவகைசெய்துணர்த்தி வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) விஞ்ஞானகலர்க்குத்தானே மெய்ஞ்ஞானம்விளையும்- என்பது-அம்முதல்வன் மூவகையான்மாக்களுள் விஞ்ஞானகலராயினார் க்குத் தன்மையினின்றவாறே தத்துவஞானத்தைவிளைப்பன்-அன்றிப் பிரளயாகலர்க்குத் தான்குருவாய்முன்னுணர்த்தும்-என்பது-அவ்வாறன் றிப் பிரளயாகலராயினார்க்கு நாற்றோளு முக்கண்ணுங் கறைமிடறுமுடை ய வுருப்பிற்றாய் முத்தொழினடாத்திநின்ற தன்னியற்கைவடிவே குருவடிவாகக்காட்டி முன்னாகநின்று தத்துவஞானத்தை யுபதேசித் துணர்த்துவன்-அஞ்ஞானவச்சகலர்க்குக்குருவாய்ப்பின் மெய்ஞ்ஞான முணர்த்தும்-என்பது-அவிச்சையையுடைய சகலராயினார்க்கு அவர்வடி வுபோலும் வடிவுடையகுருவாகி யவ்வடிவின்பினாக மறைந்துநி ன்று தத்துவஞானத்தையுணர்த்துவன்-முன் - என்பது-அவ்வேறுபாட் டையுயிவாயாக வென்றவாறு.

முன்னென்றதனைமுன்னைப் பொருளென்றுரைத்து எழுவாயா கக்கொடலுமொன்று.

விளையுமென்பது அரசனெடுத்தவாலயமென் புழிப்போலவின் விருதிநோக்குநின்றது. இவ்வாறன்றி யெளிதினடப்படுதனோக்கி யரி

சிதானே யட்டதென்றாற்போல, எளிதின்விளக்கப்படுதனோக்கிமெய்ஞ்ஞானந்தானே விளையுமென்றாரெனினுமமையும் "உண்ணின்றருளி" என்றார்புடை நூலாசிரியரும். ஈண்டஞ்ஞானமென்றது அவிச்சையையென்பது சகலர்க்கேயுடையா யோதியவாற்றானறிக. அச்சகலரென்றது தவஞ்செய்தாரென மேலெடுத்துக்கொள்ளப்பட்ட சகலரென்றவாறு. அக்குருவென்றது மேற்கோளிற்கூறிப்போந்த குருவென்றவாறு. தானேவிளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் எனவே, விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும், பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப்படர்க்கையினு நின்றுணர்த்துமென் றுரைசெய்தவாறுகாண்க. இவற்றுண்முன்னையவிரண்டுங், நிராதாரமெனவும், பின்னையதுசாதாரமெனவும், கூறப்படும்.

வெண்பா.

அறிவிக்கவன்றியறியாவுளங்கள் ... ... *
செறியுமாமுன்பின்குறைக - ணெறியிற் ... *
குறையுடையசொற்கொள்ளார்கொள்பவத்தில்வீடென்
குறைவில்சகன்சூழ்கொள்பவர்க்கு. ... ... (௬)

அறிவிக்க- கொள்பவர்க்கு-எ-து-உ-ம்-எ-னின், விஞ்ஞானகலர்முதலியமூவர்க்குமோரியல்பி னுணர்த்தாது, அவ்வாறுதன்மையினு முன்னிலையினும் பின்னிலையினு முணர்த்துதலெற்றுக் கென்பாரை நோக்கி, காரணங்கூறி அதனைவலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) ஊங்கணெறியி னறிவிக்கவன்றியறியா-எ-து- உயிர்களெல்லாந் தமக்குரியபடிவழியின்வைத்து முதல்வனறிவிக்கவறியு மியல்பினவன்றி யொன்றுபோலறிவிக்கவறியு மியல்பினவல்லவாகலான்- குறைவில்சகன்சூழ் கொள்பவர்க்கு-எ - து - அறிவாற்குறைபாடில்லாத சகக்கடவுள னுபதேசமொழியைக்கொண் டொழுகியல்பினராகியபிரளயாகலர்சகலர்க்கு - குறைகண்முன்பின் செறியுமாம்-எ-து- அவ்வறிவித்தலறிதலாகிய குறைகண்முன்னிலையினும் பின்னிலையினு நிகழ்வனவாம் - குறையுடையசொற்கொள்ளார் கொள்பவத்தில்வீடென்-எ-து- குறைவில்சகனாகிய குரவனுடைய வுபதேசமொழிகொண்டொழுகவேண்டாதாராகிய விஞ்ஞானகலர்க்குமுதல்வனாற் கொள்

ளப்பட்டதன்றுண்மை மாத்திரையின் வீடுபயக்கு முணர்வுண்டென் றறிவாயாக வென்றவாறு.

குறை - இன்றியமையாப்பொருள். அது" வினைக்குறைதீர்ந்தா ரிற்றீர்ந்தன்றுலகு,, என்பதனுட் பரிமேலழகருரையானு முணர்க. பலம் - சம்பவம் - உண்மை - என்பனவொருபொருட்கிளவி. வீடு பயக்குமுணர்வை வீடென்றதுஞ்சூழ்ச்சி பயக்குமுபதேசமொழியைச் சூழ்ச்சியென்றதுங்காரணகாரியமாக வுபசரிக்கப்பட்டன.

கொள்பவர்கொள்ளாரென்பனவுமவை. கொள்ளார்க்கென்னு நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது; ஐந்தவித்தானாற்றல்" "என்புழிப் போல. ஆம்விடைவினையையும் வீடாமெனப்பாட மோதுவாருமுளர். மேலிவெண்பாவின் முன்னுணர்த்தும் பின்னுணர்த்துந்தானே விளையு மெனக்கூறியவற்றைவிண்டு தெரிவினறிவிக்கவன்றி யறியாவாகலான துமுன்செய்யும் பின்செய்யும் பவத்தினுமெனக் காரணங்கூட்டி வலியுறுத்தினார். இதற்குப்பிறரெல்லாந்தத்தமக்கு வேண்டியவாறே மேலிவெண்பாவோடியை பறவுரைத்தார். அல்லதூஉம்," அறிவிக்க வல்லதறியாமை, உபதேசியாவென வான்மாவினியல்புகூறும் வழிப் பெறப்பட்டதாகலி னதனையீண்டிம்புனருக்கியாற் கூறவேண்டாமை யின்மேலது வலியுறுத்தற்கேற்புடைய வறிவிக்கவறிதற்கட்படும் விசேடமாத்திரையே யீண்டெடுத்தோதினார் என்றுணர்க. படிவழியின் வைத்தறி விக்கவன்றியறியாமை, "பக்குவம்வீடுந் தெரியருட்பதுவறப் படிவழிசென்றுசென்றேறி,, என்பதனானுமறிக.

வெண்பா.

இல்லாமுலைப்பாலுங்கண்ணீருமேக்கிறைபா ... ௧
னெல்லாமுளவாமாவீர்நிழல்போ - லில்லா ... ௨
வருவாகிநின்றானையாரறிவார்தானே ௩
யுருவாகித்தோன்றானேலுற்று. ... ... (௫)

இல்லா-உற்று-எ-நு-உ-ம்-எ-னின், அம்மூத்திறத்து ளிவ்விடைக் கேடுதுக்கொண்ட விஞ்ஞானவச்சகலர்க்குக் குருவாதலேனையபோ லன்மையின், உபசாரமேயன்றி யேனையபோலுண்மையாதல் செல் லாதென்பாரைநோக்கி. உண்மையாதலேயுவமை முகத்தான்வலியுறு த்துதனுதலிற்று.

(இ-ள்) நல்லாய்-எ-து- அறிவானன்மையையுடைய மாணாக்க னே - ஏந்திழைபாலில்லா முலைப்பாலுங்கண்ணீரு முளவாமால்-எ-து ஏந்தியவிழைகளையுடையாட்குக் குழவிமாட்டுளதாகி வருவதாகியவ ன்பினைப்பிறரறியு மாறுவெளிப்படுத்து மவ்வன்பினுருவாகிய முலைப் பாலுங்கண்ணீருமவண் மாட்டுக்குழவியைக்காணு முன்னில்லவாய்ப் பின்னுளவாமதுபோல - நீர்நிழல்போலில்லா வருவாகிநின்றானையா ரறிவார்தானேயுருவாகி யுற்றுத்தோன்றானேல்-எ-து- நீரின்கண்ணி ழல்போலுயிர்கண் மாட்டுப்புலப்படுதலில்லாத வருவமாய்நின்றமுத ல்வனை யார்தாமறிவாரவனே குருவடிவாய்வந்து தோன்றிநின்றுணர் த்தானாயினென்றவாறு.

ஒருவருமில்லையென்பதாம். இஃதெடுத்துக்காட்டுவமை. இன்றி யமையாமை யுணர்த்துவார் தோன்றானேலாரறிவாரென வெதிர்மறை முகத்தாற்கூறினார். பொருளுக்கோதியதனையுவமையினுங் கூட்டியே ற்குமாறுரைக்க. - முலைப்பாலுங்கண்ணீருமன்பை விளக்குமென்பது. "சுரந்ததிருமுலைக்கே துய்யதிருஞானஞ்-சுரந்துண்டார்பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த - தனமுடையாடென் பாண்டிமாதேவி தாழ்ந்த- மனமுடையாளன்பிருந்தவாறு" என்பதனானும், "அன்பிற்குமுண் டோவடைக்குந்தாழார்வலர், புன்கணீர்பூசறரும்" என்பதனானுமறிக. அவ்விரண்டுமன்பின் வடிவேபிறவல்லவென்பது அன்புநிகழ்தற்குரிய காரணமுள்வழிவெளிப்பட்டு அஃதில்வழிவெளிப்படாத வொற்றுமை நோக்கிக்கண்டுகொள்க. இவ்வொற்றுமையுணர்த்துவார் இல்லவாயு ளவாமென்றார். இல்லவென்பது முற்றெச்சக்குறிப்பு. ஆல்-அசை, நீரகத்தியக்குமுயிர்கட்கிடங் கொடுத்தலுண்மையானீரின்கண் வெளி யுண்டென்பதூஉம், உண்டாகவே, ஆண்டுநீருக்கு னிழலுண்டென்ப தூஉம்பெறப்பட்டன. அந்நிழல்வேறுநில்லாது நீரொடுவிரவிநிற்றலி னீர்போற்புலப்படாதாயிற்று; அதுபோலச்சிவ சைதன்னியமும்யா னென்னுமுணர்விற்குவிடயமாய்ப் புலப்படுமான்மசைதன்னியத்தோ டுவிரவிப்புலப்படாது நிற்பதொன்றென்பார் நீர்நிழல்போலில்லாவரு வாகிநின்றானையென்றார்.

மூன்றாமதிகரணம்.

இனியிவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான்மயங்கித்தம்மையுணரா தென்றது-எ-து-மே-ள்-எ-னின், விடயஞானத்தை விளக்குமைம் பொறிகளேதத்துவ ஞானத்தைவிளக்குதற்குமமையும்; தம்முதலகுருவுமாதல்வேண்டாவென, ஸ்ரீசிவாக்கிராக்தவாதசைவர் மதம்பற்றிஎழுங்கடாவையாசங்கித்து, சூத்திரத்தின்மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோடன்றுதலிற்று.

இவ்வாறுரையாக்கால் இனியென்பதனு லுணர்த்தப்படுமேலைய திகரணத்தோடுளதாகிய வியைபுபெறப்படாமை யறிக.

(இ-ள்.) வெ-டை.

உணர்வு-ஆகுபெயர்.

அவைதாம்பளிங்கில்விட்டவன்னம் போற்காட்டிற்றைக்காட்டிநிற்றலான்-எ-து-ஏது-எ-னின், அவ்வைவிளக்குங்கருவியான் மயக்கநிகழுமாயியாங்கனமென்பானைநோக்கி, மேற்கோளைச்சாதித்தனுதலிற்று.

(இ-ள்) படிகத்தின்வைத்த பல்வேறுவகைப்பட்ட நிறங்கள்படிகவொளியைக்கீழ்ப்படுத்துத் தத்தம்மியல்பினையே விளக்கிநிற்குமாறுபோல, அவ்வைம்பொறிகடாம் ஆன்மசொரூபத்தைக் கீழ்ப்படுத்துத்தம்மாற் காட்டப்பட்ட தத்தம்விடயமாத்திரையே யவ்வான்மாவுக்குக்காட்டிநிற்பனவாகலான் இனியிவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான்மயங்கித்தம்மையுணராதென மேற்கொண்டதென்றவாறு.

விடயங்களுள்ளும் அவ்வவ்விடயமாத்திரையே யவ்வவ்விந்திரியங்காட்டவல்லுமென்பார் காட்டிற்றையெனவொன்றறி சொல்லாற் கூறினார்.

வெண்பா.

பன்னிறமேகாட்டும்படிகம்போலிந்திரியந் ... ❀
தன்னிறமேகாட்டுந்தகைநினைந்து - பன்னிறத்துப் ❀
பொய்ப்புலனைவேறுணர்ந்துபொய்பொய்யாமெய்கண்டான்
மெய்ப்பொருட்குத்தைவமாம்வேறு. ... ...(௬)

பன்னிற-வேறு-எ-து-உ-ம்-எ-னின், அங்ஙனங் காட்டிற்றையே காட்டிநிற்குமாயின், அவ்விந்திரியங்களுள் வழிக்கம்முதலகுருவுமா யுணர்த்தினுமுணர்தல் செல்லாதுபோலுமென்பாரை நோக்கி, உணர் தற்குபாயங்கூறி, அதனைவலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.)பன்னிறமேகாட்டும் படிகம்போ லிந்திரியம் தன்னிறமே காட்டுந்தகை யினைந்து-எ-து-தன்னாற் சாரப்பட்ட பன்னிறங்களினிய ல்பே தன்மாட்டுக்காட்டி நிற்கும் பொதுவியல்புடைய படிகம்போல, தன்னாற் சாரப்பட்ட விந்திரியங்களி னியல்பையே சார்ந்ததன் வண் ணமாய்த் தன்மாட்டு விளங்கி நிற்குந் தனது பொதுவியல்பை முன் னர்ச் சிந்தித்தறிந்துகொண்டு, பின்பு- பன்னிறத்துப் பொய்ப்புலனை வேறுணர்ந்து-எ-து - அந்நிறங்கள் படிகத்துக்கு வேறென்றறியுமாறு போலவும் பலவகை யியல்புடைய பொதுவியல்பைச் செய்யும் பொ றிகளைத் தன்னின் வேறெனத்தெளிந்து - பொய்பொய்யா மெய்கண் டால்-எ-து-அவற்றானாயவப் பொதுவியல்பு பொய்யாயொழியுமாறு தனது சிறப்பியல்பை யுணர்ந்தானாயின் - வேறுமெய்ப் பொருட் குத்தைவமாம்-எ-து-அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேறாகிய சிவச த்தினதியல்பு தன்மாட்டு விளங்கச்செய்யு மாகலினச் சிவசத்துக்கடி மையாம்-எ-று.

ஈண்டுப்பொய்-மெய்-எனப்பட்டன அப்பொருளவாதல் மேலே காட்டினும். தைவமென்பது- தேவனதுடைமையென்னும் பொருட் டாய வடமொழிப்பகுபதம்.இதனானே,கருவிகளுள் வழிக்காட்டிற்றை க்காட்டிநிற்றலினறிதல்செல்லாது அவைநீங்கியவழிக்கேவலமாய் முடி யுமாகலிற் றன்னுண்மை யறியுமாறியாங்ஙனமென்னுங் கடாவை யாச ங்கித்து, அவையுள் வழியே தன்னுண்மையறிதற் குபாயங்கூறி, அது பற்றியவைகாட்டிற்றைக்காட்டி நிற்றற் கிழுக்கில்லையென வலியுறுத்த வாறுமென்க. மெய்ப்பொருட்குத் தைவமா மென்றதனால், வருகின் ற வதிகரணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

நான்காமதிகரணம்.

இனி யிவ்வான்மாத்தன்னை யிந்திரியத்தின் வேறுவான்காணவே தமது முதல் சிபாதத்தை யணையுமென்றது-எ-து-மே-ள்-எ-னின்,

பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டார்க் கது வொழியாமையும், கருவிகணீங்கியவழிச் செயக்கடவதொருமுயற்சி கூடா மையின் ஆண்டு மெய்ப்பொருட்குத் தைவமாதல் பெறப்படாமை யும் பேதவாதசைவர் முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித் து, ஆக்கிரத்தி லுலாக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட லுமாயிற்று.

(இ-ள்) வெ-டை.

இந்திரியத்தின் வேறாயவழிக் கேவலத்தை யணுதலு முண்மை யின், அதனை நீக்குதற்பொருட்டு, வேறாகாவென்றொழியாது, வேறு வான் காணவென்றார். காண்டலே யதற்கமையுமென்றலின், ஏகாரந் தேற்றத்தின் கண்வந்தது.

ஊசல் கயிறற்றாற்றாய் தனையே யாந்துணையான்-எ-து-ஏது-எ-னின், அவ்வாறு காண்டலே சீபாதத்தை யணுதற்குச் சாலுமென்ப தியாங்ஙனமென்பாரை நோக்கி, உவமையின் வைத்துக்காட்டி, மேற் கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) ஒருவனேறி யிருந்தாடுதற் காதாரமான வூசல் கயிறற்ற தாயின், அவனுக் குற்றுழியுதவுந் தாய்போல, ஆண்டாதாரமாவது நி லனேயன்றிப் பிறிதில்லை யென்னு மொப்புமையான், இனி யிவ்வான் மாத் தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவே, தமது முதல் சீபா தத்தை யணையுமென மேற்கொண்ட தென்றவாறு.

வியாபகப் பொருட்குக் காட்சி விசேடமே நீக்கமாகலின் அறுத லதற் குவமையாயிற்று.

வெண்பா.

சிறைசெய்யநின்ற செழும்புனலினுள்ளஞ் ... *
சிறைசெய்புலனுணர்விற் றீர்ந்து-சிறைவிட்... ...*
டலைகடலிற்சென்றடங்கு மாறுபோன்மீளா ... *
வலைவிலரன்பாதத்தை யுற்று. ... ... (௭)

சிறை - உற்று-எ-து-உ-ம்-எ-னின், கருவிகணீங்கினவழி வேறுநி ல்லாது சிவத்தைத் தலைப்படுமுயிர்க்குங்கருவிகணீங்கிக் கேவலத்தை

த்தலைப்பட்ட வுயிர்க்குப்போல மீட்சியுண்டு போலுமென்பாரை நோக்கி, அஃதின்றுமாறுமேலதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) சிறைசெய்ய நின்ற செழும்புனலினுள்ளம்-எ-து- ஒருவனணையை யுயர்த்துக் கட்டித் தடைசெய்ய வாண்டுத்தடையுண்டு தேங்கிநின்ற வாற்றுநீர்போல, கருவிகளாகிய பாசஞானந் தனது வியாபகத்தைத் தடைசெய்ய வதன்கணேக தேசமாய்த் தடையுண்டுநின்ற வுயிர் - சிறைவிட் டலைகடலிற் சென்றடங்கு மாறுபோல்-எ-து-அவ்வணை முறிந்து தடைதீர்ந்த வழியிடை யீடின்றிக்கடலின் கண்முடுகிச் சென்றந்நீரோயா யதனுடன் சென்றடங்கி மறித்து வாராத வாற்றுநீர் போல - சிறைசெய் புலனுணர்விற்றீர்ந்து-எ-து-கருவிகளாகிய பாசஞானத் தடையினின்று நீங்கியவழி - உலைவிலரன் பாதத்தை யுற்று மீளாது-எ-து-தனக்குக் கேடில்லாத சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி யத்திருவடி நிறைவேயா யதன்கணடங்கிப் பின்பு மீளுதலசெய்யாதென்றவாறு.

“சிறைசெய்யநின்ற செழும்புனலினுள்ளம்” என்றது தொகையுவமம். இன் உவமவுருபு. தேக்கத்தின் மிகுதியுணர்த்துவார் செழும்புனலென்றார். மலசத்திக்குக் கேடுண்மையின், அதனைத் தலைப்பட்ட வுயிர்க்குக் கருவிகளின்மீட்சி கூடும். சிவசத்திக்கு அஃதின்மையின், அதனைத்தலைப்பட்டவுயி ரவ்வாறு மீளுதற்கோரியை பில்லையென்பார் உலைவிலரன் பாதமென விசேடித்தார். அடங்குமென்னு முவமவினை பொருளினும, மீளாதென்னும் பொருள் வினை - உவமையினுஞ் செனறியைந்தன.

வெண்பா.

எவ்வுருவுந்தானெனவே னெய்துவாரில்லதா... *
ரிவ்வுருவின்வேறே யிறையல்ல-னெவ்வுருவுங் ...*
கண்போலவயவங்கள் காணுங்கண்ணில்லார் ... *
கண்பேறேகாணக் கழல். ... ... (அ)

எவ்வுரு - கழல்-எ-து-உ-ங-எ-ஷிய், மீளாதென்று விடுத்தல் வேண்டாம், எல்லாஞ் சிவமயமாகக் கண்டார்க்கு மீண்டாலென்

நீளாக்காலென், என்னுஞ் சிவாத்துவித சைவனைநோக்கி, அதுவிடையாதும் சேலாமைகூறி மறுத்து, நீளாமையை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்.) எவ்வாற்றுந் தானென்னி னெய்துவாரில்லைதான்-எ-து-உயிருணர்வை யொழிப் புலனுணர்வுஞ் சிவமேயாமாயின், விசேடமின்மையால், புலன்வழிபொழுருஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைக் கூடவேண்டாமையி னொருவருமதனை யெய்துவாரில்லையாய் முடிந்து, பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியையடைய முத்தியென்னும் வேதாகமங்கள் போலியாய் முடியும் - இவ்வாற்றின் வேறேனி னையமலன்-எ-து-அதுபற்றி முதல்வன் புலனுணர்வோ டியைபின்றி யதனின் வேறாய் நிற்பனென்னின், அப்புலனுணர்விற் கவனுலாகம் பாலதேயன்மையி னவ்வுணர்விற்றைவனல்லனெனப்பட்டு முதல்வனை நீக்காய் முடியும், மற்றென்னையோ வதனியல்பென்னின், எவ்வுருவும் எ-து-உயிருணர்வுபோலப் புலனுணர்வுங் கலப்பினாற்சிவமேயாமினு மியாண்டுந் தம்மறிவொப்பனவல்ல - கண்போலவயவங்கள் காணு-எ-து-உயிராம் பொறிகளாறு மொப்பநிற்பினும், அவற்றுண் மெய் வாய் மூக்குச் செவி நான்கும், கண்ணிந்திரிய மொளியானவ் வான்ம போதத்தோடு விரவிச்சேய்மைக் கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியு மாறுபோல வியாபித்தறிய மாட்டாவாய்த் தம் மாட்டியைந்த விடயங்களை நின்றுங்கு நின்றியைந்தறிதற் றன்மையவேயாம் - அக்கழல் கண்ணில்லார் கண்பெறேகாண்-எ-து-அக்கண்ணினது வெற்றிப்பாட்டைக் கண்ணொளி யிழந்தாரது கண்பெற்றின் சட்கண்டறிவாராக வென்றவாறு.

கண்ணும் அவயவங்களும் ஆகுபெயர். கண்பெறேயென வேறாவது தொகுத்தேகாரம் விரித்தார். கழலணியார்க்குளதாகிய வெற்றிப்பாட்டைக் கழலென்றுபசரித்தார். கழல் - காலணிமணிவட்டம். கண்டு வெற்றி யாவதேனைநான்கிந்திரியங்களையு நோக்கி மேம்படுதல். கண்போலவயவங்கள் காணு வக்கண்ணில்லார் கண்பெறே காணக்கழலென்பது- முதல்வனிரண்டிறு மொப்பவிரவி நிற்பினு முயிருணர்வுபோலப் புலனுணர்வு வியாபக விளக்கமாதலின்றி யேகதேச விளக்கமாம்; உயிருணர்விற்குளதாகியவம் மேம்பாடவ்வியாபகவுணர்வைபிறந்த பசு

த்துவமுடையார் மாட்டறியப்படாதாயினுமவரது பசுத்துவநீங்கிய சிவப்பேற்றின்க ணறியப்படுமென்பதுதோன்ற நின்றமையின், இஃ தொட்டென்னுமலங்காரம். சிவமாயவழியும் புலனுணர்வேகதேச விளக்கமாவதின்றி யுயிருணர்வுபோல வியாபக விளக்கமாதலில்லை யெனவேயதன்கண் மிருகப்பிறக்கென்பது பெறப்பட்டது. இதற்குப் பிறசொல்லா மியைபின்றியுரைத்தார்.

வெண்பா.

ஐம்பொறியினல்லையெனுமந்ததரசிவனை ... ...
யைம்பொறியைவிட்டங்கணைசகல - னைம்பொறியி
னீங்கானீர்ப்பாசிபோனீங்குமலகன்மம்வரி ...
னீங்கானைநீங்குநினைந்து. ... ... (௬)

ஐம்பொறி - யினைந்து-எ-து-உ-ம்-எ-னின், சிறைவிட்டவழியலை கடலிற் சென்றடங்குதலேயன்றி, யாற்றுலலைகடற்கேபாய்ந்த நீரவ் யாற்றின் மறித்தலுமுண்மையின், அதுபோலவரன் பாதத்தையுற்ற வுயிருக்கொரோவழி மீட்சியுமுண்டென்பதூஉம்பெறப்படுதலான், அவ் வழிமீளாமை செல்லாதென்பாரைநோக்கி, அம்மீட்சிக்குக் காரண மிதுவென்பதூஉம், அதனைநீக்குதற்குபாயமுங் கூறிவலியுறுத்து தனுதலிற்று.

(இ-ள்,) ஐம்பொறியினல்லையெனு மந்ததர-எ-து-ஐம்பொறிகள் போலவேகதேசவிளக்கமுடையாயல்லை யென்றறிவுறுக்கப்படுஞ் சித் தாந்த மகாவாக்கியத்தைப்பெற்றுடைய மாணவகனே - அங்கைம் பொறியைவிட்டுச் சிவனையணை சகலனைம்பொறியினீங்கான் - எ-து- சிறைவிட்டலை கடலிற்சென்றடங்கு மாறுபோலென மேற்கூறியவா றேயைம்பொறிகளானாய புலனுணர்விற்றீர்ந்து சிவன்றிருவடியையுற் றசகலன் ஐம்பொறிகளான் மீளவதனைநீங்குவானல்லன் - நீர்ப்பாசி போனீங்குமலகன்மம்வரி னீங்கானைநீங்குநினைந்து-எ-து- கல்லெறி யும்வழிநீங்கியதுவிடும் வழிப்பரக்குநீர்ப்பாசிபோல, முதல்வன்றிரு வடியையுற்றவழிநீங்கு வனவாகியமலமாயை கன்மங்களொரோவழி வாசனைவயத்தான் மீளவரின், தன்னைவிட்டுநீங்காத முதல்வனைமுன் னர்க்கூறப்படு முபாயங்களினின்று சிந்தித்தவற்றை நீக்கிக்கொள்ளு மென்றவாறு.

வரினென்றதனால் வருந்தலொருதலையன்று வாசனையுள்வழியே யென்பதுபெற்றாம். நீங்கியென்பது பாடமாயினீங்கினவாகியமலகன் மமெனப்பெயராக வைத்துரைக்க. சித்தாந்தத்தை அந்தமென்றது தலைக்குறை. தாம்அதன்கண்ணதாய்ச்சிறந்த வொருவார்த்தை. அங் குமேற்கூறியபடி. ஐம்பொறியைவிட் டவைதற்குரியானிவனென்பது ணர்ந்துவார் சகலனென்றார். நீங்குமென்றுமகரஞ் சந்திநோக்கிக் கெட்டது. நீங்கெனவேபாடங்கொண்டு, அணையெனவேறுபிரித்து முன்னிலையேவலாக்கி, அதற்கேற்பநீங்காயெனப் பாடந்திரித்துரைப் பாருமுளர். மேற்கூறியமீளாமையை வலியுறுத்துவார் "ஐம்பொறியி னல்லையெனுமந்தர சிவனையைம்பொறியை விட்டங்கணைசகலனைம் பொறியினீக்கான்" என்றும், "ஓரோவழியுளதாமாயினதற்குக் காரண மிஃதென்பார் நீர்ப்பாசிபோனீங்கு மலகன்மம் வரினென்றும், அது நீங்குதற்குபாயங்கூறுவார் நீங்காவினைந்து நீங்குமென்றுங்கூறினா ர். மலகன்மமெனவே, இனம்பற்றிமாயையுங் கொள்ளப்பட்டது "மங் கலமென்பமனை மாட்சிமற்றதனன் கலனன்மக்கட்பேறு" என்றாற் போல, நீங்காவினைநீங்குமினைந்தென்றதனால், வருகின்றசூத்திரத்துக்கு த்தோற்றுவாய் செய்ததுமாயிற்று. இம்மூன்றுதாரணங்களுமுறையே திருவடிஞானத்தைப்பெற்ற வுயிர்புலனுணர்வின் மீட்சியில்லையெனவும், மீட்சியிருக்காமெனவும், ஓரோவழிப்பயிற் சிவயத்தான்மீளவருமாயின் மீளாதவாறுசெய்து கொள்ளற்பாற்றெனவுங்கூறி, தாய்தனையேயா மென்னுமோரப்பொருளை வலியுறுத்தியொரு பொருண்மேல்வந்த வாறுகாண்க. எட்டாஞ் சூத்திரமுடிந்தது.

ஒன்பதாஞ் சூத்திரம்.

ஊனக்கண்பாச முணராப்பதியை ... ... *
ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி ... ...*
யுராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவத்தண்
ணிழலாம்பதிவிதி யெண்ணுமஞ்செழுத்தே...*

எ-து-எ-னின், ஆன்மசுத்திபண்ணுமா றுணர்த்துதனுதலிற்று.

எ-து-க-ரை-எ-னின், சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) தம்முதல்குருவுமா யுணர்த்தக்கேட்டதனை, சிந்தைசெய் துணருமாறுணர்த்துமுகத்தான், ஐம்புலவேடரின் வளர்ந்தவாலாணவ நீக்கி, உயிர்தன்னைத் தூய்மைப்படுத்துவாறுணர்த்துதல் இவ்வொன்பதாஞ்சூத்திரத்தின் கருத்தென்றவாறு.

சூத்திரவிளைவு மிதனானே யினிதுவிளங்கும். சிவப்பிரகாசத்துத் தாம்பணியைநீத்தலென் றோதப்படு மான்மசுத்தியாவது-இறைபணிநிற்கவென வருகின்ற சூத்திரத்திற்பெறற்பாலதாகலானும், அழுக்குநீக்கமே யறுவைக்குச்சுத்தியாமாறுபோலப் பாசக்ஷயமே யுயிர்க்குச் சுத்தியாவதல்லி வேறன்மையானும், பாசக்ஷயம்பண்ணுமுன்னரச்சுத்தியாதல் கூடாமையானும், வருகின்ற சூத்திரத்தின் கருத்தாய் நின்ற, ஆன்மசுத்திபண்ணுமாற்றை, பதியைநாடி யென்புழித்தண்ணிழலாம் பதியெனவுஞ் சிவதரிசனம்பண்ணுமாறே யுணர்த்துதற்றெழுந்த விச்சூத்திரத்தின் கருத்தாகவைத் துரைத்ததென்னையோவென மலையற்க; சிவதரிசனத்தினிகழ்வ தான்மசுத்தியென்னுமுடனிகழ்ச்சி யுணர்த்துதற்கும், தம்முள்வேறுபாடு சிறுபான்மையுடையனவாய விவ்விருசூத்திரமு மொருபொருண்மேலனவென்ப துணர்த்துதற்கு மிவ்வாறுரைத்தாராகலின், அஃதாங்கனமாக, ஆன்மாதன்னை யிந்திரியத்தின் வேறாகக்காணவே, தமது முதல்சீபாதத்தை யணையுமென்றலின், அக்காட்சியேயதற்கமையுஞ் சுத்தியெற்றுக்கெனின்? அஃதொக்கும், நிருவிகற்பமாய்க்காண்டலும், இரட்டுறக்காண்டலும், தெளியக்காண்டலுமெனக் காட்சிமூவகைப்படும்; இம்மூன்று மதிபரிபக்குவமுடையார்க்குக் கேட்டமாத்திரையே யொருங்குநிகழுமாயினும், ஏனையோர்க்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்,என்றுஞ்சோபானமுறையினன்றி நிகழாமையின், அதனைநோக்கி, சிவரூபத்தினிகழு மான்மதரிசனத்தின்பின்னாகச் சிவதரிசனத்தினிகழு மான்மசுத்தியுமொருதலையான் வேண்டப்படுமென் றுணர்ந்துகொள்க. "நேசமொடுந்திருவடிக்கீ ணீங்காதேதாங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலைபதுவேயாக, வாசையொடுமங்குமிங்குமாகி யலமருவோரரும் பாசமறுக்கும் வகையருளின் வழியுரைப்பாம்" என வழிநூலாசிரியரு மிக்கருத்தேபற்றி யோதினார்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு - குறையுணர்வாகிய பசுவறிவாலுணரப்படாத முதல்வனை அவனது திருவடிஞானத்தால் றன்னறிவின்கண்ணே யாராய்ந்தறிய அகதிருவடிஞானத்தா னிலமுதலா தமிழாகிய பாசக்கூட்டம் நின்றுழியில்லாது பரந்துதிரிதற் கண்ணதிவேகமுடைய பேய்த்தேரினியல்பிற்றாய்க் கழிவதென்றறிந்து நீங்கவே பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்தநிழலாய் வெளிப்பட்டுவிளங்கும்; அவ்வாறு பாசத்தையொருவி, ஞானத்தைப் பெற்று,ஞேயத்தைக்கண்ட காட்சிசலியாமைப்பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து விதிப்படியறிந்து கணிக்கப்படுமென்றவாறு.

ஊனமெய்பதப் பொருட்டாதல்" ஊனமேற் கிரியையித்தை,, என்பதனுவாதி. "கன்றுமன்னிதுநாடாய்கூறி,, என்றாற்போல, நாடியென்பது - இகரவீற்றுமுன்னிலையேவல். உராத்துனே - ஏழாம்வேற்றுமைத்தொகை. உராவென்பது - முதனிலைத்தொழிற்பெயர்." பறவாக்குளவி,, பாயமவேங்கை, என்றாற்போல. ஒருவராறூரப்படாத வேகத்தையுடையதேரெனச் செயப்படுபொருட்கண் வந்தபெயரெச்சமறையாகக்கொண்டுரைகது, "திருந்தார்கன்றென்றேன்றியேன்" என்றாற்போல உராவென்பது - குறுக்கல்விகாரமென்பாருமுளர். பின்வந்தபதி.ஆகுபெயர். இதனுள் "ஊனக்கண்பாச முணராப்பதியைஞானக்கண்ணினிற் சிந்தைநாடி" என்றதோரதிகரணம்; உராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவத்தண்ணிழலாம்பதி,, என்றதோரதிகரணம், விதியெண்ணு மஞ்செழுத்தே,, என்றதோரதிகரணம்; ஆகமூன்றதிகரணத்ததிச் சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டும்முதலே ஞானக்கண்ணினாலே காண்கவென்றது-எ-து-மே-ல்-எ-னின், மேலைச்சூத்திரத்தோதியவாற்றான் முதல்வன்பாசவறிவானுடப் படுவானல்லனாயினும், பசுவறிவானுடப்படுவனென்றற்கிழுக்கென்னையெனச் சிவசமவாதசைவர்மதம்பற்றி நிகழுங்கடாவையாசங்கித்து, சூத்திரத்தின்முற்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

ஏகாரம்-தேற்றம்.

அவன்வாக்குமனாதீதகோசரமாய்நிற்றலான்-எ-து-ஏது-எ-னின், ஏனைஞானங்களானறியப்படாது சிவஞானத்தானறியப்படு மென்றற்குப்பிரமாணமென்னை யென்பானைநோக்கி, மேற்கோளைச்சாதித்த லுதலிற்று.

இதன்பொருள்-வாக்குமனாதீதகோசரமாய் நின்றவதுவே பொருள் புழியுரைத்தாம். ஆண்டுப்பொதுவகையாற் புறப்பட்டதனையீண்டேது வாகவைத்து, வாக்குமனாதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்று மருத்தாபத்தியால், ஞானக்கண்ணாற்காணப்படு மென்பது தாமேபோதருமென மேற்கோளைச்சாதித்தார்.

வெண்பா.

நாடியோவென்போநரம்புசீக்கோழையோ ...
தேடியெனையறியேன்றேர்ந்தவவை - நாடியரன்...
றன்னாலேதன்னையுங்கண்டுதமைக்காணுஞ் ... ...
றொன்றுமெனவயிவாரின்று. ... ... (க)

நாடி-இன்று-எ-து-உ-ம்-எ-னின், கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்றதென்னை, பசுத்துவநீங்கிய வழிச்சுட்டிறந்தறிவ தாகியவுயிருணர்வு திருவடிஞானத்தோ டொப்பதாகலினதன்கட் கோசரமாதலமைவுடைத்துப் போலுமென்பானைநோக்கி, அவ்வுணர் வுவிளங்குமாறுணர்த்து முகத்தான்அவனா மறுத்தேதுப்பொருளை வலியுறுத் ததனுதலிற்று.

(இ-ள்.) நாடியோவென்போ நரம்புசீக்கோழையோ தேடியெ னையறியேன்றேர்ந்தவவைநாடி - எ - து - நாடிமுதலியவற்றுள்யான் யார் என்னைத்தேடியுமறிகின்றிலே னென்றிவ்வாறு தேர்கின்றதேர்ச் சியுறுதியின்கண்வேயிதனைத் தெளிவிப்பதோரறிவு வேறுண்டெனவா ராய்ந்து நோக்கி - அரன்றன்றாலே தன்னையுங்கண்டு தமைக்காணுர்- எ-து-அவ்வாறுகாடுங்கால் விளங்கித்தோன்றுவதாகிய முதல்வனது திருவடிஞானத்தான் முதல்வனையுமுணர்ந்து முதல்வனின் வியாப்பி

யாகாய்நின்று அங்ஙனமறியும் பொருளாகிய தன்னையு முணர்தலைச் செய்யார் - என்றுரையவியைபின்று-எ-று - மற்றெய்வியல்பினையொன்று தன்மையுறவியல்புவரிம் முதற்காலத் தென்றவாறு.

காடியெனறது இடைப்பிகலே முதலியவற்றை-சம்பெனவே யடங்கிமேலும் கலைமைபற்றி யேறுகூறினர். சீ புண்ணிர். கோறை-ஐகாரக்கெடுகிலிலே. ஒன்றெனப்படு-சொல்லெச்சம் அவை- ஆகுபெயர். ஒப்புமைபற்றி ஆன்மஞானத்தை யாசெனவுபசரித்தார்· உம்மை- எதிரதுதழீஇநிற்பது. எவனென்றும் வினாவினைக்குறிப்புப்பெயர் கண்டாகுமெய்யாச பெயரொடுமரீஇநிற்பது. ஆம்-அசை. காடியோடென்போர் பாம்புசிக்கோறையோபோடுவன்ற வுபலக்கணத்தால், ஏனைத்தத்துவதாத்துவிகங்களிறு மெய்யாறுதெரிதல் கொள்ளப்படும். இது தன்மையுவமை யுணர்த்துமுறாக்காமே, தலைவனைபற்றிதமின் னறிவாயமெதாய்ய தம்மெழுமொளன்ணி தலைவனையறியுமாறி யாண்டையதெனமயுத்து வலியுறுத்தவாறுகாண்க.

வெண்பா·

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக் ... ...
காட்டிய வுள்ளத்தைக் காணா - காட்டிய ...
வுள்ளந் தனைக்காணா துள்ளத்தின் கண்ணாய ... ...
கள்வன் றனையுளத்திற் காண் ... ...(உ)

காட்டிய-காண் - எ-து-உ-ம்-எ-ளின், எதிர்முகத்தெதாருபொருளைக் கண்டகண்ணே, மறித்துநோக்கியவழி, வெளிப்புறத்துப்பொருளையுங் காணவல்லும், அதுபோல அங்ஙனம் நோக்குதலைச்செய்த வுயிரொதெளிக்குறிதலையுஞ் செய்யவல்லுமென வுவமையுமென்பானை நோக்கி, அதனது மாட்டாமையைவிளக்கி, அரன்றன்னைலேகாண்டலை வலியுறுத்துதலாயிற்று.

(இ-ள்.) காட்டியகண்ணேதனைக்காணா - எ-து- உயிராற்காட்டப்பட்டொருபொருளைக்காண்கின்ற கண்ணானது தன்னியல்பைக் காணமாட்டாது-கண்ணுக்குக்காட்டிய வுள்ளத்தைக்காணா- எ-து- தனக்கவ்விடயத்தைக்காணவித்து முதலாய்நிற்குமுயிரையு மதுகாணமாட்டாது-காட்டியவுள்ளந்தனைக்காணா - எ-து - அதுபோல முதல்வ

ஞல்மறைந்துநின் றுணர்த்தப்பட் டொன்றனைத் தேர்ந்துணர்கின்ற வுயிரவ்வாறே தன்னியல்பையு மறியமாட்டாது தன்னை யுணர்த்தி நிற்கு முதல்வனையுமறியமாட்டாது - உள்ளத்தின்கண்ணாய கள்வன் றான்-எ-து- அத்தேர்ச்சியறிவின் கண்ணுமுடனாய் நிற்குங்கள்வன் அம்முதல்வனாகலானே-உள்ளத்திற் காண்-எ-து- அவனை யவ்வறிவின்கண் ணைத்துநாடித் தெளிவாயாகவென்றவாறு.

இது சொற்பொருட்பின்வருநிலை. ஏகாரமசைநிலை. 'முறைகா க்குமுட்டாச்செயின்" என்றாற்போலக் காணுதென்னுந் துவ்வீறுவிகா ரத்தாற்றொக்கது. பின்வந்தவுள்ள மீண்டுத்தேர்ச்சி யறிவின்மேற்று. உள்ளத்தின்கண்ணுமென்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது தோன்றாது நிற்றல்பற்றிக் கள்வனென்றார். கள்வனென்றது - கண் ணுக்குயிர் மறைந்துநின்றே காட்டுவதாகலான், அது தன்னையு முயி ரையுமறியமாட்டாவாயிற்று. அதுபோல, முதல்வனிதுகாறு மறைந்து நின்றே யுணர்த்துதலி னுயிர்தன்னையு முதல்வனையு மறியமாட்டாதா யிற்றென்பது படநின்ற குறிப்புமொழி. உள்ளத்திற்காணவல்லார்க்கு அக்கள்ளந்தீர்தலிற் றம்மையுமுதல்வனையுங் காண்டல்கூடுமென்ப தாம். "கள்ளமொடில்லமுடையார் கலந்திடில் வெள்ளவெளியாமெ ன்றுந்தீபற" என்றது மிக்கருத்தேநோக்கி. கண்ணுக்குச்சாட்டாய வுள்ளத்தைக் கண்காணுமென வுவமைக்கோதியவாறு பொருளினும் வருவித்துரைத்துக்கொள்க. இஃதெடுத்துக்காட்டுவமை.

இரண்டாமதிகரணம்.

இனியசத்தாயுள்ளவன்ன பேதங்களையசத்தெனறு காணவுளதா ய்நிற்பதுஞான சொரூபமென்றுணரற் பாற்று-எ-து-மே-ள்-எ-னின், அம்முதலைஞானக்கண்ணாலே காண்கவென்றுணர்த்தியவழி, அந்தஞா னக்கண்ணைப் பெறுமாறியாங்ஙனமென நிகழுமவாய்நிலையை நீக்குத ற்பொருட்டு மேலதற்கோர் புறனடையா யெழுந்தவிச் சூத்திரத்தி னிரண்டாங் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுத லிற்று.

(இ-ள்.) வெ-டை.

பாசமொருவத்தன்னுதலாம் பதியென்புழிப்பாசமென்றது காரியப்பிரபஞ்சத்தையென்பார் அசத்தாயுள்ளதென்றும், சொற்பல்காமைப்பொருட் பேதப்பொருளை யுருவகமுகத்தா னுடம்பொடுபுணர்த்துகாட்டினார் பிரபஞ்சத்தையென்றது வன்னபேதங்களையென்றும், வியாபகப்பொருளுக் கொருவுகலாவ துணர்ச்சிவிசேடமேயாமென்பார் அசத்தென்றொழிபவென்றது காணவென்றும், தன்னணிமுலாய்நிற்றல் புதிதன்றென்பார் உளதாய்நிற்பதென்றும், பதியென்றதாருபெயரால் பதிஞானத்தின் மேனின்றதென்பார் ஞானசொருபமென்றும், இஃ தநுபவத்தினன்றிச் சொல்லளவையி னறியவாராதென்பார் உணரற்பாற்றென்று முரைத்தார்.

இஃதேகதேசவுருவகம். இதனுட்பெறப்படு மேதுப்பொருளை யேனையவற்றுட்போல மேற்கோளின் வேறுவைத்துக்காணுமாறு; இனியசத்தாயுள்ள பிரபஞ்சத்தை யசத்தென்று காணவுளதாய்நிற்பது ஞானசொருபமென்றது-வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பென்று கண்டொழிப்பி னுளதாய்நிற்பது படிகசொருபமாந் துணையான் எனவரும்.

(இ-ள்) படிகசொருபத்தைக்காட்டாது மறைத்துநின்ற வேற்றுநிறங்களை அவைநிலையுதலில்லனவாகிய வேற்றுநிறங்களெனக்கண்டொழிப்பினவ்வழி நிலையுதலுடைத்தாய் விளங்கிநிற்பது பளிங்கினதுசொருபமாமென்னு மொப்புமையான், நிலையுதலுடைய தற்சொருபத்தைக்காட்டாது மறைத்துநிற்கும் நிலையுதலிலவாயுள்ள பிரபஞ்சத்தை யிவைநிலையுதலுடையனவல்லவென்று விவேகித்தறியின் அங்ஙனமநிராலம்பமேயாய் விளங்கித் தோன்றுவது ஞானசொருபமென மேற்கொண்டதென்றவாறு. வன்னபேதமாவது- சித்திரமெனக்கொண்டு சுவர்மேல்வைத்துணைத்தலுமொன்று. அசத்தாயுள்ள பிரபஞ்சத்தையசத்தென்று காண்டலாவது - ஆசிரியனறிவுறுத்தவுபதேசப்பொருளினுறைத்துநின்று, "அட்டகுணமேட்டுச் சித்திக்கோளனகன் முதல்வாழ்வுகுலவு பதமெல்லாம் வெறுத்து, நெறியறுவகைமேலோடுகிடக்கக்காரண ருபத்தினில்லாமையால் வெறும்பொய்யெனநினைத்திருத்தல்.

வெண்பா.

நிர்க்குணனாய்நின்மலனாய்நித்தியானந்தனாய்த் ... *
தற்பரமாய்நின்றதனிமுதல்வ - னற்புதம்போ ...*
லானாவறிவாயளவிறந்துதோன்றானே ... ... *
வானேமுதல்களையின்வந்து... ... ... (௬)

நிர்க்கு-வந்துள-து-உ-ம்-எ-னின், அசத்தையசத்தென்று கண்டொருவிய வழித்தோன்றுவது சூனியமேயன்றிப் பிறிதில்லைபோலு மென்பாரைநோக்கி, ஞானசொரூபத்தினியல்புகூறி யதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) நிர்க்குணனாய்- எ-து-அசுத்தப்பிரபஞ்சம்போல முக்குணரூபமாயளவிட்டறியப்படுவானுமல்லனாய்- நின்மலனாய்-எ-து-முக்குணங்களைக்கடந்த மிச்சிரப்பிரபஞ்சம்போல மலகன்மகாரியரூபமாயறியப்படுவானுமல்லனாய்-நித்தியானந்தனாய் - எ-து-மலகன்மங்களையுங்கடந்த சுத்தப்பிரபஞ்சம்போல வநித்தியானந்தரூபனா யறியப்படுவானுமல்லனாய் - தற்பரமாய் - எ - து - இம்மூன்றனோடுங்கூடிய பொதுவியல்புபற்றியவ்வாறுணரப்படு முயிர்போலன்றி யதற்குமேலாய்-நின்றதனிமுதல்வன்-எ-து-இவ்வாறு நிற்றலானென்றனியல்புபற்றி யறியப்படாத தனிமுதலாகியவிறைவன்-வானேமுதல்களையின்-எ-து-ஆகாசமுதலிய வசத்தையசத்தென்று கண்டொருவியவழி-அளவிறந்து அற்புதம்போல்வந்து-எ-து-பயின்றறிந்துவருந் தனதுசுட்டறிவி னளவினைக்கடத்தலா னினையதென்றறியவாராத சூனியப்பொருள் போலத்தோன்றி-ஆனாவறிவாய்த்தோன்றானே - எ-து-பின்னர்ச்சுட்டிறந்தறியுந் தன்னறிவின்கணீங்காது நிலைபெறுவதாய்ச் சோதிக்குட் சோதியாய்விளங்கித் தோன்றான்கொல்லோவென்றவாறு.

தற்பரம்-தனக்குப்பரமெனவிரியும். தன்னென்றதுயிரை. அற்புதமீண்டுச் சூனியத்தின்மேற்று. முதற்கட்சூனியமாய்த் தோன்றினுஞ் சூனியமன்றென்பார் அற்புதம்போல் வந்தென்றார். ஆனாமை-நீங்காமை. ஓகாரம்-எதிர்மறை. ஏகாரம்-அசைநிலை. வானேமுதலெனவே, தோற்றமுறைபற்றி வான்முதலாகிய வேனைத்தத்துவங்களுமடங்கும். நிர்க்குணனாய்நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாயென்புழியாக்கச் சொல்லுண்மை குறித்துநின்றது வடமொழிம

தம். அறிவாகியபொருளுமி யாக்கம்வேறுபாடு குறித்துநின்றது. ஒன்று மையற்றி முதல்வனது ஞானத்தைமுதல்வனென வுபசரித்தார்.

வெண்பா.

சுட்டியுணர்வதனைச்சுட்டியசத்தென்னச் ௧
சுட்டிறந்தவுளதுசத்தேகாண் - சுட்டி. ௨
புணர்ந்தநீசத்தல்லையுண்மைத்தைவம் ௩
புணர்ந்ததனாற்பொய்விட்டுப்போம் ... .(௬)

சுட்டி-போம்-எ-து-உ-ம்-எ-னின், வரனேமுதல்களைக்கவழி அங்ஙனந்தோன்றுவதும் வேறொன்றெனக்கோடும் ஞானசொரூபமென்றற்குப் பிரமாணமென்னை யென்பாரைநோக்கி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) சுட்டியுணர்வதனைச் சுட்டியசத்தென்ன-எ-து-ஏகதேசவுணர்வாற் சுட்டியுணரப்படுவதாயபிரபஞ்சத்தை மேற்கூறியவாறே யோரோவொன்றாகச் சுட்டியசத்தென்று கண்டொழித்துக்கொண்டு சென்றவழி - இனிச்சுட்டிறந்துளது சத்தேகாண்-எ-து-முடிவின்கட்செம்மையேகோசரமாவதியா தொன்றவ்வசத்தின்வேறாகியசத்தேயாமதனை யறிவாயாக-அப்பெற்றிசத்தின்வேறு யங்ஙனந்தோன்றுஞ் சத்தாவது யிரோயாமெனவமையுமெனில்,- சுட்டிப்புணர்ந்தநீசத்தல்லை - எ - து- இதுகாறுமசத்தோடுகூடிச் சுட்டியறிந்துவந்த நீயசத்தின்வேறு யங்ஙனந்தோன்றுஞ் சத்தாவாயல்லை-அற்றேயிச்சுட்டுணர்வெனக்கு நீங்குவதின்றுபோலுமெனின்,- உண்மைத்தைவம்புணர்ந்து - எ-து- அசத்தின்வயப்பட்டுநின்று சுட்டியறிந்துவந்த நீ யதனையொழித் தங்ஙனந்தோன்றிய சத்தின்வயத்தினையா யதனைப்புணர்ந்தால் - அதனாற் பொய்விட்டுப்போம்-எ-து-அப்புணர்ச்சியானே சுட்டுணர்வாகிய வப்பொதுவியல்பு நின்னைவிட்டு நீங்குமென்றவாறு.

என்னையென்றதுபசாரவழக்கு. சட்டவென்பது செப்பமுணர்த்திநிற்பதோர் உரையிற்படைச்சொல். அதுசட்டமெனவிழிவழக்கின் மகரவிறுமயக்கிடுமிற்று. அசத்தைப்பிரித்தமையி னேகாரம் பிரிநிலைக்கண்வந்தது. உண்மைசத்துஎன்பன வொருபொருட்கிளவி. தைவமாயென வாக்கச்சொல் வருவித்துரைக்க. புணர்ந்தாலென்பது புணர்ந்தெனத் திரிந்தது. உண்மைத்தைவமாதல் புணரினெனவுருபு

மாக்கமாகக்கொண் டொழியினுமமையும். பற்றறக்கழிந்தொழியுமென்பார் விடுமென்றதுவிட்டுப் போமென்றார்.

வெண்பா.

கண்டதையன்றன் றெனவிட்டுக்கண்டசத்தா ... *
யண்டனையான்மாவினாய்ந் துணரப்-பண்டணைந்த... *
வூனத்தைத்தான்விடுமா றுத்தமனி லொண்கருட *
சானத்திற்றீர்விடம்போற்றான். ... ... (௫)

கண்ட - தான்-எ-து-உ-ம்-எ-னின், அசத்தை யசத்தென்று கண்டொழியுமாறும், ஒழிந்த வழியுண்மையைத் தைவம்புணருமாறும், புணர்ந்தவழியதனாற் பொய்விட்டுப்போமாறும், யாங்ஙனமென்பாரை நோக்கி, அவற்றைத் தெரித்துணர்த்தியதனைவலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்,) கண்டதை யன்றன்றெனக்கண்ட சத்தாய்விட்டு-எ-து-சுட்டியுணரப்பட்ட பிரபஞ்சத்தை யிதுசத்தன் றிதுசத்தன்றென்றுரோ வொன்றாகவைத்து நோக்கி யசத்தென்றொழித்து - ஆன்மாவினண்டனையாய்ந்து-எ-து-அவ்வாறுகண்டொழிந்த தன்னறிவின்கண்ணே சுட்டுணர்வின்றி நின்ற கடவுளை யாராய்ந்து-உணர-எ-து-சோகமெனப்பாவிப்பனாயின் - உத்தமனிற்பண்டணைந்த வூனத்தைத் தான்விடுமாறு-எ-து-அப்பாவகத்தா னத்துவிதமாய் விளங்கித் தோன்றுமுதல்வனாலநாதியாய்க் கூடிநின்ற பொதுவியல்பைத் தானவிட்டு நீங்குமாறு - ஒண்கருடசானத்திற் றீர்விடம்போற்றான்-எ-து-ஒள்ளியகருடத்தியானத்தில்விளங்கித் தோன்றுங் கருடனா லப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளு மாறுபோலா மென்றவாறு.

தானென்பது முன்னையதெழுவாய்-பின்னையதசை. சானம்-பாகதச்சிதைவு. கருடத்தியான மாவதியாதெனிற் கூறுதும்; ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆதியான்மிகம், எனக்கருடன் மூவகைப்படும். பொருடோறு மிவ்வாறு கண்டுகொள்க. அவற்று ளுலகத்திற் காணப்படுங் கருடனாதி பௌதிககருடன், அதற்கதிதெய்வமான மந்திரமாதி தெய்விககருடன், அம்மந்திரமிடமாகநின்று மாந்திரிகனுக்குப் பயன்கொடுப்பதாகியசிவசத்தி ஆதியான்மிக கருடனெனப்படும்; அம்மூன்றனுள்ளீண்டுக் கருடனென்றது - கருடனுக் கதிதெய்வமாய் மாந்திரி

கனுள்ளத்தினதுபோல் வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படு மந்திரரூபமாகிய வாதிதெய்விக கருடனை. அதனைப்பாவித்தலாவது- நாடோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தா லம்மந்திரரூபமே தானுமவனன்றிய பாவனைசெய்து தன்னுவிலதன் வயத்ததாம் படியுறைத்து நிற்றல், அவ்வாறுநின்ற மந்திரக் கண்கொண்டு பார்ப்பவேயஃதவ்விட வேகத்தைமாற்றுத லொருதலையாகலி னப்பாவனை யீண்டைக்குவமையாயிற்று. புள்ளிலக்கு மாமுதலிய வற்றுக்கெல்லா மதிதெய்வ மந்திரமூளவென்பதூஉம், மந்திரங்களைக் கணிப்பான் படிகம்போல மந்திரசொரூபியாவ னென்பதூஉம், சர்வஞானோத்தர முதலியவற்றுட்காண்க. இதனானே கருடபாவனை யசத்தியமென்பார் மதம்போலியாயவாறுமுணர்க. அல்லதூஉம், பாவனைபோலியாய வழியதுபயன்றருமாறி யாண்டையதென்றொழிக.

மூன்றுமதிகரணம்.

இனி யிவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்கவென்றது-எ-து-மே-ள்-எ-னின், ஆன்மாவைச் சுத்திபண்ணுதற்குப் பாசமொருவியவழித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானசொரூபமொன்றே யமையுமாகலி னிவ்விடத்தி லினிச்செய்யக் கடவதொன்றில்லையென்பாரை நோக்கி, சூத்திரத்தின் மூன்றுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோடலுதலிற்று.

(இ-ள்) பாசமொருவியாண்டுத் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானக்கண்ணாம் பதியிற் சிந்தைநாடிய பின்னரவ்விடத்துத்திரு வஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்கவென மேற்கொண்ட தென்றவாறு,

இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அற்றாகலினன்றே பின்னும் “ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க” என்றார் வழிநூலாசிரியருமென்க. ஈண்டு ஸ்ரீபஞ்சாக்கரத்தையென்றது முத்தி பஞ்சாக்கரத்தை. திருவஞ்செழுத்தாற் சாதிக்கப்படும் பொருளு மதுவேயாகலான் வேறுவகுத்துக கூறவேண்டாமையின் விதிப்படியென மாட்டெறிந்தொழிந்தார். இவ்வாறுசிரியர் மாட்

டெயிந்ததூஉ முணராதார் சாதித்து நிற்குமுறைவேறு ஓதுமுறை வேறே, எனச் சித்தாந்த வழக்கொடு முரணிக்கூறுவர். நிற்குமுறையு மோதுமுறையுந் தம்முளியைபில்வழியஃதற்குச் சாதனமாமாறியாண்டையதென்றொழிக. மானதம், மந்தம், உரை எனக்கணிக்குமாறுமூவகைப்படும், அவற்றுட் சுத்தமானத மெனப்படு மறிவாற் கணித்தலே யீண்டுச்சரித்தலென்பார் சூத்திரத்து ளுச்சரிக்கவென்னா தெண்ணுகவென்றார். வடமொழிச் சூத்திரத்துத் தியானிக்கவென்றதூஉமது - இன்னு மிதன்கட்படு மியல்பெல்லாம் உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது, முதலியவற்றுட்காண்க. ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

இனி யிவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்து மஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாதலினது நீக்குதற்கெனக்கொள்க-எ-து-எது-எ-னின், அந்தரங்கவழிபாடாகலினசிந்திதனாய் நின்றபதியைச் சிந்திதனாய்க்கண்டுவழிபடுமாற்றைச்சாரவைத்தோதற் பாலதாயே யிதனைச் சித்தசாதனமாயீண்டுவிதித்தலெற்றுக்கென்பாரை நோக்கி, மேற்கோளைச்சாதித்த னுதலிற்று.

(இ-ள்.) வேம்புதின்ற புழுவதனை யொருவிக்கரும்பைத் தலைப்பட்ட தன்சுவைதெரிந்துழியும் பயிற்சி வயத்தானோக்கிற்றை நோக்கி நிற்குமாறுபோல, அசத்தாயுள்ள வன்னபேதங்களை யசத்தென்று கண்டவுயிர்களுக்கதனான் ஞானசொரூபம் விளங்கி ஞேயங்காட்சிப்பட்டவிடத்தும் அவைபயிற்சி வயத்தாற் பண்டைச் சிற்றுணர்வை நோக்கி நிற்குமாகலி னவ்வாறதனை நீக்குதற்பொருட் டீண்டைக்குவேண்டப்படுதலானினி ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யிவ்விடத்துச்சரிக்கவெனமேற் கொண்டதெனக்கொள்க வென்றவாறு.

இவ்விடத் தென்றதனா லணைந்தோர் தன்மையைச் சாரவைத்து மேற்கோடற்குரிய ஸ்ரீபஞ்சாக்கரத்தை யெனவருவித்துரைத்துக்கொள்க. எனக்கொள்கவென் றுடம்படுப்பித்ததும் அதுபற்றி. இக்கருத்து நோக்கி யன்றே புடைநூலாசிரியர் அஞ்செழுத்தருணிலையை யான் மலாபத்தின்பின்னாக அணைந்தோர் தன்மையைச் சாரவைத்தோதியதூஉமெனக்கொள்க. வானோக்கி வாழுங்கோனோக்கி வாழுமென்றாற்போல வீண்டுநோக்கென்றது மனவெழுச்சி விசேடத்தை. பிரகாசித்

தவழியென்பது பிரகாசித்தெனத் திரிந்தது. ஈண்டுஞானமென்றது அசத்தை யசத்தென்றுகண்டவழி விளக்குவதெனப்பட்ட ஞானசொரூபத்தை; அஞ்ஞானமென்றது அதற்கு மறுதலையாகிய சுட்டுணர்வையெனவுணர்க. அது நீக்குதற்கெனக் கொள்கவெனவே, சித்தசாதன மன்றென்பது வருவிக்கப்பட்டது.

வெண்பா.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமைகண்டரனை ...
யஞ்செழுத்தாலர்ச்சித் திதயத்தி-லஞ்செழுத்தாற்
குண்டலியிற்செய்தோமங் கோதண்டஞ்சானிக்கி...
லண்டனுஞ்சேடனு மங்கு. ... ... (௬)

அஞ்செழுத்து-அங்கு-எ-து-உ-ம்-எ-னின், இஃதவ்வாசனையை நீக்குதற்குச சாதகமாமாறியாங்ஙன மென்பாரைநோக்கி, அஃதாமாறுகூறி, ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளமரனுடைமை யஞ்செழுத்தாற்கண்டு-எ-து-உயிர் சிவனுக்குடைமையாதலை யஞ்செழுத்தையுச்சரிக்கு முறையில்வைத்து நோக்கி-இதயத்திலரனை யஞ்செழுத்தாலர்ச்சித்து- எ-து-தன்னுடம்பகத்தே யிதயமுந்தி புருவநடுவென்னு மூன்றனையும்முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானமாகக்கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசைசெய்யுமுறைப்படி இதயபங்கயத்தி லவ்வஞ்செழுத்தாலமைந்த திருமேனியில் அம்முதல்வனை, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு, என்னும் அட்டபுட்பங்கொண் டம்மநுவாலர்ச்சனைசெய்து-அஞ்செழுத்தாற் குண்டலியிலோமஞ்செய்து-எ-து-அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான புந்தியில் ஞானவனலையெழுப்பி யதன்கண் விந்துத்தானத்தமிழ்தமாகிய நெய்யைச்சுழுமுனை நாடியிடைநாடியாகிய சுருக்குச்சுருவங்களாலோமித்து- கோதண்டஞ்சானிக்கில்-எ-து-விந்துத்தானமாகிய புருவநடுவிற் சிகரயகரவகரங்கள் மூன்றுமுறையே தற்பதப்பொருளுந் துவம்பதப்பொருளு மசிபதப்பொருளுமா முறைமைநோக்கி யதனாற் சிவோகம்பாவனை செய்வனாயின்-அங்கண்டனுஞ் சேடனும்-எ-து-அப்பாவனைக்கண்விளங்கித் தோன்றுவன் அப்பாவக னவனுக்குச் சேடசேஷபாவகத்தா லடிமையாவனென்றவாறு.

ஒழித்தருங்கியாளித்தலும் பூசைக்கங்கமெனவறிக. ஞானசொரூபம் விளங்கியவழியும் பயிற்சிவயத்தா னேகதேசப்பட்டுப் புறத்திற்செல்லநோக்குவதாயதன்னறிவை யங்ஙனமாகாதவாறுமடக்கி யகத்தேயொருகுய்யின்கணிறுத்தி நிட்டைகூடும்படி யஞ்செழுத்தோதுமுறையில் வைத்துக்கண்டு சிந்திக்கச்சிந்திக்க வஃதந்நோக்கத்தைப் பற்றறக்கெடுத்து ஞானசொரூபத்தை யினிதுவிளக்கிப் பூரணநிலையிற்கொண்டு செலுத்துமாகலி னிஃதிண்டைக்குச் சிறந்த சாதகமாயிற்றென்பது.

வெண்பா,

இந்துவிற்பானுவிராகுவைக்கண்டாற்குச் ௧
சிந்தையிற்காணிற்சிவன்கண்ணு - முந்தவே ... ௨
காட்டாகித்தோன்றிக்கனல்சேரிரும்பென்ன... ...௩
வாட்டானுமோதஞ்செழுத்து ... ... (௭)

இந்து-எழுத்து - எ-து-உ-ம்-எ-னின், அங்ஙனமொருகுழியின் வந்தன்றி முதல்வனைக்காண்டல் செல்லாதவாறும் அவ்வாறு கண்டவழி முதல்வன்றன்மாட்டு விளங்கித்தோன்றுமாறும், தோன்றியவழித்தா னம்முதல்வனுக் கடிமையாமாறு முவமையில்வைத்துணர்த்தி, அதனை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்.) இராகுவை யிந்துவிற்பானுவிற் கண்டாங்கு- எ-து- அந்தரத்தியங்கு நவக்கோள்களு ளேனையபோலக் காணப்படாத விராகுக்கேதுக்களை யுபராகத்திற் சந்திராதித்தர் மாட்டுக்கண்டாற்போல- சிந்தையிற்காணில்-எ-து-முப்பொருள்களுள் யானிதனை யறிகேனறின்றிலேனென்று முணர்விற்குவிடயமாகிய பசுபாசங்களோடொப்ப வேறுணரப்படாதமுதல்வனைத் தன்னிதயபங்கயத்தி னஞ்செழுத்தின் முறையின்வைத்துக் காணுமாயின்-முந்தவேகாட்டாகிச் சிவன்றோன்றிக்கண்ணும்-எ-து-கோலைநட்டுக் கயிற்றினுற்சுற்றிக்கடையவே காட்டத்தினின்று அங்கிதோன்று மாறுபோலவம்முதல்வனுண்டுத் தோன்றி யறிவுக்கறிவாய் விளங்கிநிற்பன்-தாங்கனல்சேரிரும்பென்ன ஆளாம்-எ-து-அப்பொழுதுதானு மெரிசேர்ந்த விரும்புபோலத்தனது சுதந்திரத்தைவிட் டம்முதல்வனுக்கடிமையாம்- ஓதஞ்செழுத்து- எ-து - ஆகலா னத்திருவஞ்செழுத்தை விதிப்படியோதுவாயாகவென்றவாறு.

கேருச்சா யாக்கிரசமாகலின் வேறுகூறுராயினுர். கண்ணாயிவு தோன்றிய-மெனவிளையும் தோன்றுதலீணடிக் கடைதன்மேற்று. காட்டாபி வடமொழிச்சிதைவு. இவ்-உவமவுருபு ஈண்டுமோதஞ் செழுத்தென்றது வலியுறுத்தியவாறு.

வெண்பா.

மண்முதனாளமலர்வித்தைகலாரூப ... ...*
மெண்ணியவிசர்சதாசிவமு - நண்ணிற் ... ... *
கலையுருவாநாதமாஞ்சத்திபாதன்கண்ணு ... ...*
நிலையநிலாமச்சிவன்றானோர் ... ...(அ)

மண்முதல்-சேர்-எ-து-உ-ம் - எ-னின், தத்துவமுப்பத்தாறுக்கு மேற்பட்ட முதல்வனை யிதயபங்கயத்திற் கண்டர்ச்சிக்குமாறி யாவனைமெய்பாணைநோக்கி, அவ்விதயபங்கயத்தினியல்புணர்த்தி, அதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) கண்ணில்-எ-து-அவ்விதயபங்கயத்தினியல்பை யறியப் புகின்- மண்முதனாளம்-எ-து- நிலமுதலியவிருபத்து நான்குதத்துவமுமொங்கிபினினறுகதோன்றி யெண்விரலளவாயுள்ள நாளவடிவாம்-வித்தைமலர்-எ-து - வித்தியாதத்துவங்களேழுஞ் சுத்தவித்தையுமென்னு மெட்டுத்தத்துவமு மெட்டிதழ்வடிவாம-எண்ணியவிசர் சதாசிவமுங் கலாரூபம்-எ-து-அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட விசரஞ் சதாசிவமென்னு மிரண்டுதத்துவமு மறுபத்துநான்கெனப் படுங் கேசரவடிவமாம் - சத்திகலையுருவாம் - எ - து-சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம் - நாதமதன்கண்ணும்-எ-து-சிவதத்துவம் அப்பொகுட்டிற் காணப்படுமைம்பத்தொருபீஜவடிவாம் - அதிலச் சிவன்றனிலையாம் எ-து-ஆகலானவ்வியல்பிற்றூகிய விதயபங்கயத்தின் முப்பத்தாறு தத்துவமு மாசனமாக வுடையவச்சிவனது சத்திநிலைபெறும் - சேர்-எ-து-அதனையறிந்து திருவஞ்செழுத்தா லர்ச்சிப்பாயாக வென்றவாறு.

இதனுனே யண்டபிண்ட மாவசமமாதலாற் புறத்துக்காணப்படு முப்பத்தாறு தத்துவமும் அகத்தினிற் சூக்குமமா யுண்டென்பதுகாட்டி, முதல்வனுக்கிக்கிலேய யக்கிலெயனத் தெளிவித்தவாறு. வித்தையென்ப திரட்டுற மொழிதலா னவ்வாறுரைக்கப்பட்டது. சிவஞா

னசித்தியில், "மூட்டுமோகினி சுத்தவித்தை மலமெட்டாய்" என்பு ழிமோகினியென்றதூஉம் ஆகுபெயரான தன்காரியமாயாகலாதிகளி ன் மேனிற்றது. இவ்வாறன்றி நிலமுதலிய முப்பத்தொரு தத்துவ மெனப்படும் எட்டுக்கொத்தும், என்விராருள வடிவும், அசுத்தமா யாதத்துவமும், காளத்துக்கு மலருக்கு நடுக்கண்டமாகிய பிரந்திவடிவு ம், அதற்குமேற் சுத்தவித்தையின் வாமை முதலிய வெட்டுமெட்டிதழ் வடிவமென்றுரைப்பாரும், முப்பத்தொன்றுக்குமே லசுத்தமாயை பிரந்தியிஞ்சதனம், சுத்தமாயை பூர்த்துவச்சதனம், அதற்குமேலீசுர தத்துவத்திலனந்தன் முதலியவெட்டுமெட்டிதழ்வடிவம், சதாசிவதத் துவமொன்றுங் கேசரவடிவமெனக் கொண்டதற்கியையக் கொண்டு கூட்டியுரைப்பாரும்; கலாரூபமென்றது பஞ்சகலைகளை யெனவும் அவ்வியாண்டுங் கூட்டியுரைக்கப்படுமெனவுங்கொண்டு, மண்முதலு ளமலமொப்பதற்கு, மண்ணுநிவிர்த்திகலாரூப நாளமுநீர்முத லாகவுடையவிருபத்து மூன்றுதத்துவமாகிய பிரதிட்டாகலாரூபம லருமாமெனவும், வித்தையெண்ணிய வீசர்சதாசிவமும் கலையுருவா மென்பதற்கு, வித்தியாதத்துவமாகிய வித்தியாகலாரூபங்கலையெனப் படுங்கேசரமும், சுத்தவித்தையோடுகூடி யெண்ணப்பட்ட வீசரத் துவமுஞ் சதாசிவதத்துவமுமாகிய சாந்தியாதீத கலாரூபம்பொகுட் டின்கண்ணுகியபீஜமுமாமெனவு முரைப்பாருமுளர். இவையெல்லாம் ஆவ்வவவாகமபேதம் பற்றிக்கொள்ளப்படும். கலையறுபத்துநான்காக லான் அறுபத்துநான்காகிய கேசரங்களுக்குத்தொகை பற்றிக்கூறப் படுமாருபெயராயிற்று. ஈசர்ஆகுபெயர், கலையுரு - கலைக்குள்ளுரு வெனவுள்ளுருபு விரித்துரைக்க. அதில்என்புழி அன்சாரியை விகா ரத்தாற்றொக்கது. இதுநாளமுதலாகமே னோக்கித்தோன்று முலகத் துக்சமலம்போலாது கண்முதலாகக் கீழ்நோக்கித்தோன்றிய கேசர்தி ப்பியகமல மெனக்கொள்க. சிவன்றுளதினிலையாமெனவே, சிவன்சத் திக்குமேலாய் நிற்பனென்பதூஉம் பெறப்படும். ஒன்பதாஞ்சூத்திர முடிந்தது.

பத்தாஞ்சூத்திரம்.

அவனேதானேயாகியவந்நெறி, ... *
ஏகனாகியிறைபணிநிற்க ... ... *
மலமாயைதன்னொடுவல்வினையின்றே... ... *

என்னின், பாசக்ஷயம் பண்ணு மாறுணர்த்துத னுதலிற்று.

எ-து-எனை-எ-னின், சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேலேழாஞ் சூத்திரமுதலிய மூன்றானுமுறையே சாதிக்கும்பொருளாகியல்பும், சாதித்துப்பெறப்படும் பொருளாகியல்பும், சாதிக்குமாறுமுணர்த்தி, இனியச்சாதகத்தானாய பயனியல்புவகுத்துக் கூறுவானெடுத்துக்கொண்டார்; அப்பயனாவது பாசவீடுஞ்சிவப்பேறுமெனவிருவகைப்படும்; அவ்விரண்டனுள்; கட்டுணர்வினாகிய வேகதேச நோக்கத்தைத் திருவஞ்செழுத்தினதுச் சரிப்பாற்பற்றறத் துடைத்த வழிப்பெறப்படுவதாய் மேலைச்சூத்திரத்திலெடுத்துக் கொண்ட வான்மதரிசனத்திப்பயனாகிய பாசவீடுதலைச்செய்து கொள்ளுமாறும், மேற்சித்தனிச்செய்த பொருளைத்தெளியுமாறு முணர்த்துமுகத்தா னுணர்த்துதலிப் பத்தாஞ்சூத்திரத்தின் கருத்தென்றவாறு.

இதனானே சூத்திரவியைபுமினிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு - ஞானக்கண்ணாற் காணப்பட்ட வம்முதல்வன்றானுடனாய் நின்றறியவும், வேறுகாணப்படுமாறின்றி, அவனொடொற்றுமைப்பட்டவ் விறைபணியின் வழுவாதுநிற்பின், மலமாயையென்னு மிரண்டனொடுவலியகன்மமலமு மில்லையாயொழியுமென்றவாறு.

அவனேதானே யென்னுமேகார மிரண்டனுள்; முன்னையது பிரிநிலைக்கண்ணும் பின்னையதுதேற்றத்தின் கண்ணும்வந்தன. நெறியும்வடிவுருவும் மலமாயையொடு கூடியவினையென்றுராகலின் இன்றேயென்றார். உவமைக்கோதியது பொருளினும், பொருளுக்கோதிய துவமையினுஞ் சென்றியைந்தன. ஈண்டொற்றுமைப் படுதலாவது

குட்டுடைந்தவழிக் குடாகாயமு மாகாயமும்போலவொருபொருளா யொற்றுமைப்படுதலோ, அன்றிக்குற்றியை மகனென்பதுபோலத் திரிவுக் காட்சியானொற்றுமைப்படுதலோ, அன்றிமண்ணே குடமென் பதுபோலவொன்று திரிந்தொன்று யொற்றுமைப்படுதலோ. அன்றி வெள்ளையுந் தாமரையும்போலக் குணகுணித்தன்மையா லொற்று மைப்படுதலோ, அல்லதுதீயுமிரும்பும் போலவொன்றி னொன்று விரவுதலா லொற்றுமைப்படுதலோ, அன்றிப்பாலுநீரும்போலப்பிரிக் கப்படாதசையோகத்தா லொற்றுமைப்படுதலோ, அன்றிக்கருடனு மாந்திரிகனும்போலப் பாவனைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அல்லதுகாய்ந்தவிரும்பினீர்போல வொன்றினொன்றிலயமா யொற்று மைப்படுதலோ, அல்லதுபேயும் பேய்பிடியுண்டவனும்போலவாவே சத்தாலொற்றுமைப்படுதலோ, அல்லதிந்தனத்தினெரிபோல விளங் காமையா லொற்றுமைப்படுதலோ, அல்லதுஞாயிற்றி னொளியின்வி ளக்கொளிபோலச் சத்திகெட்டுநிற்றலா லொற்றுமைப் படுதலோ, அன்றித்தலைவனுந் தலைவியும்போல வின்பநுகர்ச்சி மாத்திரையா லொற்றுமைப்படுதலோ, அன்றிநட்டோரிருவர்போல நட்புமிகுதி யாலொற்றுமைப்படுதலோ, அன்றி ஆவுமாமாவும்போல வொப்பு மைமாத்திரையா லொற்றுமைப்படுதலோ, என்றவ்வவசமய வாதிக ள்மதம்பற்றிநிகழுமின்னோ ரன்னவையப் பாடுகளையெல்லா நீக்குதற் பொருட்டு" அவனேதானேயாகிய வந்நெறி,, எனவுவ்மையெடுத்துக் காட்டியோதினார். ஈண்டுக்கூறியவேற்றுமைக் கட்படுமிபை பாவதெ ன்னையெனின், அதுவருகின்ற சூத்திரத்திற்பெறப்படும். இதனுள்"அ வனேதானேயாகிய வந்நெறியேகனுகி" என்றதோரதிகரணம;"இறை பணியிற்கமலமாயை தன்னொடு வல்வினையின்றே,, என்றதோரதிகர ணம்; ஆக விரண்டதிகரணத்ததிச் சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டுப்பரமேச் சுரனிவ்வான் மாவாய்நின்ற முறைமையாலவ விடத்தேகனாகிநிற்க வென்றது-எ-து-மே-ள்-எ-ளின், ஞானம்பிர காசித்து முதற்பொருளைக் காண்டன்மாத்திரையே விடுபேற்றிற்கமையு மெனச் சிவசமவாதசைவர் முதலியோர்மதம்பற்றி நிகழுங்காலை

யாசங்கித்து, சூத்திரத்தின் முதற்கூற்றைக்கண்ணழித்துரைத்து,மேற் கோடனுதலிற்று.

(ரு-ள்) வெ-டை.

அவ்வாறு நிற்கவேயானென தென்னுஞ் செருக்கற்றவனதுசிபா தத்தை யணையுமாகலான் - எ-து-எ-ற-எ-ளின், அஃதெற்றுகளென் பாரைநோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அங்ஙனமொற்றுமைப்பட்டு நின்றாலே யானுமெனது மெனப்படுத்து நிற்குமயக்க வுணர்வுக்கேதுவாய மலநீங்கி, அம்மு தல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறுமாகலான், அச் செருக்கறுதிக்குக் காரணமாதல் பற்றி ஈண்டுப்பரமேச்சுர னிவ்வா னமாய்நின்ற முறைமையாலவனிடத்தேகமாகி நிற்கவெனமேற்கொ ண்டதென்றவாறு.

அவ்வாறுநில்லாத வழிமலமறாது; அஃகறுத வழிச்சிபாதத்தை யணைதல் பெறப்படாதென்பார் நிற்கவேயெனத் தேற்றேகாரத்தாற் கூறினார். யானெனப்படுவது ஞாதுரு, எனதெனப்படுவன ஞான ஞேயங்கள். ஒருவது பண்பின்கிழமையு முணர்ச்சிக்கிழமையும்பற்றி வந்தது. ஒருமை தனித்தனி சென்றியையும். செருக்கு-ஆகுபெயர். அற்றணையுமென்றது மழைபெய்து குளநிறையுமென்றாற்போலக் கா ரணகாரியப் பொருள்பற்றிவந்த செயவெனெச்சத்திரிவு.

வெண்பா.

நானவனென்றெண்ணினர்க்கு நாடுமுளமுண்டாத
லானவனொன்றின்றியே தானதுவாய்-நானெனவொன்
றில்லெலன்றுதானேயெனுமவனைத்தன்னடிவைத் ...
தில்லென்றுதானுமிறை. ... ... (௬)

நானவன்-இறை- எ-ற-உ-ம்-எ-ளின்; அங்ஙனம் பகுத்துநின் றுணருமுணர்வை மயக்கவுணர்வென்றதென்னை யென்பாரைநோக்கி ஏதுவைவலியுறுத்ததுனுதலிற்று.

(இ - ள்) நானவனென்றெண்ணினார்க்கு நாடுமுளமுண்டாதலா னென வொன்றின்றிய தானதுவாய் - எ - து - மாவென்றுமலமென்றும் ஞாதுருஞேயங்களைப் பகுத்துணர்ந்து நிற்பாரையும் மாக்ஷெமென்றும் பார்க்கும்போல அவ்வாறென்னுகின்ற வுயிருணர்வுருவிலக்குத்தோன்றுமாகலான், அவ்வழித்தானென்றொரு முதலைக்காணப்படாமையின்றித் தானவ்வுணர்வேயாய் - நானென வொன்றில்லையாறு தானேயறு மவனைத் தன்னடிவைத்திலனென்று தானுமின்றை - எ - து - இனியானென்றொரு முதல்காணப்படுமாறில்லையென்றுணர்ந்து முழுவதுந் தானேயெனக்காணுந் தெளிவுடையானைத் தனது திருவடிவியாபகத்துளடக்கிநிற்கச்செய் தவ்வாறேயாவன் முதல்வனென்றவாறு.

ஆய் - ஆமெனவினையும். ஆயாமென்புழிச் செய்தெனெச்சம் - நள்ளார்க்குநஞ்சொத்து நட்டார்க்கமிழ்தொக்கு மிவனென்றாற்போலத் தன்வினையாக வுணரநின்றது. நாடுமுளமுள்வழித்தானிலனாதலும், அஃதில்வழித்தானுளனாதலும் யாங்ஙனம்பெறுதுமெனிற்காட்டுதும்; தூலவொளியாகிய கண்ணொளியுஞ் சூக்குமவொளியாகிய விளக்கொளியு மத்துவிதமாய்க் கலந்துநிற்குநிலைபுற்றுநோக்க வல்லார்க்குப் பிரித்தறியவாராமையின், கண்ணொளியாய்க்காணுங்காற் காணுந்தன்மையே முனைத்துத்தோன்றுமாகலின், அவ்விளக்கொளியிருந்துமில்லைத்தானே, அன்றி விளக்கொளியாய்க்காணுங்காற் காட்டுந்தன்மையே முனைத்துத்தோன்றுமாகலின் அவ்வழிக் கண்ணொளியிருந்துமில்லைத்தானே; இனிக் கண்ணொளியும் விளக்கொளியு மென்பபகுத்துக் காணப்புகினுங் காணுந்தன்மையே முற்படத்தோன்றலின், அவ்வழி விளக்கொளிபுலனாய்க் காட்சிப்படுவதல்லது தெளிவுபுலனாய்க் காட்சிப்படுமாறில்லை, அதுபோலத் தூலவறிவாகிய வுயிருஞ் சூக்குமவறிவாகியசிவமு மத்துவிதமாய்க் கலந்துநிற்குநிலையும் பிரித்தறியவாராமையின், ஆண்டுமிவ்வாறே கண்டுகொள்க. எண்ணினார்க்குமென விறந்ததுதழீஇய வெச்சவும்மை சங்கோர்கி மாரங்கெட்டு நின்றது. இக்கருத்தேபற்றியன்றே "கண்ணொளிவிளக்கினொளி சோதி கலந்திடுங்கருத்தொன்றன்றே" எனவும், "காண்பானுங்காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை - காண்பார்கண்முத்திகாணுராகள் - காண்பானுங் - காட்டுவதுங்காண்பதுவுந் தண்கடம்பைச்சம்பந்தன், வாட்டுகெறிவாராதவர்'' எனவும் கூறினார் புடைநூலாசிரியரும். அற்றேலிவ்விரண்டனுள் யாதுதிரிவுக்காட்சி யாதுதெளிவுக்காட்சியெனில், கண்

ளொளிபோலக்கூடியவழியு மிதுவிளக்கொளி யிதுஞாயிற்றினொளி யிது
திங்களினொளியென வவ்வப்பெற்றியவேயாய்க் காணப்படும் விளக்
கொளிமுதலியவற்றின்காட்சி தெரிவுகாட்சியெனவும், அவ்வொளி
களோடுகூடியவழி யவ்வாறொரு பெற்றித்தாய்க்காணப்படாத கண்
ணொளியையேனுங்கண்ட றிதிவுகாட்சியெனவுங் கண்கூடாகவிளங்கக்
கிடத்தலி னிவ்வாறே பொருளினும்வைத் துணர்ந்துகொள்க. இவ்
வாறன்றி, விளக்கொளிமுன்னர்க்கண்ணொளிசத்தி மடங்கிப்போதலின்
அதுவிளக்கொளியைப்போலக் காட்சிப்புலனாகாதாயிற்றென்றுமோ
வெனின், என்னும் எல்லை, கண்ணொளிசத்திமடங்கிற்றாயின் விளக்
கொளி காட்சிப்புலனாதல் யாதொன்றும் பெறப்படாமையின்; அற்
றேல், மின்மினிக்கதிரையாயினுந் தானேவிளக்கு மியல்பிலலாதகண்
ணுக்கொளிக்குண முண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்,
அறியாதுகடாயினாய், ஆகாயத்தின்கண்ணதாகிய சத்தகுணம் வியஞ்
சகதானன்றித் தினைத்துணையானுந் தானேவிளக்குமாறின்மையி
ன், அதுபற்றி வெதிரொலிவடிவாயவோசையை யாகாயத்தின்குண
மன்று வியஞ்சகப்பொருளின் குணமாமென்பார் யாருமில்லை, அது
போலக் கண்ணின்கண்ணதாகியவொளியும் வியஞ்சகமுள்வழி விள
க்கி யல்லுழிவிளக்காமைமாத்திரையே யிதில்லையாகலான், அதனைக்
கண்ணின்குணமன்றென்றலறி வில்லார்கூற்றேயாமெனவும், அக்கண்
ணொளியாவது தன்னைவிளக்குதற்குரிய வியஞ்சகப்பொரு ளேகதே
சமாயி னேகதேசமாய்விளங்கியும் வியாபகமாய் விளங்கியுநிற்பதோ
ரியல்பிற்றெனவுமுணர்க. அஃதாங்கனமாக; "கண்ணொளிவிளக்கின்
சோதிகலக்கின்ம" எனுமிதற்குப் பிரமாணமென்னை, ஒருவிடயத்தின்வீ
ழ்ந்த பலகண்ணொளிகட்குத் தம்மு ளியைபில்லாதவாறுபோல, ஒரு
வயிற்பட்ட கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்மு ளியைபில்லையெ
ன்றலே பொருத்தமுடைத்துப்போலுமெனின், அஃதறியாதார் கூற்
றேயாமென்றொழிக. என்னை, ஒருவிடயத்தின்வீழ்ந்த கண்ணொளிக
டம்முளொன்றனையொன்று காணுமாறுமில்லைக் காட்டுமாறுமில்லை
யாகலா னவைதம்முட்கலத்தற்கோ ரியைபின்றென்பதொக்கும். அவ்
வாறன்றி, கண் விளக்கினைக்காணுதலும் விளக்குக்கண்ணுக்குக்காட்ட
லுமாகிய வியைபுண்மையானும், இவ்வியைபு தம்முட்பெறப்படாத
கண்ணொளிமுதலாயினவின்கட்குவமையாதல்செல்லாமையானும்,
இந்திரியங்கடத்தம் விடயத்தோடியைபின்றிச் சந்நிதிமாத்திரையா

னவற்றையறிதல் செல்லாதென்பதாகமங்களுக்கெல்லாந் துணிபாக
லானும். அத்தன்மையவாய கண்ணொளிவிளக்கொளிக்குத் தம்முட்
கலப்பில்லையென்றல் காண்டல்விரோதமாகலி னிவ்வாறுவமைக்கோதி
யனவெல்லாம் பொருட்கண்ணும்மாறுணர்ந் தாய்ந்துணர்ந்துகொள்
க. அற்றேல், ஈண்டெடுத்துக்காட்டிய கண்கடம்முளொன்றனையொன்று
காணுமாயின்மைபோல வுயிர்களுந் தம்முளொன்றனையொன் றறியு
மாறில்லைபோலுமெனின், அறியாதுகூறினாய், கண்கடம்முளொன்
றொன்று காணப்படுமாறில்லையென்றது விளக்கும்விடயமுங் காண
ப்படுமாறுபோல வேறியைந்து தனிப்பொருளாய்க் காணப்படுமாறி
ல்லையென்ற துணையேயன்றிப் பிறிதின்மையின், விளக்கொளியைக்
கண்காணுங்கால துவதுவாய்நின்று காணும்பெற்றித் தாய்த்தன்னையும்
விளக்கொளியன்னமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாகவறியக்
கிடத்தலின், ஏனைக்கண்களையு மவ்வாறுகாண்டலமையுமாகலின், அது
போலத்தம்முட் டனித்தியைபில்லாத வுயிர்களுஞ் சிவத்தோடியை
ந்துநின்று தம்மையும் பிறவுயிர்களையு மவ்வாறுணர்தலமையுமென்
பது "நாடியரன்றன்னாலே தன்னையுங்கண்டு தமைக்காணொன்னுமெ
னவறிவார்" எ-ம், "தன்னாலே தன்னையறிந்தாற் றன்னையுந்தானே காணுந்
தானதுவாகிநின்று" எ-ம், "அதிலறிவாட்டங்கி மன்னிடவியாபியாய வா
ன்பயன்றோன்றும்" எ-ம், "என்னையுங்கண்டேன் பிறரையுங்கண்டே,
னின்னிலையனைத்தையுங்கண்டேனென்னை, நின்னைக்காணுமாந்தர் தம்
மையுங்காணுந் தன்மையோரே" எ-ம் பிறாண்டுமிவ்வாறோதுமநுபவ
முடையதேசிகர் திருவாக்குக்களானு முணர்ந்துகொள்க.

இரண்டாமதிகரணம்.

இனியம்முதல்பணிவழாதுநிற்கவென்றது எ-து-மே-ள்-எ-னின்
உடம்பு நிற்குங்காறுமது கொண்டவினைப்பயனு மதனையநுபவித்தற்
குத் துணைக்காரணமா யுடனிற்குமுயற்சியு மொருவாற்றானு நீக்க
லாகாமையின், அவையவ்வழியேசென்று நிற்றற்குத்தடையாதலைக் கட
க்கு மாறில்லைபோலுமெனச் சுத்தசைவருள்ளிட்டோர் மதம்பற்றியெழுங்
கடாவை யாசங்கித்துச்சூத்திரத்தி னிரண்டாங்கூற்றைக் கண்ணழித்து
ரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

பிறவாற்றுவருஞ் சஞ்சிதாமலங்களிலே பெறுதலிலர்' வாழுவாரென்று ரைத்தார். அஃதையப்பாடி யென்றுகிளப்பதெனின், ஆசிரியர்தா முன்னோர்த் தெரிந்துணர்கின்றமையா னினிதுவிளங்கும்.

அவனருளா லல்லதொன்றையுஞ் செய்யாதொழுகவேயஞ்ஞானகன் மம்பிரவேசியாவாகலான் - எ - து-ஏது-எ-னின், ஏகனாகிநிற்றலே யமையுமிறைபணி நிற்றலெற்றுக்கென்பாரை நோக்கி, மேற்கோளைச் சாதித்தலுதலிற்று.

(இ-ள்.) தன்செயற்கு முதல்வன்செயற் பிரிவையின்றியமையாமை யறிந்தானாக செய்வன வெல்லாமவனருளின் வழிநின்று செய்யுமாயின் மாயேய முதலிய ஏகனாகிநிற்றற்குத் தடையாய் வந்துதாக்காவா கலான், அவைதாக்காமைப் பொருட்டுச் செய்யப்படு முபாயமாதல் பற்றி, இவ்விறை பணிவழுவாது நிற்கவென மேற்கொண்டதென் றவாறு.

அஞ்ஞானகன்மம் உம்மைத்தொகை. மலமுண்டாதன்மேற் பெறப்பட்டமையின் அஞ்ஞானமென்றது மாயையின் காரியமாகிய மாயாகாத்தையென்பது பெற்றும். உடம்புநசிக்குங்காலும் அவை மெய்யின்மையின், அவைமென்றது பிரவேசியாவெனறூர்.

வெண்பா.

நாமல்லவிந்திரியம் நம்வழியி னல்லவழி ௧
நாமல்லநாமு மரனுடைமை - யாமென்னி ௨
னொத்தொழுகினின்று மிறைபணியார்க்கில்லைவினை... ௩
முற்செய்வினையுந் தருவான்முன் ... ... (௨)

நாமல்ல-முன்-எ-து-உ-ம்-எ-னின்' உடம்பொடுநிற்பார் நுகர்தற் குவேண்டப்படும் பிராரத்தவினையும், அதுபற்றி யேறுமாகாமியவினை யும், ஒருகாலையானுண்மையின், இறைபணிநிற்றல்பற்றி யவைபிரவே சியாவென்றலமை வுடைத்தன்றுபோலு மென்பாரைநோக்கி, ஏதுவை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள்.) நாமல்லவிந்திரியம் - எ-து-வினைகளை நுகர்தற்கு மீட்டு தற்குங் கருவியாகிய விந்திரியங்கள் மாயேயமாவனவன்றி நாமாவன

வுமல்ல-நம்வழியினல்ல-எ-து- அவைதொழிற்படுதலு முதல்வன்வயத்தானன்றி நம்வயத்தானல்ல - வழி நாமல்ல-எ-து- வினைநிகழ்ச்சிக்கு வாயிலாகியவிடயாதிகளும் அவ்விந்திரியங்கள்போல மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல-நாமோர்மாறுடைமை-எ-து-அவற்றொடியைந்து நின்று வினைகளையீட்டுதற்கு நாகர்கற்கும் வினைமுதலாகிய யாமும் ஞானச்செய்திகளை முதல்வன்விளக்கிய வழிவிளங்கி யல்லுழிவிளங்குமாறின்மையா னம்முதல்வன் வயத்தராவேமல்லது சுதந்திரராவேமல்லேம்-ஆமென்னில் - எ-து - என்றிங்ஙனம் பசுபாசங்களதியல்பையுள்ளவாறுணர்ந்து செய்வனவெல்லா மவனருளின்வழிநின்று செய்யுஞ்செயலாய்க் கண்டுகொண்டிருப்பராயின் - இறைபணியார்க்கெத்தறுவினின்றும் 'வினையில்லை - எ - து - இவ்வடிமைத்திறமுடையார் எவ்வுடம்பினின் றெவ்வினைகளைச்செய்யினு மவர்க்கவை பந்தமாதலில்லை-முற்செய்வினையுந்தருவான்முன்-எ-து - அவ்வாகாமியவினையை யவினாபாவமா யுடன்கொண்டுவருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக்கூட்டுவிக்குமுதல்வன் சந்நிதியினுடனுழாய்க் கழியுமென்றவாறு.

நம்வழியினல்லவென்பது வழியென்பதனோடு கூட்டியுரைத்துக் கொள்ளப்படும். மகனன்று குற்றியென்றாற்போல- அன்மைச்சொற் றழுவும் பொருண்மேனின்றது, "அன்மைக்கிளவி; வேறிடத்தானும்" என்பதோத்தாகலின். நின்றும்- உம்மைசிறப்பு. ஏனையும்மைகளிறந்தது தழீஇயின. சஞ்சிதவினைதீக்கைசெய்தமாத்திரையே யெரிசேர்ந்தவித்துப்போலக் கெட்டொழிதலி னீண்டுமுற்செய்வினையென்றது ஏற்புழிக்கோடலாற் பிராரத்தவினைமேற்றாயிற்று. தருதல் - இடவழுவமைதி. ஒழியுமென்பது - சொல்லெச்சம். உடம்பினுளாயென்ப தவாய்நிலையான் வந்தது.

வெண்பா.

சார்ந்தாரைக்காத்தறலைவர்கடனாதல் ... ...
சார்ந்தாரைக்காத்துஞ்சலமிலனாய்ச் - சார்ந்தடியார்
தாந்தானாய்ச்செய்துபிறர்தங்கள்வினைதாங்கொடுத்தல்
ஆய்ந்தார்முன்செய்வினையுமாங்கு ... ...(௰)

சார்ந்தார் ரூஉ-எ-து-உ-ம்-எ-னின். இறைபணியார்க்குளவா கிய முற்செய்வினை யேனையோர்க்குப்போலன்றிக் கருவான்றன்று மொழியுமாயின், அங்ஙனம் வேறுவகைப்படச்செய்யு முதல்வனு வுநிலைமையினிக் கோட்டமுடையனெனப்பட்டு வழுவாம்போலு மென்பாரைநோக்கி, வழுவன்மைகூறி, அதனை வலியுறுத்துதலுத லிற்று.

(இ-ள்.) சார்ந்தாரைக்காத்த றலைவர்கடனாதல் சார்ந்தாரைக்காத் தல் - எ-து - தம்மையடைக்கலமென்றுச் சார்ந்தாயவர்க்குவரு மேதங் களைந்து சுலிசயமின்றிக் காப்பது தலைமைக்குணமுடையாரி ற்குக் கடனாமாகலான், முதல்வ னேனையோரையொழித்துத் தன் னைச்சார்ந்தாரை யங்ஙனம் பாதுகாப்பானாயினும் - சலமிலனாய் - எ-து - அது பற்றிக்கோட்டமுடையனல்லனாய் - சார்ந்தடியார் தாந்தானாய்ச் செய்து பிறர் தங்கள்வினை தான்கொடுத்தல் - எ-து - தன்னைச்சார்ந்து தன்னடித்தொழில்செய்வார் தன்போலாகாமியவினைத் தொடக்கிலரா கச் செய்து பிறர்க்கெனுமாகாமியவினையை யவர்க்குக்கொடுப்பனாக லான் - ஆர்க்காரும் செய்வினையுமாகி - எ - து - அவ்விருதிற த்தோர்மாட்டு நுகர்வித்து கூடுவதாயபிராரத்தவினையு மவ்வாறே செய்வோர் செய்திக்கேற்ப பயனாகிருவேறுவகைப்படச் செய்வ னென்றவாறு.

இறைபணியார்க்கில்லை முற்செய்வினையுக் கருவான்றன்மென் றதைப்பற்றிப் பிறர்க்குரிய நியதிசெய்து காட்டி, இறைபணியார்க்கு வினையினைப்புலச்செய்த விறைவனுக்கு நடுவுநிலைமையன் றென்பாரை நோக்கி, அதனையுடம்பட்டேயமைதி கூறுவாராய், சார்ந்தாரைக்காத் தலைவர்கடனென்பதுமொழி யெடுத்துக்காட்டி, இங்கவ்வாறு நடு வன்மையுமென்றெனவலி யுறுத்துவார், சார்ந்தடியார் தாந்தானாய்ச் செய்துபிறர்தங்கள்வினை தான்கொடுத்தலென வேறுவமையெடுத்து க்காட்டினார். "சார்ந்தடியார் தாந்தானாய்ச்செய்து பிறர்தங்கள்வினைதா ன்கொடுத்த" லென்பதனுமது-கோட்டமின்று நடுவுநிலைமையே

யாமென்பதூஉம் ஏனைச்சமயத்தார்க்கு மொப்பமுடிந்தமையின் அஃ தின்னடைக் குவமையாயிற்று. உம்மை சிறப்பின்கண்வந்தது. சலம்- வஞ்சனை; அஃதீண்டுக் கோட்டத்தின்மேனின்றது. சார்ந்தென்னும் வினையெச்சம் அடியாரென்னும் வினைக்குறிப்பு முற்றுப்பெயர்கொண் டது. சார்ந்தவென்னும் பெயரெச்சத்தகரம் விரித்துமுடிந்த தெனினு மமையும். பின்வந்தகாமுந்தானும் அசை. ஆகல்கொடுத்தல் என்புழி ஆனுருபுவிரித்துரைக்க. தானாய்ச்செய்து என்புழி ஆர்சம் உவமவுரு பின் பொருள்குறித்து நின்றது. பிராரத்தவினை யதிருக்குமமாய் வரு வதாகலின் அதனியல்பறிதலரிதென்பார், ஆய்ந்தார்முன்செய்வினையு மென்றார். உம்மையிறந்தது தழீஇயிற்று. ஆர்வினைத்தொகை. ஆய் தலப்பொருட்டாதல்மேற் காட்டினும்.

வெண்பா.

இங்குளிவாங்குங்கலம்போலஞானிபான் ... ... *
முன்செய்வினைமாயைமூண்டிடினும் - பின்செய்வினை
மாயையுடனில்லாதுமற்றவன்றன்மெய்ப்பொருளே
யாயவதனாலுணருமச்சு. .. .. *

இங்குளி-அச்சு-எ-து-உ-ம்- எ-னின், இறைபணி நிற்பார்க்குப் பிராரத்தவினை தாக்குதலுண்டென்பதற்கு, "நினைத்துணையேனும்பொ றேன்றுயராக்கையின்றிண்வலையே" என்றற்றொடக்கத்தானவர் கூறு ந்திருவாக்குக்களேசான்றாகலின்; அஃதவர்க்குச்செய்வோர் செய்நிப் பயனையொழியு மென்றலமையாமையின், அஃதுண்டாகவேயதுபற்றி நிகழுமாகாமியமும் பிறவிக்குவித்தாய் நிலைபெறுத லுண்டுபோலு மென்பாரைநோக்கி, ஆண்டுப்பிராரத்தவினை தாக்குதற்கேதுக்கூறி, அதுபற்றிசசெய்வோர் செய்நிப்பயனையொழிதற் கிழுக்கில்லையென வலியுறுத்துத லுதலிற்று.

(இ - ள்) இங்குளிவாங்குங் கலம்போல-எ-து- தன்பால்வைத் தெடுக்கப்பட்டொழிந்த பெருங்காயத்தினின்றும் அதன்வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாசனத்தின்கண்ணவ் வாசமங்கிப்போய்மெயிதா

ய்கசுங்கிக்குமாறுபோல - ஞானிபான்முன் செய்வினை மாயைமூண்டி டினும்-எ - து- இறைபணிநிற்குந் தத்துவஞானிக்குப் பயிற்சியைத் தாமொரோவழி காடுமுளமுண்டாதலு முண்மையினது பற்றிப்பிரா ரத்தவினையுமதற்கு வாயிலாகியவுடம்பு முதலியமாயையுமெலிகிப் போய்வாசனை மாத்திரையாய்மெலிதாய்வந்து மூளுமாயினும் - பின செய்வினைமாயை யுடனில்லாது-எ-து - அம்மூட்சிபற்றி யொருதலை யாளிதாழ்வதாகியவாகாமியவினை மேலேக்குயித்தாய் நிலைபெற்றுமு யருகலினறித் தனக்குவாயிலாகிய மாயையத்தோடுகெட்டொழியும்- மற்றவன்றுன் மெய்ப்பொருளே யாயவதனூறுணருமச்சு - எ - து- இறைபணிநிற்குமவன் சத்தாயுள்ளசிவமேயாய வாற்றுலொரோவழி யிவ்வாசனைபற்றிப்பிறழவரினும்பிறழவொட்டாதவ்வாசனையேநோக்கி நிற்பனாகலா னென்றவாறு.

ஓரியிருளைத்துரக்குமாறுபோல, அவ்வுணர்வவ் வாகாமியத்தை த்துரக்குமென்பதாம்." தொல்லையில்வருதல்போலத் தோன்றிருவினை யதுண்டே, லவ்வொளிபுரையுஞானத்தழலுற வழிந்துபோமே"எனப் புடை நூலாசிரியரோதியதூஉமது. உளியைந்தாமுருபு படநின்றது. வாக்குதற்குச் செயப்படுபொருளவாய் நிலைபான்வந்தது. மூண்டிடி னுமெனவே மூளுதலொருதலையன்றென்பதுபெற்றும். மாயைஆகு பெயர். மற்றுகில்லாதெனவினையும். தானென்பதநுவதித்தற்கண்வந் ததிடைச்சொல். பிறழ்வுபடாமைபற்றி மெய்ப்பொருளை யச்சாகவு ருவகஞ்செய்தார்.

வெண்பா.

கண்ணனல்வேவாதகற்றவர்தம்மினும் ... ... ✿
பண்ணமரமாச்செலுத்தும்பாகரினு - மெண்ணி...✿
யரனடியோர்பவரைம்புலனிற்சென்று ... .. ✿
மவர்கிறவீக்காரதற்கு. ... ... (௫)

கண்ண-அதற்கு-எ-து-உ-ம்-எ-னின், முன்செய்வினை மாயை மூண்டவழியும்; அந்நிலைபிற்பிறழாதவ்வச்சினையே யுணர்த்தி நிற்றல் யாங்ஙனமென்பாரைநோக்கி, உவமைமுகத்தானதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்) நன்னனல்வேவாத நற்றவர்தம்மினும் பன்னமரமாச் செலுத்தும்பாகரினும்-எ-று- அக்கினிதம் பனத்தால் நன்னனல்வே வாமைக்கேதுவாகிய நற்றவமுடையார் அவ்வனலுட் பிடப்பினுந்தந் திறனினீங்காதவாறுபோலவும், பன்னுதல மாப்பரிமாவூர்தற்குரிய பாகநூல்கற்றுவல்லார் அப்பரிமாவின் வேகத்துட்படினுந் தந்திறனி னீங்காதவாறுபோலவும்-எணவிபரனடியோர் பலவ்-எ-று-ஐம்புலன் களிலகப்படாமைக்குபாயம் யாதென்றெண்ணி முதல்வன்றிருவடியா கியவச்சையுணரவல்லார் - ஐம்புலனிற்சென்று மதற்கவாதிறனீங்கார் எ-து-முன்செய்வினைமாயை மூட்சிபத்தியையனைப்பட்ட விடயங்க ளிற்சென்றாராயினும் அதனால்அவர்தந்திறனிற்றீர்ந்து பந்தத்தொடக் குறுவாரல்ல ரென்றவாறு.

பொருள்வினையுவமையினுஞ் சென்றியைந்தது. டன்னுதல் "தீம்நீர்"போல முன்பின்னாகத்தொக்கவாறும் வேற்றுமைத்தொகை. நள்ளனல்நன்னனலென மரீஇயிற்று, நீறுலமெலாமென்றாற்போ ல. தம்மானண்ணப்படுமென லென்றுனைப்பினுமமையும். பண்ணு தல் கதிப்பித்தல். இன்னிரண்டு முவமவுருபுகள். உம்மையெண் ணும்மை. சென்றுமென்னு மும்மைசிறப்பு அதற்கென்ப துருபு மயக்கம்.

வெண்பா.

சதசத்தாமெய்கண்டான்சத்தருளிற்காணி ... *
னிதமித்தல்பாதத்தினிளின்ரிக் - கதமிக் .. ... *
செரிகதிரின்முன்னிருள்போலெலாவசத்தி ... ...*
னருகணையார்சத்தணைவாராங்கு. ... ...(சூ)

சதசத்தா-ஆங்கு-எ-து-உ-ம்-எ-னின், சார்ந்ததன் வண்ணமா ய்ச்சதசத்தெனப்படுமியல் புடையார் அரனடியோரினுமைம் புல னிற்சென்றழியவற்றிற் றொடக்குண்ணுததிறனுடை யராதல்யாங்ஙன மென்பாரைநோக்கி, சார்ச்சிக்கட்படும் விசேடங்கூறி, அதனைவலியு றுத்துதனுதலிற்று.

(இ-ள்) சகசத்தா மெய்கண்டான் சற்குருவிற் காணில் - எ - து - தன்றுற்றாப் பியல்பையாகிய சத்தினுமசத்தினு மதுவதுவாதல் பற்றின் சகசத்திதன்னும் தன்றுண்மையை யுணர்த்திநான் சத்தாகிய முதல்வன் றிருவருளானல்ல தொன்றையுங் காணாது யவ்வருளின்வழியின் மாறுமாயின் இசமித்தல்பாசத்தினின்றி - எ - து - அவ்வழிப்பாசம் மேலைசகத்திலிருந்து செய்தலின்மையால் - சத்திவோமார்சதயிசைகர்கத்தின் றன் னிருள்போலாக் சேலாவசத்தினருக்கணையார் - எ - து - சத்தாயெமுதல்வனைத்தலைப்பட்டுநிற்பார் சிறுமிக்கெரியாயிருசுடரின் முன்னரந்தாரமபோலச் சத்தெதிர் தனது சத்தியே ற்காட்டாத சத்தாய வைம்புலனின் மாட்டெய்தி நிற்பாரல்லரென்றவாறு.

வேலுமுடிபாகலான் ஒருமைபன்மை மயக்கமின்மையுணர்க. அருளினென் னுமின்னுருபு ஏதப்பொருட்கண்வந்தது. இசமித்தல்- பெயரடியிற் பிறந்தவினைப்பெயர். இதந்செய்தல் - பற்றுச்செய்தல். இல்லியெயமுஞ் செயவெனெச்சக்குறிப்பு - காரணப்பொருட்டாய் நின்றது. இன்மைக்கேதுக் கூறுவார்சதயிகசெரி சுதிர்முன்னிருள் போலேலாவசத்தென்றூர். சுடயிச்சொரிசுதிரென்றது- ஒப்புமைபற்றிய வுபசாரவழக்கு எல்லையில்லவ வொரிதுள்ளியவுலென வெகுண்டானென் பதனானு மொப்புமையாகவுணர்க இதனாற்போந்தது சத்துமசத்துந் தம்முட்சமமல்ல வாகலானசைவடியோர்பல. வைம்புலனிற்சென்றுறு மதுபற்றியவர்பிற னிக்காலமேலது வழியுறுச்சவாறுமென்க ஏகனாகிநிற்றலான் மலமின்றாதலும், இறைபணிநிற்றலான் மாயைவினைகவிலவாதலும் பெறப்பட்டமையின் "மலமாயைதன்னொடு வல்வினையின்றே,, என்றதனைவேறு ரதிகரணமாகவைத்தோதாராயினர். பத்தாஞ்சூத்திர முடிந்தது.

•

பதினொராஞ்சூத்திரம்.

காணுங்கண்ணுக்குக்காட்டுமுளம்போற் ... ௧
காணவுள்ளத்தைக்கண்டுகாட்டலின் ௨
அயராவன்பினரன்கழல்செலுமே. ௩

எ-நு-எ-னின், பரமேச்சுரன்சிவாநந்தத்தை யனுபவமாறுணர்த்து தனுதலிற்று.

எ-நு-கரு-எ-னின்- சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று

(இ-ள்.) அக்ஞானமோ நெறி யிறைபணி நிற்பார்க் கிரிச்சை செயல்கள் விடயிக்கற்குரிய தோரிவையானேப் பொருட்டானமையின், விடயமாம்பொருளில்லை போலுமென்னும்வாதிகளை நோக்கி விடயிக்கவில் வழிபாண்டிப்புத்தர் கூறுமாலயவிஞ்ஞானம்போலச் சூனியமாமெனப்பட்டு, ஞானசூனியமாகவே ஞேயமுஞ் சூனியமாய்முடியுமாகலான், அந்நிலையாமை நீங்குடனை யிவைபுற்றி விடயிக்குமாறுணர்த்துமுரைத்தானே பயனிரண்டனுள் முடிவாயெய்தி நின்றசிவப்பேறு கூடுதலாம் நிட்டையினியல் புணர்த்துதலிற் பதினொராஞ்சூத்திரத்தின் கருத்தென்றவாறு.

இதனுள்ளேசூத்திரவிரைவு மிவரிதுவிளங்கும்

அற்றேல், ஏகனுநிமிறைபணியிற்றார்க்கினிச்செய்யக் கடவதொன்றின்மையானும், இநனிக்க புமொளிவிளக்கமு முடனிகழ்ச்சியாய வாறுபோல, பசுத்துவநீக்கமுஞ் சிவத்துவவிளக்கமு மிடையீடின்றியுடனிகழ்வனவாகலின், வேறுதவேண்டாமையானும், முதனூலுட்சுவானுபூதியாய சிவப்பேற்றைப் பத்தாஞ்சூத்திரத்துட் பாசநீக்கத்தோ டொருங்குவைத்தே யோதலானும், அதனையீண்டு வேறுவைத்தோதலமையாது போலுமெனின், அறியாதுகடாயினாய், ஏகனாகிமிறைபணிநிற்பது துரியநிலைக்கண்ணதாகிய வருளநிலையேயாகலின் ஆ

ன்முதலிந்திரியங்களானே சுகப்பிரமையாக்கினையே விளங்குவத ன்றிய நிரதிசயக்கின்பமாகிய சிவத்துவவிளக்கமெனப்படும் பரமசுக விளக்கமாமையின் அது விளக்குதலவைகளாலல்ல தொன்றையுஞ் செய்யாமையாக்கினையாய வையாவுமாமையின், அதற்கு வேறுமாண்டுச் செய்யக்கடவதுண்டெனப்படா தானேபோதருதலானும், இரவிக்கதிர் னொளிவிளக்கம்போலப் பசுத்துவநீக்கத்தினருள் விளக்கமாத்திரையே யன்றி யானந்தவிளக்கமுடனிகழாமையானும், அவ்விரண்டற்கும்வே றுபாடுமுன்னர்க்காட்டப்படுமாதலானும், முதனூலிற்பாசக்ஷயம்பண் ணுமாறுணர்த்தியவழிப்பாச நீக்கமாத்திரையே முத்தியெனக்கொண் டவாசிரியர் மறுக்கப் பொருட்டுப்பாச நீக்கம்பெற்றோன் சுவானுபூதி யுடையவனாயவினைப் பதினொராஞ்சூத்திரஞ் செய்தற்குத் தோற்று வாயாந்துணையே பத்தாஞ்சூத்திரத்திற் செய்துவைத்துச் சுவாநுபூதி நிகழ்ச்சிக்கண்ணேதற் பாலனவெல்லாம் பதினொராஞ் சூத்திரத்துட் கூறுதலினொன்பதாஞ் சூத்திரத்தினெடுத்துக் கொண்டவான்மசுத்தி பண்ணுமாறு பத்தாஞ்சூத்திரத்திற் சென்றியைந்துமுற்றுப் பெற்றாற் போல, பத்தாஞ்சூத்திரத்தி னெடுத்துக்கொண்ட சுவாநுபூதிநிலைபதி னொராஞ்சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப்பெறுதலான், அதன் கண்மலையாமைப் பொருட்டாசிரியர் சுவாநுபூதி மானுவனென்பதனை யும்அரன்கழல் செலுமெனப் பதினொராஞ் சூத்திரத்தானே யொரு ங்குவைத்தோதினாராகலினது மாறன்மையானும் அவ்வாறின்றிமொ ழிபெயர்த்தல் யாப்பானூல்செய்துரைப்பான் புகுந்தவாசிரியர்வேறு படச்செய்துரையாராகலானுமென்பது. இதனானே முதனூலிற்சுவாநு பூதிமானென்னவாளாகூறியதனைப்பதினொராஞ்சூத்திரத்துப்பதிசெய்க வென்றதன்பின் னுரைகொண்டு கூட்டிவைத்துரைத்தலே யதன்கருத் தென்பதூஉம்பெறப்பட்டது. அற்றாகலினன்றே, பத்தாஞ்சூத்திரம் பாசக்ஷயம்பண்ணுமாறுணர்த்திற்றெனவும், பதினொராஞ்சூத்திரம்பர மசிவனதுசிபாகங்களை யினிதுமாறுணர்த்திற் றெனவுங் கருத்துரை செய்கதூஉமென்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு - காட்டக்காணுந் தன்மையையுடையகண் உருவத்தைக்காணும்படி யதனோடொருங்கி யைந்து நின்று காட்டி, அவ்வுருவத்தைக் காண்கின்ற வான்மாப்போல, அறிவிக்கவறியு மியல்பையுடைய வவ்வான்மாவிடயத்தை யறியும்படி முதல்வனதனோடி யைந்துநின்று அறிவிக்கவறிந்து வருதலானவ்வத்துவிதநிலையை மறவாதுகடைப்பிடித்துச் செய்யுமன்பானேயம் முதல்வன்றிருவடியாகிய சிவாநந்தானுபூதியைத் தலைப்படுமென்றவாறு.

காணுமென்னு முவமை யடை பொருளினுங் கண்டென்னும் பொருள்வினை யுவமையினுஞ்சென றியைந்தன. காணுமென்பதனை யிரிடத்துங்கூட்டுக. "வேர்த்துவெகுளார் விழுமியோர்" என்பது போலக்கண்டு காட்டலென்பது மாறிவைத்துரைக்கப்பட்டது. இக்கருத்துநோக்கியன்றே யிதனைவிரித்துக் கூறுவான்புகுந்த வழிநூலாசிரியர் "காட்டிக்கண்டிடுமோப்போலக் காட்டிக்கண்டிடுவன்" என்ற தூஉமென்க. அயராமைக்குச் செயப்படுபொரு ளதனையென் றெடுத்துக்கொள்க. அயராவன்பென்றது மயராமையானாகிய வன்பென ஆறு சென்றவேர்போலநின்றது. அது-"இத்தை யாயுமறிவுடைய ஞயன்பு செய்ய"என வழிநூலாசிரியர் கூறி யதனானுமுணர்க. உள்ளத்தையென்பதுருபுமய்க்கம். அறிவிச்சைசெயல் களினிகழ்ச்சியாகியவயராமையும் அன்புஞ்செலவுமுறையே காரணகாரியங்களா யவ்வொருபொருண்மேலொருங்கு நிகழுமென்பார். "அயராவன்பி னரன்கழல்செலுமே" என்றார். இஃதென்சொல்லிய வாறோவெனின், உயிரையின்றியமையாதகண் உருவத்தைக்காணுங்கா லுயிரினதுணர்வு கண்ணொளியெனத்தானென வேற்றுமையின்றி யுடனாய் விரவிநின்றுகண்ணுக்குக் காட்டிய வதனைக்கண்டதென்றுங் கண்ணையதிட்டித்து நின்ற வுயிர்கண்டதென்றும் பகுத்தறியவாராதிரண்டன் காட்சியுமொன்றனையொன்று விடாமலத்துவிதமாகியொருங்கே நிகழுமாறுபோல, முதல்வனையின்றியமையாதவுயிரொருவிடயத்தை யறியுங்காலுமுதல்வனதுசிற்சத்தியான்மசிற்சத்தியெனத் தானெனவே றின்றியுடனாய்விரவிநிற்ப முதல்

வனுமவ்வாறு விரவிநின்றான்மா வுக்கவிவித்த தொன்றனை யவ்வான்மா வறிந்ததென்று மதனையதிட்டித்துநின்று தானறிந்தானென்றும் படுத்தறியவாராதிருவகை யறிவுமொன்றனை யொன்றுவிடாமலத்துவிதமா யொருங்கேநிகழுமாறு செய்துவரு மிவ்வுபகாரம்பெத்த முத்திரண்டினு மொருபெற்றித்தா யுண்மையின், ஏகனாகியிறைபணிநிற்கு முயிர் முதல்வனங்ஙனம் பத்துவிதமாயுபகரித்து நிற்குமுரிமையைநோக்குமாயின், நோக்குந்தோறு நோக்குந்தோறு மப்பொருட்கட்செல்லு மிச்சையடங்காது மீதூருமாகலின், அவ்வழியவ்விச்சையே தானாகவிளங்கித்தோன்றும் பேரானந்தத்தை யநுபவிக்கப்படுமென அறிவிச்சை செயல் கண்மூன்றுங்கண்டு விடயிக்குமாறுணர்த்தி யதீதநிலையியல்பு கூறியவாறுமென்க. அத்துவிதமாவதுபேதப்பொருளிரண்டு தம்முள பேதமாதற்குரிய சம்பந்தவிசேடம். இக்கருத்தேபற்றி "அறிவொளி போற் பிறிவருமத்துவிதம்" என்றார்புடைநூலாசிரியரும். அங்கியுமொள்ளிற் றங்கிநின்றல்லது தன்றொழி லடத்தாதாகலின். அதுபோல முதல்வனுமுயிரை யதிட்டித்துநின்றே யெத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க. உயிரொன்றனையறிதல் முதல்வனுடனின் றறிதலானன்றி யறிவித்தன்மாத்திரை யானமையாதென்பது, "தொண்டனேனினையுமாநினையே" "விரும்புமாவிரும்பே" "தொடருமாதொடரே" "நுகருமாநுகரே" என்றிவ்வாறுமுத்திநிலைபற்றி யோதியதிருவாக்குக்களானுமறிக. இவ்வியல்புநோக்கியன்றே, "அறிவானுந்தானேயறிவிப்பான்றானே" என்றும், "அம்மையறிவாயறிகின்றான்றானே" என்றுமோதியதூஉமென்க. முன்னறிதலறிவித்தற் பொருட்டெனவும், பின்னறிவாயறிதல் விடயத்திலழுந்துவித்தற்பொருட்டெனவுங் கொண்டிதனையீண்டுவைத்தார் அத்துவிதநிலையினிது விளக்குதற்கு. இவ்வாறன்றிக்காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற்காண வுள்ளத்தைக்கண்டு காட்டலென்பதற்குக்காட்டு முபகாரமுணர்த் தன்மாத்திரையே கருத்தென் றுரைப்பாருமுளர். இதனைக் கண்ணழித்துரைப்புழியவனுமவற்றது விடயத்தையுணரு மெனக்காணு முபகாரமாத்திரையே யெடுத்துக் கொண்டுரைத்தலாசிரியர்கருத்தன்றாகலானும், காணுமுபகாரங் காட்டுமுபகார

த்தின்பின்னதாய் நிகழுமென்ப துணர்ந்துகோடற் பொருட்டதுவுமு டன் கூறப்பட்டதன்றி வேறின்மையானும், அவ்வாறன்றென்பார்க் கைந்தாஞ்சூத்திரத்துட் பெறப்பட்டதனை யீண்டுக்கூறுதல் புனருத்தி யாய் முடியுமாகலானும், அவருரைப்பனவெல்லாம் போலியுரையென் றொழிக. அற்றேல்,முதனூலிற் பதினொராஞ்சூத்திரத்துக்காட்டுவனெ ன்பது மாத்திரையேயன்றிக்காண்பனென்பதுகூறிற்றில்லையாலெனின், அறியாதுவினாயினாய், ஆண்டுக்காட்டுவானுமென்றவும்மை காண்பானு மாமென வெதிரதுதழீஇநிற்றலிற் கூறுமையாண்டைய தென்றொழிக. அவ்வும்மைக்குப்பொருள் காணமாட்டாதார் பாடம்வேறாகவோதுப. இதனுள்" காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற்காண வுள்ளத்தை கண்டுகாட்டலின்,, என்றதோரதிகரணம்; அயராவன்பினரன் கழல் செலுமே,, என்றதோரதிகரணம்; ஆகவிரண்டதிகரணத்ததிச் சூத்திர மென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டவனுமவற்றது விடயத்தையுணருமென்றது-எ-து-மே-ள்- எ-னின், முதல்வனுயிர்க்குக் காட்டுமுபகார மாத்திரையேயுள்ள தெ ன்னும் வாதிகளைநோக்கி, அத்துவிதநிலையுணர்த்தற் கெடுத்துக்கொ ண்டசூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோட் ளுதலிற்று.

(இ-ள்.) முதல்வனுயிர்களா னுணரப்படும்விடயத்தை யுடனின் றுணர்வனென்றவாறு.

உம்மையுயிர்க ளுணர்தலேயன்றி யெனவிறந்தது தழீஇயிற்று. இஃதறியாதார் ஈண்டுணருமென்றது அறிவித்தற்கேதுவா யறியுமெ ன்றுரைப்பாருமுளர். அவ்வாறுரைப்பிற் சித்தசாதனமா மாகலானுமீ ண்டைக்கியை பின்மையானுமது பொய்யென்றொழிக." அவையே தானேயாய்,, எனவும்" தாந்தமுணர்வின்றமியருள்,, எனவும், மேற்

பொதுவகையாற்கூறிப் போந்தவத்து விதத்தையிங்கெடுக்காணு முப காரத்தின் வைத்துணர்த்தியிவிது விளக்கியவாறு.

இவ்வான்மாக்களவனை யின்றியமைத்தொன்றையும் விடயியாவா கலான்-எ-து-எது-எ-னின், கண்சடமாகலானும், காண்டற்பயனுயிர் க்கேயாகலானும், கண்காண்புழியுயிரு முடனின்றுகாண்டல் பெறப் படும்,கண்போலுயிர் சடமன்மையானும்,உணர்தற்பயனுயிர்க்கே யாக லானு மதனையெடுத்துக் காட்டியவனுமவற்றது விடயத்தையுணரு மென்றலமையா தென்பானை நோக்கி, மேற்கோளைச் சாதித்தனுத லிற்று.

(இ-ள்.) விளக்கொளி கண்ணொளியோடுகலந்து கண்ணொளியோ டுகூடியுருவத்தினுங் கலந்தாலன்றி யஃதவ்வுருவத்தைக் காண்டலின் றாயவாறுபோல, அறிவிக்கவறியு மியல்பினவாய வுயிர்களுமுதல்வன துணர்வுதம்மோடு விரவிநின்றுதம்மோடு கூடச்சென்று விடயத்தி னும் விரவிநின்றாலறிவு விளங்கியதனை யறியுமியல்பினவல்லித் தனி த்தமையவுமாட்டா, தனித்தொன்றனை விடயிக்கவுமாட்டா, ஆகலான் அறிவுவிளங்குதன் மாத்திரைக்கேயன்றி விடயத்தைப்பற்றுதற் கண் ணுமுதல்வ னுடனின்றறித லொருதலையான் வேண்டப் படுதலா னீண்டவனுமவற்றது விடயத்தையுணருமெனமேற் கொண்டதென் றவாறு.

அவனையின்றி யமையாமையிற் காட்டுமுபகாரம் விளங்கினாற் போல, அவனையின்றியொன்றையும் விடயியாமையிற் காணுமுபகார முமினிது விளங்குமென்பார் அவனையின்றி யமைந்தொன்றையும்வி டயியாவாகலானென்றார். அமைந்துவிடயியா வென்றதனைக்கந்தித் துச்சுழலுமென்றாற்போலக் கொள்க. உம்மைமுற்றும்மை. விடயியா வென்றது பெயரடியிற்பிறந்த வெதிர்மறைவினை "எவ்விடத்துமிறை யடியையின்றியமைந்தொன்றை யறிந்தியற்றியிடாவுயிர்களொன்றானுஞ் செவ்விதினுளம்புகுந்து செய்தியெல்லாமுணர்ந்து சேட்டிப்பித்தெங் குமாய்ச்செறிந்துநிற்ப னிவ்வுயிர்கடோற்றும் போதவனையின்றித்தோ ன்றாதிவற்றினுக்கம் முதலெழுத்துச்செல்லாநிற்கு, மவ்வுயிர்போனின் றிடவனாதலானுமரனடியை யகன்றுநிற்பதெங்கேயாமே" எனவழிநூ லாசிரியரிதனை விரித்தோதியவாறு முணர்க. எவ்விடத்துமென்றது

பெத்தமுத்தி யிரண்டினுமென்பதாம். இதனுள்இறையடியை யின்றி யமைந்தொன்றை யறிந்தியற்றியிடாவுயிர்களெனவும். ஈசன்றானெங் குமாய்ச்செறிந்து நிற்பனெனவுங் கூறியதுவிடயத்தின் கட்படுநிகழ்ச் சிக்கெனவும், இவ்வுயிர்க்கேற்றும் போதவனை யின்றித்தோற்று வெனவும், அவ்வுயிர்போனின்றிடுவ னெனவுங் கூறியதுயிரின்கட்படு நிகழ்ச்சிக்கெனவுங்கொள்க. அவ்வாறுகொள்ளாக்கால் இருகாற்கூறு தல்புனருத்தியாய் முடியுமென்றொழிக. இனிவிளக்கொளி கலத்தலி ரிடத்தும் வேண்டப்படுமென்பதூஉம், விளக்கொளி கலந்தவற்றை யெனவும், விளக்கின் சோதிகலந்திடுமெனவும் புடைநூலாசிரியர்வகு த்தோதியவற்றானுணர்க. அஃதங்ஙனமாக, பரமுத்தியிலுயிர்க்குவிடய மாவதொன்றின்மையின், வழிநூலாசிரியர் எவ்விடத்து மென்றதமை யுமாறென்னையெனின், அறியாதுகூறினய், சுத்தவனுபோகத்தைத் துய்த்தலனுவெனவும், ஒன்றிநின்றுணரு முண்மையெனவும் பிறண் டுமிவ்வாறே யோதுபவாகலிற் பரமுத்தியிலுயிர் சிவானந்தானுபூதி யைவிட்டயித்தலுண்டெனவும் அதுமுதல்வனை யின்றியாகாமையின வனுமாண் டவ்வனுபூதியை யுடனின்றறிவ னெனவுமுணர்க.

வெண்பா.

ஐந்தையுமொக்கவுணராதவற்றுணர்வ ௯
தைந்தும்போனின்றுணருமாதலா-லைந்தினையு ... ௯
மொன்றென்றுப்பார்த்துணர்வதுள்ளமேயெவ்வுலகு
மொன்றென்றுப்பார்க்குமுணர்ந்து ... ... (௪)

ஐந்தை-உணர்ந்து-எ-து-உ-ம்-எ-னின், அவனுமவற்றது விடய த்தையுடனின்றுணருமாயின். அவற்றோடவனிடை யறிதற்கட்படும் வேற்றுமையில்லைபோலு மென்பாளைநோக்கி, வேற்றுமையுங்காட்டி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) உள்ளம்-எ-து-ஆன்மாவாவது-அவற்றைந்தும்போனின் றுணர்வதுணருமாதலால்-எ-து-சுவையொளியூறோசைநாற்றமென்னு மைந்தினுமைம்பொறிபோ லதுவதுவாய்ச் செறிந்துநின்றுணர்தற்பா லதனை யுணருந்தன்மைத்தாகலான் - ஐந்தையுமொக்கவுணரா தைந்தி னையும் ஒன்றென்றுப்பார்த்துணர்வது - அவ்வைம்புலன்களையு மொ

ருங்கேயுணரமாட்டா தொரோசையொன்றாயிந்து [அனுபவிப்பதாம். ஒன்றெய்வுலகுமொன்று வுணர்ந்துபார்க்கும் - எ - து-அதுபோலச் சார்ந்ததன்வண்ணமாய்ப் பலபிறப்படுதலின்றி யென்றுமொருபெற்றித்தாயியசிவம் எல்லாவுயிர்களுடைய வெல்லாவிடயங்களையும் பொதுவகையா லொருங்கேயுணர்ந்து அவ்வுயிர்களுடனின்று சிறப்புவகையாலு மறியுமென்றவாறு.

இது பின்வருநிலை. சிவத்தைப்பிரித்தமையின் ஏகாரம்-பிரிநிலைக் கண்வந்தது. ஒன்றென்பது குறிப்பேதுவாய் நின்றபெயர்.

வெண்பா.

ஏகமாய்நின்றே யிணையடிகளொன்றுணரப் ... ...
போகமாய்த்தான்விளைந்த பொற்பினால் - ஏகமா..
யுள்ளத்தின்கண்ணானு னுள்குவாருள்கிற்றை ...
யுள்ளத்தாற்காணானேயுற்று ... ... (௨)

ஏகமாய்-உற்று - எ-து-உ-ம்-எ-னின், ஆன்மா ஐம்பொறியை விடயிப்பதுபோல, முதல்வனை விடயிப்பதிலு முதல்வனவ்வாறுடனின்று தன்னைத்தான் விடயிப்பனெனின், ஆன்மாச்சிரயமென்னுங்குற்றமாமாகலின், அதுபெறப்படாமையான், அவனுமவற்றது விடயத்தையுணருமென்றல் யாண்டுஞ்செல்லா தென்பதைநோக்கி, யாண்டு மவ்வாறுணர்த லுண்டென்பதுணர்த்தி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ - ள்) ஒன்றேகமாய்நின்றே யிணையடிகளுணரத் தான்போகமாய் விளைந்தபொற்பினான்-எ-து - முதல்வனைச் சார்ந்தவழி யவ்வண்ணமேயா யொருபெற்றிப்பட்ட வான்மாவவனோடொற்றுமைப்பட்டு நின்றவனதடியிணைகளையுணரவே தானவ்வான்மாவுக்குப் பரபோகமாய் மேன்மேல்விளைகின்ற பொலிவினையுடையனாகலானும் - ஏகமாயுள்ளத்தின்கண்ணானன்- எ - து - அங்ஙனமுணருங்கா லவ்வான்மஞானத்தினிடத் தேகமாய்விட்டு நீங்காதவனாகலானும்,- உள்குவாருள்கிற்றை யுள்ளத்தாலுற்றுக்காணானோ-எ - து - கருதுவார் கருதிய பொருளாகியதன்னை யவரறிவோடுகூடிநின் றறியானோசொல்லோவென்றவாறு.

போகமாய்த்தான்விளைந்த பொற்பினன் ஏகமாயுள்ளத்தின்கண்ணானன் என்னும் பெயரடைகளேதுப்பொருளவாய் நின்றனயாண்டுஞ் சேறலுணர்த்துதற்கு. உள்குவாருள்கிற்றையென்றார் வேண்டுவார்வேண்டியதை யீவானென்றாற்போல. ஆறுருபுட னிகழ்ச்சிப் பொருட்கண்வந்தது. ஓகாரமெதிர்மறை. ஆன்மாக்கள் முதல்வனை விடயிக்குங்கால், அவற்றதுவிடயமாகிய வவன்றன்னாலு முடனின்றுணரப்படுவ னுள்குவாருள்கிய பொருளாகலின். மேலைவெண்பாவிற் கூறிப்போந்த வைம்புலன்போலவென்றும், ஆன்மவளவைகாட்டுவார் உள்குவாருள்கிற்றை யுள்ளத்தாலுற்றுக்காணானேயென்றும், உள்குவாருள்கிற்றுதலோரிடத்து மொக்குமென்பார் ஏகமாய்நின்றே யிணையடிகளொன் றுணரப்போகமாய்த் தான்விளைந்த பொற்பினன் என விடயித்தற்கட்படுமியல்பும் ஏகமாயுள்ளத்தின் கண்ணானனென விளங்குதற்கட்படு மியல்பு மெடுத்தோதினார். பரபோகமாயென்னாது போகமாயென்றதும் ஒப்புமையிணங்குதற்பொருட்டுச் சேற்றுநிலமிதித்துச் சென்றானுக்கு அந்நிலம்போலப் பரயோகவிளைவு செயற்கைப்பொருளாய்நிற்றலின் ஆக்கமுங்காரணமு மடுத்துவந்தது. இணையடிகளுணருந்தோறும் போகமென மேல்விளைதல் "புணர்ந்தாற்புணருந்தோறும் பெரும்போகம் பின்னும்புதிதாய், மணந்தாழ் புரிகுழலாளல்குல்போல வளர்கின்றதே" எனவுமப்பொருண்மேல்வைத் தோதியதிருவாக்கானுமறிக. தெளிவுபற்றி, விளைந்தவெனவிறந்தகாலத்தாற் கூறினார். கண்கண்ணாடியினின்றுந் தன்னைவிடயித்தாற்போல முதல்வனான்மாவுடனின்று தன்னைவிடயித்தல் பொருத்தமுடைமையின், ஆன்மாச்சிரயமென்னுங்குற்றம் இன்னோரன்னவற்றிற் செய்தாதென்றுணர்க. கண்ணாடிக்குள்ளாகத் தோன்றுவதுபோலு மெதிர்விம்பமாவது 'விம்பமேயன்றி வேறன்றென்பது சிவாகமநூற்றுணிபென்க. இதனுள், அவனுமவற்றது விடயத்தையுணருமென வுணர்வேபற்றியோதினாரேனும். "எத்திறஞானமுள்ள தத்திறமிச்சைசெய்தி" என்பவாகலி னவற்றிற்குமஃதொக்கும். ஒக்கவேபெத்த முத்தியிரண்டினுமான்மாவிடயிக்கப்படும் விடயங்களை முதல்வனுடனின்று விடயிப்ப

வென்பதூஉம், பெத்தத்தினவனிவனாய்நின்று விடயித்தலின், விடய ங்களவனுக்கன்றி யிவனுக்காயின முத்தியினிவனவனாய்நின்று விடயி த்தலின் அவனொழிந்த விடயங்களெல்லா மிவனுக்கின்றி யவனுக்கா யினவென்பதூஉந், இனிதுவிளங்கும். இம்முறைநோக்கியன்றே, உ லகத்துளொன்றயினு மிவ்வொருமேற்போருஞ் சிவார்ப்பணமெனக் கரு தாதவழிக் குற்றமென் றாகமங்களோதியதூஉம், "யாதொருதெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகி யங்கே மாதொருபாகனார் தாம்வருவர்" எ ன்றதூஉம், அவ்வுண்மையறிந்தவழி, "எத்தனுவினின்று மிறையணி யார்க்கில்லைவினை முற்செய்வினையுங்கருவான்முன்" எ-ம், "பெற்றசிற் றின்பமேபேரின்பமாய்" எ-ம் உடம்புடையயோகிகடாமுற்ற சிற்றி ன்பமட்டுக்கந் தம்பேரின்பத்தாக்கி" எ-ம், "காணுங்கரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணுமடியார்" எ-ம், "எல்லாஞ்சிவமாயிருந்ததே" எ-ம் இவ்வாறோதியதூஉமென்க.

இரண்டாமதிகரணம்.

இனிப்பத்தியான்மறவா தேத்தவவனது சீபாதத்தை யணையு மென்றது-எ-து-மே-ள்-எ-னின், ஏகமாகிநின்றார்க் கவ்விவையபுபற்றி யறிவிச்சைசெயல்கள் மூன்றுமாண்டுவிடயிக்கு மாறியாங்ஙன மென் பானோக்கி, நிட்டையினியல் புணர்த்துதற் கெடுத்துக் கொண்ட விரண்டாங் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுத லிற்று.

(இ-ள்) சூத்திரத்தி னுரைத்தவாறு பற்றியுரைத்துக் கொள்க

இத்தையாயு மறிவுடையனா யன்புசெய்ய, எனவழிநூலாசிரியரு மோதுதலினீண்டு மறவாதுபத்தியினாலேத்தவெனச் சூத்திரப்பொரு ட்கேற்பமாறிவைத் துரைத்துக்கொள்க. ஏத்தவென்றதுபசாரவழக்கு. அன்புபத்திகாதலென்றாற் போல்வனஇச்சைமீதூர் தற்பொருளவாக லானது பாமுத்தியினுமுண்டென்ப துணராதார்பத்தியாவது சீவன் முத்திநிலைக்கே செய்யப்படுவதொரு சாதகம்போலுமென மயங்கித்

தமக்குவேண்டியவாறே யுரைப்ப. முத்தியின்கணிச்சை நிகழாதவழி ச்சிவபோக மனுபவமாதல் செல்லாமையானும், சிவன்முத்திநிலைக்கே கூறுவதன்றாயின் "செம்மலர்நோன்றாள்" என்னுஞ்சூத்திரத்தொருங் குவைத்தோதவமையும், சூத்திரம்வேறுசெய்ய வேண்டாமையானும், அவ்வுரைபோலி யுரையென்றொழிக.

அவனன்றிய மின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்துநிற்ற லான் - எ-து - ஏது - எ-னின், பத்தியினான் மறவாதேத்தினு மவ னதுசீபாதத்தை யணைதல் பரமுத்தியினன்றி முடியாதென்பானைநோ க்கி, மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்.) அம்முதல்வன் வேறுநில்லாது செய்வோர்செய்வனவற் றையறிந்து அவ்வச்செய்திக்குத்தக்கபயனை யிகச்செய்யலாயினவவ்வ ப்பொழுதேவிளைவித்தும் அல்லுழிக்காலாந்தரத்தின் விளைவித்துமுட னாய்நிற்பனாகலான் இனிப்பத்தியினான் மறவாதேத்தவேயும் முதல்வ னது சீபாதத்தை யணையுமெனமேற்கொண்ட தென்றவாறு.

வெண்பா.

அருக்கனேர்நிற்பினுமல்லிருளேகாணார்க் ... ... ❋
கிருட்கண்ணேபாசத்தார்க்கீச - னருட்கண்ணாற் ... •
பாசத்தைநீக்கும்பகலலர்த்துந்தாமரைபோ ... ❋
னேசத்திற்றன்னுணர்ந்தார்நேர். ... ... (௩.)

அருக்கன்-நேர்-எ-று-உ-ம்-எ-னின், அரன்கழல்சேறலுடம்பினி ங்கியபின்னன்றி யுடம்பையுடைய வழியுங்கூடுமாயினை, அதுஞாயிற் றினொளிபோல மருங்குள்ளார்கருப் புலனாதல் வேண்டுமென்பானை நோக்கி, அதுகூடாமையுங் கூடுமாறுமுவமை முகத்தானுணர்த்தியே துவை வலியுறுத்தத னுதலிற்று.

(இ-ள்.) அருக்கனேர்நிற்பினுங்காணார்கண்ணுக்கல்லிருளே-எ-து- ஞாயிறெல்லார்கண்ணுக்கு மொப்பநிற்பினுமது காட்சியுடையார்கண் ணுக்கன்றியஃதில்லாதார் கண்ணுக்கிரவின் கண்ணதாகிய விருளே யாமதுபோல - ஈசன்பாசத்தார்க் கிருட்கண்ணே-எ-து- முதல்வனெ ங்கணுமொப்பநிற்பினு மலநீங்கியமுத்தர்க் கன்றியஃதுடையார்க்கவ

வர்க்கத்தின் கண்ணேயாயவன்-, சிவன்முத்தருடனேயர் போலுடனு டைமையிற் பாசத்தாக்கவின் வேற்றுமையின்றிலவின்,- பகலவர்த நாககமலைமேபோல்-எ-து- எனைத்தாமரைகளோ டொப்பவொருங்கு விரிவினும் பருவமுடைய தாமரையைக் கூம்புதலினீக்கியலர்த்து ஞாயிறுபோல - தேசத்திற்றன்னுணர்ந்தார் தேருட்கன்றாற் பாசத்தை நீக்கும்-எ-து- ஏனையோர் போலுடம்பொடுநிற்பினும் பருவமுடைய சாய்ப் பக்குவிருறுத்தலினோடியவாதுயவர் வார்க்குமுதல்வன்றனது திருவருட்பார்வையாற பாசத்தைநீக்கி யறிவையலர்த்து மாகலானுடம்புள்வழியு மவர்பாசத்த ரல்லரென்பதாம்.

ஆகலானுடம்புள் வழியுமவர்பாசத்த ரல்லரென்பது குறிப்பெச்சம் ஏகாரந்தேற்றம். சிவனிக்கவிருளென்பார் அல்லிருளென்றார். மலத்திற்குக் கன்றுவதறியாமை. பகல்ஆகுபெயர். அருக்கனெனித்து காட்டுவமை. தன்னினெயன்று மிரண்டனுருபு விகாரத்தாற்றொகது. ஏழாமவேற்றுமைப்பொருட்கண் வருநேரென்பதுருபுமயக்கமாய் கால்கையதலைர்க்கிறது நீக்குதலுமலர்த்துதலு மேனையிடத்துஞ்சென்றினை தலைநீடத்துஞ் செயப்படுபொருளேற்றல் வருவிக்கப்பட்டன.

வெண்பா.

மன்னுமிருளைமதிதுரந்தவாறன்றின் ... ...
மன்னுமாரனைமலந்துரந்து - தன்னின் ... ...
லலித்திரும்பைச்சாந்தம்வசஞ்செய்வான்செய்தல்
சலிப்பில்விகாரியலன்றான். ... ... (௪)

மன்னும்-தான்-எ-து-உ-ம்-எ-னின், தேசத்திற் றன்னுணர்ந்தோர்க்குப் பாசத்தைநீக்கி யறிவையலர்த்துதல் முதல்வனது வினையின்றிச் சிவனைப் பரவசிக்கூறும்வாதிகளை நோக்கி, பாசத்தைநீக்கி யறிவையலர்த்து முறைமையிவ்வா றென்றுணர்த்தி, அதனை வலியுறுத்துதலுதலிற்று.

(இ-ள். அன்பின்மன்னுமாரனை மன்னுமிருளை மதிதுரந்தவாறு மலந்துரந்து-எ-து-உயிர்களைத்தானுணர்த்திக்கொடற் கண்ணுளதாகிய விச்சைமிகுதியா லவ்வுயிரோடு மதாதியேகஇலபெற முதல்வன்கண்ணின்

சனிலவெழுமிருளைப் பிறைமதிபோலுஞ் சிறிதுசிறிதாகப்போக்கிக் காட்டுமாறுபோல வவ்வுயிரின்கண்ணதாகிய மலசத்தியை யவ்வப்பருவந்தோறுஞ் சிறிதுசிறிதாகச் சோபானமுறையினீக்கிப் பற்றுமத்தூரந்நு- காந்தமிரும்பைத் தன்னின்வலித்துவசஞ்செய்யாஞ்செய்தல்சலிப்பில் - எ-து - காந்தக்கல்லிரும்பைத் தன்கணீர்த்துத் தன்வசமாகச்செய்தல்போல மலமங்ஙனந்தூரக்கப்படுந்தோறு மம்முறையே யசசத்திபதிவித்துயிரைத் தன்கண்வலித்துககொண்டு தன்வசமாகச்செய்துவருஞ்செய்கையினவனுக்கொரு ஞான்றுஞ்சலிப்பில்லை- விகாரியலன்முன்-எ-து-அங்ஙனஞ் சலியாதுசெய்துவருதல்பற்றி விகாரியாவானுமல்லன் காந்தம்போற்றனது சந்நிதிமாத்திரையிற்செய்யு மம்முதல்வனென்றவாறு.

மதிபோன்ற தேய்புழிக்கோடலா னீண்டுவளர்பக்கத்திற் றிங்களின்மேற்றாயிற்று. "அந்தவருளுணர்விந்காதாரமா யல்லினிற்றுவேறாவேறிடத்திட்டு" என்றதூஉமது. மலர்த்தலுயிரின் செயலாகுவதன்றெவ்பது படநின்றமையின் ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. வான்பாற்பாக்குக்கடொழிற்பெயர் விகுதியுமாமென்பது "கரப்பாக்கறிந்து" என்பதனானுணர்க. உவமவுருபு விரித்துரைக்க. சலித்தல் வேசறுதல். செய்தற்கண்ணென வேற்றுருபுவிரித்துரைக்க. மதிதூரந்தவாறு மலந்தூரந்தென்றவிதனானே, மலநீங்குவதுபின்னென்பார் மதமறுக்கப்பட்டவாறுகாண்க. சோபானமுறையினீக்குதலானன்றே சத்திநிபாதஞ் சிவபுண்ணியமுதலாயின நால்வேறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளுமொரோவொன்று நந்நான்காய்ப் பதினாறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளு மொவ்வொன்று பல்வேறுவகைப்பட்டு விரிந்ததூஉ மென்க.

வெண்பா.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்றா ௧
நசித்திலதே லொன்றாவதில்லை - நசித்துமல .. ௨
மப்பணைந்தவுப்பி னுளமணைந்து சேடமாம் ௩
கப்பின்றா மீசன் கழல ... ...(௫)

நசித்தொன்றின் - கழல் - எ - து - உ-ம்-எ-னின், உயிருக்குங் குணம்போல வநாதியாயுள்ள சகசமலமவ்வுயிரின்வேறாய்த் தூரசுற

பாலதன்றாகலின், மலந்தாக்கென்ற தமையாதென்றும் பாடாணவா தசைவமாமென்க. அருத்தாபத்தியளவை யானதனை வலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) நசித்தொன்றி லுள்ள நசித்தலாலொன்றா நசித்திலதே லொன்றாவதில்லை-எ-து - ஆன்மாக்கள் செல்லுங்கா லதனையான்மாக் கெட்டொன்றுமோ கெடாதொன்றுமோவெனக் கடாயினார்க்குக் கெ ட்டொன்றுமெனின், ஆன்மாக்கெட்டுப்போகலா னொன்றமாட்டாது, கெடாதொன்றுமெனிற் கெடாதவழி யிருபொருளாய்நிற்றலி னொன் றமாதலில்லையாகலா னருத்தாபத்தியளவையானே - அப்பணைந்தவுப்பி ன் மலங்கெடுத்தரனீசன் கழலணைந்துசேடமாம் - எ-து- உப்புத்தனது கல்லுருப்புநீங்கி நீரொன்றுமாறுபோலத் தனது சகசமலங்கெட்டொ ழிய வான்மாவரன்கழலிணையோ டொற்றி யவ்வரன்கழற்குச்சேடமாம் - கப் பின்றாம்-எ-து-அங்ஙனஞ்சேடமாகிய வான்மாவுக்கு மீளக்கவற்சியி ல்லையென்றவாறு.

ஒன்றாதென்னுந் துவ்விருத்தி விகாரத்தாற்றொக்கது. பின்வந்த நசித்தென்பது செயவெனெச்சத்திரிபு. யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றிநிற்கும் அஃததற்கு விசேடமெனப்படுதலின். "அவையுடைமை யாளாநாமக்கு"என வோது தலி னேனைப் பசுபாசங்கண் முதல்வனுக்குப் பொதுவகையாற்சேட மாயினு மிதுபோலச் சிறப்புவகையாற் சேடமாத லின்மையினிதனை வேறெடுத்தோதினார். முத்திநிலைகூறி முடிந்தமையி னிறுதிக்கட் கப் பின்றுமெனா விறுவிருத்தியுங் கூறினார்.

வெண்பா.

பொன்வாண்முன்சோன்முகிற் புக்கொடுங்கிப்போயகலத்
தன்வாளேயெங்குமாந் தன்மைபோன்-முன்வாள் ❀
மலத்தின்மறைத்துள்ள மற்றுலகையுன்னு ... ❀
மலத்திரிந்துச்செல்லும் வரத்து... ... ... (௯)

பொன்-வரத்து-எ-து-உ-ம்-எ-னின், நாலாஞ்சூத்திர முதலிது காறுங் கூறிப்போந்த கேவலசகலசுத்தமென்று மூத்திறத்தவத்தை களினு மான்மாத்தன் னியல்பிற்றுக் கேடின்றியே நிற்குமென்ப துவ மையினாவைத்துக்காட்டி, மேலதனை வலியுறுத்ததனுதலிற்று.

(இ-ள்) பொன்வாளன்றுன் கொன்றூழிற்புக்கு - எ-து- ஞாயிறு காலைப்போதின் மூழிற்படலத்துண்மறைந்து-ஒடுங்கி-எ-று-அம்மூழிற் படல மொருபுடைநீங்கியவழித் தன்னொளி யேகதேசமா யொடுங்கித் தோன்றி-போயகலவெங்குந் தன்வாளேயாந் தன்மைபோல - எ-து- அம்மூழிற்படலம் பெருங்காற்று னடியுண்டு முழுவதும்விட்டொழிந்த வழியெங்கணுந் தன்னொளியேயாய்த்தோன்றும் பெற்றிபோல- உள்ளுமுன்வாள்மலத் துண்மறைந்து-எ-து - ஆன்மாவினறிவு அநாதியே மலத்துண்மறைப்புண்டு கேவலப்பட்டு - மற்றுலகையுண்ணும்- எ-து-பின்பு கருவிகளோடுகூடி யேகதேசமா யறிவுவிளங்கி யைம்புலன்களை விடயிக்கும்- மலத்திரித்துவாத் துச்செல்லும் - எ-து-பின்பம் மலத்தை முதல்வனருளாற் பற்றறக்களைந்து வியாபகமாயறிவுவிளங்கி யவனது சீபாதத்தையணைந்து சுத்தப்படுமென்றவாறு.

தன்மையென்றூர் கொன்றூழிற்புக்கழியுங் கேடின்மையின் ஏகாரந்தேற்றத்தின் கண்வந்தது. பின்வந்தவாள் ஆகுபெயர். வினைமாற்றின்கண்வந்த மற்றென்னுமிடைச்சொல் மலத்திரித்தென்பதனேடியைந்துசாரியை புள்வழித்தன்னுருபு நிலையாதவிலே சாற்கொள்க. உவமைவினைகள் பொருளினுஞ் சென்றியைந்தன. அறிவுமறைந்து மொடுங்கியுமறைப்புநீங்கி யெங்குமாய்விகழ்தன் மாத்திரைக்கேபொன் வாளுவமையென்பார் உலகையுண்ணும் வரத்துச் செல்லுமென வேற்றுமையுமுடன்கூறினர். மலநசித்தலாவது தனதுமறைத்தற் சத்திமடங்கிக் கிழ்ப்படுதன்மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமையாற்பெறுதும். பதினொராஞ்சூத்திர முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

செம்மலர்நோன்றாள்சேரலொட்டா ... ... ✽
வம்மலங்கழீஇயன்பரொடுமரீஇ . . ... ✽
மாலறநேயமலிந்தவர்வேடமு ... ... ✽
மாலயந்தானுமரனெனத்தொழுமே. ... ✽

எ டு ௪-ஸின், அதிகிருதர் நின்றபயனைச் சிந்திக்கறுய்க்கண்டு வழிபடுமாறுணர்த்துத நுதலிற்று.

எ-து-ட-ரை-எ-ஸின், சூத்திரக்கருத்துணர்த்துத நுதலிற்று.

(இ-ள்.) அமாரவன்பினசன்கழல் சென்றமுத்தர்க்குச் சிவன் முத்தியிலே கண்ணாய் வாசிச்சைசெயல்க ளொரோவழிப் புறத்துச் செல்லுங்கால், அவைசெல்லுமிடமிவையென்பதுணர்ந்து முத்தான் வாக்குமனாதிகமாய்ப் பக்திபிறுண்மறவாதேதத நின்றமுதல்வனையா க்குமனக்களுக்கு கோசரமாம்படி தெளியக்கண்டு வழிபடுமாறுணர் த்துத லிப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்தென்றவாறு.

சூத்திரவிரையு மிவிருவிளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. அமாரவன் பினசன் கழ லினைத் சிவன்முத்தனவான் செம்மலர்போல விரிந்துவிளங்கிய முதல்வனது கொன்றுனி யனையவொட்டாதயர்த்தலைச் செய்விக்கு மவ் வியல்பினையுடைய மும்மலவழுக்கை ஞானநீராற்கழுவி யந்நா மமாலன்புசெய்யு மெய்ஞ்ஞானிகளோடு கலந்துகூடிமலமயக்கநீங்கு தலானவன் புகுக்குடையவராது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையு முதல்வனெனவேகண்டு வழிபட்டுவாழு மென்றவாறு.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. சிவ ன்முத்தனென்பது எற்புழிக்கோடலாற்பெறுதும். கொன்றுள் வினைத் தொகை. கொன்றல்-பொறுத்தல். "எந்தத்துச்சுமப்பானே" என்றார்பு டைநூலாசிரியரும். கழீஇயென்றது-குறிப்புருவகம், மாலறநேயமலி ந்தவரென்றது அம்மலங்கழீஇ யன்பரொடுமரீஇயினரென்னும் பொ ருடந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது. நேயமலிதல்கூறவே வழிபாடும் பெறப்படும். தான்-அசை. அம்மலக்கழீஇயென்றதனுல் அறிவுவியாபிக்குமிடமும், அன்பரொடுமரீஇயென்றதனு லிச்சைவி யாபிக்குமிடமும், தொழுமென்றதனுற் செயல் வியாபிக்குமிடமும், பெறப்பட்டன. படவே சிவன்முத்தர்க் கறிவிச்சைசெயல்கள் ஏனை விடயங்களிற் செல்லாவென்பதூஉம் பெறப்பட்டது. இம்மூன்றும் பிரிப்பின்றி யோரிடத்தொருங்கு நிகழ்வனவாகலின் விடயவேற்றுமை யன்மையுணர்க. தொழுமென்றது - தொழுமென்றமைபி னிகந்த

லைக்கோரது தன்மையென்பது பெற்றாம். அற்றாகலினன்றே, இத னைச்சாதகவோத்தின்வை யாகின்றுவைத்தாரென்பது. இனித்தொழு மென்றதனை யிரட்டுறமொழிந்துகொண்டு விருமிப்பொருள்பட முன் னிலேயேவலாக்கியு முரைத்துக்கொள்க. என்னை; செல்வப்பெருக்க முடையார்க் குணவாகிய வான்பாலுடம்புமோம்பின்றி வளரச்செய்யு மருந்துமாதல்போல, இவ்வழியாம் மலவாசனை சிறிதுந்தாக்குதலின் றிச் சிவானந்தமேன்மேல் வளரச்செய்யுஞ் சாதகமாதலு முடைமை யின், கண்ணழித்துரைபற்றி விதியாகவைத்துரைத்தலு மொன்று. இத னுள், செம்மலர்நோன்றாள் சேரலொட்டா வம்மலங்கழீஇ" என்ற தோரதிகரணம், "அன்பரொடுமரீஇ" என்றதோரதிகரணம், "மாலற நேயமலிந்தவர்வேடமு மாலயந்தானுமரனெனத்தொழுமே" என் றதோரதிகரணம், ஆகமூன்றதிகரணத்த திச்சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டாணவமாயை காமியமென்னுமலங்களைக் கழாகவென்றது- எ-து-மே-ள்-ள-னின், சீவன்முத்தர்க்கொருதலையான் முன்னர்ச்செய் யக்கடவதிதுவெனச்சூத்திரத்தின்முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று.

(இ-ள்.) வெ-டை.

கன்மமலமேதன்மூலத்தைநோக்கிக் காமியமெனவும்படும், ஆகா மியமெனப்பாடமோதி, ஆகாமியங்காமிய மெனத்தலைக்குறையென்று ரைப்பாருமுளர்.

அவைதாம் ஞானத்தையுணர்த்தாதஞ் ஞானத்தையுணர்த்துமா கலான்- எ-து-ஏது-எ-னின், மலமாயைதன்னொடு வல்வினையின்றே யெனப்பாசநீக்கமேலே பெறப்பட்டமையின், மெய்யுணர்ந்துநிட் டைகூடிய பின்னவை களையக்கிடத்தல்,யாங்ஙனமென்பாரைநோக்கி, சூத்திரத்துடம்பொடு புணர்த்தோதியபொருளைத்தெரித்துணர்த்திமே ற்கோளைச்சாதித்த லுதலிற்று.

(இ-ள்.) அம்மலங்கண்மூன்று மெய்யுணர்ந்து நிட்டைகூடினார் மாட்டும்பாதாலுமோராற்று னுழைந்துதம் மெய்யுணர்வைக்கெடுப்பி த்துப் பிறவிக்குவித்தாகியபண்டை விபரீதவுணர்வை மேற்படுத்துவ னவாமாகலானஃதவர்க்காகாமையி னின்டாணவமாயை காமியமெ ன்னுமலங்களைக் களைகவெனமேற்கொண்ட தென்றவாறு.

உணர்த்துதல்-உணர்விற்கேதுவாதல் - ஈண்டஞ்ஞானமென்றது விபரீதவுணர்வை.

வெண்பா.

புண்ணியபாவம்பொருந்துமிக்காமியமு ... ... *
மண்முதன்மாயைதான்மாயையுங் - கண்ணிய ...*
வஞ்ஞானங்காட்டுமிவ்வாணவமுமிம்மூன்று ... *
மெய்ஞ்ஞானிக்காகாவிடு. ... ... (௧)

புண்ணிய-விடு-எ-து-உ-ம்-எ-னின், அவையஞ்ஞானத்திற்கேதுவாய்வந்து நுழையுமாறும், அஃதவர்க்காகாமையுந் தெரித்துணர்த்தி யேதுவைவலியுறுத்துத லுதலிற்று.

(இ-ள்.) புண்ணியபாவம் பொருந்துமிக்கா மியமும்-எ-து-புண் ணியபாவப்பயனாயும் புண்ணியபாவ காரணமாயும் பொருந்துகின்ற விக்கன்மமலமும் - மண்முதல் மாயைதான் மாயையும்-எ-து-நிலமு தல்மோகினியீறாகக்காணப்படுகின்ற விம்மாயாமலமும்-கண்ணியவஞ் ஞானங்காட்டு மிவ்வாணவமும்-எ-து- சுட்டியறிவதாகிய விபரீதவு ணர்வைப்பயக்கு மிவ்வாணவமலமும் - இம்மூன்று மெய்ஞ்ஞானிக் காகாவிடு-எ-து- இம்மலங்கண் மூன்றுமெய்யுணர் வுடையவனுக்கா காமையானவற்றை விடுத்தொழிவாயாக வென்றவாறு.

எல்லாமலங்களும்பற்றறத்துடைத்து மெய்யுணர்ந்து நிட்டைகூ டினார்க்குடம்புநிற்குமளவும் பிராரத்தவினை யவ்வுடம்பைப் பற்றிநிற்ற லானஃதவர்க் கோரோவழிவாசனை வயத்தானீக்குழி, இக்குளிவாங் குங்கலம்போலவந்து தாக்கும், அவ்வழிப் பிறர்செய்யா தநுபவிப்பத ன்றுகலினது சார்வாகவிருப்பு வெறுப்புக்களுளவாம், அவையுளவா கவே பரமேபார்த்திருப்பார்க்கு நிலமுதலிய வேகதேசப்பொருள் கா ட்டிப்படும்; படவே யவற்றைச்சுட்டி யறிவதாகிய விபரீதவுணர்வு

மேற்பட்டு மெய்யுணர்வைக் கெடுத்துப் பிறவிக்கு வித்தாம். இவ்வாறிம்மூன்று மலவியற்கையும்பாற்படு முறையானேவகுத்து கலப்படுமெனக்காட்டிக்கூறுவார் கன்மமாயையாணவ மென்னிம்முறையின் வைத்தவ்வக்காரிய நிகழ்ச்சிகளை யெடுத்தோதிச் சுட்டிக்கூறினார். புண்ணியபாவமென்றது உபசாரம். முன்வங்கமாயை முப்பத்தோராமென்னு முறைமைக்கணின்ற தத்துவத்தை யுணர்த்திவிடாத வாகுபெயராய்த் தன்னை யிருவுடையவேனைத் தத்துவங்களையுந் தழீஇயிற்று. காண்மாயைசெயப்படு பொருள்களோடு முடிந்தவினைத்தொகை. இவைசிவபோகப் பெருவாழ்வை யிழப்பித்தலின்மெய்ஞ்ஞானிக் காகாவாயின. மேன்மேன் முறுகுவனவாய விவற்றைத்தோன்றும் பொழுதே துடையாக்கால் "களையுநர்கைகொல்லும் காழ்த்தவிடத்து" என்னு முறைமைத் தாய்முடியுமென்பதுபற்றி விடுமெனவினையும் வலியுறுத்தப்பட்டது. விடுதலாவது அவையம்மறுமைபாலிகழ்ந்தவழி யிவ்வஞ்ஞான மோகதேசக்காட்சி யானுபதெனவும் அக்காட்சி வெறுப்பு விருப்புக்களதுதோற்றத்தானுயதெனவும், அத்தோற்றமும் பிராரத்தமும் வினைநுகர்ச்சிக்கட் சென்றதற்போதத்தாலாயதெனவும், அறிந்தவனஞ் செல்வதாகியதற் போதமுளையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்தா னடங்கிச் சுவாநுபவஞ்சுவாநுபூதியாம்படி ஞானநிலையினின்றத்துநிற்றல். மாயைகன்மங்க ளஞ்ஞானங்காட்டுதல் ஆணவமலசத்தி சார்வானுய செயற்கையென்ப துணர்த்துதற்கு மூன்றற்கும் பொதுவாகவேது வுட்கூறிப்போந்தவதனை யீண்டாணவமாத்திரைக்கே சிறந்தெடுத்தோதினார்.

இரண்டாமதிகரணம்.

இனிச் சிவபத்தர்களோடிணங்குகவென்றது - எ - து - மே-ள்-எ-னின், அம்மலங்கழீஇ யினோர்க் கதனிலைபெறுத்துவதாய், அதன்பின்னர்ச்செய்யக்கடவதிதுவென்னுஞ் சூத்திரத்தி னிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து, மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-ளிட.

ஈண்டுச்சிவபத்தர் என்றது "பத்திநெறிமறவாதேத்தி முதல்வனது ஸ்ரீபாதங்களைத் தோய்ந்த சிவன்முத்தராமென்றவாறு. இணங்குதல்-கூட்டுச்செய்தல்-சிவபத்தர்களோ டிணங்குகவெனவே யெதிர்மறைமுகத்தா லேனையோரோ டிணங்கற்கவென்பதூஉம் பெறப்பட்டது.

அல்லகாரஞ்ஞானத்தைப்புணர்த்துவாராகலான் - எ - து - ஏது-எ-னின், உறவும்பகையு மொழிக்கமெய்ஞ்ஞானிகள் சிலர்மாட்டுநட்புஞ் சிலர்மாட்டுநட்பின்மையு முடையராதல் சால்பன்றென்பாரை நோக்கி, மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) வெ-ளிடை.

அல்லகாரஞ்ஞானத்தைப்புணர்த்துமாறு, "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி முனிவிலாததோர் பொருளதுகருதலு, மாறுகோடி மாயாசத்திகள், வேறுவேறுதம்மாயைகடொடங்கின, வாத்தமானாரய லவர்கூடி, நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர். சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள், பற்றியழைத்துப் பதறினர்பெருகவும், விரதமேபரமாகவேதியருஞ், சரதமாகவே சாத்திரங்காட்டினர், சமயவாதிகள் தத்தமதங்களே, யமைவதாகவரற்றிமலைந்தனர்" என்றற்றொடக்கத்துத் திருவாசகத்தானறிக. மும்மலங்க ளஞ்ஞானத்தையுணர்த்துதலிலக்குவாய்த்தவழி யேதுவாதன்மாத்திரையே, "சிவபத்தரல்லாதார்" இலக்குவாயாத வழியும்வாய்க்குமாறுசெய்துகொண்டு பலவகையுபாயங்களானுந் தம்மோடொப்ப விபரீதவுணர்வைச் செலுத்திவிடுவாராகலான், அம்மலங்களினுங் கொடியராகிய விவரையவற்றினுமஞ்சிவிட் டொழிதலே யறிவுடைமைக்குச் சால்பென்பதாம்.

வெண்பா.

மாப்பித்துத்தம்மைமலங்களில்வீழ்க்குஞ் ... *
சிறப்பிலார்தந்திறத்துச்சேர்வை - யறப்பித்துப் ... *
பத்தரினத்தாய்ப்பரனுணர்வினாலுணரு ... ... *
மெய்த்தவரைமேவாவினை. .. .. (௨.)

யறப்பித்து-வினை-எ - து - உ-ம்-எ-னின், அஞ்ஞானத்தையுணர்த்துமவரோ டிணங்காமைமாத்திரையே யமையுஞ் சிவபத்தர்களோ

டிணங்குக லெற்றுக்கென்பாரைநோக்கி, அதனை வலியுறுத்துதனுத
லிற்று.

(இ-ள்.) மறப்பித்துத்தம்மை மலங்களில்வீழ்க்குஞ் சிறப்பிலார்
தந்திறத்துச் சேர்வைபற-எ-து-முதல்வன் காட்டியுங்காட்டு முபகரி
த்துநிற்கு மத்துவிதநிலையை மறவாது கடைப்பிடிக்குந் தமதுஞானக்
கண்ணை யிறைப்பித்துத் தீயநெறிக்கட்செலுத்து மலங்களாகும் பிறவிக்
குழியில்வீழ்வித்துத் துயருறுத்துவாராகிய அன்பில்லார் கூட்டிலே
தொன்றுதொட்டுப்பயின்றுவந்த சேர்ச்சியறும்படி-பத்தரினத்தாய்ப்
பரனுணர்வினாலுணரு மெய்த்தவரை-எ-து-அம்மறவினையைமாற்றி ஞா
னக்கண்ணையுதவிப் பிறவிக்குழியினின்றுமெடுத்து நன்னெறிக்கட்செ
லுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தர்கூற்றிலே பேரன்புடையாரா யன்புசார்
பாகவிளங்குஞ் சிவஞானக்கண்ணு லங்கிலே கடைப்பிடித் துணரப்பெ
ற்ற மெய்த்தவராயினாரை-மேவாவினை - எ-து- எல்லாவனத்தங்கட்கு
மூலமாய்வந்து சிறப்பில்லார் தந்திறத்துச்சேர்வையைப் பயப்பிக்கும்
பிராரத்தவினைகள் வாதியாவென்றவாறு.

மறப்பித்துக் தம்மை மலங்களில்வீழ்க்குஞ் சிறப்பில்லாரென
மேற்சொல்லியபொருளையே யநுவதித்து விரித்தோதினார் அதனை
நிர்மறைமுகத்தாற் சிவபத்தரது பெருந்தகைமை யுணர்ந்துகோடற்
பயனோக்கி. மலம்-ஆகுபெயர். வீழ்க்குமென்ற துருவகங் குறித்து
நிற்றலி னவ்வாறுரைக்கப்பட்டது. எல்லாவற்றினு மன்புசிறந்தமையி
னதனைச் சிறப்பென்றார். பித்துப்போறலி னன்பு பித்தெனப்பட்ட
து. ஏனைத்தவங்களெல்லா மெய்யாதலின்றி மலகடையாய்ப்போதலிற்
பரனுணர்வினா லுணருந்தவமொன்றே மெய்த்தவமெனப்பட்டது. வி
னைபால் பகாவொற்றிணைப்பெயர். சிவபத்தர்மாட் டன்புடையாராய், ம
னஞ்சொற்செய்கைகளா னவர்வழிநிற்பார்க் குலகியலுணர்வுமாறிச்
சிவாநுபூதியுணர்வே மேம்பட்டுநிகழும்; அதுநிகழவே, பௌதிகவுட
ம்பைப்பற்றிவரும் பிராரத்தவினைக ளவர்க்குநுகர்ச்சியாதல் செல்லா
மையின் வாதிக்கமாட்டா; மாட்டாதொழியவே, அவை பற்றுக்கோ
டாய்நிகழுஞ் சிறப்பில்லார் தந்திறத்துச்சேர்வை பற்றறக்கெடுமென்
பார் "சேர்வையறப்பித்துப் பத்தரினத்தாய்ப் பரனுணர்வினாலுணரு
மெய்த்தவரைமேவாவினை" என்றார். எனவே, விட்டுணராவழியிலே
பெறுத்தஞ் சிவபத்தர்களோ டிணங்கினாலன்றி, வினைபற்றுக்கோடா

கத் தொன்றுதொட்டுப் பயின்றுவந்த சிறப்பில்லாதவினைக்குமுறைமை யின், அவ்வினைக்கொருதலையாகவேண்டப்படுமென வலியுறுத்திய வாறாயிற்று.

மூன்றாமதிகரணம்.

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமே ச்சுரனெனக்கண்டு வழிபடுகவென்றது-எ-து-மே-ள்-எ-னின், அன்ப ரொடுமரீஇ யிவர்க்கம்மருவு தனிலைபெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவதிதுவென்னுஞ் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண் ணழித்துரைத்து, மேற்கோடனுதலிற்று.

(இ-ள்.) வெ-ளிடை.

காண்டல் - ஐயுறவின்றித்தெளிதல். காமக்கிழத்தியர்வடிவிற் காணப்படு மாடைசார்தணிகலன் முதலாயின காமுகனை வசிகரித் தின்பஞ்செய்யுமாறுபோல, மெய்யுணர்வுடையானைக் காட்சிமாத்தி ரையின் வசிகரித்தின்பஞ்செய்தல்பற்றித் திருவேடத்தையுஞ் சிவா லயத்தையுமென் றுபசரித்தார். அது "சேலுங்கயலுந்திளைக்குங்க ண்ணா ரிளங்கொங்கையிற் செங்குங்குமம், போலும்பொடியணிமார் பிலங்குமென்று புண்ணியர்போற்றிசைப்ப" என்னுந்திருவாக்குக் களானுமறிக. திருவேடத்தினியல்பு "தூயவெண்ணீறுதுதைந்தபொ ன்மேனியுந்தாழ்வடமும், நாயகன்சேவடிதை வருஞ்சிந்தையு நைந்து ருகிப், பாய்வதுபோலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல், மேயசெவ்வாயுமுடையார் புகுந்தனர்வீதியுள்ளே" "சிந்தையிடைய றாவன்புந் திருமேனிதனிலசைவுங், கந்தைமிசையாங்கருத்துங்கையு முழவாரப்படையும், வந்திழிகண்ணீர்மழையும் வடிவுபொலிதிருநீறு, மந்தமிலாத்திருவேடத்தாசுமெதிர்வந்தணைய" "கண்டகவுணியக்கன் றுங் கருத்திற்பரவுமெய்க்காதற், றொண்டர்திருவேடங்கண் டோன்றி யதென்றுதொழுதே" என்றெடுத்த திருவாக்குக்களானறிக.

அவன் மற்றவ்விடங்களின் பிரகாசமாய்நின்றே யல்லாதவிடத்து ப்பிரகாசமாய் நில்லானாக எ-து-எ-ம்-எ-ஙனின், மெய்யுணர்வுடையார்க் குப்பகுப்பின்றியெங்கணும் பரமேசுரனென்கரமுடனே பொருத்த முடைமையானும், மெய்த்திருத்தாண்டக முதலியவற்றா னவ்வாறோது தலானும், திருவருட்கிரத்துப் பகுப்பின்றி யுயிர்ப்பொருள் உயிரில் பொருள்எல்லாவற்றையுந் தனித்தனியெடுத்தோதி வழிபாடு கூறுத லானும், ஈண்டிவற்றைமாத்திரையே விதந்துகொண் டோதிய தென் னையென்பாரை நோக்கி, மேற்கோளைசசாதித்தலுதலிற்று.

(இ-ள்) அம்முதல்வனெங்கணும் வியாபகமாய்நிற்பினு மிவ்விரண் டிடத்து மாத்திரையேதயிரினெய்போல விளங்கிநிற்றலின், அல் லுழியெல்லாம் பாலினெய்போல வெளிப்படாது நிற்றலான் இனிப்ப த்தாது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேச்சுரனெனக்க ண்டு வழிபடுகவென மேற்கொண்டதென்றவாறு.

மற்று-உரையசை. எப்பொருட்கண்ணு மிறைவன்கலந்துளனெ ன்பது தெளிந்துகோடற்பொருட்டுத் திருவுருத்திரத்திலவ்வா றோத ப்பட்டதெனக்கொள்க.

வெண்பா.

தன்னுணரவேண்டித்தனதுருவைத்தான்கொடுத்துத்
தன்னுணரத்தன்னுளிருத்தலாற்-றன்னுணரு ... ✽
நேசத்தர்தம்பாலிகழ்ந்ததுபோற் ... ...
பாசத்தார்க்கின்றாம்பதி.... ... ...(௩)

தன்னுணர ... ர்-எ-து-உ-ம்-எ-ஙனின், திருவேடத்தினிறைவன் பிரகாசமாய் நிற்... மியாங்ஙன மென்பாரை நோக்கி, அதனைவலியு றுத்துதலுதலிற்று.

(இ-ள்) பசு-எ-து-அசிந்திதருய்நின்ற பரம்பொருள்-தன்னுணர வேண்டி-எ-து-உலகத்துள்ளார் தன்னையறிதற்பொருட்டு - தனதுரு வைத்தான்கொடுத்து-எ-து-திருநீறுகண்டிகை முதலியதிருவேடமாகி யதனது திருவடிவத்தைத்தன்னன்பர்க்குக் கொடுத்தலானும்- தன்னு

ளார்-எ-து- அவ்வன்பர் தன்னைச்சிவோகம் பாவனையாலறியச்செய்யா லானும் - தன்னுள்ளிருத்தலால்-எ-து- அங்ஙனமொருகுறியின் கணின் றுணருமவரைத்தன்னது வியாபகத்துள்ளாக விருத்தலானும் - தன்னு ணருநேசத்தர் தம்பாலிகழுந்தநெய்போல் - எ-து - குறியுமிறந்து நின்று தன்னையுள்ளவாறுணருமவர்மாட்டுத் தயிரின்கண்ணதாகிய நெய்போலவிளங்கித்தோன்றும் - பாசத்தார்க்கின்றாம் - எ-து - அவ் வியல்பில்லாதபாசக்கட்டுடையார் மாட்டுப்பாலின் கண்ணதாகிய நெ ய்போல் விளங்காது நிற்குமென்றவாறு.

செய்தலென்பது சொல்லெச்சம். இருக்கல் அல்லீற்றுப் பிற வினைத்தொழிற்பெயர், கொடுத்துச்செய்திருக்கலா னிகழுமென வி னையும். தன்னுணருநேசத்தரெனப் பெயரடையானு மோரேதுக் கூறப்பட்டது. தன்னை யென்னுமிரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது. உணர்தலை மூவிடத்தோடுஞ் சலி னிஃதங்ஙனம்வேறுவே றுணர்க்கப்பட் டது. பாசத்தார்க்கென்ப துருபுமயக்கம். இன்மையீண்டு விளங்கா மைகுறித்து நின்றது.

வெண்பா.

கண்டதொருமந்திரத்தாற்காட்டத்திலங்கிவே ... ப
றுண்டலபோனின்றங்குளதாமாற்-கண்டவுருத் ...*
தானதுவாயன்றானன்றனதுவாய்த்தோன்றானே *
தானதுவாய்க்காணுந்தவர்க்கு. ... ... (௪)

கண்ட - தவர்க்கு-எ-து-உ-ம்-எ-ன்றின், சங்கமவடிவிற்குக் கூறி ப்போந்த வியல்பில்லாததாவரவடிவின் மந்திரசாந்நித்தியமுள் வழி யன்றிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படா தென்பாரை நோக்கி, சிவாலயத்தினிடத்து மிறைவன் பிரகாசமாய் நிற்றலை வலியுறுத்து தனுதலிற்று.

(இ-ள்) காட்டத்திலங்கிவேறுண்டலபோல் - எ- து- விறகிற்றீக் கடைகோலாற் கடைந்துழிவேறாய்விளங்கும் அல்லுழிவிளங்குவத ன்றானாற்போல - கண்டவுருத்தானதுவாயன்றான் - எ-து-உயிர்கட் குப்புத்திமுத்தியளித்தற்பொருட்டுக் காணப்பட்டதாவரவடிவின்கட்க

லப்பிறலறவேகாறுபது வன்றிவேறு பொருளுமா மியல்புடையமு
தல்வன்-கண்டதொருமந்திரத்தானின் றக்குவதாமால்-எ-து-அதுவே
தானாகக்காணுதார்க்குத் தம்மாலறியப்பட்ட தொருமந்திரசாந்நித்திய
மில்வழியவ்வடிவின்கண் விளங்காதுநின்று அஃதுள்வழி விளங்கித்
தோன்றும் பொருளாம்- அதுதானாய்க்காணுந்தவர்க்கதுகாலுயத்தோ
ன்றுமேனு - எ-து- அவ்வாறன்றியவ்வடிவேயவனாகக் காணப்பெறு மு
ண்மைத் தவமுடையார்க்கப்பெற்றியனேயாய் விளங்கித்தோன்றுஞ்
சொல்லோவென்றவாறு.

காணுதார்க்கென்பதுசொல்லெச்சம்.மந்திரத்தாலென்னும்பொரு
ளடைக்கேற்பவுவமையினும் வருவித்துரைக்கப்பட்டது - உண்டாத
லின்றிவிளங்குதன்மேற்று-ஆல் அசை - ஆருனென்பதுபெயர்-ஓகார
மெதிர்மறைப்பொருண்மைபற்றி யுளதெனவுமன்றெனவுங் கூறினார்-
தானதுவாயன்றுறுசென்னும் பெயரடையானவரவர் பாவனைகேற்
பவிளங்குதற்கேறுக்கூறியது- காணதுவாயன்றுறுதல்சங்கமவடிவிற்
குமொக்குமேனுந்தாவரவடிவிக்கணிமறுங்கடாவை யிதனுனென்று
நீக்குதலாகாமையி னிண்டுக்கூறினார். இஃதிரிடத்துமொக்குமென்ப
துமுன்னர்ப்பெறப்படும்.

புறனடை.

இனியிவ்விடங்களில் வழிபடுகவென்றது-எ- து-மே-ள்-எ-னின்
மேற்கூறிப்போந்தமூன்றுஞ் சிவன்முத்தர்க்குத் தானேயுளவாமிலக்
கணமாகலின், அனுவாதமாகவைத் துணர்த்தற்பாலனவாகிய விவற்
றை, களைக, இணங்குக, வழிபடுக, என விதியாகவைத்தோதிய தெற்
றுக்கென்பாரைநோக்கி, அதனை யவற்றதொழிபாகக்கொண்டு சாதித்
தற்கு மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெ-டை.

இவ்விடங்களென்றது மேற்கூறியவிரண்டனையும். வழிபடுகவெ
ன்று மெடுத்தலோசையா னநுவதித்துணர்த்துவதே யமையுமென்பா

னாமென்றி, சிக்கலை யவிழ்க்குமாறு. இனைப்பற்றிக் கயிறுகளைச் சுருக்கிட்டு விடுவிக்கலாகும்.

நரம்புநாடி முதலாயவற்றைக் காணலாய்வரும் புருடனை யாகாவா ரப்புருடனுமாகலான் - எ - து - எ-து சா-னின், எய்தியதனை விதிக்குமாறு பயனுடைத்தன்றாம்போலு மென்பானைநோக்கி, மேற்கோளை விசாரித்துக் கூறுகின்றது.

(இ - ள்) நரம்பு முதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி யாதலாது காணப்படுகின்றவுயிர் நாடியோ டெவன்போ னரம்பிக்கோளைப் போ' என்றிசையமை யைப்பெரிய பப்பார்ப்பார்க் கந்நரம்புநாடி முதலிய வைபாகாதவற்றின் வேறுமையிருந்போல, உயிர்க்குயிராகிய வம்முத லவனு முயிர்ப்பொருள்திரில பொருளெனலாவன்றியுங் கலப்பான துவது தானும் பொருள்வையாவல்லனுயும் நிற்பனுகலா னதுவது தானுங் காணுகைட்டி நாவி பெய்தியவழிப்பாடி அல்லனுய்நிற்றலைக் காணுங்கரிஸையாதாகாதகளின் அவ்வழிபு மெய்துவிக்கவேண்டுதலா னி னிவ்விடங்களின் வழிபடுக்கின்ன வீதிக்கோதியதென்றவாறு.

அனையபாகாவா ரப்புருடனுமென்னே, அவ்விடத்தெய்துவித்த லொருதலையான் வேண்டுமென்பது தாற்பரியமாயிற்று. மேற்கோளில விடங்களோ டென்னுமிவ்விடங்களினென வேற்றுமைப்படுத்தோதியது உயிரினுணர்ந்து கூடும்பொருட்டு எய்தாததெய்துவிப்பதூஉம், எய்தியதிகந்துபடாமைக் காப்பதூஉம், எய்தியதனை யொருமருங்குமறுப்பதூஉம் என்னும் வாதமூன்றனுள்ளிசெய்திய திகந்துபடாமைக் காத்தலென்பது போந்தவாறுகாண்க. முதலானவற்றையென்பதுரு புமயக்கம்.

வெண்பா.

அதுவிதுவென்றதுவல்லான்கண்டார்க்... ... ௧
கதுவிதுவென்றதையுமல்லான்-பொதுவதனி ... ௨
லத்துவிதமாதலகண்டமுந்தைவமே... ... ... ௩
யத்துவிதியன்பிற்றெரு ... ... (௫)

அதுவிது-தொழு - எ-று-உ-ம்-எ-னின், முதல்வனுக்கவ்வியல்பு எல்லாப்பொருட்கண்ணு முண்மையின்,அவற்றுளிவ்விடங்களின்மாத் திரையே வழிபாடுவிதித்தலெற்றுக் கென்பாரைநோக்கி, அதனை வலி யுறுத்துதனுதலிற்று.

(இ - ள்) கண்டார்க்கு - எ-து- முதல்வ னுயிர்ப்பொருளுயிரில் பொருளெல்லாவற்றினு நிற்குநிலைமையறியப்பெற்றோர்க்கு-அதுவிது வென்றதல்லான் - எ-து- கண்ணருக்கன்போல வதுவுமிதுவுமெனப் பக்கிசைத்தோதப்பட்ட பேதநிலைமையனுமல்லனும்-அதுவென்றதல் லான்-எ-து-உடலுயிர்போலதுவேயென்றோதப்பட்ட வபேதநிலைமை யனுமல்லனும்-அதுவிதுவென்றதையுமல்லான்-எ-து-குணகுணிபோ லவதுவாகிய வதுவென்றுபக்கிசையாமலோதப்பட்ட பேதாபேத நிலைமையனுமல்லனும்-பொதுவதனிலத்துவிதமாதலகண்ட முந்தைவ மே-எ-து - அறிவொளிபோலம்மூன்றற்கும் பொதுமையானத்துவித நிலைமையனுதலானெல்லாப்பொருளு மவன்வடிவேயாமாயினும்-அத் துவிதியன்பிற்றொழு- எ - து - அவற்றுள்ளு மன்புவிளையுமிடத்தின் வழிபடுவாயாக வவ்வத்துவிதசித்தாந்தத்தைப் பெற்றுடையோயெ ன்றவாறு.

அதுவிதுவென்றது முன்னையதும்மைத்தொகை. பின்னையதிரு பெயரொட்டுப்பண்புத்தொகை. அல்லானென்பதனை மேலுங்கூட்டி- யென்றதென்பதனை யதுவென்றதனோடுங்கூட்டியுரைக்க. அல்லானெ ன்பது முற்றெச்சக்குறிப்பு- என்றதை-ஐயீற்றுடைக்குற்றுகரம். உம் மையிறந்ததுதழீஇயிற்று. பொதுவதென்னு மது பகுதிப்பொருள் விகுதி. தைவமென்னுஞ் சொல்லியல்புமேலேயுரைத்தாம். ஏகாரந் தேற்றம். ஆயினுமென்பது சொல்லெச்சம். அன்பு - ஆகுபெயர். ஏழாவது விரித்துரைக்க. திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியின ன்றி, எங்குமுருக்காணவொண்ணுத பால்முலைப்பால்விம்மிபொழுகு வதுபோல, வெளிப்பட்டரு ளுருவதாகிய டிப்பட்டுவரு மன்புவிளை யாமையினுண்டுச்செய்யும்வழிபாடே யத்துவிதஞானத்தை நிலைபெ றுத்தற்பயத்ததென்பார் அத்துவிதமாத லகண்டமுந்தைவமேயென வனுவதித்து, "அத்துவிதியன்பிற்றொழு" என்றார். அத்துவிதியென் னுமன்மைவிளியயனுணரநின்ற குறிப்புப்பெயர். இதனுனே விதிக்கு ப்பயன் கூறியதூஉமாயிற்று. இனியதுவிதுவென்பன அருவுருவா

கிய திருமேனியெனக்கொண்டதற் கிசையவுரைப்பாருமுளர். அவ ரன்பிலென்றதனை யேதுப்பொருட்கண் வருமைந்தனுருபேற்ற வியற் பெயராகவுரைத்துரைப்ப.

வெண்பா.

வினையாலசத்துவிளைதலான்ஞானம்... ... ...
வினைதீரினன்றிவிளையா - வினைதீர ... ...
ஞானத்தைநாடித்தொழுவேயதுநிகழு ... ...
மானத்தாலன்பிற்றொழு. .. .. (௬)

வினையால்-தொழு - எ - து-உ-ம்-எ-னின், அசத்தாயுள்ளவன்னபேதங்களை யசத்தென்று கண்டொருவவே, ஞானசொரூபமுளதாயத்துவிதத்தையுணர்த்துமாகலான், அதன்பொருட்டு வழிபாடுவேறு விதித்த லெற்றுக்கென்பாரைநோக்கி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்.) வினையாலசத்துவிளைதலான் ஞானம்வினைதீரினன்றிவிளையா-எ-து-உடம்பின்கண்ணதாகிய பிராரத்தவாசனை யுயிர்க்குத்தாக்குவதாயுள்ள துணையுமதனான்வரும் விருப்புவெறுப்புக்களுமவைபற்றிக் காட்சிப்படுமன்றுதல் மாயைகளுமவைபற்றி நிகழும்விபரீதவுணர்வுமாகிய வசத்துக்களொருவிய வழியும்வந்துகூடி மேம்படுவனவாகலா னவ்வழியிற் செல்லாமூலமாகிய பிராரத்தவாசனை பற்றறக் கழிந்தாலன்றி யவ்வசத்தைக்கீழ்ப்படுத்து மெய்யுணர்வுமேம்படுதல் கூடாதாகலின் - வினைதீரஞானத்தை நாடித்தொழுவே யதுநிகழும்-எ-து-அவ்வாசனை பற்றறக்கழிதற்பொருட் டம்மெய்யுணர்வுடையாரை நாம்வழிபடவே யவ்வினைநீங்கி மெய்யுணர்வுமேம்பட்டுநிகழும்- ஆனத்தாலன்பிற்றொழு- எ-து - ஆகலா னன்பினாலவரை வழிபடுவீராக வென்றவாறு.

அசத்தைப்பொருவிய வழியுளதாகிய ஞானசொரூபநிலைபெறுதல் அவ்வசத்தின்றுவிளைவிற்கு வேராகிய வினைத்திரிவின்கண்ணதாகலா னவ்வினைவேரறுத்து மெய்யுணர்வை நிலைபெறுத்துதற்பொருட் டதனையந்நிலை நிலைபெறுத்தினார்மாட்டுச் செய்யும்வழிபா டொருதலையான் வேண்டப்படுமென்பதாம். அற்றேல், அதன்பொருட்டு ஸ்ரீபஞ்சாக்கரத்தைவிதிப்படி யுச்சரிக்கவே யதுவேயமைதற்கமையுமெனின்;

அஃதொக்கும், அவ்வுச்சரிப்பு மிவ்வழிபாட்டை யின்றியமையாதென்க. அற்றாகவின்றே, ஆண்டஞ்செழுத்தாலெனவும், மன்றாதனுளமெனவும் அந்தவழிபாட்டை யுடன்கூறியதூஉமென்பது. விரியாதென்னுந் துவ்விகுதிவிகாரத்தாற்றொகக்கது. பின்வந்தஞானம்-ஆகுபெயர். ஆவதாறென்பது-ஆனத்தாலெனபரிஞியிற்று.

வெண்பா.

தன்னையறிவித்துத் தான்றனைச்செய்தானைப் ... ௸
பின்னைமறத்தல் பிழையல்து-முன்னவனே ... .. ௸
தானேதானுச்செய்துந் தைவமென்றுந்தைவமே... ௸
மானேதொழுகை வலி. ... ...(௭)

தன்னை-வ.பி-எ-து-உ-ம்-எ-னின், அங்ஙனம் பயன்பற்றிவிதிக்கப்படும் வழிபாடுவேள்விமுதலியனபோலப் பயன்வேண்டாமையானுதல், பின்னர்ச்செய்துபெறுதுமென்றுதல், ஒரோவழியொழியவும்படுங் கொல்லோவென்பாரைநோக்கி, அது செய்யாவழிப்படுங்குற்றமுஞ் செய்தல்கடமையாமாறு முணர்த்திவிதித்தலை வலியுறுத்துதனுதலிற்று.

(இ-ள்) தன்னையறிவித்துத் தான்றனைச்செய்தானைப் பின்னைமறத்தல் பிழையலது-எ-து- தன்னுண்மையை யறியமாட்டாது குருடாய்க்கிடந்தவுயிர்க்குப் பலவாற்றானு மதனைத்தெரித்துணர்த்தி, எத்தனையுமெளிய வவ்வுயிரை யெத்தனையுமரியதானும் வண்ணஞ்செய்தளித்த பெரியதோருதவியை யதன்பின்னர் மறக்குமாயின், அஃதிதற்குமுன்னறியாமல் மறந்தகுற்றம்போலத் தீர்திறனுடைய தொருகுற்றமன்றாகலானும்— முன்னவனே தானேதானுச்செய்துந் தைவமென்றுந் தைவமேமானேதொழுகைவலி-எ-து-முதல்வ னங்ஙனந்தான்றனையாகச் செய்தாலுமிதுகாறுந் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனுபகாரத்தை யின்றியமையாதா யடிமையாகிய வுயிரெக்காலத்து மவ்வாறடிமையே யாமாகலானுந்; தான்றனைச்செய்தளித்த வப்பெரியோனைவழிபடுதலே யவ்வுயிர்க்குவலியாவதென்றவாறு.

தமதுமுதற்றனே குருவாகவிற்றன்றனைச் செய்தானையென்றும், முன்னைமறந்தகுற்ற மறியாதுநிகழ்ந்ததாகலிற் கழுவப்படும் இஃதது

போற்கருவப்படுவதன்றென்பார் பின்னைமறத்தல் பிழையலதென்றுங் கூறினார். பின்னைமறத்தலென்பதனான் முன்னைமறத்தல் பெறப்பட்டது. "எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை, செய்ந்நன்றிகொன்றமகற்கு" என்னுங்கருத்துநோக்கிக் கூறியதூஉமாம். அலதுமெனப்பாடமோதி யிதுபிழையாதலன்றியுமென்றுரைப்பாருமுளர். ஏகாரம் முன்னையது அசைநிலை, பின்னையதுதேற்றம். செய்தாலென்பது செய்தெனத்திரிந்தது. உம்மைசிறப்பின்கண்வந்தது. தான்றனைச்செய்தல் எதனையெதனைப்பற்றினு மதுவதுவாமுயிர்தன்னை யறிந்தவழியென்குணங்களா னிறைந்தவண்ணமாகச்செய்தல். அங்ஙனஞ்செய்தவழியுமுயிர்தானுஞ் சிவானுபவமொன்றினுக்கே யுரித்தென்பார் சைவமென்றார் சைவமேயென்றார். சைவமென்னுஞ் சொல்லியல்புமேலே யுரைத்தாம். மானையென்னு மிரண்டனுருபுவிகாரத்தாற்றொக்கது. மானென்பது வடசொற்றிரிபு. சுட்டிவருவிக்க. வலிதருவதனை வலியென்றுபசரித்தார். இவ்வுதாரணங்கள்மூன்றானும் வழிபாட்டிற்கும் இடத்துவிசழ்ப்பொருண் மாத்திரையேயன்றி யிடவிசேடமும் பெறல்வேண்டும் எனவதனை வலியுறுத்துமுகத்தான்முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தர்வேடத்தையுஞ் சிவதேசிகர்களையுமறிந்து வழிபடுமாறுகூறப்பட்டது.

வெண்பா.

சிவமென்னுமந்தரசிந்தைநேர்நோக்கப் ... ..*
பவமின்றாங்கண்வாசகத்திற்-சிவமுண்டா ... ... *
மொன்றுமிரண்டுமலத்தார்க்கிவ்வொண்குருவா ...*
வின்றிநான்மும்மைமலர்க்கு.... ... ...(அ)

சிவமென்னும் - மலர்க்கு - எ - து - உ-ம்-எ-னின்,இங்ஙனஞ் சிவாகமத்துள் ஞானபாதப்பொருளெல்லாவற்றையும் பொதுவுண்மையென்றிருவகைப்படுத்துப் பிரமாணவியல் இலக்கணவியல்சாதகவியல்பயனியல் எனநான்கியலாகவைத்துப் போதிப்பதாகிய விச்சிவஞானபோதநூலைக் கோடற்குரிய வதிகாரிகளாவாரிவரென்ப துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தான்றனைச்செய்தானை யொருவாற்றும் சீவனென்னு மியல்பினீங்கிச் சிவமென்றோதப்படும் வேதாந்தத்தெளிவாகிய சித்

தாந்தத்தையுடைய மாணவகனே ஒன்றுமிரண்டுமாயமலங்களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும் முறையேயறிவின்கணின்றருட்பார்வையா னோக்குதலானுந் தேவகுருவாய் முன்னின்றுசெய்யுந்திருநோக்கம் பரிசம்வாக்கெனப்படுந் தீக்ஷையானும் பிறவிக்கேதுவாயபசுத்துவநீங்கிச் சிவத்துவம்விளங்குமாகலான், அவரின்வேறாகியமும்மலமுடையவர்க்கேயுரித்திவ்வுலகத்து அநுபவமுடைய தேசிகராற் போதிக்கப்படு மிச்சிவஞானபோதநூலென்றவாறு.

அந்தம்வேதாந்தம். அந்தகராஞ் சித்தாந்தமாக வினதளைப் பெற்றோரது பெருமைகூறுவார் சிவமென்னுமந்தரவென்றார். என்றுமென்புழிப்படுசொற்றொக்குநின்றது. சிந்தை - அறிவு. கண்ணுருபுவிரித்துரைக்க. நேர்நோக்குதல் - முன்னமருட்பார் வையைமாற்றியருட்பார்வையானோக்குதல். நோக்க - நோக்குதலானென்க. கண்வாசகங்களைக்கூறவே யினம்பற்றிப்பரிசமுமுடன் கொள்ளப்படும். பவம் ஆகுபெயர். இந்நூலனுபவமுடைய தேசிகனாலன்றி விளங்காதென்பார் ஒண்குருவாலென்றார். போதிக்கப்படுமென்பதவாய் நிலையான்வந்தது. இன்றிந்நூலென்பது இந்நூலென்னும்பொருட்டு. இக்காலத்துரைக்கப்பட்ட நூலெனினுமமையும். அது "தானுரைத்தானின்று" எனவருகின்ற வெண்பாவாற்கூறியவாற்றானுமறிக. மும்மையென்றதீண்டெண்ணின்மேனின்றது. தெரியாண்டமிழ் மும்மைத்தென்னம் பொருப்பனென்புழிப்போல.

வெண்பா.

எந்தைசனற்குமரனேத்தித்தொழவிவற் ... ...
கந்தியுரைத்தருளுஞானநூல்-சிந்தைசெய்து ...
தானுரைத்தான்மெய்கண்டான்றாரணியோர்தாமுணர
வேதுதிருட்டாந்தத்தாலின்று... ... ...

பன்னிரண்டாஞ்சூத்திரமுடிந்தது.

சிவஞானபோதச்சிற்றுரை
முற்றுப்பெற்றது.

சிறியவாடியிற்பெரியமால்வரைப்பொருள்செறிந்தாங் ... *
கறிவுநூல்களின்முடிபெலாமகத்தடக்கியதோர் ... ... *
நெறியினீடியனிகழ்சிவஞானபோதத்தைக் ... ... *
குறியதீந்தமிழாலுரைகுரவனைப்பணிவாம் ... ... *

நூலினையறிந்தார்போன்றுநுண்ணுணர்வுடையார்போன்று ... *
மாலினைத்தவிர்ந்தார்போன்றும்வழியறிந்தடைந்தார்போன்று... ... *
மேலெனத்தத்தங்கோளைவிதந்துரைக்கின்றார்நந்தி ... ... *
சாலவன்றருளுநூலின்றலைப்படாவுள்ளத்தாரே ... ... *

வெண்பா.

மூன்றுமலங்கெடுத்துமூலமாமப்பொருளுந் ... *
தோன்றவருளுந்தன்றொண்டர்க்கிங்-கான்றமைந்தோர்
கைகண்டதன்றேகடன்ஞாலத்தெப்பொருட்கு... *
மெய்கண்டதேவன்விரைத்தாள் ... ... *

சிவஞானதேவனடிபவமாறப்பணிவாம்.

கச்சியப்பதேவனடியுச்சியுளம்வைப்பாம்.

பொன்னம்பலம்நீடூழிவாழ்க.